# கொண்டாடும் உறவுகள்

லதா முகுந்தன்



# கொண்டாடும் உறவுகள்

## 1

''ம்... சொல்லு'' அபிஷேக் கேட்க, கேட்க ஆர்த்தி சலித்துக் கொள்கிறாள்.

''என்னத்தை சொல்றது? எல்லாம் பேஃட். ஒண்ணும் பண்ண முடியாது.''

''ஏய்? என்னையா? பேஃட் கீட்டுன்னு ஏதோ பேசறே? வாட் ஹேப்பண்ட்?''

''என்னத்தைச் சொல்றது? கம்ப்யூட்டர் கம்ப்யூட்டருனு படிச்சேன். கேம்பஸ் இன்டர்வியூவிலே எடுத்த உடனே இருபதாயிரம் ரூபாய்க்கு பிளேஸ்மெண்ட் ஆச்சு. இப்ப ஆப்டர் த்ரி இயர்ஸ் பர்பாமன்ஸ் பேஸிஸ்னு சொல்லி

ஐம்பதுக்கு மேல் வாங்கிட்டு இருந்தேன். இப்ப என்னடான்னா டாலர் விலை விழுந்திருச்சின்னு சம்பளத்தை எல்லாம் குறைச்சிட்டாங்க. இப்ப முப்பத்து அஞ்சுதான் வருது. பாதி பேர் வேலையை விட்டுப் போயிட்டாங்க எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை அபி...''

''உனக்கு இந்த வேலை பிடிக்கலையா?''

''பிடிச்சிருக்கு. ஆனா சம்பளத்தை குறைச்சா யார் வேலை செய்வாங்க?''

''அப்ப ஏன் கவலைப்படறே? பேசாம வேலையை ரிசைன் பண்ணிட்டு போயிடு.''

''த்சு... அதுவும் நடக்காதுப்பா...''

''ஏன்?''

''என் பிரண்ட் ரீதா இல்லே அவ வேலையை ரிஸைன் பண்ணிட்டு வேற வேலைக்கு சேர்ந்துட்டா. அவளுக்கு முப்பது தான் தருவேன்னுட்டாங்களாம். ஐயோ இங்கியே இருந்திருக்கலாம். சம்பளத்திற்கு சம்பளமும் போச்சு. சீனியாரிடியும் போச்சுன்னு புலம்பிக்கிட்டு இருந்தா'' ஆர்த்தி புலம்ப,

''ஐ.ஸி.''ன்னு யோசிக்கிறான் அபிஷேக்.

''எதுவுமே பிடிக்கலைடா. இந்த கம்பெனியிலே சம்பளமும் குறைஞ்சது. என் பிரண்ட்ஸ் எல்லாம் போயாச்சு.''

''ஓ.கே... இதையே பீல் பண்ணாதே. எல்லாம் சரியாயிடும்.''

பெருமூச்சு விட்டாள் ஆர்த்தி.

''ஓ.கே. சீக்கிரம் வா. ஆபீசுக்கு டைம் ஆயிடுச்சு. உன்னை டிராப் பண்ணிட்டுப் போறேன்.''



ஆர்த்தி பதில் பேசாமல் பைக்கில் ஏறி அமர்கிறாள். முகம் மட்டும் வாட்டமாக இருக்கிறது. 'இன்னும் இரண்டு வருடங்களில் எண்பது எண்பத்தைந்து ஆயிரம் சம்பாதிக்கலாம் என்று கனவு கண்டாளே. எல்லாமே போய்விட்டதே!' மனம் திருப்பி, திருப்பி தன் தோல்விகளையும், வேதனைகளையுமே அலசியது. அபிஷேக்கின் அருகாமைகூட அவளை கிளுகிளுக்க வைக்கவில்லை.

''ஏய் எந்த ஞாபகத்தில் இருக்கே? ஆபீஸ் வந்தாச்சு இறங்கு.'' அபிஷேக் கேட்க, சட்டென்று சுய நினைவு வந்தவளாய்,

''ஐயம் சாரி அபிஷேக்'' என்கிறாள்.

''ஏய் ஒரு விஷயம் மறந்துட்டேன். வர சன்டே எங்க அக்கா ரேகாவோட குட்டிப் பொண்ணு ரேஷ்மிக்கு பர்த்டே. கட்டாயம் வந்திடு.''

''த்சு... போப்பா. நான் மூட் அவுட். எங்கேயும் வர ஐடியா இல்லே.''

''சன்டே நாளன்னிக்குதான். அப்ப வரைக்குமா உன் மூட் அவுட்டாகும். நீ கட்டாயம் வரே. உனக்காக வெயிட் பண்ணுவேன்.''

சொல்லிவிட்டு அவளின் பதிலை எதிர்பார்க்காமல் ஹெல்மெட்டை தலையில் போட்டு இறுக்கியவாறே விர்றென்று வண்டியைக் கிளப்பிக் கொண்டு செல்கிறான் அபிஷேக்.

அதுவரை சோம்பிக் கிடந்து வருத்தத்தில் இருந்த மனது அப்போதுதான் விழித்துக் கொண்டது.

'ஐயோ நாளைக்கு எங்கே மீட் பண்ணலாம்னு கேக்கவே இல்லையே. தப்பு பண்ணிட்டேனே' முதலில் பதறியவள், பின் தன்னை சற்று ஆசுவாசப்படுத்திக் கொள்கிறாள்.

'லன்ச் அவர்லே அவனோட பேசலாம். சே! நான் ஒரு இடியட். அவனோட சந்தோஷமா இருக்கறதுக்கு பதிலா என் கஷ்டத்தை புலம்பி சே!' தன்னையே சபித்துக் கொள்கிறாள். ஏற்கனவே நிறைய பேர் வேலையை விட்டுப் போய்விட நிறைய வேலைகள் இவள் தலையில் விழ, தன்னை மறந்து வேலை செய்கிறாள்.

மதியம் அபிஷேக்கை தொடர்பு கொள்ள வேண்டுமென்பதே மறந்து போனது. கடந்த ஒன்றரை வருடமாகத்தான் அபிஷேக்கை அவளுக்குத் தெரியும். தான் வெறும் பி.இ. படித்துவிட்டு வேலையில் இருந்தபோது அவன் எம்.பி.ஏ. முடித்துவிட்டு பக்கத்து அலுவலகத்தில் வேலைக்கு அமர்ந்தான். பக்கத்து அலுவலகமாக இருந்தும் தினந்தோறும் தொடர்பு கொண்டதெல்லாம் இல்லை. முதலில் அவனைப் பற்றி ஒன்றுமே தெரியாது. ஒரே ஒரு முறை சாப்பாட்டு வேளையில், சாப்பாடு எடுத்து வருகையில் உணவு விடுதியில் அவனைச் சந்தித்து இருக்கிறாள். நன்றாக ஆறடி உயரமும், சற்று அதிகமான வெள்ளையும், சுருள் சுருளான கிராப்பும், துறுதுறு கண்களுமாக, ஏதோ ஒரு இந்திப்பட கதாநாயகனை ஞாபகப்படுத்தினான். இவளும் இரண்டு, மூன்று முறை அவனைத் திரும்பித் திரும்பித் தான் பார்த்தாள். ஆனால் அவன் யாரையும் பார்த்ததாகவே தெரியவில்லை. சாப்பிட்டுவிட்டு ஷூ சத்தம் ஒலிக்க ஒலிக்க விரைவாக நகர்ந்து போய் மறைந்தான்.



இன்னொரு முறையும் அவனைக் காண வேண்டிய சந்தர்ப்பம் எழுந்தது. அன்று அலுவலகத்தில் வேலை செய்து விட்டு, மிகவும் போரடிக்க லிப்டில் இறங்கி கீழே வரும்போது, அவனும் மூன்றாவது தளத்தில் வந்து அவர்களோடு லிப்டில் சேர்ந்து கொள்ள, அவனையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். யாருடனோ செல்லில் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தான். இவள் புறம் திரும்பக்கூட இல்லை.

ஆர்த்திக்கு ஏனோ ஏமாற்றம். அவள் ஒன்றும் சிவந்த நிறமோ மினுமினுப்பான சரீரமோ இல்லாதவள். மாநிறம் தான். ஆனால் அவள் கண்களும், மூக்கும் தெறித்து விடுகிறது போல் இருக்கும்.

கண்களைச் சுற்றி அடர்ந்த இமைகள், பார்ப்பவரை பலமுறை திரும்பப் பார்க்கச் சொல்லும். எந்த ஆடவன் இவளைப் பார்த்தாலும் லேசாக வழிந்து கொண்டு தான் பேசுவார்கள். பலமுறை இவளை திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். அப்படி இருக்கையில் இவன் வித்தியாசமாகத் தோன்றினான். இவள் இருப்பதையே பொருட்படுத்தாதவன் போல் மனது எரிச்சலுற்றது. தான் மிகவும் வெள்ளையாக இந்திப் பட ஹீரோ போல் இருக்கிறோம் என்ற திமிரா? எரிச்சல் வந்தது.

அன்று தன் தோழி புவனாவிடம் மெதுவாக பேச்சுக் கொடுக்கிறாள். அவள் பக்கத்து அலுவலகத்தில் வேலை செய்பவள்.

''ஏய் புவன் யார் அது? நல்ல ஹைட்டா சிகப்பா இருக்கானே. அவனுக்கு இங்க என்ன வேலை? எதுக்கு வந்தான்?''

சாதாரணமாகக் கேட்பது போல் கேட்கிறாள்.

''யார் அபிஷேக்கை கேக்கறியா? அவன் என் ஆபீ இல்லை. அவன் எம்.பி.ஏ. பிஸினஸ் விஷயமா நிறை கம்பெனிக்குப் போயிட்டு வருவான். அப்படி வந்திரு கலாம். ஆமா என்ன விஷயம்? ஏன் கேக்கறே?''

''ஆள் எப்படி?''

''ஏன் கேக்கறே?''

''சொல்லுடி.''

''மோஸ்ட் எலிஜிபிள் பேச்சுலர். யாருக்கு கொடுத்து வச்சிருக்கோ.''

''என்னடி உளர்றே?''

''உளறலே. உண்மையைத்தான் சொல்லறேன். ரொம்ப நல்லவன். ஜோவியல். பார்க்கறதுக்கும் என்ன ஸ்மார்ட்டா இருக்கான். எனக்கு தெரிஞ்சு அவனுக்கு ஒரு தவறான பழக்கமும் இல்லை. யாருக்கு லக் இருக்கோ?'' தோழி சொல்லச் சொல்ல,

''சீ... என்ன இப்படி எல்லாம் பேசறே?''

''நான் உண்மையைத்தான் பேசறேன்.''

அடுத்த நாள் ஆர்த்தியின் வண்டி ரிப்பேராகிவிட பஸ்ஸைப் பிடிக்க ஓடுகிறாள். ஒரே நிமிடம், அவள் கைப்பையை யாரோ உருவ,

''ஏய் யாரது?'' அவள் கத்த, அடுத்த நிமிடம் எதிரே வந்த அபிஷேக்கால் கைப்பையை திருடியவன் தாக்கப் பட்டான்.

ஆர்த்தியின் கைப்பையை அவளிடம் தந்தபோது, கண்கள் மலர்ந்து ''தேங்க்ஸ்'' என்றாள். ஓடிப் போய்



விரட்டிப் பிடித்ததில் உடலிலிருந்து வியர்வை ஆறாக ஊற்ற முகமெங்கும் செந்நிறமாக,

''யு ஆர் வெல்கம்'' என்று புன்னகைக்கிறான். அந்த நிமிடமே ஆர்த்தியின் மனது அபிஷேக்கிடம் போய் ஒட்டிக் கொண்டது.

''அ...ப்...பா என்ன ஸ்மார்ட்டா இருக்கான்.''

அதற்குப் பின் ஆர்த்தி அவனைச் சுற்றி வர ஆரம் பித்தாள். தானே வலியப் போய் பேச ஆரம்பித்தாள். சாதாரணமாக ஆரம்பித்த நட்பு, சில நாட்களிலேயே காதலாக பரிணாம மெடுத்தது. அவன் காதலைச் சொன்ன விதமே வித்தியாசமாகத்தான் இருந்தது.

அன்று வழக்கம் போல் ஏதோ வேலையாக அவனிடம் போனவள் அவன் சிரிக்க, சிரிக்க பேச அதில் தன்னை மறந்து நின்றபோது தான் ஒரு பார்ஸலைத் தருகிறான்.

''என்ன அபிஷேக்?'' அவள் ஆச்சரியமாகக் கேட்ட போது,

''இது எங்க வீட்டு மருமகளுக்கு எடுக்க எங்க அம்மா சொன்னாங்க. எடுத்தாச்சு.''

அவன் சொல்லச் சொல்ல ஆர்த்திக்கு முகம் சிவந்து போகிறது. எதற்காக பார்ஸலைத் தன்னிடம் தருகிறான். இதுவரை தன்னைக் காதலிக்கிறேன் என்று சொன்ன தில்லை. அம்மா சொன்னதாகச் சொல்கிறானே. அம்மா விடம் தன்னைப் பற்றி சொல்லி இருப்பானா? அவனும் தன்னை காதலிக்கிறானா? குழப்பத்தோடு மகிழ்ச்சி ஊற்று பீய்ச்சியடிக்க அவனையே பார்க்கிறாள்.

''என்ன பார்க்கறே? இது எங்க வீட்டு யூனிபார்ம் மாதிரி. கட்டிகிட்டு நாளைக்கு ஆஸ்பிடலுக்கு வந்திடு.

அம்மாவுக்கு உடம்பு சரியில்லை., அவுங்களை கவனிச்சிக்கணும். அதுனால நாளைக்கு லீவு போட்டுட்டு வந்திடு.''

சொல்லிவிட்டுப் பறந்தான் அபிஷேக். ஒன்றும் புரியாமல் வாயடைத்துப் போய் நின்றாள் ஆர்த்தி.

## 2

ஆர்த்தி உண்மையிலே குழம்பிப் போய் தான் நின்றாள். அபிஷேக்கும் தன்னை காதலிக்கிறான் போல் உள்ளது. நாளைக்கு அவன் அம்மாவை ஆஸ்பத்திரியில் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றானே. தான் எப்படிப் போக முடியும்? அவர்கள் வீட்டில் தன்னை ஏற்றுக் கொள்வார்களா என்ன? இரண்டாவது, அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்றால் இவனுக்கு என்ன வேலை? இவன் மட்டும் அலுவலகம் வந்து விடுவான். தான் கவனிக்க வேண்டுமா என்ன? அன்று முழுவதும் மண்டை குடைந்தது. அவனிடம் கேட்கவும் வெட்கமாக இருந்தது. இப்படித் தடாலடியாக ஏதோ சொல்லிவிட்டுப் போயிருக்கிறானே.

அடுத்த நாள் சற்று துணிவை வரவழைத்துக் கொள்கிறாள். காலையில் ஆறு மணிக்கே செல்லில் அவனைத் தொடர்பு கொள்கிறாள். அவன் செல் அணைக்கப்பட்டு இருந்தது. பலமுறை தொடர்பு கொள்ள முயற்சித்தும்,



அவனைத் தொடர்புகொள்ள முடியவில்லை. மீண்டும் பலமுறை தொடர்பு கொண்டும், அவனைத் தொடர்பு கொள்ள இயலவில்லை. எந்த ஆஸ்பத்திரியின் பெயரைச் சொன்னான். மண்டையை உடைத்துக் கொண்டு யோசித்துப் பார்க்கிறாள். தன் அலுவலகத்திற்குப் போய் தெரிந்தவரைப் பார்க்க வேண்டும் என்று ஒரு மணி நேரம் பர்மிஷன் கேட்டு விட்டுப் போய் விடலாம். தன் வேலையில் யாரையும் கேட்க வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை.

எப்போது போனாலும் அவர்களுக்கு வேலை முடிய வேண்டும். தான் எந்த வேலையையும் நிறுத்தியதே இல்லை. இன்னும் பத்து நாட்களுக்கு இருக்கும் வேலையைக் கூட சேர்த்து முடித்தாகி விட்டது. அதனால் வேலையைப் பற்றி கவலை இல்லை. ஆனால் எந்த ஆஸ்பத்திரி என்று தெரியவில்லை. அபிஷேக் அதன் பெயரைச் சொன்னானா இல்லை. யோசித்து, யோசித்து மண்டை வலிக்கிறது. சரிதான் அலுவலகம் போனால் தான் அவனைப் பார்க்க முடியும். அவனைப் பார்த்தால் எந்த ஆஸ்பத்திரி என்று தெரிந்து கொள்ளலாம். நினைத்தவாறு கிளம்பிப் போக, அவன் அலுவலகத்தில் விசாரித்து அவன் இன்னும் வரவில்லை என்றவுடன் ஏமாற்றம் அடைந்து யோசிக்கிறாள். அவன் வாங்கித் தந்த புடவையைத்தான் அணிந்து வருகிறாள்.

''வாவ்... பிரமாதம்யா எங்கே வாங்கினே?'' தோழிகள், தெரிந்தவர், அறிந்தவர் ஏன் வீட்டில் அம்மா கூட மாய்ந்து போய் விட்டாள்.

தன் வீட்டிற்குத் தான் ஒரே பெண். அம்மாவும் அந்த நாளிலே எம்.காம் படித்து கல்லூரியில் விரிவுரையாளராக

இருப்பவள். கல்லூரிக்கு செல்லும்போது தான் புடவை அணிந்து கொள்வாள். மற்ற நேரங்களில் எல்லாம் சுடிதார்தான். 'இரவு நைட்டிக்கு மாறி விடுவாள். தன் பெண்ணை மேக்ஸி மிடி, ஜீன்ஸ், டாப்ஸ் சில நேரங்களில் சல்வார் கமீஸ் என்று வளர்த்தவள். மிக, மிக அபூர்வமாகத்தான் பெண் புடவை உடுத்துவாள். ஆனால் ஆர்த்தி இன்று உடுத்தி இருக்கும் புடவை மிக மிக அழகாக அவள் தாய் புவனாவிற்கே ஆச்சரியமாக இருந்தது. சாதாரணமாக அவள் உடைகளை தான் தான் தேர்வு செய்வோம். இதை எப்போது எடுத்தாள்.

‘‘ஏய் ஆர்த்தி புடவை ஏது? எப்ப எடுத்தே? எக்ஸலண்ட் கலர் காம்பினேஷன்.’’

அம்மா கேட்க, ஆர்த்தி புன்னகைக்கிறாள்.

‘‘இல்லேம்மா எம் பிரண்ட் எனக்கு கிப்டா கொடுத்தா.’’

‘‘யாரு ரேகாவா? சுஷ்மாவா? இல்லை பீனாவா?’’

‘‘இவங்கள்ளே யாரும் இல்லேம்மா. ஒரு புது பிரண்ட் ரம்யா. ரொம்பவே பணக்கார பிரண்ட். அவதான் எங்க எல்லோருக்குமே கிப்ட் கொடுத்தா.’’

வாயில் வந்த பொய்யைச் சொல்லி விட்டு ஓடி விடுகிறாள் ஆர்த்தி. படித்தவள்தான். வேலைக்குப் போகிறவள். அதிக சுதந்திரம் உள்ளவள். இருந்தும் சட்டென்று அம்மாவிடம் உண்மையைச் சொல்ல மனம் துணியவில்லை.

அன்று முழுவதும் தவித்த தவிப்பு பலமுறை அபிஷேக்கை தொடர்பு கொள்ள முயன்றும் இயலாத நிலை. எங்கே போய்த் தொலைந்தான். நேரம் ஆக ஆக



ஒரே தவிப்புதான். கடைசியில் ஐந்து மணிக்கு அவளின் அலுவலகத்திற்கே வந்து விட்டான்.

‘‘ஹாய்’’ என்கிறான். ‘‘வாவ்...’’ என்று லேசாக விசிலடிக்க கோபமும், ஆத்திரமுமாக அவனைப் பார்த்தவள் எரிச்சலுற்றாள்.

‘‘ஹாய் கிரேட். பரவாயில்லையே நீ. சொன்னதைச் செய்துட்டே. ஆனா ஆஸ்பிடலுக்குத் தான் வரலை.’’

‘‘என்ன நினைச்சுகிட்டு இருக்கே நீ. காலையிலிருந்து எத்தனை தவிச்சேன் தெரியுமா?’’ அவள் ஆத்திரத்துடன் வெடிக்க,

‘‘ஏன்?’’ என்கிறான்.

‘‘ஏனா? யு...’’ அதற்கு மேல் கத்த முடியாமல் எரிச்சலோடு திரும்பிப் போகிறாள்.

‘‘ஏய்... ஏய்.. நில்லுப்பா. இட் ஈஸ் ஜஸ்ட் எ ஜோக். அதை என்ஜாய் பண்ண மாட்டியா?’’

‘‘எது ஜோக்? என்னைத் துடிக்க வைக்கறதா? இன்று மொத்தமும் காலையிலிருந்து எத்தனை துடிச்சிருக்கேன் தெரியுமா? இப்படி என்னைத் தவிக்க வைக்கறது உனக்கு ஜோக்கா? சே! சேடிஸ்ட்’’ சொல்லிவிட்டு எரிச்சலோடு நகருகிறாள்.

‘‘ஏய்... ஏய் நில்லுப்பா... சின்ன, சின்ன விஷயத்தைப் பெரிசா எடுத்துக்கறே?’’

‘‘எது சின்ன விஷயம்? ஒரு புல் டைமும் என்னை அவஸ்தைப்பட வச்சுதா? போதும் இப்பவே இப்படீன்னா போகப் போக என்னாகும்? ஆளை விடு. உன் பிரண்ட்ஷிப்பே வேண்டாம்.’’

''ஏய்... ஏய்... என்னையா?'' கெஞ்சுகிறான் அபிஷேக்.

அடுத்த இரண்டு நாட்களும் ஆர்த்தியின் வீட்டிற்குப் பொக்கேக்களும், ரோஜாக்களும் வந்து வந்து நிறைத்தன. கொஞ்சம், கொஞ்சமாக, அவள் கோபம் சாந்தமாகி அவனின் அன்புத் தொல்லை தாங்க முடியாமல் நடந்ததை மன்னித்தும் மறந்தும் விடுகிறாள். மறுபடியும் அவனோடு நட்பு. தினமும் எங்காவது சந்திப்பு. பேச்சு சந்தோஷம் இப்படி போய்க் கொண்டிருந்த போதுதான் இன்று மனம் ஒரே அடியாக விழுந்து போய் அவனோடு பேசிக் கொண்டிருந்தவள், சே! அவனோடு இருக்கும் நேரம்தான் இன்பமான நேரம். இந்த நேரத்தில் போய் தான் இப்படி நடந்து கொள்கிறோமே.

உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுதல் மிக, மிக அவசியம் தான். அதுவும் துன்பத்தை தன் நெருங்கிய உறவோடுதான் பகிர்ந்து கொள்ள முடியும். இருந்தும் இன்பமாக இருக்க வேண்டிய நேரத்தில் நான் இப்படிச் செய்து விட்டோமே எரிச்சல் வந்தது.

அன்று மதியம் வேலைப்பளு அதிகமானதில் அவனை மறந்து போனதும் எரிச்சல் வந்தது.

அன்று வேலை முடிந்து, பலமுறை அவனைத் தொடர்பு கொள்கிறாள். தொடர்பு கொள்ளும் எல்லைக்கு அப்பால் இருப்பதாக செய்திவர தவிப்புதான் அதிகமானது. சே! இவன் எதற்கு செல் வைத்துக் கொண்டு இருக்கிறான். மற்றவரின் உயிரை எடுக்கவா? தொடர்பு கொள்ள முடியாதபடி எந்த மூலைக்கு போய்த் தொலைந் தான்? எரிச்சலில் பல்லைக் கடித்துக் கொள்கிறாள். ஆத்திரமும், கோபமும், இயலாமையும் சேர்ந்துகொள்ள



படபடப்பு இன்னும் அதிகமாக லேசான அழுகை வந்தது. கை நகங்களைக் கடித்துக் கொள்கிறாள். அவன் வீட்டிற்குத் தொடர்பு கொள்ளலாமா?

அவள் பலமுறை அவர்கள் வீட்டிற்குப் போயிருக் கிறாள். அவன் வீட்டில் மிகப் பெரிய குடும்பம் இருந்தது. அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி கொள்ளுப் பாட்டி, கொள்ளுத் தாத்தா என்று அவர்களின் வீடே 'ஜே... ஜே' என்று இருக்கும். போதாக் குறைக்கு அத்தை, மாமா, அத்தைப் பாட்டி என்று நிறைய உறவுகள் வந்தபடி இருக்கும். கொள்ளுப் பாட்டி, கொள்ளுத் தாத்தாவைப் பார்க்க உயி ரோடு இருக்கும் அவர்களின் தலைமுறை மனிதர்கள், அவர்களின் அடுத்த வாரிசுகள் என்று வந்தபடி இருக்கும். அந்தக் காலமும் வேறுதான். அந்தக் கால மனிதர்களும் வேறுதான். அந்தக் கால மனிதர்கள் உறவுக்குக் கொடுக் கும் மரியாதையும் வேறுதான்.

அபிஷேக்கின் கொள்ளுப் பாட்டி வண்டார் குழலியை யும், கொள்ளுத் தாத்தா மாசிலாமணியைப் பார்க்க, யாராவது ஒரு உறவு வந்து கொண்டே தான் இருக்கும்.

முதல் தடவை அவள் சென்றபோது, ''இன்று எங்கள் அத்தைப் பாட்டி வந்திருந்தாங்க'' என்று அவள் காதில் கிசுகிசுத்தான் அபிஷேக்.

''எங்க வண்டார் குழலி பாட்டியோட பொண்ணு செண்பகம் அத்தைப் பாட்டி.''

''இவுங்க...'' இன்னொரு நரைத்த தலை அம்மையாரை இவள் சுட்டிக் காட்டி கேட்க,

''இது எங்க பாட்டி வடிவு'' அவன் சொல்ல,

''ஓ'' என்கிறாள்.

"ஆமா உங்க அம்மா எங்கே?"

"எங்கம்மா லலிதா ஆபீஸ் போயிருக்காங்க. இது எங்க குமரன் தாத்தா, அவருக்கு அப்புறம் எங்க அப்பா சரவணன். அவரும் ஆபீஸ் போயிருக்கார்."

"அ...ப்...பா" என்றவள் "உங்களுக்கு யாராவது ஸிஸ்டர் இருக்காங்களா?"

"ஓ... எனக்கு ஒரு அக்கா இருக்காங்க. அவுங்க ரேகா. எங்க குடும்பத்துலே இருக்கறவங்களைப் பற்றி தெரிஞ்சுகிட்டுதானே ஆகணும். ஏன்னா இங்கே வந்து தானே வாழணும்" என்றவன்,

"எங்க கொள்ளுப் பாட்டி, தாத்தாவுக்கு இரண்டு பையன். ஒரே பெண். எங்க தாத்தாவுக்கு ஒரு பையன். ஒரு பொண்ணு எங்க அப்பாவுக்கு நானும் எங்க அக்காவும்..."

அவன் சொல்லச் சொல்ல "போதும்... போதும். ப்ளீஸ் தலையே சுத்துது" என்று தலையைப் பிடித்துக் கொள்கிறாள் ஆர்த்தி.

"இதுக்கே சுத்துதுன்னா, இன்னும் எங்க வீட்டுப் பழக்க வழக்கம் எல்லாம் கேட்டா என்ன சொல்லுவியோ."

இதை எல்லாம் நினைத்துப் பார்க்கிறாள் ஆர்த்தி. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு, அவர்கள் வீட்டைத் தொடர்பு கொள்கிறாள்.

"யாரு" யாரோ கேட்க,

"நான் ஆர்த்தி பேசறேன். அபிஷேக் இருக்காரா?" தயங்கித் தயங்கி பேச,



"யாரு ஆர்த்தி... போனை வை. ஒரு பையன் கண்ணுல பட்டுடக் கூடாது. அலையறாங்க.." கடுமையாகக் கேட்டுவிட்டு, போனை டொக்கென்று வைக்க, ஆர்த்தி அதிர்ந்து போகிறாள்.

## 3

'யார் பேசியது? கொஞ்சம்கூட மரியாதை இல்லாமல் இப்படியா பேசுவது?'

அபிஷேக்கின் வீட்டில் கொள்ளுப்பாட்டி, பாட்டி அம்மா இருக்கிறார்கள். அத்தை எல்லாம் எப்போதாவது தான் வருவார்கள். அபிஷேக்கின் அக்காவும் அவ்வப்போது வரும் ரகம். இதை யார் பேசி இருப்பார்கள்? வயதானவர்களின் குரல் போல் இருந்ததே. யார் பேசி இருப்பார்கள்? ஒருவேளை அபிஷேக்கின் தாயாராக இருக்குமோ? கொள்ளுப்பாட்டி மிக மிக மிருதுவாகப் பேசும் ரகம். போனில் பேசுவாரா தெரியாது. நேரில் அப்படித்தான். அதே அபிஷேக்கின் பாட்டி பேசியதே இல்லை. ஒரு இர்ண்டு தடவை அபிஷேக்கின் வீட்டிற்குப் போயிருக்கிறாள். இவளைப் பார்த்தாலே கொள்ளுப் பாட்டி வண்டார் குழலி "வாம்மா" என்று சிரித்தபடி வரவேற்று குடிக்க ஏதேனும் கொடுப்பார்கள். அபிஷேக்கின் பாட்டி வடிவோ எதுவும் பேசாத ரகம். இவளைப் பார்த்தும் பேசாமல் போகிற ரகம்.

''எங்க பாட்டி யார்கிட்டேயும் ரொம்ப பேச மாட்டாங்க
என்றான் அபிஷேக். 'அபிஷேக்கின் அம்மாவைத் தா
நான் பார்க்கவே இல்லை. ஒருவேளை அவர்கள் தானோ
நிம்மதி இல்லாமல் எரிச்சல் அடைந்து கொண்டிருந்தா
ஆர்த்தி.

அன்று முழுவதும் அபிஷேக்கை தொடர்பு கொள்ளவே
முடியவில்லை. செல்போனிலும் சுத்தமாகத் தொடர்பு
கொள்ள முடியவில்லை. எரிச்சலில் இருந்தாள் ஆர்த்தி.
சரியாக ஐந்து மணிக்கு வேலையை முடித்து விட்டு,
வெளியே வந்தபோது சர்ரென்று எங்கிருந்தோ வந்தான்.

''ஹாய் ஸ்வீட்டி'' அவன் கூப்பிட,

''மண்ணாங்கட்டி, என்னடா நினைச்சுகிட்டு இருக்கே?
நேத்தும் இன்னிக்கும் எப்படித் தவிக்க விட்டுட்டே.
உன்னைக் கல்யாணம் பண்ணிகிட்டா இந்தத் தவிப்பு
தான் மிஞ்சும்.''

''அடாடா என்னம்மா சின்ன விஷயத்தை எல்லாம்
பெரிசு படுத்தறே?''

''எதுடா சின்ன விஷயம்? நேற்று மொத்தமும் செல்
லுக்கு டிரை பண்ணினேன்.''

''ஐயோ நீ வேற. செல்லுலே பேட்டரி போச்சு. ஒண்
ணுமே பண்ண முடியாது. நேற்று ரிப்பேருக்கு கொடுத்
ததை இப்பதான் கொடுத்தான்.''

''அப்படியா உங்க வீட்டுக்கு வேற டிரை பண்ணி
னேன்.''

''அப்படியா யாரும் சொல்லவே இல்லையே.''



''எப்படிச் சொல்லுவாங்க? எத்தனை அசிங்கமா பேசி
னாங்க தெரியுமா?'' அவள் சொல்லச் சொல்ல அவன்
சற்று வியந்து போய் அவளையே பார்க்கிறான்.

''இந்த மாதிரி யார் பேசுவாங்க? எனக்குப் புரியவே
இல்லையே. ஒரு வேளை உங்கம்மாவோ?''

''உளறாதே. எங்கம்மா மாதிரி ஒரு பர்ஸனை நீ
பார்க்கவே முடியாது.''

''எல்லா பிள்ளைகளுக்கும் அம்மா அப்படித்தான்.
ஒருவேளை மருமகள் வரப்போகிறாளேன்னு, பிள்ளை
கைவிட்டுப் போயிடுவானேன்னு கூட இருக்கலாம்.''

''ஸ்டுபிட் மாதிரி பேசாதே. எங்கம்மாவைப் பத்தி
உனக்கு என்ன தெரியும்'' சற்று கோபத்தோடும் எரிச்ச
லோடும் பேச, ஒரு நிமிடம் அவனை உறுத்துப் பார்க்
கிறாள். ஒரு நிமிடம் ஆத்திரப்பட்டாலும் அடுத்த நிமிடம்
உதடுகள் விரிந்து புன்னகைத்தது.

தாயின் மேல் பற்று இருக்கும் பிள்ளையை எல்லாப்
பெண்களுமே உள்ளுக்குள் ரசிக்கத்தான் ரசிக்கின்றனர்.
முதலில் எரிச்சல் பட்டாலும் அம்மாவை சொல்லி விட்
டான் என்றதும் முகத்தில் ஆத்திரம் வர, அந்த ஆத்
திரத்தை இரசிக்கிறாள் ஆர்த்தி.

''எதுக்கு சிரிக்கறே?'' சட்டென்று முகம் சிகப்பாக,
விருட்டென்று திரும்பிச் செல்ல எத்தனிக்கிறான்.

''என்னப்பா கிளம்பிகிட்டே இருக்கே.''

''என்ன பண்ணச் சொல்லறே? நீ ஸ்டுபிட்டா பேசுவே.
எல்லாத்தையும் நான் பொறுத்துக்கணுமா?''

''என்ன தப்பா பேசிட்டேன். போன்ல மேனர்ஸ் இல்
லாம பேசினால் பொறுத்துப்பாங்களா?''

"பொறுத்துக்க வேண்டாம். யார் என்னன்னு தெரியாம மத்தவங்களைப் பத்தித் தப்பா பேசுவாங்களா?"

"என்ன தப்பா பேசிட்டேன்? போன்லே இன்டீஸன்டா பேசினதை சொன்னது தப்பா?"

"சொன்னது தப்பில்லை. ஆனா தீர விசாரிக்காம உங்கம்மான்னு ஆரம்பிச்சியே அது தப்பு. எங்கம்மாவைப் பார்த்திருக்கியா? பேசி இருக்கியா? அவுங்களைப் பத்தி தப்பா பேசலாமா? ஐ அம் சாரி. நீ இப்படின்னு எனக்குத் தெரியாது. நல்ல காலம் இப்பவே தெரிஞ்சுதே. குட்பை டு யுவர் பிரண்ட்ஷிப்" விருட்டென்று பைக்கை உதைத்த படி கிளம்புகிறான்.

"அபிஷேக் நில்லு... நில்லு..." ஆர்த்தி கத்தியும் அபிஷேக் நிற்கவில்லை. இந்த ரூபம் புதிது. எப்போதும் கேலி செய்து கொண்டு, பேசிக் கொண்டு சிரித்துக் கொண்டு இருந்தவனுக்கு என்னாயிற்று?

ஆயிற்று ஒரு வாரத்துக்கு மேல் ஆயிற்று. பக்கத்து அலுவலகம் தான். இருந்தும் இருக்குமிடமே தெரியவில்லை. ஆர்த்தி தவித்துப் போகிறாள். போனில் அப்படிப் பேசியது தவறு தான். ஆனால் அதைத் தான் அழகாக மனம் புண்படாமல் சொல்லி இருக்கலாம். தவறு செய்து விட்டேன். அவன் மனம் புண்பட்டு இருக்கிறது. அதனால் தான் ஒதுங்கிப் போயே விட்டான். அவனைப் பார்க்காத, பேசாத இரண்டு நாட்களும் மனம் பேதலித்தது போல் இருந்தது. சாப்பிடப் பிடிக்கவில்லை. புத்தகம் படிக்கத் தோன்றவில்லை. யாரிடமும் பேச மனமில்லை. டி.வி. பார்க்க இஷ்டமில்லை. மனம் திருப்பித் திருப்பி நடந்ததையே அசை போட, இரண்டு



நாட்களுக்கு மேல் அவளால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

மூன்றாம் நாள் ஆர்த்தி அபிஷேக்கின் அலுவலகத்திற்கு மதிய இடைவேளையில் செல்கிறாள், அங்கும் அவனைக் காணவில்லை. மதியம் சாப்பிட வெளியில் சென்று விட்டதாக மற்றவர்கள் கூற எரிச்சல் வந்தது. இரண்டு மணி வரையில் அவனைக் காணோம். மெதுவாக அவன் தோழி ஒருத்தியைக் கேட்க, அவனுக்கு வெளியில் ஏதோ வேலை இருப்பதாகவும் வேலை முடிந்தால் வருவான். இல்லையென்றால் சந்தேகம் என்று கூற மௌனமாகத் தன் அலுவலகத்திற்கு வருகிறாள். என்ன செய்வது என்று தெரியாத நிலை. அலுவலகத்திற்கு மதியம் விடுப்பு எழுதிக் கொடுத்துவிட்டுக் கிளம்பி விடுகிறாள்.

'அவன் எங்காவது தென்படுகின்றானா?' கண்கள் அவனைத் தேடி அலுத்தது. வீட்டிற்குப் போக மனமில்லாமல் அபிஷேக்கின் வீட்டிற்குச் செல்லுகிறாள். வாயிலில் வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே செல்ல நினைத்தவள் யோசிக்கிறாள். ஒருவேளை அந்த போனில் பேசிய பெண்மணி இருந்தால் என்ன செய்வது? என்ன செய்யலாம். எப்படி இருந்தாலும் தான் அந்த வீட்டிற்குப் போய் வாழ வேண்டியவள். எந்தப் பிரச்சனைகளையும் தானே நேரே சமாளிப்பது நல்லது. இதில் அனாவசியமாக அபிஷேக்கை இழுக்கவே வேண்டாம். தானே பார்த்துக் கொள்ளுவோம்.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அழைப்பு மணியை அழுத்தி காத்திருக்கிறாள். யாரும் வந்து கதவைத் திறக்கவில்லை. மீண்டும் அழுத்த சட்டென்று

கதவு திறக்கப்பட்டது. ''யாரது?'' கேட்டவாறே அபி ஷேக்கின் தாத்தா வந்து கதவைத் திறக்கிறார்.

போன தடவை வந்திருக்கும்போது 'இவர்தான் என் தாத்தா' என்று அறிமுகப்படுத்தி விடுகிறான் அபிஷேக். ஆனால் தாத்தா ஒன்றுமே பேசாமல் இவளையே பார்த்துவிட்டுப் போனார். இன்றும் அப்படியே தான் 'நீயா' என்ற ஒரு பார்வையை அவள் மேல் வீசி விட்டு உள்ளே திரும்பிப் போகிறார்.

''தாத்தா...'' ஆர்த்தி கூப்பிட, காதில் விழாதது போல் போகிறார்.

''தாத்தா பிளீஸ் நில்லுங்க. நான் உங்க கூட பர்ஸனலா பேசணும்.'' தாத்தா நின்றார். திரும்பி என்ன என்பதுபோல் பார்த்தார்.

''என்ன தாத்தா வீட்டிற்கு வந்திருக்கேன். வான்னு கூப்பிட மாட்டீங்களா?''

''அதான் வந்தாச்சே அப்புறம் என்ன?''

''இல்லை தாத்தா உங்ககூட நிறைய பேசணும்னுதான் வந்தேன். ஹாப் அ டே லீவு போட்டுட்டு வந்தேன்.''

''ஹாப் எ டேயா? அப்படி பாதி நாள் லீவு போட்டுட்டு என்கிட்டே என்ன பேசணும்?''

''உங்க பேரனைப் பத்திதான்.''

''யாரு?''

''என்ன தாத்தா இது? எத்தனை பேரன்ங்க உங்களுக்கு இருக்காங்க. உங்க பேரன் அபிஷேக்கை பத்தி தான் பேசணும்.''

''அவனைப் பத்தி என்ன பேசணும்?'



''அவர் இங்க இருக்காரா?''

''அவன் எப்படி இருப்பான்? இப்ப ஆபீஸ் நேரம். ஆபீஸ்லே தானே இருப்பான்.''

''அங்க இல்லியே.''

''இல்லையா? எங்கே போனான்?''

''யாருக்குத் தெரியும்? செல்லையும் ஆப் பண்ணி வச்சிருக்கார். ஆபீஸ்லே போய் தேடியாச்சு. ஆளைக் காணோம்.''

''இந்தக் காலத்துல பொம்பளைங்க எதுக்கும் துணிஞ்ச வங்க. ஒரு பையனை விட மாட்டீங்களே.''

அவர் சொல்ல ஒரு நிமிடம் முணுக்கென்று கோபம் வந்தது.

என்ன மனிதன். இத்தனை வயதாகிறதே தவிர, வயதுக்கேற்ற முதிர்ச்சி இல்லை. மட்டமான மனிதன். ஒரு பெண் ஆணோடு சகஜமாகப் பேசினால் தவறா? அவளுடையது நட்பு மட்டுமல்ல அன்பும் கூட. அபிஷேக்கை உயிர்க்குயிராக அல்லவா நேசிக்கிறாள். அபிஷேக் அன்றே தாத்தாவிற்கு தன்னை அறிமுகப் படுத்தி வைத்தானே. அன்றே தன்னைப் பற்றி என்ன வெல்லாம் கேட்டார்.

''ஏண்டா அபிஷேக் டிஸ்கொத்தேவுக்கெல்லாம் அவளை அழைச்சுகிட்டு போவியா?'' என்று கேட்டார்.

''இல்லையே தாத்தா. அவ சரியான பழைய பஞ்சாங்கம் எங்கேயுமே வரமாட்டா.''

''அப்படியா?'' நம்பாமல் அவளையே பார்த்தவர்,

''ஆமா உனக்கு பாய் பிரண்ட்ஸ் உண்டா?'' என்று கேட்க, தன்னோடு அபிஷேக்கும் சேர்த்து எரிச்சல் பட்டது ஞாபகத்திற்கு வந்தது.

'ம்... ஹூம்... எதுவும் பேசி காரியத்தை கெடுத்து விடக் கூடாது.'

''என்ன தாத்தா நான் கல்யாணம் பண்ணிக்கப் போறவர்தானே சுத்தினா என்ன?'' சிரித்தபடி கேட்க,

''அடி செருப்பால. எய்யா பொண்ணுங்கன்னா ஜொள்ளு விட்டு பேசிகிட்டு இருப்பியா?'' சற்று தடித்த குரலில் அப்போது தான் வந்த அபிஷேக்கின் பாட்டி கூற, மண்டையில் இடித்தது போல் உணர்ந்தாள் ஆர்த்தி.

## 4

இந்தக் குரல் டெலிபோனில் கேட்ட அதே குரல் தான். தன்னிடம் போனில் மோசமாகப் பேசியது மட்டு மில்லாமல், இங்கேயும் எப்படிப் பேசிக்கிறார்கள்.

''வாங்க உள்ளே?'' என்று அபிஷேக்கின் பாட்டி கறுவ,

''என்னடி திமிரா? நீ வாழ்ந்த இலட்சணம் எனக்குத் தெரியாதா?''

அவர் கத்த, ''என்ன மோசமா வாழ்ந்துட்டேன். என்ன பேசறே நீ? வார்த்தையை அளந்து பேசு'' பதிலுக்குப் பாட்டி எகிற,



''என்னடி அளக்கறது?'' தாத்தா ஆரம்பிக்க, பாட்டி மூச்சைப் பிடித்துக் கொண்டு கத்துகிறாள்.

''இப்படி பேசினால் கிழவா உன் நாக்கு அழுகிடும். போகும்போது நல்லா போக மாட்டே.''

''எத்தனை திமிருடி உனக்கு. கார்ப்பரேஷன் லாரிதான் உனக்கு. நாதி இல்லாத கழுதை. ''கத்தலின் உச்சத்தில் ஒரு கட்டையைத் தூக்கிக் கொண்டு அடிக்க ஓடி வர ஆர்த்தி அதிர்ந்து போகிறாள்.

அவள் வீட்டில் 'இடியட்' என்ற வார்த்தைக்கு மேல் திட்டியதில்லை. என்றாவது அம்மா கோபப்பட்டு அந்த ஒரு வார்த்தை சொன்னாலே அவள் பிழியப் பிழிய அழுதிருக்கிறாள். அப்பாவோ 'கண்ணம்மா, செல்லம்' என்பதற்கு மேல் பேசியதில்லை. ஒரு ஆணும், பெண் ணும் அதுவும் கணவன், மனைவி வயதானவர்கள் இப்படி யெல்லாம் கேவலமாகச் சண்டை போட்டுப் பார்த்ததில்லை. அதிர்ச்சி அடைந்தவளாய் பிரமை பிடித்தது போல் ஆகிறாள். அதிர்ந்து போய் நின்றபோது, அபிஷேக்கின் கொள்ளுப் பாட்டி உள்ளிருந்து வேகமாக வருவது தெரிந்தது.

''என்னடா இது?'' வண்டார் குழலி பிள்ளையைக் கடிந்து கொள்கிறாள். மருமகள் வடிவையும் அதட்டல் போட்டு அடக்குகிறாள்.

''ரொம்ப நல்லாயிருக்கு. எலியும், பூனையுமாவா சண்டை. போட்டுப்பீங்க. எதுக்கு இப்படி அசட்டுத் தனமா சண்டை.''

''உங்க பையன் அசிங்க அசிங்கமா பேசறதை கேக்கலை.''

''ஒரு பெண்ணுக்கு அடக்கம் வேணும்'' இப்ப எல்லாமே பேசுவே. வயசுக்கு ஏத்த பேச்சா இருக்க வேணாம்.''

''நல்லா சொல்லும்மா. இது வாய்க்கு, இதைக் கட்ட மாறடிக்கறதே பெரிய விஷயம்.''

''பேசாம இருடா. உன் வயசென்ன? இந்த வயசுலே பேசற பேச்சா இது? நாக்குலே நரம்பு இல்லாமயா பேச வாங்க? உம் பெண்டாட்டி வயசு என்ன? அவளைப் போய் இந்த மாதிரி கோபமாகவா பேசுவே. வெட்கக் கேடு? போய் ரெண்டு பேரும் வேலையைப் பாருங்க. வயசாச்சே தவிர மூளை கிடையாது'' இருவரையும் திட்டி அனுப்பியபின், ஆர்த்தியைப் பார்க்கிறாள்.

''வாம்மா உள்ளே வா'' ஆதரவாகக் கூப்பிட்டு உள்ளே அமர வைக்கிறாள்.

''என்னம்மா சாப்பிடறே காபி, டீ, ஜூஸ், ஸூப் என்ன வேணும்னு சொல்லு.''

''எனக்கு ஒண்ணும் வேணாம்.''

''சரிதான் அபிஷேக் எங்களைத் திட்டவா. முதல்லே என்ன சாப்பிடறேன்னு சொல்லு.''

''ஒண்ணும் வேணாங்க.''

''அடாடா பேரன் பெண்டாட்டி எப்படி எல்லாம் கெஞ்ச வைக்கறா பார்த்தியா?'' வண்டார் குழலியின் கணவர் சற்று கேலியாகக் கேட்டு சிரிக்க, ஆர்த்திக்கு முகம் சிவந்து போகிறது.

''அப்படி எல்லாம் இல்லை அங்கிள்'' ஆர்த்தி கூற,



''அங்கிள் இல்லேம்மா தாத்தான்னு கூப்பிடு. அதுவும் கொள்ளுத் தாத்தா'' பாட்டி வண்டார் குழலி பொக்கை வாய் திறந்தபடி சிரித்தபடி கூற,

''ஆமா நாங்க கொள்ளுத் தாத்தா நீங்க என்னவாம்?''

''நான் கொள்ளுப் பாட்டியாச்சே. கொள்ளுப் பேரனோட பெண்டாட்டியை நான் கவனிச்சுக்க வேணாமா?''

முகம் முழுவதும் சிரிப்பாக பாட்டி கூற, ஆர்த்திக்கும் லேசாக சிரிப்பு வந்தது. மடமடவென்று இரண்டு சாத்துக்குடியைப் பிழிந்து அதை அப்படியே கொண்டு வந்து கொடுக்கிறாள். ஆர்த்தி அதை சாப்பிட்டதும் மடமடவென்று டம்ளரை வாங்கிக் கொண்டு போய் கழுவி வைக்கிறாள்.

''இரும்மா பேசிகிட்டு இரு. போண்டா போடறேன். சாப்பிட்டு விட்டு போ.'' என்கிறாள்.

''இல்லைங்க ஒண்ணும் வேண்டாம். மத்தியானம் சாப்பிட்டதே ஹெவியாக இருக்கு.''

''அதெல்லாம் ஒண்ணும் பேசாதே.''

அடுத்த பத்து நிமிடத்தில் போண்டாவோடு வந்தார் அபிஷேக்கின் கொள்ளுப் பாட்டி. அபிஷேக் இவருக்கு வயது எண்பத்தைந்து என்றானே, பதினாறு வயது பெண் போல் எப்படி வேலை செய்கிறார். அதிசயித்து போய் நிற்கிறாள் ஆர்த்தி. அவளை சாப்பிட வைத்து, அவளிடம் அன்பாக சிரிக்க, சிரிக்க பேசிய ஆர்த்திக்கு வண்டார்குழலி பாட்டியை மிகமிகப் பிடித்து விட்டது. பாட்டியிடம் அபிஷேக்கைப் பற்றிக் கேட்கலாமா? பாட்டி உள்ளே போனபோது, கூடவே போகிறாள் ஆர்த்தி. கூடவே சென்று பார்த்தபோது பாத்திரங்களைக் கழுவியவாறே பேசுகிறாள் பாட்டி.

நான் க்ளீன் பண்றேன்.''

''பாட்டி குடுங்களேன். நான் க்ளீன் பண்றேன்.''

''ஒண்ணும் வேண்டாம். எங்கூட பேசிகிட்டு இரு போதும்.''

''இல்லை பாட்டி கொடுங்க'' நானும் ஹெல்ப் பண்றேன். பாட்டி தேய்த்து வைக்க ஆர்த்தி கழுவி வைத்தாள். 'வேண்டாம் வேண்டாம்' என்று தடுத்தும் கேட்காமல் தேய்த்து கழுவி வைத்த பாத்திரங்களைத் துடைத்து வைத்தாள்.

''கொள்ளுப்பேரன் பெண்டாட்டியைப் பார்த்தீங்களா? எத்தனை சுறுசுறுப்பு.'' வண்டார் குழலி சிலாகித்தபோது ஆர்த்தியின் முகத்தில் வெட்கத்தின் சுவடுகள். முகம் லேசாக சிவந்தவாறே புன்னகைத்த வண்ணம் நிற்கிறாள். அவள் கைகளைத் தன் கைகளில் கோர்த்துக் கொண்டாள் வண்டார் குழலி.

''கொஞ்சம் வா'' என்று கூப்பிட்டுக் கொண்டு போய் மர நிழலில் அவளை அமரச் செய்து, இருவாட்சியைப் பறிக்கிறாள்.

மடமடவென்று பூவைக் கட்டிக் கொண்டு,

''சொல்லும்மா அபிஷேக்கைத் தேடிக் கொண்டுதானே வந்தே, சொல்லு என்ன விஷயம்?'' அவள் கேட்க,

முதலில் இவர்களிடம் விஷயத்தைச் சொல்லலாமா யோசிக்கிறாள். மிக நன்றாகப் பழகுகிறார்கள். அதனால் சொல்லலாம். இருந்தாலும் தன்னை தவறாக நினைத்து விட்டால் மறுபடியும் தயங்குகிறாள்.

''சொல்லும்மா என்ன விஷயம்?''

''அபிஷேக்கை இரண்டு நாட்களாகப் பார்க்கலை.''



''என்னம்மா'' என்று ஆரம்பித்தவள்,

''ஏதாவது பிரச்சனையாமா?'' ஆதரவாகக் கேட்க, ஆர்த்தியின் கண்களில் கண்ணீர்.

''என்னம்மா ஆச்சு?'' ஆர்த்தியின் தலையைத் தடவிக் கொடுக்க, சட்டென்று கரைந்து உருகி அழுகிறாள்.

''ஆர்த்தி... இங்க வா... என்னைப் பாரு எத்தனை தைரியமான பொண்ணுன்னு நினைச்சுகிட்டு இருக்கேன். என்னாச்சு? என்ன பிரச்சனை? என்னன்னு சொன்னா தானேம்மா சரி பண்ண முடியும். சொல்லு.'' ஆர்த்தி பின்னும் தயங்க.

''என்னை ஏம்மா வேற ஒருத்தியா நினைச்சுக்கறே? நானும் உன் குடும்பத்திலே ஒருத்தின்னு நினைச்சுக்கச் சொல்லு. அபிஷேக்குக்கும், உனக்கும் ஏதாவது சண்டையா சொல்லு.''

ஆர்த்தி லேசாகத் தலையை ஆட்டுகிறாள்.

''என்னம்மா பிரச்சனை. உன்னைப் பார்த்தா ரொம்ப அட்ஜட்டிங் டைப்பா தானே இருக்கு. அவன் ஏதாவது அடாவடி வேலை பண்ணிட்டானா?'' ஆர்த்தி இல்லையென்று தலை ஆட்ட,

''என்ன விஷயம் சொல்லும்மா.''

''பாட்டி தப்பெல்லாம் என் பேர்லதான். எதையும் யோசிக்காம பட்டுனு பேசிட்டேன். அதுலேர்ந்து அபிஷேக் தன்னோட முகத்தை கூட என்கிட்டே காமிக்கலை. ரொம்ப நேரம் பேசறவர் என்கிட்டே பேசறதையே சுத்தமா விட்டுட்டார்.''

பின் நடந்தவைகளைக் கூற, ''நீ தப்புதாம்மா பண்ணிட்டே. ஆனா ஒண்ணுதாம்மா எனக்குப் புரியலை.

வரும்போதே மாமியார் கெட்டவன்னு நினைச்சுகிட்டு வ வரணும். எந்த மனுஷங்களும் கெட்டவங்க இல்லை வளர்ந்த சூழ்நிலை தான் நம்பளை கெட்டவங்க மாத்துது. உன் அம்மாவைப் பத்திச் சொன்னா உனக்கு கோபம் வராதா? அதேபோல் தானே அவனுக்கும் அவுங்க அம்மாவைப் பத்தி பேசினா ஆத்திரம் வர தானே வரும். ஆனா அதைவிட இன்னும் ஒண்ணை புரிஞ்சுக்கணும். அபிஷேக்கோட அம்மா தங்க வேலைக்குப் போறவ. பயங்கர சுறுசுறுப்பு. ரொம் திறமைசாலி. வேலைக்குப் போறேன்னு சோம்பேறி தனமா உக்காராமே இங்கேயும் வந்து வேலை செய்வா.

''பாட்டி என்ன செய்யணும். என்ன செய்யணும்னு கேட்டு கேட்டு செய்வா. ரொம்ப தங்கமான பொண்ணு. ஆனா எம் மருமக கொஞ்சம் வித்தியாசமானவ தான்.''

''பார்த்தேன் பாட்டி. நீங்க இப்படி இருக்கறதுக்கு அவுங்க அந்த மாதிரி இருக்கறது கஷ்டமா இருக்கு. நீங்க பாவம்தான்.''

''அப்படி எல்லாம் ஒண்ணுமில்லேம்மா. பூவிலே பல வகைப் பூக்கள் இல்லையா. நிறங்களே பலவித வண்ணங்கள் இல்லையா? அதுபோலத்தான் இதுவும் எல்லாம் ஒண்ணுபோல இருக்க முடியுமா? கடவுள் அப்படி படைக்கலையே. இப்படித்தான் நினைச்சுகிட்டு அப்படியே ஏத்துக்கப் பழகிக்கணும். எனக்கு எதுவும் வித்தியாசமாத் தெரியலை.''

பாட்டியின் அறிவார்ந்த பேச்சைக் கேட்டு அசந்து போய் நிற்கிறாள் ஆர்த்தி. அந்த நேரத்தில்,



''ஹாய் பார்ட்ஸ் ஒரு ஸ்டிராங் காபி'' என்று உள்ளே வந்தவன் ஆர்த்தியைப் பார்த்து முகம் மாறினவனாய் எரிச்சல் ஆத்திரத்தோடு அவளையே உறுத்துப் பார்க்கிறான்.

## 5

''வாடா வாடா குழந்தை வந்திருக்கா என்னன்னு கேளு?''

''பாட்டி எனக்குக் காபி கலக்காதீங்க வேண்டாம். வெளியே வேலை இருக்கு.''

மறுநிமிடம் விருட்டென்று கிளம்ப.

''டேய் நில்லுடா'' பாட்டி கூவிக் கொண்டே, பின்னாலேயே ஓட்டமும் நடையுமாக வருகிறாள்.

அதற்குள் பைக்கை உதைத்தவாறே விருட்டென்று கிளம்பிப் போகிறான். ஆர்த்தி விக்கித்துப் போகிறாள். தன் மேல் அவனுக்கு மிகுந்த கோபம் என்று புரிந்தது. அவனுடைய தாயாரைப் பற்றி தான் சொன்னது தவறு தான். மனம் மருகிற்று. அவனிடம் மன்னிப்பு கேட்க மனம் விழைந்தது. அலுவலகத்தில்தான் பார்க்க முடியவில்லை என்று வீட்டிற்கு வந்தால் இங்கேயும் முகத்தை திருப்பிக் கொண்டு போகிறான். ஆர்த்தி செய்வதறியாது திகைக்க,

''என்னாச்சும்மா? உங்களுக்குள் வேறு ஏதேனு பிரச்சனை இருக்கா?'' பாட்டி சற்று தணிந்த குரலில் கே கிறாள்.

ஆர்த்தியின் கண்கள் கலங்கிப் போயின. பாட் ரொம்ப ரொம்ப நல்லவர் போல் தான் இருக்கு. சொ னால் ஏதேனும் உதவி வருமா? முதலில் வாயைத் திறந் சொல்ல முற்பட்டவள், பிறகு அடக்கிக் கொண்டாள் வேண்டாம் இது தன்னால் ஏற்பட்ட பிரச்சனை, தா தான் தீர்த்துக் கொள்ள வேண்டும். லேசாக முறுவலி கிறாள்.

''ஒண்ணும் இல்லையே.''

''என்னம்மா. ஒண்ணும் இல்லேங்கறே? அவன் ஏ கோபிச்சுகிட்டுப் போறான்.''

''அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை. நான் கிளம் பறேன் ஆன்ட்டி.''

''நான் ஆன்ட்டி இல்லே பாட்டி. அவனுக்கு பாட்டின்னா உனக்கும் பாட்டிதானே.''

''ஓ.கே. தேங்க்யூ பாட்டி.'' தாத்தாவிடமும் சொல்லி விட்டு கிளம்புகிறாள்.

ஸ்கூட்டியில் ஏறி சற்று வேகமாக விடுகிறாள்.

'எங்கே போயிருப்பான். இப்போது தானே அலுவல கத்திலிருந்து வந்திருப்பான். மறுபடியும் எங்கே போயி ருப்பான்?' அவனைத் தேடியவாறே வேகமாகப் போகி றாள். அருகில் கண்ணில் பட்ட எந்த இடத்திலும் அவன் இல்லை. மனம் சோர்ந்து போய் அருகில் உள்ள பூங்கா வின் அருகில் போய் வண்டியை நிறுத்துகிறாள்.



மனம் முழுவதும் வேதனையோடு உள்ளே போய் ஒரு இடத்தில் அமர்கிறாள். அபிஷேக் தெரியாமல் செய்துட் டேன். அதுக்கு இத்தனை கோபமா? கிட்டத்தட்ட ஐந்து நாட்கள் ஆகி இருக்கும். அவனின் முகத்தையும் பார்க்க வில்லை. அவனுடன் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. தவிக்கும் மனதை அடக்கத் தெரியாமல் துடிக்கிறாள். மனப்பாரம் அழுத்த சிறிது நேரம் கண்ணை மூடி அமர்ந்து இருந்தவள். பின் பெருமூச்சு விட்டவளாக எழுந்திருக் கிறாள். அவனைக் கட்டாயம் சந்திக்க வேண்டும். பேச வேண்டும். 'கடவுளே உதவி செய்' 'ஆர்த்தி இந்த கால ஜனத்தின் வாரிசு. ஆழ்ந்த பக்தியோ, பிரார்த்தனையோ எதுவுமே அவளிடம் கிடையாது. அம்மா அப்பாவின் செல்லம். எது கேட்டாலும் நினைக்கும் போதே கிடைத்து விடும். பக்தி, பிரார்த்தனைகள் கூட தேவையை முன் னிட்டுத்தான் ஏற்படுகிறது. ஆபத்து வரும்போதுதான் ஏற்படுகிறது. அவளைப் பொறுத்தவரையில் எந்தத் தேவையையும் ஆபத்தையும் சந்தித்ததில்லை.

ஆனால் காதலிக்கத் தொடங்கியதிலிருந்தே ஏதோ பிரச்சனைகள் வந்து கொண்டே தான் இருந்தது. இத் தனைக்கும் அபிஷேக் மிக மிக நல்லவன். ஆரோக் கியமான பாசமுள்ள, துடிதுடிப்பான இளைஞன் தான். ஆனால் அவனைக் காதலிப்பதிலும் பிரச்சனைகள் நிறைய இருக்கத்தான் இருந்தது. அவன் எப்போதுமே விஷயங்களை வெளிப்படையாகச் சொல்ல மாட்டான். எல்லா விஷயங்களையுமே ஆச்சரியப்படுத்தும் வித மாகத்தான் சொல்லுவான். அபிஷேக்கின் பிறந்த இடத்தில் வேறு வீடு கொள்ளாத மனிதர்கள். தாத்தா, பாட்டி, கொள்ளுத் தாத்தா, கொள்ளுப் பாட்டி, அத்தைப்

பாட்டி, அத்தை, சின்ன தாத்தா, சித்தப்பா, பெரியப்ப என்று மூச்சு முட்டும் உறவுகள். கொள்ளுப் பாட்டி, தாத்த வீட்டில் இருப்பதனால் இக்காலத்தில் போல் இல்லாம உறவுகள் வந்து போய் கொண்டிருக்க அது வேறு குழப்பத்தைத் தந்தது.

இப்போது அவனின் கோபமும், பாரா முகமும் மனதை உறுத்த முதல் முறையாக கண்களை மூடி கடவுளை வேண்டுகிறாள். சிறிது நேரம் பிரார்த்தித்த பின் தளர்ந்த மனதோடு மெதுவாக எழுந்து நடக்கிறாள்.

மனதில் பாரம் இருக்கும்போது கண்களுக்கு எதுவும் தெரியாது. எதிரில் யாரோடோ முட்டிக் கொண்ட பின் 'ஐயம் சாரி' என்று அதிர்ந்து போகிறாள்.

அபிஷேக் தான் எதிரில் நிற்கிறான். அவனும் ஏதோ யோசனையில் இருந்திருக்க வேண்டும். இவளைப் பார்த்ததும் முகம் மாறுகிறது. சுறுசுறுவென்று கோபம் வர, முகம் சிவக்க திரும்பிப் போக பார்க்கையில் சட்டென்று அவன் கைகளைப் பிடித்து இழுக்கிறாள் ஆர்த்தி.

''ஸாரி ஸாரி ஸாரி. எனக்கு இந்த தண்டனை போதும். ப்ளீஸ் மன்னிக்க மாட்டாயா? நான் ஒரு பேதை...'' என்று அவள் பாட ஆரம்பிக்க, ஒரு நிமிடம் மௌனமாக இருந்தவனின் முகம் இளகியது.

''அபிஷேக் உனக்கு கோபம் வந்தா என்னை அடிச்சிரு. என் கூட பேசாம மட்டும் இருக்காதே ப்ளீஸ்...''

அப்போதும் அவன் மௌனமாக இருக்க, அவன் கையைத் தன் கன்னத்தில் வைத்தவாறே கண்கள் கலங்கி அவள் நிற்க, அவனிடம் இருந்து மெல்லிய பெருமூச்சு எழுந்தது.



''ஓ.கே.'' என்றவாறு நிற்கிறான். முகம் சற்று இறுக்கத்தை தொலைத்த போதும் அவன் இன்னும் சகஜமாக வில்லை.

''தேங்க்யூ அபிஷேக் உங்கம்மாவைப் பத்தி தப்பா எல்லாம் பேச மாட்டேன். மன்னிச்சிடு'' மறுபடியும் மனம் உறுக அவள் கூற,

''ஓ.கே. ஃபர்கெட் இட். சரிவா வீட்டுலே டிராப் பண்றேன்.''

''வேண்டாம் அபிஷேக் நான் வண்டி கொண்டு வந்திருக்கேன்.''

''சரி வா போகலாம்.''

''ஓ.கே... போகலாம் ஆனா வீட்டுக்கு இல்லே. ஏதாவது ஓட்டலுக்குப் போகலாம்.''

முதலில் சற்று அமைதியாக இருந்தவன், ''சரி வா கிளம்பலாம்'' என்றபடி நடக்கிறான். அவனிடம் தன் உணர்வுகளைக் கொட்ட வேண்டும். தான் பட்ட மன உளைச்சல்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று எண்ணியவள், ஏற்கனவே கோபமாக இருப்பவன் என்ன சொல்வானோ என்று மௌனமாக நடக்கிறாள். இருந்தும் மனம் தாளவில்லை. எப்படி இவனால் பாரா முகமாக இருக்க முடிகிறது. தான் எப்படி துடித்து விட்டோம். இவனிடம் அந்த துடிப்பு இல்லையா? இவனுக்கு தன் மேல் ஆசை தான் இல்லையா? நினைக்கும் போதே கண்களில் நீர் கட்டிக் கொள்ள, மௌனமாக அவன் பின்னே நடக்கிறாள். கண்களில் நீர் நிரம்பி வழிய எதேச்சையாக அவளைப் பார்த்தவன் திடுக்கிட்டுப் போனான்.

"என்னாச்சும்மா?" சற்று ஆதரவான குரலைக் கே
டதும், தாங்க முடியாமல் அழுகிறாள். பூங்காவின் உ
காரும் பகுதியில் அமர்ந்து முகத்தை மூடியவாறு அ
கிறாள்.

"ஏய் ஆர்த்தி. என்ன இது சில்லியா? அழாதே
அழாதேம்மா" ஆதரவாக அவள் தலையைத் தடவ,

"எப்படி முடிஞ்சுது உன்னாலே. என்னைப் பார்க்கா
எப்படி இருக்க முடிஞ்சுது. நான் எத்தனை தவிச்சு
போயிட்டேன் தெரியுமா? ப்ளீஸ் அபிஷேக் இனிமே
இந்த மாதிரி தண்டனை மட்டும் எனக்குத் தராதே
என்னாலே முடியாது. இந்த ஒரு வாரமா நான் கொஞ்சம்
கொஞ்சமா செத்துகிட்டு இருக்கேன். இதுக்குப் பதில
என்னை ஒரு வழியா கொன்னுப் போட்டுடு." மீண்டு
அழ,

"சரி... ஆர்த்தி... சரி... ஆனா நீ அப்படிப் பேசினதே
என்னால கேட்டுட்டு இருக்க முடியலே, சாரி" என்கிறான்

"இல்லை அபிஷேக் நானும் தெரியாமத்தா
பேசிட்டேன் ஸாரி. ஐ அம் ரியலி சாரி."

"ஓ.கே... வா... 'ஃபர்கெட் இட்.'" அவள் கைகளை
லேசாக அழுத்துகிறான். தலையைத் தடவுகிறான்
தோளின் மேல் கை போட்டு அழைத்துச் செல்ல, மன
சாந்தப்பட்டவளாக அவனோடு செல்கிறாள்.

ஒரு ஓட்டலுக்குள் சென்று இருவரும் சாப்பி
அமர்ந்தபோது,

"கமான். உனக்கு என்ன வேணும் ஆர்டர் பண்ணு.
என்கிறான் அபிஷேக்.



"நான் எனக்குன்னு இதுவரை எங்கே ஆர்டர் பண்ணியிருக்கேன். எனக்கும் சேர்த்து நீங்க தானே ஆர்டர் பண்ணுவீங்க."

"ஓ.கே." என்றவன் இரண்டு சின்ன சீஸ் பிஸாவையும், காபியையும் வரவழைக்கிறான். வரும்வரை இருவரும் மௌனமாக ஒருவரை ஒருவர் பார்த்தவாறே அமர்ந்திருந்தனர்.

பீட்ஸா வந்ததும், ஆளுக்கொரு தட்டை எடுத்துக் கொண்டவர்கள் மௌனமாக சாப்பிட ஆரம்பித்தனர். ஆர்த்தி மெதுவாகப் பேச ஆரம்பித்தாள். இந்த ஒரு வாரமாகத் தான் பட்ட உளைச்சல், வருத்தம், துன்பம் எல்லாவற்றையும் விலாவாரியாகச் சொல்கிறாள்.

"அபிஷேக்... என்னால இந்த ஒரு வாரத்துல எதுவுமே முடியலே. நல்ல புக்கை படிக்க முடியலை. டி.வி.யிலே நல்ல மூவியைக் கூட பார்க்க முடியலே. இத்தனை ஏன்? பெஸ்ட் பிரண்ட்ஸ் வந்தாங்க. அவங்களோடு கூட பேச முடியலே. எப்பவுமே ஏதோ இழந்த தவிப்பிலேயே இருந்தேன். என் கசின் கல்யாணத்துக்குக் கூடப் போகலே தெரியுமா?"

குழந்தை பேசுவது போல் அவள் சொல்லச் சொல்ல மெதுவாக புன்னகைக்கிறான் அபிஷேக்.

"ஓ.கே... ஓ.கே. நடந்ததைப் பத்தியே பேசாதே. சாப்பிடு."

"உனக்கு மட்டும் எந்த பீலிங்கும் இல்லையா?" சற்றுத் தயங்கித் தயங்கித்தான் கேட்கிறாள்.

"ஏன் பீலிங் உனக்கு மட்டும் தான் இருக்குமா? பிரியற கஷ்டம் எல்லாருக்கும் தான் உண்டு. ஒரு வாரமா நானும்

சரியா சாப்பிடலை தூங்கலே? போதாக் குறைக்கு ஒரு வாரமா தலைவலி.''

அவன் சொல்லச் சொல்ல அவள் முகம் பூ மலர்ந்தது போல் மலர்ந்து போனது.

''பின்னே எதுக்கு உனக்கு இந்த கோபமும் வீம்பும். பிடிவாதத்துலே உன்னை மிஞ்சறதுக்கு ஆளே இல்லை'' செல்லமாக அவனைக் கொஞ்சியவள் உணர்வு பெருக் கோடு அவன் கன்னத்தைத் தட்ட கைகளால் பிளையிங் கிஸ் தர, அவனுக்கு நேர் எதிரில் அமர்ந்து கொண்டு இந்த காட்சியை கோபத்தோடு வெறித்துப் பார்க்கிறாள் அபிஷேக்கின் தாயார் லலிதா.



# 6

'என்ன இந்தப் பெண் பொது இடத்தில் இப்படி எல்லாம் நடந்து கொள்கிறது? யார் இவள்? அபிஷேக் ஒரு பெண்ணை வீட்டிற்கு அழைத்து வந்தான் என்று மாமியார் புலம்பித் தீர்த்தாளே அந்தப் பெண்ணா இவள்?' லலிதா காதலுக்கு தடை சொல்பவள் இல்லை. இருந்தாலும் காதல் என்ற பெயரில் அடிக்கும் கூத்துக்களை ஒத்துக் கொள்ளவே மாட்டாள். இளம் பிராயம் இந்த நேரத்தில் உடல் இச்சைகள் தோன்றுவது நியாயமான ஒன்றுதான். இருந்தும் அதைக் கட்டுப்படுத்த தெரிய வேண்டும். தான் தன் பிள்ளையை அப்படி வளர்க்கவே இல்லையே.



எத்தனையோ பெண்கள் அவன் மேல் விழுந்து பிடுங்கியும் அவன் சிரித்தபடி ஒதுங்கிப் போய் விடுவான். எத்தனையோ பேருக்கு உதவி செய்திருக்கிறான். பெண்களையும் வித்தியாசப்படுத்திப் பார்த்ததில்லை. அவர்களுக்கும் வேண்டும் உதவி எல்லாம் செய்திருக் கிறான். ஒரு முறை பொருட்காட்சியில் ஒரு பெண் தன் குழந்தையைத் தொலைத்துவிட்டு தேட, ''அம்மா இங்கே பார்த்துகிட்டே இருங்க'' என்று அம்மாவைப் பார்க்க வைத்துவிட்டு, தான் போய் குழந்தையைத் தேடி, அந்தத் தாய்க்கு உதவி செய்து விட்டு வந்தான். எத்தனையோ முறை படிக்கும் பெண்களுக்கு புத்தகத்திலிருந்து, வேலை தேடும் பெண்களுக்கு அப்ளிகேஷன் எழுதித் தருவதிலிருந்து இன்னும் என்னென்ன முடியுமோ அத்தனையும் செய்து இருக்கிறான்.

அவன் பெண்களோடு பேசுவதோ, பழகுவதோ எதை யுமே இவள் தவறாக நினைத்ததில்லை. மாறாக இவள் இருக்கும்போது வந்தால் அவர்களையும் வரவேற்று, சாப்பிடக் கொடுத்து என்று எத்தனையோ செய்திருக் கிறாள். ஆனால் பிள்ளை இப்படி எல்லாம் பொது இடத்தில் நடந்து கொள்வான் என்று எதிர்பார்க்கவே இல்லை. அந்தப் பெண் அவன் தலையைத் தடவுவதும், கன்னத்தைக் கிள்ளுவதும், பிளையிங் கிஸ் கொடுப்பதும் 'சே!' எரிச்சலுருகிறாள்.

ஒரு வாரம் முன்பே பாட்டி அரசல் புரசலாக விஷ யத்தைக் காதில் போட்டார். தாத்தாவும் ''பொண்ணு நல்லா இருக்குதும்மா முடிச்சிடு'' என்கிறார்.

ஆனால் தன் மாமியாரும், மாமனாரும் எப்படி எல்லாம் பேசினார்கள்.

''பையனை இப்படியா வளர்ப்பாங்க? கண்டவளை வீட்டுக்குக் கூப்பிட்டுகிட்டு வரான்'' இது மாமியார்.

''அப்பா... அது பொம்பளையா? எப்படி எல்லாம் பேசுது?''

''என்னாச்சு மாமா?'' இவள் சற்று அதிர்ச்சியோடு கேட்க,

''வேற என்ன ஆம்பிளை கிடைப்பானான்னு அலையுது. பொட்டைப் பசங்க கெட்டு குட்டிச் சுவரா போயாச்சு'' மாமனார் பின்னும் சொல்ல மாமியார் இடை மறிக்கிறாள்.

''தாத்தா, தாத்தான்னு மேலேயே விழுது. தாத்தா மேலேயே விழுதுன்னா அபிஷேக்கை என்ன பண்ணும் அந்தப் பொண்ணு. காலமே கெட்டுக் கிடக்குது. பொம்பளைங்க சுதந்திரம், சுதந்திரம்னு சொல்லி எல்லாத்தையும் விட்டாச்சு! சே!'' மாமியார் கத்த, அன்று அதிர்ந்து போய் இருந்தாள்.

மாமியார் ஒன்று என்றால் பத்து என்று சொல்லும் ரகம். மனதை குத்தும்படி வார்த்தைகளை விட்டு அன்றெல்லாம் கத்திக் கொண்டிருந்தாள். லலிதாவிற்கு கொஞ்சம் வருத்தம். இருந்தாலும் எதையும் தப்பாக நினைக்கவில்லை. தன் பையன் அப்படிப்பட்டவன் இல்லை. சாதாரண நண்பனாகத்தான் பாவித்திருப்பான் என்று அவள் உள் மனம் நம்பியது. ஆனால் இப்போது நேரில் பார்த்தால் மாமியார், மாமனார் சொன்னது நிஜம் என்று அல்லவா தோன்றுகிறது.

அன்பு செலுத்தட்டும். லவ் பண்ணட்டும் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்காகப் பொது இடங்களில்



இப்படியா நடந்து கொள்வது? எரிச்சல் வந்தது. சாப்பிட்டாலும் கண்கள் பையன் மேலேயே இருந்தது. அந்தப் பெண் அவன் கன்னத்தைப் பிடித்து இழுத்தது. அவனும் முகம் சிவந்து சிரிக்கிறான். மௌனமாகச் சாப்பிட்டு விட்டு எழுந்திருக்கிறாள். பையனின் கண்களில் படாமல் நகர்ந்து இறங்கிச் செல்கிறாள்.

லலிதா ஒரு எக்ஸ்போர்ட் கம்பெனியில் சூப்பர்வைசர் போஸ்டில் இருப்பவள். மாதம் ஒரு பதினெட்டாயிரம் சம்பளம் வாங்குபவள். கணவனுக்கு வங்கியில் வேலை. எல்லா விஷயத்திலுமே இவளுக்கு நேர் எதிர் அவன். லலிதா எப்போதுமே சுறுசுறுப்பானவள். காலை ஐந்து மணிக்கு மேல் படுக்கையில் படுக்காதவள். காலை ஐந்து மணிக்கு எழுந்திருக்கும் பாட்டியோடு எழுந்து கூட மாட எல்லா வேலைகளையும் செய்வாள்.

காலை டிபனை ரெடி செய்து மதிய சாப்பாடு தயாரிக்கவும் உதவி செய்து, கணவனுக்கு காலை குளிக்க வெந்நீர் எடுத்து வைப்பதிலிருந்து அவனுக்கு டிபன் கொடுத்து, மதியம் சாப்பாட்டை கட்டிக் கொடுத்து, அவனுக்கு வேண்டியவற்றை செய்து, பிறகு தான் ரெடியாகி, அவசரமாக சாப்பிட்டு, தனக்கும் மதியச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு கிளம்புவாள். இதற்கு நடுவில் தன் பெண், பிள்ளையைக் கவனித்து, மாமனார், மாமியாரைக் கவனித்து, மாமியாரின் திட்டுக்கள், மாமனாரின் அலட்சியங்களை வாங்கிக் கொண்டு ஓடுவாள் லலிதா.

புருஷன் ஒரு துரும்புகூட எடுத்துப் போட மாட்டான். காலையில் எழுந்ததும் பேப்பரும் கையுமாக உட்கார்ந்து இருப்பான். எட்டு மணி வரைக்கும் சோம்பல் முறித்து

விட்டு அதன் பிறகு நேரம் ஆகி விட்டது என்று கத்துவான். புருஷன் கத்தினால் மாமியாரும் சேர்ந்து கொள்வாள். சாதாரணமாகப் பேசவே மாட்டான். என்ன கேட்டாலும் பதில் வராது. கோபம் வந்து விட்டால் ருத்ர தாண்டவம்தான். லலிதாவிற்கு சினேகிதிகள் நிறைய உண்டு. அவனுக்கு ஒன்றோ இரண்டோ பேர்தான் நண்பர்கள்.

மற்றபடி எந்தக் கெட்ட வழக்கமும் இல்லாதவன். அதே சமயம் அவனுடைய பொழுது போக்கு ரொம்பப் போரடிக்கும் பழக்கம்தான். தொலைக்காட்சியில் நியூஸ் அல்லது ஸ்போர்ட்ஸ் மட்டும் பார்ப்பான். சதா பேப்பரை மணிக்கணக்காக கையில் வைத்துக் கொண்டு ஏதோ புதையலைத் தேடுவது போல் பிராய்ந்து கொண்டிருப் பான்.

அவனுடன் ஒரு நல்ல இலக்கியத்தைப் பற்றியோ அல்லது நல்ல சினிமாவைப் பற்றியோ அல்லது ஏதேனும் டூரைப் பற்றியோ, இத்தனை ஏன் குடும்பத்தைப் பற்றிக்கூட பேச முடியாது. எதையும் கேட்கவும் மாட் டான். தானும் பேசமாட்டான்.

தனக்கு மிகவும் எதிரானவன். லலிதாவிற்கு வெளியில் செல்லப் பிடிக்கும். அதுவும் புருஷனோடு சேர்ந்து போக மிக மிக ஆசை. ஆனால் அவனோ அவளோடு வெளியே போவதையே தவிர்த்து விடுவான். எங்குமே வர மறுப்பான். கூட்டுக் குடும்பத்தில் அவனுடன் பேசவும் முடியாமல், சண்டையும் போடாமல் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளப் பழகி விட்டாள் லலிதா.

அப்பா போல் பிள்ளையும் ஆகி விடக் கூடாதே என்று பிள்ளையைக் கவனத்துடன் வளர்த்தாள். பெண்ணையும்



தன் கண் பார்வையில் இருந்து மறையாமல் பார்த்துக் கொண்டாள். இருவருமே சுறுசுறுப்பானவர்கள். நன்றாகப் படித்தார்கள். எல்லோரிடமும் மனம் திறந்து பேசுவார்கள். உதவி என்றால் இருவருமே மனம் திறந்து செய்வார்கள். பெண் நன்றாகப் படித்தாள். ஐ.டி. செக்டாரில் வேலை பார்க்கிறாள். நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்து பேத்தியும் வந்தாகி விட்டது. அடுத்தது பிள்ளையின் திருமணம் தான். பிள்ளையும் நல்ல வேலையில் இருக் கிறான். அவனுக்கு ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து திருமணம் செய்ய வேண்டும். நினைத்துக் கொள்கிறாள். தனக்குத்தான் மாமியார் சரியாக இல்லை. மருமகளாவது புரிந்து கொள்ளக் கூடியவளாக வரவேண்டும். நினைத்துக் கொள்கிறாள்.

ஆனால் வரப்போகும் மருமகள் ரொம்பத் துணிந்த கட்டையாகத்தான் தோன்றுகிறாள். ஓட்டலில் எல் லோரும் பார்க்கும் இடத்தில் அவனின் கன்னத்தைக் கிள்ளுவதும், தலையைத் தடவுவதும், கன்னத்தைக் கிள்ளி முத்தமிடுவதும் சே!... என்ன பெண் இது? இந்தக் காலத்தில் பெண்கள் சுய காலில் நிற்கிறார்கள். சம்பாதிக் கிறார்கள். அதனால் வந்த துணிச்சல் போல் தான் இருக் கிறது. ஆனால் தாங்களும் வேலைக்குத்தான் போயிருக் கிறோம். ஒரு நாள் கூட யாரையும் மதிக்காமல் இருந்த தில்லை. திருமணம் ஆகி இத்தனை வருஷம் ஆகியும் இன்னும் மாமியாரிடம் பயம் இருக்கத்தான் இருக்கிறது. இன்னும் வீட்டு வேலை எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக் கொண்டு தான் செய்கிறாள். இந்தக் காலத்தில் பெண்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள்? நினைத்தவள் லேசாக தளர்ந்து போகிறாள். அதிர்ச்சியும், வேதனையும்

தாக்க, மெதுவாக யாருக்கும் தெரியாமல் அங்கிருந்து வெளியேறுகிறாள்.

பெண்ணைப் பார்த்தால் அப்படி ஒன்றும் நல்ல பெண்ணாகத் தோன்றவில்லை. இதுவே இப்படி என்றால் குடும்பம் எப்படி இருக்கும்? பிள்ளையிடம் பேச வேண்டும். இந்த வயது மயங்கும் வயது தான். மனத்தில் எண்ணியவாறே வீட்டை நோக்கிப் போகிறாள்.

லலிதா சாதாரணமாக ஓட்டலுக்குப் போகும் ரகம் இல்லை. அந்தக் காலத்தில் பெண்கள் தனியாக உணவு விடுதிக்குச் சென்றதே கிடையாது. ஓட்டலுக்குச் செல்வதெல்லாம் தவறான செயல்பாடாகக் கருதப்பட்ட காலம் அது. ஆனால் இப்போது எத்தனையோ மாற்றங்கள். வீட்டில் எல்லோரும் சம்பாதிக்கிறார்கள். குறைந்த பட்சம் வாரத்தில் இரு முறையாவது வெளியே சாப்பிடுவது பேஷனாகி விட்டது. இப்போது எல்லா இடங்களுக்கும் பெண்கள் தனியாகப் போகிறார்கள். தவறு என்று யாரும் நினைத்து விடவில்லை.

தான் அந்தக் காலம். அதனால் இன்னும் ஓட்டலுக்குச் செல்ல லேசான தயக்கம் இருக்கத்தான் இருந்தது. அவள் வேலை கம்பெனியில் உள்ள ஆடைகளை சரி பார்த்து கணக்குப் பண்ணி வாங்கிக் கொள்வதோடு முடிந்து விடுகிறது. ஆனால் அவர்கள் அனுப்பிய பீஸ்களின் எண்ணிக்கையில் குறைவு என்று போன் வந்து விட அவளையே நேரே அனுப்பி விடுகிறார் மேனேஜர். தாங்கள் அனுப்பிய துணிகளின் எண்ணிக்கை அடங்கிய பட்டியலை எடுத்துக் கொண்டு பல மணி நேரங்களாக வாதாடி கடைசியில் ஒரு பண்டில் பிரிக்கப்படவில்லை என்று தெரிந்து அதை சரி பார்க்க வைத்து விட்டு வரும்போதே



தலைவலி பின்னி எடுத்தது. ஒரு காபி குடித்து விட்டு வரலாமே என்று ஓட்டலுக்குள் நுழைந்தபோதுதான் பிள்ளையையும், அவனுடன் இருந்த மற்றொரு பெண்ணையும் பார்க்க நேர்ந்தது.

மனதில் இத்தனையும் எண்ணியவாறே தான் பஸ்ஸை பிடிக்கிறாள். மணி ஏழைத் தாண்டி இருந்தது. இன்று ரொம்ப ரொம்ப லேட். சாதாரணமாக ஆறு மணிக்கு வீட்டில் இருப்பாள். இத்தனை நேரம் கத்தி சண்டை போட்டு அவள் அனுப்பிய பீஸ் கணக்குகளைச் சொல்லிப் புரிய வைப்பதற்குள் போதும், போதும் என்றானது. இன்று வீட்டிற்கு லேட்டாக வேறு போகிறோம். என்னாகுமோ? நினைத்தவாறே பசி, அயர்ச்சி, எரிச்சல் எல்லாம் சேர்ந்து கொள்ள வீட்டில் நுழைய,

''வா மகாராணி எங்க சுத்திட்டு வராப்ல'' மாமியார் கேட்க, அடிபட்டுப் போனவளாய் மாமியாரையே பார்க்கிறாள் லலிதா.

## 7

''என்னடி என்னமோ பாவமா பார்க்கறே? மணி என்னாச்சு? எட்டு மணிக்கு ஒரு பொம்பளை வந்தா வீடு உருப்படுமா?'' மாமியார் சிடுசிடுக்க,

''எந்த வயசானாலும் பொம்பளை பொம்பளை தான் வெளியே விட்டா அவுத்து விட்ட கழுதை தான்.''

மாமனார் தன் பாணியில் ஆரம்பிக்க, தனக்கு ஆதரவாக யாராவது பேசுவார்களா? கண்கள் டி.வி.யில் மூழ்கியிருக்கும் புருஷனைப் பார்க்க, அவன் இவள் வந்ததைப் பார்த்துவிட்டு மீண்டும் ஸ்போர்ட்ஸ் சேனலை பார்த்துக் கொண்டிருந்தான்.

எரிச்சலை அடக்கிக் கொண்டவள், ''அத்தை இன்னிக்கு எக்ஸ்ட்ரா கொஞ்ச வேலை. அதான் லேட்டாச்சு. ஒரு நாள் லேட்டா வந்தா வீடு உருப்படலைன்னா நான் ஒண்ணும் பண்ண முடியாது'' என்றவாறே, உள்ளே செல்லப் போனவளை,

''அப்படி என்ன வேலை. ஆம்பளை மேனேஜர் விட மாட்டேன்னு சொல்லிட்டானாக்கும்'' மாமனார் கேட்க, மாமனாரை உறுத்துப் பார்க்கிறாள்.

'சே! என்ன மனிதன் இவர். எப்போதுமே இவர் எண்ணங்கள் மட்டுமல்ல. இவருடைய வார்த்தைகளும் பச்சைதான்' என்று நினைத்தவள்.

''ஏம் மாமா நீங்க வேலையிலே இருந்தீங்களே அப்ப கீழே இருக்கற பொண்ணுங்கள்கிட்டே இப்படித்தான் நடந்துப்பீங்களா?''

நறுக்கென்று அவள் கேட்டு விட,

''என்னடி பெரியவங்க, சின்னவங்கன்னு மரியாதை இல்லாம வாய் நீளுது. அதான் பிள்ளை தறி கெட்டுப் போகுது'' மாமியார் பேச,

லலிதாவிற்கு கண்கள் கலங்கிப் போயிற்று. ஏற்கனவே வேலையில் டென்ஷன். போதாக் குறைக்கு பிள்ளை வேறு எந்தப் பெண்ணோடோ வந்து அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தான். இதெல்லாம் போதாதென்று



இவர்கள் வேறு. இதெல்லாம் பார்த்துக் கொண்டும், காதால் கேட்டுக் கொண்டும் எதுவுமே நடக்காத மாதிரி டி.வி. பார்க்கும் கணவன்.

மனம் பொறும கலங்கிய கண்களைத் துடைத்தபடி உள்ளே போக,

''நில்லுடி கேக்கறேன் என்னவோ ஒண்ணுமே நடக்காத மாதிரி கிளம்பிகிட்டு இருக்கே? உம் பிள்ளை கூத்தடிக்கிறான்னா. நீ கூடவா?'' மாமியார் கத்த,

''அவன் கூத்தடிக்கிறான்னா அவன் வயசுடி. எல்லாம் ஆண்டு அனுபவிச்ச கழுதைக்கு என்ன?'' மாமனார் கத்த, குறுகிப் போனாள் லலிதா.

''பாட்டி எதுக்கு அம்மாவை திட்டறீங்க? அலுத்து சலித்து வர்றவங்ககிட்டே ஆரம்பிச்சிட்டீங்களா?'' பெண், குழந்தையோடு வாசலுக்கு வந்து எரிந்து விழ,

''உங்கம்மா கெட்டுப் போறதுக்கு நீங்க தாண்டி காரணம். ஏம்மா இத்தனை லேட்டுன்னு கேட்டா உடம்பிலே ஒரு பயம் இருக்கும். நாங்க கேட்டாலும், குறுக்கே விழுந்து சப்போர்ட் பண்ணினா எப்படி அவ சரியாகுவா.''

லலிதாவிற்கு துக்கத்தோடு எரிச்சலும் வர மாமியாரையே முறைத்துப் பார்க்கிறாள்.

''அவளை ஏன் திட்டறே? உம் பையன் என்ன செய்யறான் பாரு. சதா டி.வி.யைப் போட்டு உட்கார்ந்துகிட்டு இருக்கான். கட்டினவள் எத்தனை மணிக்கு வரான்னு ஏதாவது கவலை இருக்கா? அவன் வாழ்க்கையே டி.வி. யோடு ஐக்கியமாயிடுச்சு. தேவையா? ஏதாவது கவலை இருக்கா?'' மாமனார் நீட்டி முழக்க,

''அது எப்பவுமே ரெண்டும் கெட்டான். அப்படித்தான் இருக்கும்'' மாமியார் பேச,

''ஏம்பாட்டி இப்படி சண்டையை ஆரம்பிச்சிட்டீங்க? அம்மா பாவம் இல்லே.'' பெண் கத்த, மறுபடியும் மாமி யாரும், மாமனாரும் ஏதோ பேசி, சண்டையைக் கிளப்பி விட, அப்போதுதான் வெளியே இருந்து வருகிறான் மகன் அபிஷேக்.

''ஹாய் மம்... என்ன இது? என்ன இது எல்லோரும் இங்கே கும்பலா நிக்கறீங்க? வாட் ஹேப்பண்ட்?''

அவன் உரிமையுடன் கேட்க,

''வாட் ஹேப்பண்டா? எல்லாம் நீ ஒரு பொண்ணோட ஊர் சுத்தறியே அந்த விஷயம்தான். ஊர் சிரிப்பா சிரிக் குது. அதைப்பத்தி தான் உங்கம்மா கிட்டே சொல்லி கிட்டு இருந்தோம்.'' மாமியார் அடிக்குரலில் பேச,

''ஊர் சிரிக்குதா? ஓ உங்க விஷயம் இந்தத் தெருவுக்குத் தான் தெரியும்னு நினைச்சேன். ஊர் முழுவதும் தெரிஞ்சு போச்சா? வெரி பேட். பாட்டி வயசானா பத்தாது. வயசுக்கு ஏத்த முதிர்ச்சி வேணும். இந்த வயசான காலத்துலே ராமா, கிருஷ்ணான்னு கடவுள் பேரை ஜபிக்காம தேவை இல்லாம அக்கப் போர் செய்யறீங்க? இதே மாதிரி நடந்து கிட்டீங்கன்னா இந்த ஊர் இல்லே. உங்களைப் பத்தி உலகத்துக்கே தெரிஞ்சிடும்.''

தன் தாயாரை உள்ளே விடாமல் தகராறு செய்து கொண்டிருப்பதையும், அம்மாவின் கண்கள் கலங்கி இருப்பதையும் பார்த்தவன்,

''அம்மா எனக்கு பசிக்குது. சாப்பாடு போடறீங்களா?'' என்றவன் உள்புறம் திரும்பி ''பாட்டி'' என்று பெரிய



தாகக் குரல் கொடுக்க அவனின் கொள்ளுப் பாட்டி வரு கிறாள்.

''என்னடா? அப்பவே கோபிச்சுகிட்டு போனே? யாராவது சாப்பாடு வேண்டாம்னு போவாங்களா? வயிறு காஞ்சுதுன்னா யாருக்கு நஷ்டம்?'' என்று சொல்லிய படியே வந்தவள்,

''ஆமா இங்கே என்ன சத்தம்? நானே கேக்கணும்னு நினைச்சேன். என்னாச்சு?'' அவள் கேட்க,

''ம்... உன் அழகான மருமக எங்கம்மாவை உள்ளே விடாம என்குயரி பண்ணிகிட்டு இருக்காங்க?''

''ஆமா நீ ஏம்மா லேட்?'' கொள்ளுப் பாட்டி லலி தாவை வாஞ்சையாகக் கேட்க,

''பாட்டி வேலைக்குப் போறவங்களுக்கு ஆயிரம் காரணம் இருக்கும். அதையெல்லாம் பெரிசு படுத்தக் கூடாது. அம்மா இப்ப டயர்டா வந்திருக்காங்க. அவுங் களை கவனிக்கச் சொல்லுங்க.''

அபிஷேக் சொன்னதும், ''வா... வா உள்ளே வா. இங்க என்ன ரெண்டு பேரும் பண்ணிகிட்டு இருக்கீங்க?''

பிள்ளையைப் பார்த்துக் கேட்க, பிள்ளையும், மரு மகளும் மௌனமாக முகத்தை சுளித்து விட்டு நகர, வேகமாக உள்ளே நுழைகிறாள்.

சாதாரணமாக இருந்தால் புருஷனை ஒரு பிடி பிடிக்கலாம். இந்த மாதிரி கூட்டுக் குடும்பத்தில் தன் விருப்பு, வெறுப்பு எதனையும் காண்பிக்க முடியாது. மனதை துக்கம் அழுந்த, உள்ளே போகிறாள் லலிதா. கணவன் ஸ்போர்ட்ஸ் பார்த்துக் கொண்டே புட்பாலில்

யாரோ போட்ட கோலுக்கு கை தட்டிக் கொண்டிருந்தான். லலிதா முகம், கை கால் எல்லாம் கழுவிக் கொண்டு உடை மாற்றிக் கொண்டு வர,

"எல்லாரும் சாப்பிட்டாச்சு, நீ வந்து சாப்பிடு'' என்று பாட்டி சொல்ல, மௌனமாக வந்து அமர்கிறாள்.

"பாட்டி எனக்கும் பசி கொல்லுது'' என்றவாறே அம்மாவின் அருகில் வந்து உரிமையோடு அமர்ந்து சாப்பிட உட்காருகிறான்.

வண்டார்குழலி பாட்டி இருவருக்கும் சாப்பாட்டை பரிமாறி விட்டு அவர்கள் சாப்பிடச் சாப்பிட எல்லாவற்றையும் ஒழித்துப் போட்டு தேய்க்க ஆரம்பிக்கிறாள்.

"பாட்டி நில்லுங்க. நான் சாப்பிட்டு வந்து தேய்க்கறேன்.''

"பேசாம இரு. நீயே லோல் பட்டு வந்திருக்கே. நான் பார்த்துக்கறேன்'' பேரன் மனைவி சொல்லச் சொல்ல கேட்காமல் பாத்திரத்தை துலக்கி அடுக்கி வைக்கிறாள். சமையலறையை சுத்தம் செய்து விட்டு எல்லாவற்றையும் அடுக்கி வைத்து விட்டு வெளியே வருகிறாள்.

இதற்குள் லலிதாவும், அபிஷேக்கும் சாப்பிட்டுவிட லலிதா மேசைகளை சுத்தப்படுத்திவிட்டு துணியால் துடைத்து விட்டு தன்னுடைய, பிள்ளையுடைய தட்டை சுத்தப்படுத்தி விட்டு நகருகிறாள். பிள்ளை எத்தனையோ பேசுகிறான். லலிதா எதற்கும் பதில் சொல்லவில்லை. பிள்ளை எதையும் கவனிக்காதவாறே பேசிக் கொண்டே இருக்கிறான். ஒரு பெருமூச்சோடு நகருகிறாள் லலிதா.

எந்த விஷயத்தையும் புருஷனிடம் தான் சொல்ல முடியும். ஆனால் தன்னால் புருஷனிடமே பேச முடியாத போது பிள்ளையிடம் என்ன பேச முடியும்?



அபிஷேக் சிரித்தபடி பேசிக் கொண்டே இருப்பான். தேவையானதை எல்லாம் செய்வான். ஆனால் அவனை ஏதேனும் சொல்லிவிட்டாலோ இல்லை அவன் கருத்துக்கு மாற்று கருத்து இருந்தாலோ சரவெடிதான். இப்போது அவனிடம் நேராக ஏதாவது கேட்கப் போக, "ஆமாம் அவளைத் தான் லவ் பண்றேன். ஐ டோன்ட் வான்ட் யுவர் பர்மிஷன். இட் ஈஸ் ஃபோர் மி ஒரு இன்பார்மேஷன்'' என்று நறுக்கென்று சொல்லிவிட்டுக் கிளம்பி விடுவான்.

'இவனிடம் பதமாகத்தான் பேச வேண்டும். இன்று எதையும் ஆரம்பிக்க வேண்டாம். பிறகு பேசுவோம்.' அவன் பேசுவதைக் கேட்பது போல் தலை அசைத்து விட்டு தன் அறைக்குச் செல்கிறாள்.

ஏற்கனவே பிள்ளையை அந்தப் பெண்ணோடு பார்த்தது அதிர்ச்சியை தர, போதாக்குறைக்கு மாமியார் மாமனாரின் அசிங்கமான, கெடுபிடியான பேச்சு, ஆத்திரத்தையும் கோபத்தையும் தர லேசாகக் கண் கலங்கி நிற்கிறாள்.

"அம்மா'' பெண் வந்து நிற்கிறாள்.

"ஏம்மா அழுதுகிட்டு இருக்கே. உன் பேத்தி உன்னைப் பார்த்து குதிச்சிட்டு இருக்கா. தூக்கி வச்சுக்க.''

குழந்தையை இயந்திர கதியில் வாங்கி மடியில் விட்டுக் கொண்டதும் மனம் லேசானது போல் தோன்றியது. குழந்தை வேறு தன்னைப் பார்த்து பெரியதாக புன்னகை புரிய, கவலை எல்லாம் ஒழிந்து போனதாகத் தோன்றியது. குழந்தையை நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொள்கிறாள். முத்தமிடுகிறாள். கவலைகள், வேதனை, எரிச்சல் எல்லாவற்றையுமே குழந்தையின்

ஒரு பார்வையும், புன்னகையும் எப்படி எளிதாக மாற்றி விடுகிறது. யோகா செய்து அதில் கிடைக்கும் அமைதியை விட பேரானந்தம் கிடைக்க குழந்தையை முகத்தோடு முகம் இணைத்து புன்னகை புரிகிறாள் லலிதா.

''இரும்மா குழந்தைக்கு பால் எடுத்து வரேன்'' மகள் சமையலறையை நோக்கி நகர அந்த நேரத்தில் தொலைபேசி அலற எடுத்துப் பேசியவள் அதிர்ந்து போகிறாள்.

# 8

''ஹாய் அபி... என்னடா என்னை பத்தியே யோசிச்சுகிட்டு இருக்கியா? நீ எப்படி தெரியாது. எனக்கு எந்த வேலையும் ஓடலை. உங்க வீட்டுக்கு ஆள் அனுப்பிச் சரட்டுமா? என்னடா பதிலே பேச மாட்டேங்கறே? ஓ.கே... ஓ.கே. உங்க வீட்டு பெரியவங்க பக்கத்துலே இருக்காங்களா? புரியுது. மை ஸ்வீட் கிஸ்ஸஸ்'' என்று அழுத்தமாகப் போனில் ஒன்று கொடுக்க எரிச்சல் படுகிறாள் லலிதா. 'என்ன பெண் இது? பேசுவது யார் என்று கூடவா தெரியாமல் பேசும். சே! இதைப் போய் மருமகளாக்கிக் கொண்டால் என்னாகும்?' பல்லைக் கடித்தபடி போனை வைக்கிறாள்.

லலிதா ஒன்றும் பழைய பஞ்சாங்கமோ அல்லது புதியவைகளை வரவேற்காதவளோ இல்லை. இருந்தும்



இந்தப் பெண் நடந்து கொள்ளும் முறை அவளுக்கு பிடித்தமில்லாமல் போனது, பிள்ளையிடம் இதைப் பற்றிப் பேச வேண்டும். எப்படிப் பேசுவது? எப்படிப் பேசினால் ஒத்துக் கொள்வான். யோசிக்கிறாள். மண்டை வலிக்க, படுக்கையில் போய் சாய்ந்து படுத்துக் கொள்கிறாள்.

தன் திருமண நினைவுகள் மனதில் அலைக்கழித்துக் கொள்ள ஆரம்பித்தது. இவள் கல்லூரி இறுதி ஆண்டு முடித்தவுடனே திருமணம். பெண் பார்க்க குடும்பத்தோடு வந்தவனை ஒரு நிமிடம் பார்த்ததோடு சரி, அவன் முகம் கூட மறந்து போனது. அவனைப் பற்றி போட்டோவோ, செய்திகளோ ஒன்றுமே இல்லை. திருமணம் முடிந்ததும் கூட்டுக் குடும்பம். ஹனி மூன் என்பதெல்லாம் அவளைப் பொறுத்தவரை கனவுதான். மாமியார்க்கு மாமியார், மாமியார், அத்தை பாட்டி, அத்தை, நாத்தனார்கள் என்று பெரிய குடும்பத்தில் இரகசியமாக பேசக்கூட வாய் எழும்பியதில்லை.

சதா ஏதோ வேலைக்காரி மாதிரி வேலை இருக்க, வேறு எதற்குமே நேரமில்லாமல் போனது. இதற்கிடையில் ஒரு பெண், பின் பையன் அவர்களின் படிப்பு, இப்படி ஓடிப் போனது வாழ்க்கை. திருமணமான புதிதில் ஏற்கனவே போட்டிருந்த அப்ளிகேஷனுக்கு வேலை கிடைத்துவிட, ஒரு தனியார் கம்பெனிக்குப் போக ஆரம்பித்தாள்.

முதலில் மாமியார், மாமனாரிடம் பயங்கர எதிர்ப்பு இருந்தது. போய்ச் சேர்ந்தபோது வெறும் மூவாயிரம் தான் சம்பளம் என்று சொன்னார்கள். பின் இரண்டு மாதத்திலே ஸ்டைபண்ட் என்று பின்னும் நாலாயிரம் சேர்த்து

ஏழாயிரம் வந்தது. பணம் அதிகம் வர, வர எதிர்ப்புகள் மறைந்தது. ஆயிற்று இந்தப் பதினைந்து வருடங்களில் இருபதாயிரம் வருகிறது. காலையில் எழுந்து மாமியாரின் மாமியாருக்கு கூட மாட உதவிகள் செய்து விட்டு வரிசையாக கணவன், பிள்ளைகளுக்கு சாப்பாடு கட்டி தானும் ஒரு டப்பாவில் எடுத்துக் கொண்டு மாமியார், மாமனாருக்கு டிபன் கொண்டு தந்து காபியைக் கொடுத்துவிட்டு, பாட்டி, தாத்தாவையும் சாப்பிட வைத்துக் கிளம்புவாள். பிறகு இரவுதான் வருகை.

இரவு வேலைகளைப் பாட்டியே நிறைய முடித்து விடுவாள். வேலை முடித்து விட்டு இருக்கும் சின்னச் சின்ன வேலைகளைச் செய்வாள் லலிதா. கணவன் தான் தன் சுகம் என்று இருப்பவன். வீட்டில் இருக்கும் மனைவியிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாதவன். என்றாவது அபூர்வமாக ஒரு வார்த்தை பேசுவான். வாழ்க்கை இப்படி இருந்தும், லலிதாவிற்கு வேலைக்குப் போவதால் அலுத்துக் கொள்ளக் கூட நேரம் இல்லாமல் இருந்தது. என்றாவது இதை நினைத்துக் கொள்வாள். அன்று முழுவதும் மனம் பாரமாகிவிடும். உறக்கம் தொலைந்து போகும்.

பையன் ஏதோ ஒரு பெண்ணை அழைத்து வந்து வீட்டில் கூத்தடிக்கிறான். என்ன, ஏது என்று கேட்க மாட்டானா? என்னமோ ஸ்போர்ட்ஸில் இவன் தான் வல்லுனர் போல் ஒரு ஞாபகம் சே! ஒரு வயதுக்கு மேல் தாயாரால் பிள்ளைகளிடம் பேச முடியுமா? ‘அம்மா... அம்மா’ என்று பயந்து பேசும் பிள்ளைகள், தோளுக்கு மிஞ்சிப் போய் விட்டால் அம்மாவின் பேச்சை அலட்சியப்படுத்துகின்றன. தந்தை என்பவர் தானே பொறுப்



பெடுத்துப் பிள்ளைகளை சரிப்படுத்த வேண்டும். ம்ஹூம் தன் கணவன் ஒரு வேஸ்ட். அவனிடம் எதையும் எதிர்பார்க்க முடியாது.

தன் மாமனார், மாமியார் பேசுகிறார்களே என்று வருத்தப்படுவது முட்டாள்தனம். அந்தப் பெண் போனிலே இப்படிப் பேசுகிறது. நேரில் எப்படி எல்லாம் நடந்து கொண்டதோ... மறுபடியும் மன உளைச்சல் வர தூக்கம் தொலைந்து போனது. பிள்ளையிடம் என்ன பேசுவது? எப்படிப் பேசுவது? சட்டென்று கொள்ளுப்பாட்டி வண்டார் குழலியின் ஞாபகம் வந்தது.

பாட்டியைத் தான் எப்படி மறந்து போனோம். எண்பத்து மூன்று வயதாகும் அந்த பாட்டி வயதிற்கு ஏற்றாற் போன்று மனமுதிர்ச்சி உடையவள் செய்யும் வேலைகள் மட்டுமல்ல, பேசும் பேச்சில் கூட பொருள் இருக்கும். தேவை இல்லாத பேச்சைப் பேசியதே இல்லை. பேசாமல் பிள்ளையிடம் பாட்டியைப் பேசச் சொன்னால் என்ன?

அடுத்த நாள் கம்பெனிக்குச் செல்ல நிறைய நேரம் இருந்தது. மறுபடியும் அந்தக் கம்பெனிக்குப் போய் கணக்கு வழக்குகளை சரி பார்த்து விட்டு மத்தியானம் தன் கம்பெனிக்குச் சென்றால் போதும். அந்தக் கம்பெனியிலும் காலையில் சென்றால் எந்த வேலையும் நடக்காது. பதினோரு மணிக்கு சென்றால் போதும். பாட்டியிடம் பேச நிறைய நேரம் இருக்கும்.

அன்று சீக்கிரம் எழுந்து பாட்டிக்குக் கூடமாட எல்லா வேலைகளையும் செய்து விட்டு, எல்லோரையும் அனுப்பி விட்டு பாட்டியிடம் வந்து அமர்ந்து கொள்கிறாள். மாமியார், மாமனார் டி.வி.யில் மூழ்கிவிட, தாத்தா

மாடிக்குப் படுக்கப் போய்விட சிரித்தபடி பேச்சை ஆரம்பிக்கிறாள்.

''பாட்டி அபிஷேக் யாரோ ஒரு பொண்ணோட...'' ஆரம்பிக்கும்போதே.

''ஆர்த்தியைச் சொல்லறியா?'' பாட்டி கேட்க ஆச்சரியமாகப் பார்க்கிறாள் லலிதா.

''என்ன சொல்லறீங்க பாட்டி. உங்களுக்கு அந்தப் பெண்ணைத் தெரியுமா?''

''தெரியுமாவது. இன்னிக்குக் கூட வந்தாளே.''

''என்ன சொல்லறீங்க நீங்க? தினம் வராளா என்ன?''

''தினம்னு இல்லே. இப்படி வருவா. இரண்டு மூணு தடவை அபிஷேக் தான் கூப்பிட்டுகிட்டு வந்தான். இன்னிக்கு அவ தனியாகத்தான். ரெண்டு பேருக்குள்ளே ஏதோ தகராறுன்னு நினைக்கிறேன்.''

''என்ன தகராறு?''

''அது தெரியலைம்மா. அவங்க ரெண்டு பேருக்குள்ளே ஏதோ பிரச்சனை இருக்கணும். அந்த பொண்ணு பரிதவிச்சுப் போய் வந்தது.''

''இப்ப எல்லாம் சரியாப் போச்சு.'' நுனி நாக்கில் வந்தவற்றை அடக்கிக் கொண்டு கேட்கிறாள்.

''பொண்ணு பார்க்கறதுக்கும் நல்லா இருக்கு. அவன் ஆபீஸுக்கு பக்கத்து ஆபீஸிலே தான் வேலை பண்றாளாம். ரொம்ப நல்ல பொண்ணுன்னுதான் நினைக்கிறேன். உதவி செய்யற மனப்பான்மை அவளுக்குக் கொஞ்சம் அதிகம் தான் தோணுது. எப்ப வந்தாலும் கை வேலையைப் பிடுங்கிச் செய்யும் - பாட்டி, பாட்டின்னு உயிரை விடும். ரொம்ப நல்ல பொண்ணு.''





பாட்டி கூறியதைக் கேட்டவள் உறைந்து போகிறாள். பிள்ளைக்கு அந்த இடம் வேண்டாம் என்று தான் ஒன்றும் சொல்ல முடியாதே. பாட்டி பெண் மிக மிக நல்லவள். இந்த இடத்தை முடித்து விடு என்று மறைமுகமாக அல்லவா சொல்கிறார். அப்படியே யோசனையில் ஆழ்ந்து போக,

''லலிதா... லலிதா என்ன யோசனை. பொண்ணு தங்கம்மா. நீயே போய் அந்த பொண்ணு வீட்டிலே பேசி முடிச்சிடு. இல்லைன்னா உன் பையன் அவசரப்படப் போறான்.''

அதற்கு மேல் பாட்டியிடம் ஒன்றும் பேசாமல் அலுவலகத்திற்குக் கிளம்புகிறாள். 'யோசிப்பதில் பிரயோசனமில்லை. பிள்ளையிடம் பேசுவோம்.' அந்த அலுவலகத்தில் முதல் நாளே சென்றதால் வேலை பட்டென்று முடிய, பிள்ளையை தொலைபேசியில் அழைக்கிறாள். பக்கத்தில் இருக்கும் ஓட்டலின் பெயரைச் சொல்லி அங்கே வரச் சொல்லி அழைப்பு விடுக்க, அடுத்த அரை மணியில் அங்கே இருந்தான் அபிஷேக்.

''ஹாய் மம்... என்ன விஷயம்? லன்ச் சாப்பிடலாமா? இல்லை சாப்பிட்டீங்களா?''

''இல்லைப்பா நான் சாப்பிட்டாச்சு, நீ இன்னும் சாப்பிடலையா?''

''இல்லைமா உங்களோடு சாப்பிடலாம்னு வெயிட் பண்ணிகிட்டு இருக்கேன். ஓ.கே. எனக்கும் வெறும் காபி மட்டும் சொல்லுங்க.''

''ஏய் உதைப்பேன் நீ லன்ச் ஆர்டர் பண்ணு.''

''சரிதான் நீங்க ஒண்ணும் சாப்பிட மாட்டீங்க. எனக்கு மட்டும் என்ன?''

''பைத்தியம் மாதிரி பிஹேவ் பண்ணாதே. அல்ரெடி அம்மா சாப்பிட்டாச்சு. எத்தனை தடவை சாப்பிட முடியும்? ஓ.கே. உனக்காக லைட்டா ஏதாவது எடுத்துக்கறேன். இந்த மாதிரி வயித்தைக் காயப் போடாதே.'' சற்று கண்டிப்புடன் சொல்ல, அதற்குள் சாப்பாடும், அவள் கேட்ட தயிர் வடையும் வந்துவிட சாப்பிட்டுக் கொண்டே பேச ஆரம்பித்தார்கள்.

''ஆமா என்னடா உங்க பாட்டி, தாத்தா ஒரே கம்ப்ளைண்ட் யாரந்தப் பொண்ணு. ஃபிரண்டா இல்லே...'' அவள் மெதுவாகக் கேட்க, பிள்ளையின் முகம் சிவந்து போனது.

''என்னடா பேச்சே இல்லே?''

''இல்லேம்மா நானே சொல்லணும்னு நினைச்சேன்.''

''என்ன?'' பிள்ளை மறுபடியும் தயங்கி, பின் மெதுவாகச் சொல்கிறான்.

''நான் அந்தப் பொண்ணை ரொம்ப விரும்பறேன்மா. அவளைத் தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைச்சுகிட்டு இருக்கேன். நீங்க என்ன சொல்லறீங்க?''

''நாங்க ஒத்துக்கலைன்னாலும் அந்தப் பெண்ணை கல்யாணம் செய்துக்குவியா?'' அம்மா கேட்க, கேட்க வியப்போடு அம்மாவையே பார்க்கிறான் அபிஷேக். அதில் லேசான அதிர்ச்சியும் கலந்திருந்தது.

## 9

''என்ன மம்மி சொல்றீங்க? மேரேஜ்லே என் விஷ் வேண்டாமா? நான் அந்தப் பொண்ணோட காலமெல்



லாம் இருக்கணும் இல்லே. என் மனசுக்குப் பிடிச்ச பொண்ணைத் தவிர மத்தவங்களை நான் எப்படிம்மா கல்யாணம் பண்ணிக்க முடியும்?''

''உன் மனசுக்குப் பிடிச்ச பொண்ணு எங்களுக்குப் பிடிக்கலன்னா என்ன செய்யப் போறே?''

அவன் நிறைய நேரம் மௌனமாக இருந்தான். முகம் லேசாக கவலை தோய்ந்தாற் போல் ஆனது. பிறகு மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

''மம்மி உங்களுக்கு என்ன பிராப்ளம்? ஏன் எடுக்கும்போதே நெகடீவ்வா யோசிக்கிறீங்க? என் மனசுக்குப் பிடிச்சவளா நீங்களும் பாருங்க. பழகுங்க. அப்பவும் உங்களுக்குப் பிடிக்கலைன்னா யோசிக்கலாம்.''

ஏதாவது விவாதம் பண்ணுவான் என்று நினைத்தாள், விவாதமே இல்லாமல் அம்மாவை பணிய வைத்து விட்டான்.

''சரிடா பொண்ணோட அட்ரஸைக் கொடு. நேரிலே போய் பார்க்கறேன்.''

அம்மா கேட்டதும் அவசரம் அவசரமாக அவளின் அட்ரஸ் போன் நெம்பரைக் கொடுத்தவன்,

''மம்மி எங்கே போகணும்னு சொல்லுங்க. டிராப் பண்ணிட்டு போறேன்'' என்கிறான். அம்மா சொல்லியபடி அலுவலக வாயிலில் அம்மாவை இறக்கி விட்டு பைக்கை எடுத்து திரும்பியவன் ''அம்மா'' என்று மெதுவாகக் கூப்பிடுகிறான்.

உள்ளே செல்ல யத்தனித்தவள் திரும்புகிறாள்.

''என்னடா?''

"அம்மா தயவு செய்து தப்பா நினைக்காதீங்க. ரிசல்ட் பாஸிடிவ்வா இருக்கட்டும்." சொல்லிட்டு அதற்கு மேல் அங்கே நிற்காமல் கிளம்பிச் செல்கிறான். ஒரு நிமிடம் பையன் போனதையே பார்த்தவள் லேசான பெருமூச் சோடு கிளம்பிச் செல்கிறாள். இப்போதே கையை விட்டுப் போன மாதிரிதான். திருமணமானால் மொத்த மும் தன்னை விட்டுச் சென்று விடும். இந்த எண்ணம் வந்ததும் மனதில் சுருக்கென்றது. தன் மாமியாருக்கும் இப்படித்தானே தோன்றி இருக்கும். கணவனை அவ்வப்போது கூப்பிட்டு, கூப்பிட்டு வைத்துக் கொள் வாள். அப்போதெல்லாம் எரிச்சல் ஆத்திரம் வந்திருக் கிறது.

சே! தனக்கு ஏன் இப்படிப்பட்ட எண்ணம் தோன்று கிறது? தன் மனதையே கடிந்து கொள்கிறாள். தான் ஏன் ஒரே பிடியாக தப்பாகவே யோசித்துத் தப்பாகவே நினைந்து சே! முதலில் அந்தப் பெண்ணைப் பார்ப்போம் பேசுவோம். பிறகு முடிவு செய்வோம். இப்படி யோசித்ததும் மனம் சற்று தெளிந்தது.

தன் வேலையில் ஈடுபட ஆரம்பித்தாள். வேலையில் ஒரே குழப்பம். கிட்டத்தட்ட சண்டை சச்சரவுதான்.

"ஏய் என்ன இது?"

"மேடம் மேனகாவைப் பாருங்க மேடம் எங்க தலை வரைப் பத்தி தப்பா பேசறா?" இது கமலம்.

"மேனகா மட்டும் இல்லே மேடம் ஜெயா கூட மோசம் தான் எனக்கு பிடிச்ச ஆக்டரை காலையிலிருந்து வாரிகிட்டு இருக்கா."

"என்ன இது மேனகா, ஜெயா" லலிதா கூப்பிட்டு கேட்க,



"மேடம் எங்க பேவரிட் ஸ்டார் பத்தி இவங்க தப்பா பேசலாமா? என்னதான் முயற்சி பண்ணினாலும் இவங்க ஸ்டார் எங்க பேவரிட் ஸ்டாருக்கு சமமா வந்துடு வாங்களா?" ஜெயாவும், மேனகாவும் ஆரம்பிக்க,

"ஷ்... வேலை நடக்கற இடத்துலே இதெல்லாம் என்ன? மேனேஜர் வந்தார்னா சீட்டுக் கிழியும். உங்க சண்டை எல்லாம் ஆபீஸுக்கு வெளியே வச்சுக்கங்க. எத்தனை பீஸ் ஆச்சு? சீக்கிரம் வேலையைப் பாருங்க."

அவள் போட்ட அதட்டலில் மறுபடியும் வேலை பார்க்க ஆரம்பித்தார்கள்.

லலிதாவிற்கு எரிச்சலாக வந்தது. சினிமா, நடிகர்கள் எல்லோருமே நல்ல நண்பர்கள்தான். ஆனால் அவர்களின் ரசிகர்கள் இவர் உசத்தி அவர் உசத்தி என்று வேண்டாத சண்டை போட்டு, தங்கள் வாழ்க்கையையும் கெடுத்துக் கொண்டு... நல்ல ஜனங்கள் சொன்னாலும் எதுவுமே புரிந்து கொள்ளாது...

நினைத்துக் கொண்டிருக்கும்போதே உள்ளே பரபரப் பாக வருகிறாள் மோகினி. படிய வாரப்பட்ட தலை. காதின் புறம் ஒரு பெரிய சிகப்பு ரோஜா தொங்கிக் கொண்டிருக்க, சிவப்பு கல் வைத்த தொங்கட்டான், கழுத்தில் மணி சிவப்பு மணி மாலை, ஒரு சிவந்த ஷிபான் புடவையோடு படு அமர்க்களமாக வந்து நின்றாள்.

"அக்கா..." வேலை செய்து கொண்டே பெண்கள் குரல் கொடுக்கின்றனர்.

"சூப்பர் அக்கா..." கோரஸாக எல்லோரும் கூற, சட்டென்று வெட்கப்படுகிறாள் மோகினி.

"ஏய்... எல்லாம் வேலையைப் பாருங்க" லலிதா மிரட்ட, எல்லோரும் அமைதி ஆயினர்.

எப்போதுமே எல்லோருமே ஓரளவு நன்றாக அலங்காரம் செய்து கொண்டுதான் அலுவலகத்திற்கு வருகின்றனர். இருந்தாலும் மோகினி ஒரு ஸ்பெஷல்தான். வெள்ளை வெளேரென்ற தேகம். முகம் மட்டும் லேசாக முத்தியது போல் ஒரு தோற்றம். இருந்தும் தினம் ஒரு அலங் காரம்தான். வேலைக்கு வரும்போது ஒரு நாள் கூட மட்டமாகவோ மோசமானதாகவோ அலங்காரம் செய்து கொண்டு வந்ததே இல்லை. எப்போதுமே சிக்கென் றிருப்பாள்.

''இன்னிக்கு அக்கா என்ன டிரஸ்லே வருவாங்க?'' பெண்கள் அடிக்கடி தங்களுக்குள் பேசும் வார்த்தை இது.

''ஏம்மா காலைலே வரலே?''

''வரலை மேடம். ஆப்டர் நூன் தான் வந்திருக்கேன். நான் இன்னிக்கு வந்திருக்க மாட்டேன் மேடம். ஆனா முக்கியமான பீஸ் முடிக்கணும்னு சொன்னாங்களேன்னு வந்தேன்.''

''ஏன் என்ன திடீர்னு? வீட்டிலே விசேஷமா என்ன?''

''இன்னிக்கு அவுங்களுக்கு பர்த்டே மேடம்.''

''ஏம்மா இப்படி ஒவ்வொண்ணுக்கும் லீவு எடுக்க முடியுமா? நீ பெஸ்ட் வொர்க்கர்னு தானே பேசாம இருக் கோம். அதுக்காக உன் இஷ்டப்படி நடந்துகிட்டா உனக்கு வேலை போயிடும்.''

''சாரி மேடம். என் பீலிங்கை புரிஞ்சுக்கங்க. அவங்க பர்த்டே எனக்கு உலகத்திலேயே ரொம்ப முக்கியம். அவுங்களதை நான் கொண்டாடலேன்னா யார் கொண் டாடுவாங்க?''



சொல்லிவிட்டு பீஸைத் தைக்கப் போகிறாள். இவள் மிகமிக நன்றாகப் பழக்கப்பட்டவள். தையலில் ஒரு குறை சொல்ல முடியாதபடி அத்தனை அற்புதமாக இருக்கும். மற்றவர்கள் 3 நாட்களில் பத்து பீஸ் தைத்தால் இவள் ஒரு நாளில் முப்பது பீஸைத் தைப்பவள். மற்றவர்களைவிட இவளுக்கு சம்பளமும் அதிகம். சலுகையும் அதிகம். ரொம்பவும் அதட்ட முடியாது. ஏதேனும் சொன்னால் நேராக மேனேஜரிடம் போய் விடுவாள்.

கொடுத்து வைத்தவள். பிறந்த நாள், கல்யாண நாள் என்று கொண்டாடுபவள். தான் எப்போது பிறந்த நாள் கொண்டாடினோம். தன் வீட்டில் எல்லாம் பிறந்த நாள் எல்லாம் கொண்டாடியதே இல்லை. மாமியார் வீட்டி லேயும் ஒன்றும் கிடையாது. தன் பிறந்த நாள் வந்து விட் டால் ஞாபகம் கூட இருக்காது. என்றாவது ஞாபகம் வந்தால் கணவனிடம் சங்கேதமாக சொல்லி பார்ப்பாள். ஒருவித பலனும் இருக்காது. ஒரு முழம் பூவாவது வாங் கித்தர மாட்டானா என்று எதிர்பார்ப்பாள். ம்..ஹூம்.

''பூ வேண்டுமென்றால் வாங்கி வச்சுக்கயேன். என்னை ஏன் டிஸ்டர்ப் பண்றே?'' என்பான்.

அவனுக்குப் பிறந்த நாள் என்பது மட்டும் அவளுக்கு எப்படியோ ஞாபகம் வந்து விடும். அவனுக்காக பார்த்து பொறுக்கி ஷர்ட்டோ, ஸ்லாக்கோ வாங்கிக் கொண்டு வந்தால் போட்டுக் கொள்ளவே மாட்டேன். ''உங்க பர்த் டேக்குன்னுதான் வாங்கிட்டு வந்தேன். போட்டுக்கக் கூடாதா?'' இவர் சண்டை பிடித்தால்,

''அடப்போ... பெரிய பர்த்டே... எனக்காக நீ வாங்காதே. எனக்குப் பிடிக்காது'' வெளிப்படையாகவே சொல்லி

விடுவான்.'' பார்த்டே கொண்டாடறதே பைத்தியக்கா
தனம்'' என்பான்.

அவன் சொல்வது உண்மைதான். ஒவ்வொ
பர்த்டேவும் நாம் இறப்புக்கு அருகில் போய்க் கொ
ருக்கிறோம் என்பதைத் தான் உணர்த்துகிறது. இ



அவளுக்குத் தான் நேரமானது. அவசரம் அவசரமாகக் கிளம்புகையில் மோகினியும் வந்து சேர்ந்து கொண்டாள்.

''மேடம் இருங்க நானும் வரேன்.''

''ஏன் கிளம்பிட்டே? ஆப் அ டே தானே வர

[redacted]

பிடித்துக் கொள்வதைப் பார்த்தவளுக்கு ஏக்கமே பிறந்தது ஏனோ தன் வாழ்க்கையைப் பற்றியும், கணவனைப் பற்றியும் ஞாபகம் வர மனம் வெந்தது. இதற்குள் பஸ் வந்துவிட கூட்டத்தில் அடித்துப் பிடித்து ஏறுகிறாள். ஒரு முறை தன் பிறந்த நாள் என்று அவளின் ஒன்றுவிட்ட அத்தை எதேச்சையாக தன் கணவனைப் பார்த்து மூன்று முழம் குண்டு மல்லியைக் கொடுத்து அனுப்ப, கணவன் அதை அப்படியே பையோடு மறந்து வைத்துவிட ஒரு வாரம் கழித்து பையைத் தோய்க்க எடுத்தபோது தான் அவனுக்கு விஷயமே ஞாபகத்திற்கு வந்தது. இன்னும் இதை நினைத்து, நினைத்து அவள் வருத்தப்பட்டிருக்கிறாள். வேதனைப்பட்டிருக்கிறாள்.

ஏதோ பழைய ஞாபகங்களில் மூழ்கியவாறே மெதுவாக இறங்குகிறாள். வீட்டை நோக்கி நடக்கும்போதே, ஒரு நிமிடத்தில் அவள் பையை ஒருவன் தட்டிக் கொண்டு போக, 'டேய்' கத்தியவாறே ஓடி வருகிறாள். அதில் பெரியதாக பணம் ஒன்றுமில்லை. ஒரு பத்து ரூபாய். அவளின் ஐடி கார்ட், பஸ் பாஸ், தண்ணீர் பாட்டில் இத்தனை தான். இன்று ரேஷனில் சர்க்கரை போடுவதாக இருந்தால் வாங்கி வரலாம் என்று நேற்று பையில் வைத்து மறந்து போன அவர்களின் குடும்ப அட்டை வேறு.

''டேய் அதில் ஒண்ணும் இல்லை. ரேஷன் கார்டைக் கொடு.'' கத்தியவாறே அவள் பின்னால் வர ஸ்கூட்டியில் போய்க் கொண்டிருந்த அந்தப் பாவாடை தாவணி அணிந்த பெண் துணிச்சலாகத் திருடனை விரட்டிச் சென்று பையை வாங்கித் தர, இதற்குள் கூட்டம் கூடி திருடனைப் பிடித்துவிட திருடன் கத்தியால் அந்தப்



பெண்ணின் கையில் லேசாக கீறி விட்டு பையைப் போட்டு ஓடிவிட, ஒரே களேபரமானது.

அந்தப் பெண் கை காயத்தைப் பற்றி கவலைப்படாமல் ''இந்தாங்க மேடம்'' என்றவாறே ஹேண்ட் பேக்கை அவளிடம் தர, லலிதா சந்தோஷப்பட்டாள். இளைஞர்களிடம் இத்தனை பெருந்தன்மை, உதவும் குணம் இருக்கிறதா? சாதாரணமாக சில ஆண் பிள்ளைகள் வலிய வந்து உதவி செய்வதைப் பார்த்திருக்கிறாள். ஒரு சிறு பெண் இப்படி ஓடிப் போய் திருடனைப் பிடித்தது ஆச்சரியம்தான்.

''ரொம்ப தேங்க்ஸ்மா. உனக்கு எப்படி தேங்க்ஸ் சொல்றதுன்னு தெரியலைம்மா.''

''இட் ஈஸ் ஓ.கே. ஆன்ட்டி கிளாஸுக்குப் போகணும். கிளம்பறேன். உங்க வீடு எங்கே இருக்கு சொல்லுங்க. டிராப் பண்ணிட்டுப் போறேன்'' அந்தப் பெண் உதவி செய்யும் நோக்கோடு சொல்ல.

''வேண்டாம்மா பக்கத்துலேதான் வீடு. எனிவே ரொம்ப தேங்க்ஸ்மா'' சொல்லிவிட்டு சிரித்தபடி அவள் நகர, விர்ரென்று வண்டியை கிளப்பிக் கொண்டு அவள் செல்கிறாள்.

லலிதாவிற்கு அப்போது தான் உரைத்தது. அந்தப் பெண்ணின் பெயரைக் கேட்க மறந்து விட்டோமே. சரி இங்கே எங்கோ இருக்கும் பெண் போல் தோன்றுகிறது. பிறகு பார்த்துக் கொள்வோம். அந்த பெண்ணின் சிரித்த முகம், பாவாடை தாவணி போட்ட அந்த அழகும் வித்தியாசமாகத் தெரிந்தது. இந்தக் காலத்தில் யார் பாவாடை தாவணி அணிகிறார்கள். கிராமத்தில் கூட குடிதார்தான்.

தன் கீழ் வேலை செய்யும் பெண்கள்கூட சூடிதாரில் தா
வரும். திருமணமான சற்று வயதான பெண்கள் தா
புடவையில் வருவார்கள்.

இந்தக் காலத்தில் ஸ்கூட்டியில் பறக்கும் பெண் எ
தனை பாந்தமாக பாவாடை தாவணி அணிந்து கொண்
காதில் சின்ன ஜிமிக்கி, நெற்றியில் அழகான திலக
பார்க்கையிலே அள்ளிக் கொள்ளலாம் போல ஒ
தோற்றம். இதில் பதிவிசான பதில்களும் அடக்கமா
நடந்து கொள்ளும் முறையும் மனதைக் கவர்ந்து இழுக்

'இந்தப் பெண் இந்தப் பெண் தான் எனக்கு மருமக
ளாக வரவேண்டும்.' பளீரென்ற நிறமும் ஆளை அசத்
கிற, அழகும் சுறுசுறுப்பும் மனதைக் கவர மனதி
நிச்சயம் செய்து கொள்கிறாள்.

சட்டென்று அபிஷேக்கை கொஞ்சிய அந்தப் பெ
ணின் ஞாபகம் வந்தது. ஜீன்ஸும் டாப்ஸும் போட்டு
கொண்டு கொஞ்சம் முகம் மட்டும் தெரிய, அந்த
பெண்ணும் கொஞ்சம் வெள்ளை என்று தெரிந்த
இருந்தும் ஏனோ அந்தப் பெண்ணை பிடிக்கவில்லை
தான் பார்த்த அந்தப் பெண்ணுக்கு எத்தனை லக்ஷ்மி
கரமான முகம்? இவளுக்கு மாடர்ன் டிரஸ் போட்டால் கூட
அழகாகத்தான் இருக்கும். தன் பிள்ளையிடம் கட்டாய
பேச வேண்டும்.

வீட்டிற்குள் நுழையும்போதே மறுபடியும் மாமியா
பிடித்துக் கொண்டார்.

''எதுவும் சரியில்லை. நேத்து அத்தனை தூர
சொன்னேன். இப்பவும் என்ன லேட்?'' மாமியார் ஆர
பிக்க,



''என்ன அத்தை நான் தான் ஏழரைக்கு வந்துட்டேனே?''

''தினமும் எத்தனை மணிக்கு வருவே? ஆறிலிருந்து ஏழரை ஆக்கிட்டியா?''

''ஏன் அத்தை இப்படிப் பேசறீங்க? தினமும் ஆறரைக்கு தானே வருவேன். இன்னிக்கு கொஞ்சம் பீஸ் செக் பண்ணி பேக் பண்ணி அனுப்பற வேலை. அதான் லேட்டாயிடுச்சு.''

''ஆமாண்டி நீ மட்டும் தான் வேலை செய்யறே? மத்தவங்க எல்லாம் அரட்டை அடிச்சிட்டா வராங்க. வயசுக்கு ஏத்த புத்தி வேணும். எல்லாம் எம்பிள்ளையைச் சொல்லணும். எதுவும் நடக்காத மாதிரி மரம் மாதிரி உக்காந்துகிட்டு இருந்தான்னா இன்னும் வேற ஏதாவது விபரீதம் கூட நடக்கும்.''

''அத்தை என்ன பேசறீங்க? என் வயசு என்ன? எனக்கே கல்யாணமான பெண்ணும், கல்யாண வயசுலே பிள்ளையும் இருக்கு. இப்படியா பேசுவீங்க?''

''அவ பேசறதுலே என்ன தப்பு? அவ வாயை மூடிகிட்டா நாளைக்கு ஊர் பேசும். அப்புறம் ஒண்ணும் பண்ண முடியாது. ஐ.டி.லே போற கல்யாணமான பொம்பளைங்க கூட கெட்டுப் போறாங்களாம்.''

''மாமா தயவு செய்து யாரையும் தப்பா பேசாதீங்க. வேலைக்குப் போனா கெட்டுப் போகணும்னு ஒண்ணும் இல்லை. எத்தனையோ பெண்கள் குடும்ப பாரத்தை சுமக்க வந்து எத்தனையோ கஷ்டத்திலே வேலை செய்யறாங்க. அவுங்க புகழத் தெரியலேன்னாலும் அவுங்க மேலே சேத்தை வாறி இறைக்காம இருங்க ப்ளீஸ்...''

''என்னது நான் சேத்தை வாரி இறைக்கிறேனா? பேப்ப படிக்கறதில்லையா நீ. பொம்பளைங்க எல்லா முன்னைப்போல இல்லே. கைலே நாலு காசு இருக்குங்க ஆணவம் தறி கெட்டுப் போகத் தோணுது.''

லலிதா பெருமூச்சு விடுகிறாள். எதையும் மாற் முடியாது. எல்லோருமே அவரவர் வழியில் தான் செல் கிறார்கள். மாமனாருக்கு பெண்கள் மேல் என் வெறுப்போ? மருமகள் என்று கூடப் பார்க்காமல் பெ களைப் பற்றி பச்சை பச்சையாகத் திட்டுவார். மா யாருக்கு போரடித்தால் பெண்களைத் திட்டி குற்றம் கூறி சண்டை போடுவாள். இல்லையென்றால் மாமனாருட சேர்ந்து எல்லோரையும் திட்ட ஆரம்பிப்பாள். மாமியா வாயிலும் பெண்கள் விழுந்து எழுவார்கள்.

எல்லாவற்றையும் குத்துக் கல்லாக கேட்டுக் கொ டிருக்கும் கணவன். காதில் விழுந்தாலும் விழாது போ பாவிப்பான். சில நாட்கள் மன உளைச்சல் தாங்காம இரவில் அவனிடம் சொன்னால் ''த்சு...'' என்பான். பா நேரத்தில் உறங்கியும் விடுவான். இவள் சொல் சொல்ல பாதி நேரத்தில் குறட்டை ஒலி பிரமாதமா வரும். அவனுடன் பேசுவதையும், கேட்பதையும் ஏ சிரிப்பதைக் கூட விட்டு விட்டாள். இரு துருவங்களி இருக்கும் இரு ஜீவன்கள் போல் சம்பந்தமில்லாம இருவரும் இருந்தார்கள்.

பெருமூச்சு விட்டவாறே அவள் நகர, மாமியார் ம படியும் ஆரம்பித்தாள். ''எங்கேடி போறே நில்லு. உன் யாரும் கேக்க மாட்டாங்கற திமிரா? ஆறு மணிக் மேலே வந்திருந்தா வெளியே போன்னு புருஷ



துரத்தினா புத்தி வரும். நானும் பெத்து வச்சுருக்கேனே. டி.வி.யைப் பார்த்துகிட்டு உக்காந்துகிட்டு இருக்கு.''

மாமியார் பின்னும் ஆரம்பிக்க லலிதா சலித்துப் போனாள். தன்னால் இனித் தாக்குப் பிடிக்க முடியாது. காலையிலிருந்து ஓயாத வேலை. பையனின் பாரா முகம், கீழே உள்ளவளின் அன்பான வாழ்க்கை, திருடன் தன் பையை எடுத்துக் கொண்டு போனது எல்லாமாகச் சேர்ந்து எரிச்சலைத் தர, பசி வேறு வயிற்றைக் கிள்ள, சோர்ந்து போய் நிற்கிறாள். மாமியார் வாயிலை மறைத்தவாறே நிற்கிறாள்.

''என்ன இது சத்தம்?'' பாட்டி வண்டார் குழலி வந்து விடுகிறாள்.

''எங்கே ஊர் சுத்திட்டு வரே சொல்லு'' மாமியார் மீண்டும் பாய,

''ஏய் என்ன நடக்குது இங்கே? என்ன பண்றே நீ? ஆபீஸிலிருந்து வந்தவளை ரோட்டிலே நிக்க வச்சுகிட்டு, நீ உள்ளே வாம்மா'' பேரன் மனைவி கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் செல்கிறாள்.

மாமியாரும், மாமனாரும் முகத்தைச் சுளித்துக் கொண்டு வெளியே நிற்க, லலிதாவுடன் உள்ளே நுழைகிறாள் பாட்டி. பாட்டி மட்டும் இல்லையென்றால் தான் இந்த வீட்டை விட்டு எப்போதோ ஓடிப் போயிருப்பாள். மறுபடியும் கண்கள் கணவன் வந்து விட்டானா என்று பார்த்தது. வழக்கம் போல் ஸ்போர்ட்ஸ் சேனலில் கணவன் மூழ்கி இருந்தான்.

நெஞ்சை ஒரு நிமிடம் வேதனை தாக்க, அடுத்த நிமிடம் அந்த உணர்வை தூக்கிப் போடுகிறாள். இவன்

வேறு மாதிரி இருந்தால் தான் அதிசயம். முகம், கை கால் கழுவி விட்டுச் சாப்பிட அமர்கிறாள். எப்போதுமே சாப்பிடும்போது வண்டார் குழலி பேச்சுக் கொடுக்க அன்று அலுவலகத்தில் நடந்தது எல்லாற்றையும் சொல்வாள். பல நேரங்களில் தனக்குச் சம்பள உயர்வு, பிரமோஷன் போன்றவற்றைக் கூட யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாமல் தவித்து இருக்கிறாள். துக்கம் வரும்போது தன் அறையில் போய் தனியாக அமர்ந்து அழுதிருக்கிறாள். ஆனால் சந்தோஷம் வரும்போது யாராவது கேட்கவில்லை என்றால் மண்டையே வெடித்து விடும். அவளுடைய ஒரே வடிகால் பாட்டிதான். தன் அலுவலகத்தில் நடந்தவைகளை சொல்லிவிட்டு, தன் பையைத் தூக்கிக் கொண்டு ஒருவன் ஓடியதும் ஒரு பெண் வந்து காப்பாற்றியதையும் சொல்லி பெண்ணை வானளாவப் புகழ, ஒரு நிமிடம் அவளையே குறுஞ்சிரிப்புடன் பார்த்த வண்டார்குழலி.

''அந்தப் பெண்ணைப் பார்த்தா கட்டாயம் வீட்டுக்கு வரச் சொல்லு. இன்னொரு விஷயமும் உங்கிட்டே சொல்லணும். அவன் விரும்பற பொண்ணைப் பார்த்து கல்யாணத்தை நிச்சயம் செய்திடு.'' பாட்டி சொல்லச் சொல்ல லேசாக உறைந்தவளாய் பாட்டியையே பார்க் கிறாள் லலிதா.

## 11

ஒரு நிமிடம் தன் மறுப்பைச் சொல்லலாமா? யோசித்த லலிதா. 'வேண்டாம். அந்தப் பெண்ணையும்



சந்தித்து விடுவோம். பிறகு முடிவு செய்வோம்.' மனதில் நினைத்தவள்,

''எங்கே பாட்டி நேரம் இருக்கு? பேசி முடிக்கலாம்'' சிரித்தவாறே எழ,

''சரிம்மா விடு. நாளைக்கு ஆடிக்கிருத்திகை. வேலை வேற நிறைய இருக்கு. இப்போதுதான் சாமிக்கு மஞ்சள் எல்லாம் வச்சேன். பூ கட்டி முடிச்சேன். இட்லிக்கு அரைச்சு போட்டிருக்கேன். நாளைக்கு கொஞ்சம் சீக்கிரம் எழுந்துடும்மா. காலையிலே கோவிலுக்குப் போயிட்டு வந்திடணும்.''

''சரிங்க பாட்டி'' என்றவள் படுக்கப் போகிறாள். பாவம் அந்த பாட்டி, பேரன் மனைவி இருந்தும் இந்த எண்பத்து ஐந்து வயதிலும் பதினாறு வயதுப் பெண்ணாக வேலை செய்கிறாள். ஒரு முறையாவது ஐயோ முடியவில்லை என்ற சலிப்போ ஐயோ என்ற அலுப்புமில்லாமல் வேலை செய்கிறாள். பாவம். மனம் பாட்டியை நினைத்து வருத்தப் பட்டது. ஒரு பெருமூச்சோடு தன் அறைக்குப் போகிறாள்.

கணவன் முன்னேயே சாப்பிட்டிருக்க வேண்டும். ஏதோ புத்தகத்தில் மூழ்கி இருந்தான். நல்லவேளை பாதி நாட்கள் வேலை முடித்து வரும்போது தூங்கிக் கொண் டிருப்பான். இன்றாவது விழித்துக் கொண்டிருக்கிறான். இவனை விடக்கூடாது. அவசரம், அவசரமாக எல்லா விளக்குகளையும் அணைத்து விட்டு வந்து படுக்கிறாள்.

''என்னங்க... பலமுறை அவள் கூப்பிட்டும் பதில் இல்லை.

''ஏங்க கரடியா கத்திகிட்டு இருக்கேன். என்னன்னு கேக்க மாட்டீங்களா?''

''சொல்லு.'' வெகு நேரம் கழித்து பதில் வர,

''ஆமா...'' என்று முணு முணுத்தவள்,

''உங்க பையன் யாரோ ஒரு பெண்ணை லவ் பண்றானாமே என்ன ஏதுன்னு கேட்டீங்களா?''

பெண்டாட்டியை ஒரு முறை பார்த்தவன் மறுபடியும் விட்ட இடத்திலிருந்து புத்தகத்தைப் படிக்க,

''ஏங்க உங்ககிட்டே தான் கேக்கறேன். யார் வீட்டு நிகழ்ச்சியோ என்பதுபோல பார்க்கறீங்க.''

''இப்ப உனக்கு என்ன வேணும்?''

''பிள்ளை யாரையோ லவ் பண்றான்னு சொல்லறேன். யாரு என்னன்னு கேட்க மாட்டீங்களா?''

''கேட்டு...'' அவன் எரிச்சலோடு கேட்க,

''என்னங்க உங்க பிள்ளை யார் கூடவோ சுத்தறான்னா யார் என்னன்னு கேக்க மாட்டீங்களா?''

''த்சு... வயசுப் பசங்க இப்படித்தான் இருப்பாங்க. யார் கூடவாவது பேசினா உடனே லவ்வா. இந்த காலத்துப் பிள்ளைகளுக்கு ஒவ்வொருத்தரும் எத்தனை ப்ரீடம் தராங்க தெரியுமா?''

''என்ன இப்படிப் பேசறீங்க? ப்ரீடம் இல்லாம என்ன? அவனை எப்பவாவது கண்ட்ரோல் பண்ணியிருக்கோமா. இல்லை இப்படி இரு. அப்படி இருன்னு போர்ஸ் பண்ணியிருக்கோமா? ஒரு பொண்ணை லவ் பண்றான்னு எல்லோரும் சொல்றாங்க. அவளைக் கூப்பிட்டுகிட்டு அலையறான்னு சொல்லுறாங்க. யாரு என்னன்னு கேட்க வேண்டாமா?''

''அவனுக்கு பிடிச்சா பண்ணிக்கட்டுமே.''



''என்ன இப்படிப் பேசறீங்க? பெண் என்ன ஜாதியோ என்னவோ? நம்ப குடும்பத்துலே வேற யாரும் ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் கட்டிகிட்டதில்லே. இவனை விசாரிக்க வேணாமா?''

''இதப் பார். அவன் தோளுக்கு மேலே போயிட்டான். எது நல்லது எது கெட்டதுங்கறது அவனுக்குத் தெரியும். அதுனால நீ கவலைப்படாதே.''

''ஏங்க இப்படி இருக்கீங்க? உங்க பிள்ளைக்கு உதவி செய்ய வேண்டாமா? இது சின்ன வயசு. எது சரி, தவறுன்னு புரியாத வயசு. ஏதாவது தப்பா நடந்து போச்சுன்னா? தப்பான இடத்துலே மாட்டிகிட்டா யாராலும் காப்பாத்த முடியாது.''

அவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தவன்,

''சரி... சரி நைட்லே உயிரை எடுக்காதே. காலைலே பேசிப்போம்'' என்று புத்தகத்தை எடுத்து வைத்து விட்டு, விளக்கை அணைத்து விட்டு கண்ணை மூடி உறங்குகிறான்.

அவள் படுத்துக் கொண்டாள். கண்களை மூடிக் கொண்டாள். தன்னைக் காப்பாற்றின தாவணிப் பெண்ணின் நினைவே வந்தது. 'இவள் மட்டும் எனக்கு மருமகள் ஆனால் எத்தனை நன்றாக இருக்கும். ஆகுமா?' மனம் பேதலித்தது. 'அந்தப் பெண் யாரென்று முதலில் கண்டு பிடிக்க வேண்டும். பையனுக்கும் காண்பிக்க வேண்டும். என்ன துறுதுறுப்பு? என்ன அழகு.'

பையனிடம் காண்பித்தால் உடனே ஒப்புக் கொள்வான். தான் பார்த்த அந்தப் பெண்ணின் ஞாபகம் வந்தது. ஜீன்ஸ் பேண்டை போட்டுக் கொண்டு, ஜீன்ஸ் துணி

போல் ஒரு துணியில் ஷர்ட்டைப் போட்டுக் கொண்டு தலையை இறுகக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்த அந்தப் பெண்ணின் ஞாபகம் வந்தது. பெண் சற்று வெளுப்பாக, நாகரீகத்தின் அங்கமாகத் தெரிந்தது. மற்றபடி விசேஷமாக எதுவும் தோன்றவில்லை. இன்னும் சற்று அருகில் பார்த்திருந்தால் அதன் மொத்த முகமும் தெரிந்திருக்கும். அதே தாவணி, பாவாடையுடன் இருந்த அந்தப் பெண்ணின் முகத்தில் இருந்த களை, சுட்டித்தனம் எவரையுமே இழுத்து விடும். அந்தப் பெண்ணைப் பற்றி யோசித்தவாறே உறங்கிப் போனாள் லலிதா.

இங்கே தன் அறையில் செல்லில் கொச கொசவென்று காதலியோடு உறவாடிக் கொண்டிருந்தான் அபிஷேக்.

"ஆமா போன் பண்ணபோது ஏன் ஸைலன்டா இருந்தீங்க? பக்கத்துலே யாராவது பெரியவங்க இருந்தாங்களா என்ன?"

"ஆமா பெரியவங்க இருந்தா என்ன அப்படியே நீ பயந்துடுவே?" அவன் அவளைச் சீண்ட,

"எனக்கு எல்லாம் பயமே இல்லேப்பா. அது உனக்குத் தெரியாதா? நான் உன்னைப் பற்றி பேசறேன். ஏய் போன் வந்ததும் நடுங்கிட்டியா என்ன?"

"ஏய் எப்ப நீ போன் பண்ணே? கனவுலேயா? நிஜம் நிழல் எதுவும் உனக்குத் தெரியாதா?"

"ஏய்.... எத்தனை அழகா சமாளிக்கறே? என்னாச்சு எல்லார் கிட்டேயும் நல்லா வாங்கி கட்டிகிட்டயா?"

"ஏய் அரை... எப்ப போன் பண்ணே?" அவன் அதட்டலாகக் கேட்க,



"டேய் ஒண்ணும் தெரியாத மாதிரி நடிக்காதே. நான் அஞ்சு மணிக்கு போன் பண்ணேனே. நீ எடுக்கலை?"

"மண்ணாங்கட்டி. எனக்கு புராஜக்ட் முடியவே ஆறு ஆயிடுச்சு. நான் எங்கம்மா வந்தப்புறம் தான் வீட்டுக்கே வந்தேன். ஆமா யாரோட பேசனே? என்னென்ன உளறினே?"

அவன் சொல்ல, சொல்ல ஆர்த்திக்கு லேசாக கலவரம் மூண்டது.

"என்னய்யா சொல்றே? நீ இல்லே! சே!" என்று அலுத்துக் கொள்கிறாள்.

"என்னென்ன பேசித் தொலைச்சே?"

"என்னென்னவோ. வழக்கமா உங்கிட்டே வழியறதை எல்லாம் வழிஞ்சிட்டேன்."

"ஐயையோ... போனை யார் எடுத்தாங்க?"

"தெரியலையே."

"என்னது யார் எடுத்தாங்கன்னு கூடவா தெரியாது."

"நான்... போனை எடுத்ததுமே அது நீங்கதான் நினைச்சு பேச ஆரம்பிச்சிட்டேன்."

அபிஷேக் தலையில் அடித்துக் கொண்டான்.

"சரிப்பா என்ன பண்றது? பேசினது பேசியாச்சு." ஆர்த்தி சுதாரித்துக் கொண்டு சொல்கையில்,

"ஆமா வேற என்ன பண்ண முடியும்?" அபிஷேக் அலுத்துக் கொள்கிறான்.

"ஓட்டல்ல பேசிட்டு தானே வரோம். அதுக்குள்ளே வீட்டுக்கு நீ ஏன் போன் பண்ணறே? இனிமே இந்த மாதிரி பைத்தியக்காரத்தனம் எல்லாம் பண்ணாதே."

முதலில் சிறிது நேரம் பேசாதிருந்தவள், பிறகு அபி ஷேக்கிடம் மெதுவாக கேட்கிறாள்.

''அபி அது யார் போனை எடுத்தது. உங்க பாட்டியா?''

''ஆரம்பிச்சிட்டியா? சரியாக தெரியாம யார் மேலேயும் பழி போடாதே.''

''ஓ.கே. ஓ.கே. மறுபடியும் நமக்குள் சண்டை வேண் டாம்.''

ஆர்த்தி சமாதானமாகக் கூறுகிறாள்.

பேச்சு எங்கெங்கோ நீண்டு மணி மூன்றைத் தொட்டது.

''ஓ.கே. ஆர்த்தி மணி ஆயிடுச்சு. போய் படுக்கணும். அப்புறம் பேசலாம்'' சொல்லிவிட்டு எழுந்திருக்க, அவ னையே லேசாக முறைத்தவாறு நிற்கிறாள் லலிதா.

# 12

அபிஷேக் ஒரு நிமிடம் ஆடிப் போய் விடுகிறான். அம்மா நல்ல தோழி போல் இருப்பவள். அவளிடம் எதையும் பேசலாம். அப்பாவாவது தான் தன் வேலை என்று இருப்பவர். தேவைக்கு மேல் அதிகமாக இரண்டு வார்த்தை கூட பேசாதவர். ஆனால் அம்மா அப்படி அல்ல. அவனுடைய உண்மையான கோல் பிரண்ட் அம்மாதான். அவளிடம் தன் சந்தோஷங்களை கோபங்களை - துக்கங் களை எதை வேண்டுமானாலும் சொல்ல முடியும்.



பகிர்ந்து கொள்ள முடியும். அப்படிப்பட்டவள் ஏன் முறைத்துப் பார்க்கிறாள்? அம்மாவிற்கு ஏதேனும் கோபமா?

அம்மா அவனோடு பேசாமலிருந்தாலோ கோபப்பட் டாலோ அவனால் தாங்க முடியாது.

''என்னம்மா?''

''யாரோடு பேசிகிட்டு இருக்கே? இத்தனை நேரம்?''

''.... பிர... பிரண்டும்மா.''

''எந்த பிரண்ட்? ஏண்டா மணி என்ன தெரியுமா? மூணு. மூணு மணி வரைக்கும் எவன்டா பேசறான்? எங்கிட்டே கொடு நான் பேசிக்கறேன்.''

''வந்தும்மா...'' அவன் தயங்க,

''யாரு உன் கோல் பிரண்டா?''

அம்மா கேட்டதும் முகம் வெளிற,

''என்னம்மா நீங்க...?'' அவன் தயங்கிப் பேச,

''என்னடா தயக்கம்? லவ் பண்ணத் தெரியுது. சொல்லத் தைரியமில்லையா?'' லலிதா கடிந்து கொள்ள,

''அப்படி எல்லாம் இல்லேம்மா. நானே உங்க கிட்டே சொல்லணும்னு நினைச்சுகிட்டு இருக்கேன். அவ ஆர்த்தி. என் பக்கத்து ஆபீஸ்லே தாம்மா வேலை செய்யறா? ரொம்ப நல்லவம்மா.''

அவன் முதலில் தயங்கினாலும் பிறகு தெளிவாக, அழுத்தமாகச் சொல்ல, கொஞ்ச நேரம் மௌனம் சாதித் தவள், பிறகு மெல்ல கேட்கிறாள்.

''எத்தனை நாட்களாகப் பழக்கம்?''

"டூ இயர்ஸ்."

பெருமூச்சு விடுகிறாள் லலிதா. தான் ஒன்றை நினைக்கத் தெய்வம் வேறொன்றை அல்லவா நினைக்கிறது. பிள்ளையிடம், இந்தப் பெண் வேண்டாம் என்று எப்படிச் சொல்வது? சொன்னால் கேட்கும் வயதோ, புரிந்து கொள்ளும் வயதோ அவனுக்கு அல்ல. லலிதா மௌனமாக நகர, பிள்ளை பிடித்துக் கொண்டான்.

"அம்மா நீங்க என்ன சொல்லறீங்க?"

அம்மாவின் சம்மதத்தைக் கேட்கிறான் பிள்ளை. லலிதா மௌனமாக நகர, பின்னாலேயே வருகிறான் மகன்.

"அம்மா பதில் சொல்லுங்க. என்னம்மா சொல்லறீங்க? அவளை அழைச்சுகிட்டு வரட்டுமா?" அவன் ஆசையாகக் கேட்க,

"ம்..." என்று மெதுவாக தலை ஆட்டிவிட்டு படுக்கை அறைக்குள் நுழைகிறாள். புருஷன் இன்னும் தூங்கிக் கொண்டு இருக்கிறான். பெருமூச்சு விட்டவாறே படுக்கையில் போய் அமருகிறாள். மணி மூன்றே முக்கால். ஐந்து மணிக்கு எழுந்தால் போதும். மனம் ஏனோ இருண்டது. பொறுப்பான, தாத்தா பாட்டி, தங்கள் வரைக்கும் ஆசையாக இருக்கும் அம்மா அப்பா. ஆனால் இவன் எதில் சேர்த்தி, தன் வரைக்கும் சாப்பாடு. தன் வரைக்கும் தூக்கம். தன் வரைக்கும் ஊர் சுற்றல் என்று இத்தனை மோசமாகக் கூட சுயநலக் கூட்டில் ஒருவன் அமைந்திருக்க முடியுமா என்ன? ஒழியட்டும். இதை நினைப்பதால் என்ன பிரயோசனம் வருத்தம் தான் மிஞ்சும். எதை மாற்ற முடியாதோ அதை விட்டு விடுவதுதான் புத்திசாலித்தனம்.



அடுத்து என்ன செய்வது? பிள்ளையை எப்படி ஒப்புக்கொள்ள வைப்பது? அந்தக் கவலையில் மனம் உழன்றிட விடியல் வந்து விட்டதை உணராமல் இன்னும் உறங்குகிறாள் லலிதா.

"லலிதா... ஏய் லலிதா." யாரோ கூப்பிடும் ஒலி கேட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கிறாள். மாமியாரின் கடுமையான கூப்பாடு.

'ஐயையோ என்ன இது அத்தை கூப்பிடறாங்க? என்ன விஷயம்?' மணியைப் பார்த்தவள் அதிர்ந்து போகிறாள். ஐந்து மணிக்கு எழுந்திருக்கணும்னு நினைத்தேனே. ஆறரை ஆகி விட்டதே. பதறி அடித்துக் கொண்டு எழுந்து விடுகிறாள்.

"ரொம்ப நல்லா இருக்கு. மணி என்னாகிறது? எப்ப எழுந்திருக்கிறது?" தான் தவறு புரிந்து விட்டோம் என்பதால் குனிந்த தலை நிமிராமல் கிளம்பிச் செல்கிறாள்.

"ஏதோ சின்னஞ் சிறுசுன்னா பரவாயில்லை. தடியா ஆயிட்டும் இப்படித்தான் இருக்கு."

லலிதாவிற்கு கண்கள் கலங்கின. மாமியாருக்கு நல்ல வார்த்தை தெரியாது. எப்போதுமே கோண வார்த்தைதான். ஒரு பெருமூச்சோடு பாத்ரூமுக்குப் போய் பல்லை விளக்கிவிட்டு, குளித்து விட்டு வெளியே வருகையில் பாட்டி வண்டார்குழலி கேட்கிறார்.

"என்னம்மா இன்னிக்கு கோவிலுக்குப் போகணும்னு சொன்னேனே. இத்தனை லேட்டா எழுந்து வறியே?" ஒரு புன் சிரிப்போடு தான் கேட்கிறார். இத்தனை நாட்களும் புன்சிரிப்போடுகூட கடிந்து கொண்ட மாதிரி தன்னை

கேட்டதில்லை. இன்று கேட்டது சாதாரணம் தான் இருந்தும் வலித்தது. எப்போதும் சுடு சொல் சொல்லுதவர்கள் வாயிலிருந்து சாதாரண எதிர்ப்பு கூட நமக்கு ஆத்திரத்தை தான் விளைவிக்கும். எப்போதும் திட்டுபவர்கள் கதை வேறு. திட்டை கேட்டு, கேட்டு நமக்கு உரைக்கக் கூட உரைக்காது. வண்டார் குழலி சாதாரணமாகச் சொன்ன வார்த்தை கூட மனதை தைத்தது.

மாமியாரோடு சேர்ந்து பாட்டியும் கேலி செய்கிறார்கள் என்ன? வேலைக்குப் போகிறவள், எத்தனையோ மன உணர்ச்சிகள். ஒரு நாள் முன்ன, பின்ன எழுந்தால்தான் என்ன? சரி ஒழியட்டும். தன் வேலைகளைக் கவனிக்க முனைந்தாள். தான் எழுந்து வருவதற்குள் பாட்டி பாதி வேலைகளை முடித்து விட்டு இருந்தாள். டிபனை செய்து முடித்து, காபி கலந்து வைத்து மதியம் எடுத்துப் போவதற்கு வேறு ஒரு டிபனும் செய்து முடித்து விட்டிருந்தாள்.

லலிதா மடமடவென்று உள்ளே போய் எல்லாவற்றையும் சுத்தப்படுத்தி விட்டு காபியைக் குடித்து விட்டு முருகனுக்கென்று அர்ச்சனை தட்டை எடுத்துக் கொண்டு கிளம்புகிறாள். பாட்டி பூ, பழம் வெற்றிலை பாக்கு, கற்பூரம், தேங்காய் எல்லாவற்றையும் ரெடியாக வைத்திருந்தாள். மடமடவென்று எல்லாவற்றையும் எடுத்துப் போய், சற்று கூட்டம் இருக்க கொஞ்சம் காத்திருந்து அர்ச்சனை செய்து விட்டு, அவசரம் அவசரமாகக் கிளம்பி வருகிறாள்.

அதற்குள் பாட்டி எல்லோருக்கும் டிபனை கொடுத்து விட, அலுவலகம், பள்ளிக்குப் போகிறவர்களுக்கு டிபனை கட்டி வைத்துவிட்டு தானும் எடுத்துக் கொண்டு ஓடுகிறாள். இதற்கிடையில் மாமனார், கணவர், மாமியார்



எல்லாவற்றையும் கவனித்து விட்டு ஓடுவதற்குள் வியர்த்து, விறுவிறுத்து விட்டது.

கணவன் மோட்டார் பைக்கில் செல்வான். அவன் அலுவலகத்திற்கு கொஞ்சம் முன்னால் தான் அவளுடைய அலுவலகம் இருக்கிறது. ஆனால் அவன் அலுவலகத்திற்கு எதிர்புறத்தில் இருக்கிறது. அவளை அழைத்துச் செல்ல வேண்டும் என்று நினைத்தால் அழைத்துச் செல்லலாம். ஆனால் கேட்கும்போதே படாரென்று அடிக்காத குறையாக பேசி விடுவான்.

''உன்னது எங்கயோ இருக்கு. அதுவும் ஒன்வே வேற, மறுபடியும் என் ஆபீஸுக்கு வரணும்னா அஞ்சு கிலோ மீட்டர் ஓட்டிகிட்டு வரணும். அதுக்கு ஆட்டோ பிடிச்சிகிட்டு போ'' என்பான்.

லலிதா தெரிந்த பாடாக பஸ்ஸை பிடித்துப் போய் விடுவாள். இன்றும் கிளம்பி அலுவலகத்திற்குச் சென்ற போது வேலை அதிகரிக்க வேலையில் மூழ்கிப் போனாள். வழக்கம் போல் மேனகா இன்னும் நேரம் கழித்து தான் வருகிறாள்.

''என்ன மேனகா ஒரு நாளாவது நேரத்திற்கு வர மாட்டியா?''

''இல்லை மேடம் இன்னிக்கு ரொம்ப முக்கியமான நாள் மேடம்.''

''என்ன?'' லலிதா எரிச்சலோடு கேட்க,

''அவுங்க புரபோஸ் பண்ண டே மேடம்.''

''ரொம்ப அழகாயிருக்கு. பிறந்த நாள், கல்யாண நாள் எல்லாம் ஆச்சு. இப்ப நிச்சயம் பண்ண டே கூட கொண்டாடணுமா?''

"மேடம் இப்படி கொண்டாடறதுனாலே தான் மைன்ட் பிரஷ்ஷா இருக்கு. எப்போதுமே இளமையா இருக்கு. நான் வாழ்க்கையை ரொம்ப நேசிக்கறேன் மேடம். என்னைவிட அவுங்கதான் ரொம்ப துடிப்பா இருப்பாங்க" அவள் சொல்லச் சொல்ல,

மறுபடியும் மனம் விழுந்தது. அன்று மாலை வேலை முடியும்போது மேனகா தயங்கித் தயங்கி வருகிறாள்.

"மேடம்..." அவள் தயங்க,

"சொல்லும்மா..."

"நாளன்னிக்கு ஒரு நாள் லீவு வேணும்."

"என்னமோ இப்பதான் ஒரே ஒரு நாள் லீவு எடுக்கற மாதிரி பேசறே? வாரத்திலே ரெண்டு, மூணு நாள் வர மாட்டேங்கறே? என்ன பிரயோசனம்? இப்படியே செய்து கிட்டு இருந்தியானா என்னிக்காவது ஒரு நாள் உனக்கு சீட்டு கிழியும். தெரிஞ்சுக்க."

"மேடம் நல்லா புரிஞ்சுக்கங்க. நான் நாளன்னிக்கு வர மாட்டேன். எங்க வீட்டிலே வேலைக்குப் போகவே வேணாங்கறாரு. நாளன்னிக்கு எங்க கல்யாண நாள். நாங்க நிறைய பிளானை வச்சுகிட்டு இருக்கோம். அது கொண் டாட முடியலைன்னா என்னை வேலைக்கு அனுப்பவே மாட்டாரு மேடம்."

அன்று வேலை முடிந்து வெளியே வந்தபோது, அவள் கணவன் பெரிய மஞ்சள் நிற ரோஜாவை அவளிடத்தில் கொண்டு வந்து தருகிறான். அவள் ஆசையாக காதின் அருகில் ரோஜாவை வைத்துக் கொள்கிறாள்.

அவன் கொடுக்கும்போது அந்தப் பெண்ணின் முகத்தில் உள்ள சந்தோசம் அந்தக் கணவனின் முகத்தில்



ஒளி, ஆசை... வாழ்க்கை இப்படித்தான் வாழ வேண்டும். தானும் வாழுகிறோமே தனித்தனி தீவுகள் போல் ஒரு வாழ்க்கை. நினைக்கும்போதுதான் தனக்கும் நாளன் னிக்கு வெட்டிங் ஆனிவர்சரி என்று ஞாபகம் வந்தது. திருமணம் ஆகி முழுவதாக முப்பத்து இரண்டு வரு டங்கள் முடிந்து விட்டது. ஒரு முழம் பூ வாங்கிக் கொடுத் திருக்கிறானா? எப்போதுமே ஆனிவர்சரி முடிந்து மூன்று நாட்கள் கழித்து தான் திருமண நாளைப் பற்றி ஞாபகமே வரும். பாட்டி ஒருவருக்குத்தான் எல்லா ஞாபகமும். காலையிலே 'இந்தாம்மா' என்று பூ வாங்கி கொடுப்பார். இரவு வரும்போது கட்டாயம் இனிப்புகள் இருக்கும். காலையி லேயே "என்னம்மா எப்ப பாரு வேலை? இன்னிக்கு ஒரு நாள் லீவு போட்டுட்டு அவனோடு வெளியே போகக் கூடாதா" என்பார். பேரனிடம் போய் "அவளை அழைத்து கிட்டு போகக் கூடாதா" என்பார்.

இதையெல்லாம் நினைத்தவாறே நின்றவள் யார் மீதோ முட்டி மோத, எதிரே பார்த்தவள் ஆச்சரியத்தோடு ஆனந்தமும் அடைந்தாள்.

## 13

"சாரி மேடம்" என்று நிமிர்ந்தவள் அந்தத் தாவணிப் பெண். இன்று ஏதோ வெளிறிய ரோஸ் நிறத்தில் தாவணி யும் அழுத்தமான கத்தரிப்பூவில் பாவாடையும், சட்டை யும் அணிந்திருந்தாள்.

''ஏய் உன்பேர் என்னம்மா? உன்னைத்தான் தேடிகிட்டு இருக்கேன்.''

''ஏன் மேடம்'' அவள் ஆச்சரியமாகக் கேட்க,

''ஏன் மேடமா? அன்னிக்கு எத்தனை தைரியமா திருடன் பின்னால ஓடி என் பேக்கை வாங்கிக் கொடுத்து... அதுக்கு நன்றி கூட சொல்லலையே...''

''ஓ... அதுவா... அது ஒண்ணுமில்லே. அதையேன் பெரிசு படுத்தறீங்க. அது சாதாரண மேட்டர்.'' பேசும் போதே அவள் ஜிமிக்கி ஆட, அந்தக் கன்னக் குழியும், மலர்ந்த கண்களும் சிவந்த உதடுகளும் சிரிக்கும்போது ஒளிரும் முத்துப் பல்வரிசையும் அவளை ரொம்பவே ஈர்க்க,

'சே இந்தப் பையன் இங்கே வரக்கூடாது இன்டிர டியூஸாவது பண்ணுவேனே. இந்த அழகைப் பார்த்தால் பிள்ளை மயங்கிவிட மாட்டான்.' மனதிற்குள் இந்த எண்ணம் ஓட தவிக்கிறாள்.

''ஏன் மேடம் ஏன் ரெஸ்ட்லெஸ்ஸா இருக்கீங்க? என் னாச்சு?''

''ஒண்ணுமில்லேம்மா. உன் பெயர் என்னன்னு சொல்லு. அன்னிக்கு அவசரத்திலே பேரைக்கூட கேட்டுக் கலை.''

''எம் பேரு கல்யாணி மேடம்.''

''நைஸ் நேம்'' என்றவள் ''வாயேன் ஏதாவது ஓட்டல்லே காபி சாப்பிட்டுட்டு வரலாம்.''

''சாரி மேடம் அன் டைம்லே நான் எதுவுமே சாப் பிடறதில்லே.''



''இல்லேம்மா உன் கூட பேசணும். உன் கூட டைம் ஸ்பெண்ட் பண்ணனும்னு மனது ஆசைப்படுது.''

''சந்தோஷமா இருக்கு. ஐ ஆம் ஸோ ஹேப்பி'' என்றவள்,

''இன்னிக்கு ரொம்ப அர்ஜன்டா போகணும். அப்புறம் பார்க்கலாம் மேடம். எனிவே தேங்க்யூ பார் காலிங்.'' சிரித்தவாறு ஸ்கூட்டியை கிளப்பிக் கொண்டு போகும் அவளையே ஒரு பெருமூச்சோடு பார்க்கிறாள். 'இவளை எப்படியாவது தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று பிள்ளைக்கு அறிமுகப்படுத்தி வைத்தே ஆக வேண்டும்.' சங்கடங்கள் சட்டென்று விலகினாற் போலத் தோன்ற, லேசாகச் சிரித்தவாறே கிளம்புகிறாள்.

பஸ் வந்துவிட ஏறி அமர்ந்தவள், ஏதோ யோசனையில் ஆழ்ந்திருக்க,

''ஏய் லல்லி எங்கேடி இங்கே?'' யாரோ கூப்பிடுவதைக் கண்டு திரும்பிப் பார்க்கிறாள். அம்மாவும் தங்கையும் நின்று கொண்டிருக்கின்றனர்.

''என்னம்மா இங்கே?'' சட்டென்று தான் எழுந்து கொண்டு அம்மாவிற்கு இடம் தருகிறாள்.

''இருக்கட்டும்மா.''

''நீங்க உட்காருங்க அம்மா. ஆமா இந்தப் பக்கம் எங்கே?''

''இவளுக்கு வித்யாசாகர் காலேஜ்லே பி.எஸ்ஸிலே இடம் கிடைச்சிருக்கு. பணம் எப்படியும் பத்தாயிடும் போல இருக்கு. அதான் உங்க மாமாவைப் பார்த்துட்டு வரலாம்னு...''

லலிதாவின் முகம் வாடியது. தானும் காசு நிறைய சம்பாதிக்கிறோம். ஆனாலும் ஒரு ஆத்திர, அவசரத்திற்குத் ஒரு பைசா தர முடியாது. சம்பளம் வந்தவுடனேயே மாமியார் கை நீட்டி வாங்கி விடுவாள். அவ்வப்போது இன்கிரிமென்ட்டை மட்டும் யாரும் அறியாமல் போட்டு வைத்து அது பிள்ளை பெண்ணின் அத்தியாவசிய செலவுக்குக் கொடுத்து அப்படித்தான் இதுவரை வாழ்ந்து வருகிறாள். இத்தனை சம்பாதித்தும் தனக்கென்று ஒரு நல்ல புடவையோ நகையோ வாங்கக் கூட ரூபாய் இல்லை. இந்த அழகில் தன் தங்கையின் படிப்பு செலவிற்கு தன்னால் என்ன தர முடியும்?

வருத்தத்தோடு அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"சாரிம்மா. நான் சம்பாதிச்சும் என்னால உனக்கு உதவி பண்ண முடியலே."

"ஏம்மா இப்படியெல்லாம் பேசறே? திருமணம் ஆகற வரைக்கும் தான் பெண்ணோடதெல்லாம் பெத்தவங்களுக்கு சொந்தம். எப்ப கல்யாணம் ஆச்சோ, அப்புறம் அவளுக்கு ஒரு தனி வாழ்க்கை வந்திடுது. அதுலே தலையிட பெத்தவங்களுக்கு கூட உரிமை இல்லை. நீ என் இரண்டாவது பொண்ணு. உங்க அக்கா வசதியாகத்தான் இருக்கா. அவ நினைச்சா எத்தனையோ செய்திருக்கலாம். ஆனா எதுவும் செய்யலே. அவ ஏதாவது கவலைப்படறாளா இல்லையே." லலிதாவின் தமக்கை ஜெயா பெரிய இடத்தில் வாக்கப்பட்டவள். மாமியார், மாமனார் என்று எந்த பிடுங்கலும் இல்லை. மாப்பிள்ளைக்கு சிறு வயதிலேயே அம்மா, அப்பா இறந்துவிட எக்கச்சக்க சொத்துக்கு வாரிசு வேறு. கணவனும் வெகு



தாராளமானவன்தான். இருந்தும் திருமணம் முடிந்த பிறகு கொஞ்சம் கொஞ்சமாக பெரியவள் இங்கே வருவதையே குறைத்துக் கொண்டாள்.

"சாரி எங்க வீட்டுலே ஏஸியிலேயே இருந்து பழக்கமாயிடுச்சு" என்பாள். கொஞ்சம், கொஞ்சமாக பிறந்த வீட்டின் தொடர்பை அறுத்துக் கொண்டவள் பின் முற்றிலுமாக விலகியே போய்விட்டாள். லலிதா பெரிய குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டவள். அவ்வப்போது அம்மாவைப் பார்த்து தன்னால் ஆன உடலுழைப்பைத் தான் தர முடிந்தது.

மூன்றாவது இரண்டு வருடங்களுக்கு முன்பு திருமணம் ஆன கல்யாணி. அவள்தான் அவ்வப்போது கணவனோடு வந்து அம்மாவை பார்த்துக் கொள்கிறவள். ஆனாலும் அவளுக்கும் இரட்டைக் குழந்தைகள் பிறந்ததும் அவளும் மாறித்தான் போனாள். அம்மா வீட்டிற்கு சுருட்டுவதற்காகவே வருவாள்.

கடைக்குட்டி இப்போதுதான் படித்துக் கொண்டிருக்கிறாள். நல்லவேளை பிள்ளை எதுவும் கிடையாது. அப்பா இருக்கும் லட்சணத்திற்கு பிள்ளை வேறு இருந்திருந்தால் என்ன ஆகி இருக்குமோ. இந்தக் காலத்தில் பிள்ளை, பெண் எல்லோரையும் தான் படிக்க வைக்கிறார்கள். இருந்தும் பிள்ளை என்றால் ஸ்பெஷல் தான். இன்றும் பல வீடுகளில் பெண்ணின் கல்வி மறுக்கத்தான் படுகிறது. பிள்ளை, பெண் இருவரும் வீடுகளில் இருந்தால் பெண்ணுக்கு ஓரளவிற்கு மேல் கல்வி கொடுக்க, பெற்றோர் தயங்கத்தான் தயங்குகின்றனர். அதே பிள்ளை சுமாராகப் படித்தாலும் பணத்தைக் கொட்டியாவது மேற்படிப்புக்கு வழிவகை செய்கிறார்கள். அப்பா இந்த

வீட்டிற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது போல் இருப்பார். அவர் வாங்கும் சொற்ப பணமும் அவரின் செலவிற்கே சரியாகிவிடும். இந்த அழகில் பிள்ளை பிறந்திருந்தால் என்ன படிக்க வைத்திருக்க முடியும்?

பெருமூச்சு விடுகிறாள் லலிதா. அம்மா அவள் தோளைத் தொடுகிறாள்.

''வருத்தப்படாதே. என்ன நடக்குதோ அது நடந்து தானே ஆகணும். மாமா கொடுத்துட்டார்னா அந்த காலேஜிலே சேர்த்து விடணும். என்னால ஒரு டிகிரியைத் தான் படிக்க வைக்க முடியும்'' தன்னைவிட மிக மிக அதிக வருடங்கள் சிறியவள் அம்மாவின் கடைசி காலத்தில் பிறந்து சுமையை அதிகமாக ஏற்றியவள். அவளை கரை ஏற்றி விட்டால் திருமணம் செய்து கொடுப்பதும் எளிது. தன் பிள்ளை வேலைக்குப் போகிறவன். விஷயம் தெரிந் தால் 'பாவம்மா' என்று பணத்தைக் கொண்டே போய் கொடுத்து விடுவான்.

''அம்மா மாமா கொடுப்பாரா? இல்லே நான் அபிஷேக் கிட்டே சொல்லட்டுமா?''

''வேண்டாம். வேண்டாம். மாமா தரேன்னு சொன்ன தால்தான் போறேன். அவனை டிஸ்டர்ப் பண்ணாதே. இரண்டாவது பொண்ணு வீட்டுலேந்து எதுவும் வேணாம். ஏதாவது ஆச்சுன்னா உங்க மாமியார் வாயிலே விழுந்து வாங்கணும். ஆமா இன்னும் உன் மாமியாரு அப்படியே தான் இருக்காங்களா. இன்னும் மாறவே இல்லையா?''

''சூரியனும், சந்திரனும் மாறினா ஒரு வேளை மாற லாம்.''



அப்பெண்ணை பாவமாகப் பார்க்கிறாள். தன் இய லாமை பெண்ணை கல்யாணம் என்ற படு குழியில் தள்ளியாகி விட்டது. தன் கணவனைப் போல் மாப்பிள் ளையும் சுயநலவாதிதான். ஆனால் தனக்காவது மாமியார் என்ற ஜீவன் கூட இல்லை. ஆனால் தன் பெண் பாவம். பெருங்குடும்பத்தில் வாக்குப்பட்டு நாளுக்கு நாள் வேதனையைத் தான் அனுபவித்துக் கொண்டு இருக் கிறாள்.

''ஏம்மா ஒரு மாதிரி இருக்கே? மாமா கொடுக் கலைன்னா என்னம்மா பண்ணுவே?''

''அப்....ப பார்க்கலாம்மா. ஆமா நீ எங்கே இந்த வழியா?''

''இல்லைம்மா பஸ்லே ஒரே கூட்டம். அதான் கொஞ்சம் சுத்து வழியா இருந்தாலும் பரவாயில்லைன்னு வந்துட் டேன்.''

அதன் பிறகு வீட்டைப் பற்றியும், பிள்ளைகளைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்க, இறங்கும் இடம் வர அம்மாவிடம் சொல்லிவிட்டு இறங்கிப் போகிறாள் லலிதா. தாவணிப் பெண்ணைப் பற்றி லலிதா நினைத்துக் கொண்டே போக, அவளின் மகன் அபிஷேக் ஆர்த் தியைப் பற்றி நினைத்தவாறே ஓட்டலில் அமர்ந்திருக் கிறான்.

கைக்கடிகாரத்தை திருப்பித் திருப்பிப் பார்க்கிறான். வந்து கால் மணி நேரத்திற்கு மேல் ஆனது. இன்னும் ஆர்த்தி வந்தபாடில்லை. என்னதான் செய்கிறாள் இவள். எரிச்சல் தாளாமல் மறுபடியும் வாட்சைப் பார்த்தவன் செல்லில் அவளைத் தொடர்பு கொள்கிறான். வழக்கம் போல் 'ஸ்விட்ச் ஆப்' என்று ஒலி வர எரிச்சலோடு எழுந்து கொள்கிறான்.

'சொன்ன நேரத்தில் வந்ததாக சரித்திரமே இல்லை. சே!' என்றவாறே கிளம்புகிறான். பைக்கை ஸ்டார்ட் செய்தபோது, ஹாய் என்றவாறே விழுந்தடித்துக் கொண்டு ஓடி வருகிறாள் ஆர்த்தி.

''ஏய் நில்லுப்பா வந்துட்டேன்.'' நீலநிற ஜீன்ஸும் வெளிர் நீல நிற பனியனும் அணிந்தவாறே வருகிறாள்.

''எப்பவுமே டைமுக்கு வரமாட்டியா?''

''சாரிப்பா டிராபிக் ஜாம். ஓடி வந்துகிட்டு இருக்கேன்.''

''ஆமாம் எல்லாத்துக்கும் ஏதாவது சால்ஜாப்பு சொல்லு.''

''என்னப்பா நீ லவ் பண்ணினா கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணித்தான் ஆகணும் குதிக்கறியே.'' கொஞ்சியபடி அவள் பேச,

சற்று கோபம் அடங்கியவாறே உள்ளே வருகிறான் அபிஷேக். இருவரும் மறுபடியும் ஓட்டலில் சென்று அமர்ந்து, ஆளுக்கு ஒரு கூல்டிரிங் வாங்கி குடித்தபடி பேசத் தொடங்குகின்றனர்.

''இன்னிக்கு எத்தனை டென்ஷனா வந்தேன் தெரியுமா?''

''என்ன டென்ஷன்?''

''லேசாக அம்மாவின் காதில் விஷயத்தைப் போட்டு விட்டேன்.''

''அப்படியா?'' பரபரத்தவள், ''என்ன சொன்னாங்க?''

''வேண்டாம்னு சொல்லிட்டாங்க.''

ஒரு நிமிடம் அவளின் முகம் மாறியது. பின் சமாளித்தாள்.



''ஓ.கே. இப்ப என்ன செய்யப் போறதா உத்தேசம்.''

''அதான் புரியலை.'' அடுத்த நிமிடம் முகம் இறுக, எழுந்து நிற்கிறாள் ஆர்த்தி.

''ஓ.கே. நான் கிளம்பறேன்.''

''எங்கே?''

''என் வீட்டுக்கு. அம்மா வேற சீக்கிரம் வரச் சொன்னாங்க. போகணும்.''

''என்னோட பேசணும். சீக்கிரம் வாங்கன்னு சொன்னே.''

''அதான் பேச வேண்டியதெல்லாம் பேசியாச்சே. பை'' என்று கிளம்பியவளின் ஹேண்ட் பேக்கை பிடித்து இழுக்கிறான்.

''அப்பா என்ன கோபம்?'' அவன் சீண்ட,

''போதும் விடுங்க. உங்க அம்மாவுக்கு பிடிச்ச பெண்ணை பார்த்து கல்யாணம் கட்டிக்கங்க'' அவள் கோபத்தோடு திரும்ப,

''ஏய்'' என்று அவன் கையைப் பிடித்து இழுக்க, எதிரில் அவனுடைய தாத்தாவும், பாட்டியும் வந்திருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தான்.

## 14

தாத்தாவும், பாட்டியும் இங்கே எங்கே வந்தார்கள்? சட்டென்று அவனுக்கு ஞாபகம் வந்தது. நாளன்னிக்கு

கல்யாண நாள். பாட்டி தாத்தாவிற்கு மட்டுமல்ல. அவன் அம்மா அப்பாவிற்கு, அவன் அத்தை பாட்டிக்கும் அத்தைக்கு என்று எல்லோருக்குமே அன்று தான் கல்யாண நாள். அது எப்படி எல்லோருக்கும் அந்த தேதியிலே வைத்தார்களோ தெரியாது. ஆனாலும் எல்லோருக்கும் ஆவணியின் இரண்டாவது வாரம் பத்து தேதியில்தான் கல்யாண நாள். அன்று மட்டும் அவர்கள் வீடு திருவிழாக் கோலம் காணும். அத்தைப் பாட்டி புருஷனோடு பேரனோடு வருவார்கள். அத்தை புருஷனோடு வருவார்கள். தாத்தா பாட்டி இன்னும் சின்ன தாத்தா மனைவியோடு வருவார்கள்.

காலையிலே பாட்டி இலை, பூ, பழம் என்று அமர்க்களப்படுத்தி விடுவார்கள். எல்லோரும் புத்தாடை அணிந்து தாத்தா பாட்டியை வணங்கி விட்டு கோவில், சினிமா பார்க், பீச் என்று கிளம்பி விடுவார்கள். இவனுடைய அக்காவிற்கும் அன்றுதான் திருமண நாள். அவள் அம்மா சொல்வதற்காக கோவிலுக்குப் போய் விட்டு, குழந்தையை இங்கே வீட்டில் விட்டு விட்டு கணவனோடு சினிமாவிற்குப் பறந்து விடுவாள். இதில் அம்மாவும், அப்பாவும் தான் விதி விலக்கு. அம்மா எழுந்து வேலைகளை முடித்து விட்டு வேலைக்குக் கிளம்பி விடுவாள். அப்பா வழக்கம் போல் சாப்பிட்டு விட்டு வேலைக்குப் போய் விடுவார். ஒரு முறை கூட இவர்கள் வெளியே போனதாகச் சரித்திரமே இல்லை.

இதையெல்லாம் மனதில் அசை போட பாட்டி, தாத்தாவைப் பார்க்கிறான். பாட்டி, தாத்தா இரண்டு பேருமே அவனை எரிப்பது போல் பார்க்கின்றனர்.

''பார்த்தீங்களா? ஹோட்டல்லே எப்படி எல்லாம் நடந்துக்கறாங்க. இதைத்தான் அவ அம்மா கிட்டே



சொல்லிச் சொல்லி ஓய்ந்து போயிட்டேன். அவ புள்ளையை சத்புத்திரன்னு நினைச்சுகிட்டு இருக்கா. இதெல்லாம் நல்லாவா இருக்கு.''

''அவனை ஏன் குறை சொல்றே? பொம்பளைங்க அலையறாளுக. மேலே விழுந்து பிடுங்கறாளுங்க. இப்படி அவன் போற இடத்துலே அலைஞ்சுகிட்டு வந்தா ஆம்பளைங்க என்ன செய்வாங்க.''

தாத்தாவின் அருள் மொழியைக் கேட்க சட்டென்று தலையைப் பிடித்துக் கொண்டான் அபிஷேக். ஆர்த்திக்கும் தாத்தாவின் பேச்சு பழக்கப்பட்டதால் பெருமூச்சு விடுகிறாள்.

''அபிஷேக் கையை விடு போகணும்.''

''என்னது அபிஷேக்கா? உன்னைவிட மாட்டேன். சாதாரணமாக கூப்பிடு.''

''உன்னை கேலியே பண்ணக் கூடாதா? எல்லாத்தையுமா சீரியஸா எடுத்துப்பே.''

ஆர்த்தியின் முகம் ஒரு நிமிடம் இளகியது. அடுத்த நிமிடம் மீண்டும் இறுகியது.

''இல்லைடா. எதுவுமே சரி வராது. எந்தப் பிரச்சனைக்கும் நீ நம்ப ரிலேஷன் ஷிப்பைதான் உடைக்கறே?''

''இப்ப என்ன உடைச்சிட்டேன்.''

''என்ன உடைச்சேனா? நீ சொல்லலை. அம்மாவுக்கு இஷ்டமில்லேன்னு சொன்னியா இல்லியா?''

''ஏய் லூசு. சும்மா தமாஷுக்கு சொன்னேன். எல்லாத்தையுமா சீரியஸா எடுத்துப்பே?''

“எதுலே உனக்கு தமாஷ் பண்றதுன்னு தெரியாது.”

“ஏற்கனவே நீ முறைச்சுகிட்டு போய், நான் எத்தனை அவஸ்தைப்பட்டேன் தெரியுமா? த்சு... போதுண்டா என்னால முடியலே.” சொல்லும்போதே அவள் கண்கள் நிறைந்தது.

“ஸாரி... ஸாரி டியர் தெரியாம சொன்னதுக்கு மன்னிக்கக் கூடாதா?”

அவள் பெருமூச்சு விட்டு யோசிப்பதற்குள் தாத்தா பேசுகிறார்.

“என்னடா நடக்குது இங்கே?”

“என்னவா... டிராமா? இப்பவே இந்த பொண்ணு இப்படின்னா பின்னாடி எப்படி இருக்கும்?” தாத்தா சற்று குரலை உயர்த்தி சொல்ல,

“டேய் அபிஷேக் போதும். ரொம்ப வழியாதே. அந்த பொண்ணை அனுப்பிட்டு எங்க கூடவா. போம்மா வீடு போய் சேர்.”

“அது எங்கே போகும்? வீட்டுலே அவுத்து விட்டிருக்காங்க.”

தாத்தா மறுபடியும் ஆரம்பிக்க,

“போதும் அபி. ஓ.கே. நான் கிளம்பறேன்.” ஆர்த்தி கையை விடுவித்தவாறே தடதடவென்று கீழே இறங்கிப் போக, அபிஷேக்கும் அவள் பின்னே சென்று சட்டென்று மறைந்து போனான்.

“டேய்... அபிஷேக்... அபிஷேக்...” தாத்தாவும், பாட்டியும் கத்தி கத்திக் கூப்பிட இலட்சியம் செய்யாமல் கிளம்பிச் சென்றான்.



“பேரனுக்கு மரியாதை இருக்கா பாருங்க. அநியாயம் பண்றான்.”

“சரி விடு. பொண்ணுங்க இப்படி மேலே வந்து விழுந்தா புருஷப் பையனுங்க என்னதான் பண்ணுவாங்க?” என்கிறார் தாத்தா.

நாளை மறுநாள் திருமண நாள் என்று புதுத் துணி எடுத்து விட்டு ஓட்டலில் சாப்பிட வரும்போதுதான் அபிஷேக்கைப் பார்த்தனர். அபிஷேக் அந்தப் பெண்ணை கையைப் பிடித்து இழுத்து அணைக்காத குறையாகக் கொஞ்சிக் கொண்டிருந்தான். பார்க்க, பார்க்க இருவருக்குமே எரிந்தது. மருமகள் திருமணத்திற்கு சரி என்று சொல்லிவிட்டதால் பேரன் சொன்னதிலிருந்து மருமகள் மேல் பயங்கர கோபம் இருந்தது.

“எல்லாம் அவ கொடுக்கற இடம்ங்க” பாட்டி கூற,

“சரி... சரி... கத்தாதே. வீட்டுலேயே வச்சுக்கலாம்.”

“ஆமா என்னத்தை வச்சுக்கறது. சாயங்காலம் தான் வரா. அதுக்கு மேலே ஏதாவது கேக்க ஆரம்பிச்சா உங்கம்மா வந்து நம்பளை திட்டிட்டு உள்ளே கூப்பிட்டுகிட்டுப் போறாங்க.”

“சரி பார்ப்போம்.”

அவர்கள் நகர்ந்து சென்றாலும் அபிஷேக் எங்காவது தென்படுகிறானா? என்று பார்வை தேடியது.

“விடு அபி. ஒண்ணும் வேண்டாம். நான் கிளம்பறேன். ”கீழே அவனுடன் ஆர்த்தி இன்னும் விவாதம் செய்து கொண்டிருந்தாள்.

“ஏய் என்னடா ஒவ்வொண்ணுக்கும் கோவிச்சுக்கறே?” என்றவாறே அவளை செல்லமாகத் தட்டுகிறான் அபிஷேக்.

"போ... அபி எதுவும் பிடிக்கலே" என்றவள் நழுவப் பார்த்தபோது,

"ப்ளீஸ்டா. எல்லாத்தையும் சீரியஸா எடுக்காதே. வாழ்க்கையை ஈஸியா எடுத்துக்கப் பழகிக்க" என்றவாறே, கெஞ்சி கொஞ்சி மறுபடியும் சாப்பிடற ஓட்டலுக்குப் போனார்கள். வெகு நேரம் பேசினார்கள். சிரித்தார்கள். ஆனந்தப் பட்டார்கள்.

"ஐயோ. போடா. என்னை போர்ஸ் பண்ணி ஸ்டே பண்ண வச்சு... என்னை லேட் பண்ண வச்சு... சே!"

"என்னம்மா உளர்றே? அப்படி எங்கே போகணும் நீ. ஆபீஸ் அவர்ஸ்தான் முடிஞ்சிடுச்சே."

"கல்சுரல் புரோக்கிராம் ஒண்ணு. பிராக்டீஸ் வேற இருக்கு." முடிச்சிட்டுப் போகும் போதே லேட்டாயிடுது."

"எங்கே?"

"என் டான்ஸ் கிளாஸ்லே தான்."

"சரி கிளம்பு. நானே உன்னை டிராப் பண்றேன்."

அவசரம் அவசரமாக கிளம்பிப் போகிறார்கள். அவளை விட்டு விட்டு வீட்டிற்கு வந்தபோது வழக்கம் போல் தாத்தாவும், பாட்டியும் வாயிலிலேயே அமர்ந்திருந்தார்கள். பைக்கை நிறுத்தி விட்டு, சாவியை கைவிரலில் சுழற்றியவாறே உள்ளே செல்கிறான்.

"டேய் நில்லுடா..." தாத்தா அதட்ட,

"டேய் தாத்தா கூப்பிடறார் காதிலே விழலே."

பாட்டி கத்த, யாரையும் லட்சியம் செய்யாமல் உள்ளே நுழைகிறான் அபிஷேக்.



"டேய் நில்லுடா." தடியை நடுவில் நிறுத்தி மடக்க,

"ஏன் தாத்தா என்னை என்ன அம்மான்னு நினைச்சிட்டீங்களா?" அலட்சியமாகக் கேட்டவாறே தடியை தாண்டி உள்ளே செல்கிறான்.

"பாட்டி" குரல் கொடுத்தவாறே கொள்ளுப் பாட்டியைத் தேடி ஓடுகிறான்.

"வாடா கொள்ளுப் பேரா? காபி கீபி ஒண்ணும் வேண்டாமா? சாப்பாடு பலமா?" கண்ணைச் சிமிட்டியபடி கேட்க, தன் பாட்டி தன்னைப் பற்றி போட்டுக் கொடுத்து விட்டாள் என்று தெரிந்தது.

"ஆர்த்தியும் நானும் போயிருந்தோம் பாட்டி" லேசாகச் சிரித்தவாறு அவன் உள்ளே செல்ல யத்தனிக்க,

"டேய் ஒரு நிமிஷம் நில்லு. எத்தனை நாள் இதையே பேசிட்டு இருப்பீங்க. நாளன்னிக்கு நம்ம வீட்டு விசேஷ நாள் தெரியுமில்லே. அம்மாவைப் பேசச் சொல்லு உன் வருங்கால மனைவி வீட்டுக்கு அழைச்சுகிட்டு போ. பேசி முடிக்கச் சொல்லு. எத்தனை நாள் அலைஞ்சுகிட்டே இருக்கறது?" பாட்டி சிரித்தபடி கேட்க,

"ஐயோ பாட்டி" என்கிறான். "என்ன நீங்களும் உங்க பிள்ளை மாதிரி பேச ஆரம்பிச்சிட்டீங்க?"

பாட்டி சிரிக்கிறாள். "எத்தனை நாள் நீ அந்தப் பெண்ணுக்காக அலையணும் வீட்டுக்குக் கூப்பிட்டுகிட்டு வந்துட்டா அப்புறம் நிம்மதியா இருப்பே இல்லையா? நாளன்னிக்கு அம்மா அப்பாவை அழைச்சுகிட்டு போ. நல்ல செய்தி சொல்லு" வண்டார் குழலி பாட்டி பேச, பேச அவனுக்கும் ஆர்வமாகத்தான் இருந்தது. ஒரு நிமிடம் முகம் மலர்ந்தாலும், அடுத்த நிமிடம் முகம் வாடியது.

''பாட்டி நீங்க சொல்ற மாதிரி என் மேரேஜ் சட்டுன்னு பிக்ஸ் ஆகுமா?''

''என்னடா இப்படி நம்பிக்கை இல்லாம பேசறே?''

''இல்லை பாட்டி, பாட்டி தாத்தாவுக்குப் பிடிக்கலை, இந்த கல்யாணத்தை நடத்த விடுவாங்களா?''

''உனக்குப் பிடிச்சிருக்கு இல்லே. அப்ப புரொஸீட் பண்ண வேண்டியதுதான். மத்தவங்களைப் பத்தி என்ன?''

வண்டார்குழலி பாட்டி பேச, ஆச்சரியமாக பாட்டியையே பார்க்கிறான்.

''எப்படி பாட்டி. எப்படி இத்தனை ஸ்டிராங்காகப் பேச முடியுது.''

''எந்தக் காரியத்தையும் செய்யும்போது காரியத்திலே நூறு சதவிகிதம் வெற்றி கிடைக்கும்னு நம்பினாதான் ஒரு அறுபது சதவிகிதமாவது வெற்றி கிடைக்கும். காரியத்தை ஆரம்பிக்கும்போதே தோத்துடுவோம்னு ஜெயிக்க மாட்டேன்னு பீல் பண்ணினா எப்படி ஜெயிக்க முடியும்?''

பாட்டி பேசப் பேச ஆச்சரியத்தோடு மலர்ந்து போய் பாட்டியையே பார்க்கிறான் அபிஷேக்.

''அபிஷேக்... டேய் அபிஷேக்...'' கத்திக் கூப்பிட்ட வாறே உள்ளே வருகிறாள் லலிதா.

''என்னம்மா?''

''முதல்ல வண்டியை எடு. பக்கத்துல இருக்கற பி... பஜாருக்கு போகணும்.''

''என்னம்மா விசேஷம்?''

''அங்கே என் வருங்கால மருமகளை உனக்குக் காண்பிக்கணும்.'' என்கிறாள் லலிதா.



# 15

பாட்டியை பரிதாபமாகப் பார்க்கிறான் அபிஷேக். அவன் பதில் பேச முற்படவில்லை.

''என்னம்மா லலிதா? என்ன பேசறே நீ? யாரை காண்பிக்கப் போறே? ஆர்த்தியையா?''

''ஆர்த்தி இல்லே பாட்டி. இவ வேற, இவ கல்யாணி என்ன பொண்ணு தெரியுமா? ஒரு தடவை இவன் வந்து பார்க்கட்டும். அப்புறம் வேற எந்தப் பெண்ணையும் கட்டமாட்டான்.''

''என்னம்மா லலிதா இப்படிப் பேசறே? நீ கூட இப்படி இருப்பேன்னு நம்ப முடியலையே.''

''ஏன் பாட்டி நான் எனக்குப் பிடிச்ச பெண்ணைப் பார்த்தா அது தப்பா?''

''இல்லேம்மா உனக்குப் பிடிக்கறதோட அவனுக்கும் பிடிக்கணும். அதை மறந்துடாதே. வாழப் போறவங்க சம்மதம் முக்கியமில்லையா?''

''அதுக்காகத்தான் பாட்டி அவனைக் கூப்பிட்டுகிட்டு போகணும்னு நினைக்கறேன். அந்தப் பொண்ணைப் பார்த்தாலே அவனுக்குப் பிடிச்சிடும் பாட்டி.''

''இதென்னமா அடம்? நமக்குப் பிடிக்குது, பிடிக்காதுங்கறது தேவையே இல்லை. வாழப் போறவன் அவன் அதுனால கண்டிப்பா அவனுக்கு மட்டும் பிடிச்சா போதும்.''

‘‘அவனுக்கு என்ன தெரியும் பாட்டி? நல்லது கெட்டது புரிஞ்சுக்கற வயசோ அனுபவமோ அவனுக்குக் கிடையாது.’’

‘‘ஏம்மா படிச்சிருக்கான். ஒரு இடத்திலே வேலை பார்க்கறான். அவனுக்கு அனுபவம் போதாதா? லலிதா உன் கிட்டே நான் இதை எதிர்பார்க்கலை. தப்பு பண்ணாதே. தன் துணையைத்தானே தேடிக்கற ப்ரீடம் அந்தக் காலத்திலே இருந்தது. அப்புறம் தான் எல்லாம் மாறிப் போச்சு. கூட வாழப் போறவன் அவன். அவன் துணையை அவனே தேடிக்கட்டும்.’’

‘‘பாட்டி என்னைத் தப்பா புரிஞ்சுக்காதீங்க. எனக்கு இந்தப் பொண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு. அவனுக்கு வேண்டாம்னா விட்டுடட்டும்.’’

‘‘நீ சொல்றதே தப்பும்மா. அவனுக்கு ஏற்கனவே ஒரு பெண்ணைப் பிடிச்சாச்சே.’’

‘‘இல்லை பாட்டி. அது செட் ஆகாது. நான் பார்த்த வரைக்கும் அந்தப் பெண் இவனுக்குப் பொருத்தமாக இருக்காது. இப்பக் கல்யாணம் பண்ணிகிட்டு அப்புறம் பிரிஞ்சு போறதுலே என்ன லாபம் சொல்லுங்க? ஒரு தடவை நான் சொல்லிப் பொண்ணை பார்த்து பேசறதுலே என்ன தப்பு பாட்டி?’’

‘‘என்னம்மா பேசறே நீ. அவனுக்கு ஏற்கனவே ஒருத்தரை பிடிச்சாச்சு. நடுவிலே நீ காண்பிக்கற பொண்ணு மட்டும் செட்டாகும்னு என்ன நிச்சயம். நீ ஆர்த்தியைப் பார்த்திருக்கியா? ரொம்ப நல்ல பொண்ணும்மா. அழகு மட்டுமல்ல வீட்டுக்கு ரொம்ப பாந்தமான பொண்ணு.’’

‘‘என்ன பாட்டி சொல்றீங்க?’’



‘‘நான் சொல்றது எல்லாம் நிஜம்மா. வீட்டுக்கு வந்தாலும் சோம்பேறியா உட்காராது. பாட்டி என்ன செய்யறீங்க? என்ன செய்யறீங்கன்னு கேட்டுக் கேட்டு எல்லா வேலையும் பிடுங்கிச் செய்யும். அன்னிக்கு ஒரு நாள் வந்தபோது காபி கொட்டிடுச்சு. உடனே துணி எடுத்துத் துடைச்சு வேண்டாம் வேண்டாம்னு சொல்லியும் கேக்கலை.’’

‘‘என்ன பாட்டி துடைக்கறது பெரிய வேலையா?’’

‘‘ஆமாம்மா இந்தக் காலத்துலே படிச்சு வேலைக்குப் போற எந்தப் பொண்ணு வேலை செய்யுது. தன் சொந்த வீட்டிலே வேலை செய்யாது. கட்டிக்கப் போறவன் வீட்டிலேயா வந்து வேலை செய்யும். அது வேலை செஞ்சது ரொம்ப ஆச்சரியமா இருக்கும்மா.’’

லலிதா மௌனமானாள். பாட்டி சொல்வது நிஜம். இந்தக் காலத்துப் பொண்ணுங்களைப் பற்றி அவளுக்கே தெரியும். இருந்தாலும் தான் பார்த்த கல்யாணியை பையனுக்குக் கட்ட வேண்டும் என்ற வெறி.

‘‘இல்லை பாட்டி நான் போயிட்டு வந்துடறேன்’’ லலிதா அதற்கு மேல் பேச்சை வளர்க்கவில்லை. அபிஷேக்கிற்கு அம்மாவின் பிடிவாதம் குழந்தைத் தனமாகத் தோன்ற, தன்னை மீறி என்ன நடந்து விடும். மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு அம்மாவுடன் கிளம்புகிறான்.

பிக் பஸாருக்குள் நுழைந்ததும் ‘‘சீக்கிரம் வாடா’’ என்றவாறே வேகமாக முன்னே நடக்கிறாள் லலிதா. அபிஷேக் லேசான சலிப்புடன் உள்ளே நுழைகிறான். லலிதா துணிக்கடை, பிளாஸ்டிக் கடை, பாத்திரக் கடை என்று ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கிக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா இது முட்டாள் தனம்? இப்படிக் கடை கடையா ஏறி இறங்குவதற்குப் பதிலா அந்தப் பெண்ணைப் பார்த்தியே அப்போதே வீட்டுக்குக் கூப்பிட்டுகிட்டு வந்திருக்கலாம் இல்லே."

"அதாண்டா நான் பண்ண மடத்தனம். எப்படியும் வாங்க டைம் ஆகும். அதுக்குள்ளே காமிச்சரலாம்னு நினைச்சேன்."

"அம்மா எப்பவும் பிராக்டிகலா இருப்பீங்க. என்னாச் சும்மா?"

அம்மா பதில் பேசவில்லை. லலிதாவின் முகத்தில் …



யாவது, கீர்த்தியாவது மனதிற்குள் சிரித்துக் கொள்கிறாள். அடுத்த முறை பெண்ணைப் பார்த்தால் பையனுக்கு போன் செய்து விட்டு வீட்டிற்கு அழைத்து வந்து விட வேண்டும்.

சந்தோஷத்தில் உறங்கியும் விடுகிறாள். இங்கே அபிஷேக்கின் நிலைதான் வேறாக இருந்தது. அம்மா ஒத்துக் கொள்ளவில்லை என்று ஆர்த்தியிடம் சும்மா சொல்லப் போக அதுவே நிஜம் ஆகி விட்டதே. ஆர்த்தியை அம்மா பார்க்கக்கூட இல்லை. அதற்குள் அந்தப் பெண் வேண்டாம் என்று ஏன் நினைக்கிறாள். எது எப்படி …

பேசினார்கள் நிறுத்தாமல் பேசிக் கொண்டே இருந்தார்கள். அவன் சீண்டுவதும், அவள் சிணுங்குவதும் நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

சரியாக மூணு மணிக்கு லேசாக கொட்டாவி வர "ஓகேடா போனை வை, எங்க வீட்டுலே அம்மா எட்டிப் பார்த்துட்டுப் போறாங்க. இனிமே பேசினா சந்தேகம் வந்திடும் வச்சிடு."

"நீ தானே முதல்லே வைக்கணும்னு சொல்றே? நீ முதல்லே வை."

"நான் ஏன் வைக்கணும்? நீதானே எனக்கு போன் செய்தே? நீ முதல்லே வை" இப்படிச் செல்லமாக சண்டை போட பின்னும் ஒரு மணி நேரம் ஓடிற்று.

கடைசியில் தூக்கம் கண்ணை சுழற்ற ஒரு வழியாக நாலரை மணிக்கு போனை கட் பண்ணிவிட்டுப் படுத்தவன், ஒரு தலையணையை கட்டிக் கொண்டு உறங்கியே போனான். அங்கே ஆர்த்தியும் ஒரு சின்ன சிரிப்போடு தலையணையை கட்டிக் கொண்டு உறங்கியே போனாள்.

காலையில் லலிதா வழக்கம் போல் எழுந்து வேலைகளைச் செய்து விட்டு பிள்ளைக்கு காபி கொடுக்க உள்ளே நுழைந்தபோது இன்னும் அவன் உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

"என்னடா கண்ணு அபிஷேக் என்ன இன்னும் தூங்கறே?" உலுக்கி எழுப்பியும் அவன் எழுந்து கொள்ளவில்லை."

"என்னடா கண்ணா உடம்பு சரியில்லையா?" தலையை நெற்றியை, கன்னத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்க்கிறாள். மறுபடியும் எல்லா வேலைகளையும் முடித்து





விட்டு பிள்ளையை எழுப்பும்போதும் பிள்ளை எழுந்து கொள்ள மறுத்தான்.

"டேய் அபிஷேக் என்னடா ஆச்சு?" லலிதா உலுக்கி எழுப்பிய பின் எழுந்து கொள்கிறான். பாதிக் கண்களைத் திறந்தபடி சோம்பல் முறிக்கிறான்.

"போம்மா" என்று அவன் ஒருக்களித்துப் படுக்க,

"டேய் நீ கிளம்பற டைம் வந்திடுச்சுடா" லலிதா உலுக்க,

"போம்மா எனக்கு ஒரே தலைவலி. நான் இன்னிக்கு ஆபீஸுக்கு ஆப் அ டே போகமாட்டேன்" சிறு குழந்தை பள்ளிக்கு விடுமுறை சொல்வது போல் திரும்பி படுக்கிறான்.

"ஏண்டா தலைவலி மாத்திரை ஏதேனும் தரட்டுமா?"

"வேண்டாம்மா. என்னைக் கொஞ்ச நேரம் டிஸ்டர்ப் பண்ணாதே. நான் தூங்கணும்" மறுபடியும் முகத்தை மூடிக் கொண்டு போர்த்தியவாறே படுத்து இருக்கிறான்.

லலிதா ஒரு நிமிடம் மகனைக் கவலையோடு பார்த்து விட்டு வெளியேறுகிறாள்.

"பாட்டி பையனுக்கு உடம்பு சரியில்லை போலருக்கு கொஞ்சம் பார்த்துக்கங்க."

சொல்லிவிட்டுக் கிளம்பிச் செல்கிறாள். அலுவலகத்தில் வேலை அப்படியே அழுத்த எல்லாவற்றையும் மறந்து போகிறாள்.

அன்று மோகினி முல்லைச் சரத்தை தலையில் இருந்து தொங்க விட்டவாறே தலையில் வெள்ளி சங்கிலி போன்று ஒன்றை கோர்த்தவாறே, பளபளவென்ற புடவையில் அட்டகாசமாக வருகிறாள்.

''மேடம் வாவ். இந்த சேரியிலே பியூட்டிபுல்'' ஒருத்தி கூற,

''அக்கா கண் பட்டுடும்ங்க.'' இன்னும் ஒருத்தி கூற, எல்லோரும் அவளையே பார்க்க லலிதாவிற்கு எரிச்சலாகவே வந்தது.

''ஏய் மோகினி வந்ததே லேட். பேச ஆரம்பிச்சுட்டியா?''

அவள் சொல்லி முடிக்கவில்லை. அவள் கணவன் என்பவன் அவசரம் அவசரமாக சற்று வெளிர் நிறத்தில் ரோஜாவைத் தந்து விட்டு நகர, முகமெல்லாம் புன்னகையோடு நிற்கிறாள்.

''என்னம்மா?''

''நாளைக்கு கல்யாண நாள் இல்லே மேடம் அதான் அட்வான்ஸா இது?'' சொல்கையில் முகம் குங்குமமாக சிவந்து போக, ஒருவித பொறாமையுடன் அவளையே பார்க்கிறாள் லலிதா.

## 16

தனக்கும் தான் நாளை திருமண நாள். என்றைக்காவது தன் கணவன். 'மெனி ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆப் த டே'ன்னு சொல்லியிருக்கிறானா? இல்லை அந்த நாளின்போது ஓசைப்படாமல் பூவை வாங்கிக் கையில் அழுத்தி இருக்கிறானா? இல்லை மேசையின் மேல் அவளுக்குப் பிடித்த கலரில் புடவையோ, மேக்ஸியோ வாங்கி வைத்திருக்கிறானா. இது எதுவும் கூட வேண்டாம் ஒரே



ஒரு சாக்லெட்டை அவள் கைகளில் திணித்திருந்தால்கூட சந்தோஷப்பட்டிருப்பாள். ஏன் அதுகூட வேண்டாம் திருமண நாள் அன்று ஆசையாக அவள் கைகளை சிறிது நேரம் பிடித்திருந்து விட்டுச் சென்றால் கூட போதும். அவள் ஆனந்தப்பட்டிருப்பாள். ஆனால் தனக்கு நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன? எப்போதும் டி.வி.யில் ஸ்போர்ட்ஸ் சானல் பார்த்தபடி அமர்ந்து பின் இரவில் பால் சாப்பிட்டு விட்டு புத்தகத்தை படித்தவாறே உறங்கிப் போவான். ஊராருடன் வம்பளக்கும் அவனிடம் என்ன பேச முடியும். இதே தன் உறவினர் வந்து விட்டால் மணிக் கணக்காகப் பேசுவான். என்ன பேசுவானோ? மனம் மறுபடியும் விழ, யோசிக்கிறாள். தான் ஏன் இல்லாததைப் பற்றியே பேச வேண்டும். இல்லாததை ஏன் இருப்பதாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. இன்று வீட்டிற்குப் போக வேண்டும். இன்று உலகப் போரே ஏற்பட்டாலும் சரி அவனை லீவு போடச் சொல்ல வேண்டும். தன்னை வெளியே அழைத்துச் செல்லச் சொல்லி எல்லாவற்றையும் மறந்து விட்டு அவனோடு இன்பமாக இருந்து விட்டு வர வேண்டும்.

முடிவு செய்தபின் மனம் சற்று தெளிவடைந்தது. வேலையில் மூழ்கி இருந்தாலும் அவனுடன் எப்படி பேசுவது என்பதை ஒத்திகை பார்த்தபடி இருந்தது.

அன்று எல்லோரும் கிளம்பியபின் அவளும் கிளம்பி விடுகிறாள். கண்கள் அந்தப் பெண்ணை தேடியது. இன்று வழியில் எங்காவது தென்பட்டால் கட்டாயம் அழைத்துப் போய் பையனிடம் காண்பித்து அவன் சம்மதத்தை வாங்கி விட்டால் போதும். எப்போதும் நல்ல நேர்மறை எண்ணங்கள் உள்ளத்தை உற்சாகப்படுத்தும்.

கணவனுடன் தான் வெளியே போகப் போகிறோம் என்ற எண்ணமும், பிள்ளை, தான் பார்த்த பெண்ணை திருமணம் புரியப் போகிறான் என்ற எண்ணமும் மனதை சந்தோஷப்படுத்த மகிழ்ச்சியோடு போகிறாள்.

ஒரு செயலை செயல்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் தொற்றிக் கொள்ள வழக்கம்போல் வழி மறித்த மாமியார், மாமனாரை இலட்சியம் செய்யாமல் உள்ளே நுழைகிறாள். மளமளவென்று முகத்தைக் கழுவிக் கொண்டு மறுநாள் வீட்டில் நடக்கப் போகும் கல்யாண நாளுக்காக பாட்டி யுடன் கூடமாட வேலை செய்கிறாள். பாட்டி இனிப்பு செய்து வைத்து, நிறையப் பூ வாங்கி, வெத்தலை பாக்கு மஞ்சள் பழம் என்று வாங்கி வைத்து ஒரு வாரம் முன்பே தன் வயிற்றில் பிறந்த பிள்ளைகள், பேரன்கள், கொள்ளுப் பேத்தி என்று திருமணம் ஆனவர்களுக்கு எல்லாம் தன்னால் இயன்ற பணத்தை கொடுத்து உடைகள் வாங்கிக் கொள்ளும்படி செய்து, வீட்டை அலங்கரித்து நாளை வருபவர்களுக்கு எல்லாம் புதுத்துணி உடுத்திக் கொள்ளச் செய்து விருந்து போட்டு தலையில் பூ வைத்து அமர்க்களப்படுத்தி விடுவாள். இதில் தானும் தன் கணவனும் தான் விதிவிலக்கு.

"கொஞ்சம் பூ வாங்கி வச்சுகிட்டு போம்மா'' என்பாள் பாட்டி.

''இன்று தானும் வெளியே போகப் போகிறேன்'' என்றால் என்ன நினைத்துக் கொள்வார். கட்டாயம் சந்தோஷப்படுவார்.

முதலில் கணவனிடம் விஷயத்தைச் சொல்லி விட்டுப் பின் பாட்டியைச் சந்தோஷப்படுத்தலாம்.

அன்று சீக்கிரம் வேலைகளை முடித்துக் கொண்டு அறைக்குப் போன போது கணவன் இன்னும் டி.வி.யில்



மூழ்கி இருந்தான். அவன் வரும் வரை பொறுமையாக காத்திருந்தாள்.

என்றுமே புத்தகத்தைப் பிடித்து அதிலேயே மூழ்கி இருப்பவன், இன்று புத்தகத்தை பிரித்து வைத்துக் கொண்டு அவளை இரண்டு, மூன்று முறை திரும்பிப் பார்க்கிறான்.

''உங்களைத்தான் கூப்பிடறேன்'' அவள் சொன்ன பிறகு,

''சொல்லு... அதான் என்ன சொல்றேன்னு பார்த்துக் கிட்டு இருந்தேன்.''

லலிதாவிற்கு தூக்கி வாரிப் போட்டது. தன்னையா பார்த்துக் கொண்டிருந்தான். ஏதோ மலங்க, மலங்க விழித்துக் கொண்டிருந்தான் என்று நினைத்தேனே. உதடுகளில் ஒரு ஆழ்ந்த புன்னகை எழுந்தது.

''சொல்லு எதுக்குக் கூப்பிட்டே?'' வார்த்தைகளில் லேசான கடினம் தெரிய, சாதாரணமாக இருந்தால் அவன் முறைத்தால் இவள் சீறியே விடுவாள். சண்டை, சண்டை என்று போட்டு ஒரு வழி பண்ணி விடுவாள். இப்போது அப்படித் தோன்றவில்லை. அவன் தான் பேசுவதைக் கேட்க காத்திருக்கிறான் என்ற உணர்வே சந்தோஷப்பட வைத்தது. அவன் கோபத்தை லட்சியம் செய்யாமல்,

''நாளைக்கு என்னன்னு ஞாபகம் இருக்கா?'' ''என்ன'' என்று கேட்டவன் ''புதன்கிழமை'' என்கிறான்.

''ம்... என்ன தேதி?''

''ஆகஸ்ட் பத்தொம்பது.''

''தேதி எல்லாம் சரிதான். என்ன நாள்னு தெரியாதா?''

''எல்லாம் தெரியும். உங்கிட்டே மாட்டிக் கிட்ட நான்'' அவன் சொல்லச் சட்டென்று சிரித்து விடுகிறாள் லலிதா. 'பரவாயில்லை. கணவனுக்கு ஞாபகம் இருக்கிறது.'

''இத்தனை வருஷம் எங்கேயுமே போனதில்லை. ஒரு தடவை போனோம் ஞாபகம் இருக்கா? அப்புறம் இந்தக் கர்மமே வேண்டாம்னு விட்டாச்சு.''

''இப்ப மட்டும் என்ன?''

''சின்னச் சின்ன கஷ்டத்தை பார்த்து பயந்து பெரிய சந்தோஷத்தை விட்டாச்சு.''

''வெளியே போனாத்தான் சந்தோஷமா?''

''உங்ககூட இருந்தா நூறு மடங்கு சந்தோஷம்'' அவன் கண்களில் ஒரு வெளிச்சம் தோன்றி மறைய ஒன்று உரைத்தது லலிதாவிற்கு. 'அவன் தன்னைக் கவனிக்கவில்லை. பாராட்டவில்லை' என்றெல்லாம் குறை சொன்னோமே. தான் என்ன அவனைப் பெரியதாகப் பாராட்டி விட்டோம். தான் சொன்ன சின்ன வார்த்தைக்கே முகம் எப்படிப் பளிச்சிட்டது. இத்தனை வருடங்களில் தன் தவறும் புரிந்தது. அடுத்த நாள் தான் வேலைக்குப் போய் விட்டு பதினொன்று மணிக்கு வந்து விடுவதாகவும், அவனும் அலுவலகத்தில் பர்மிஷன் போட்டு வந்து விட வேண்டும் என்று சொல்லிவிட்டு படுக்கச் செல்கிறாள்.

தான் ஏன் இப்படி மாறிப் போனோம். அன்பான ஒரு வார்த்தை, ஆதரவான ஒரு பேச்சு அவனையும் சந்தோஷப்படுத்தி இருக்குமே. தனக்கு உண்மையிலே வாழத் தெரியவில்லை தான். தன்னைச் சற்று மாற்றிய மோகினிக்கு நெஞ்சம் நன்றி சொன்னது.

தன் முதல் திருமண நாளின் பயணத்தைப் பற்றியும் ஞாபகம் வந்தது. திருமணம் ஆகி முதல் திருமண



நாளைக் கொண்டாடுவதற்குள் பெண் பிறந்து விட்டாள். அப்புறம் சிறு குழந்தையை எடுத்துக் கொண்டு எங்கும் செல்ல முடியாத நிலை. பின் வேலைக்குச் சென்றான் முழு மிஷினாகிப் போன ஒரு வாழ்க்கை. ஒரு பத்து வருடத்திற்கு முன்பு இருக்குமோ என்னவோ எல்லோரும் போகிறார்களே என்று தானும் கணவனை துளைத்து எடுத்து அன்று இருவரும் லீவு போட்டு விட்டு, பிள்ளைகள் கல்லூரிக்குச் சென்ற பின் கிளம்பினார்கள்.

சற்று தூரத்தில் இருக்கும் மலைக் கோவிலுக்குப் போய் விட்டு வரலாம் என்று கிளம்பியபோது பாதி வழியில் ஸ்கூட்டர் பஞ்சராக, பஞ்சர் ஒட்டும் கடையில் ஸ்கூட்டரை கொடுத்துவிட்டு, ஆட்டோவில் அந்தக் கோவிலுக்குச் செல்லலாம் என்று பார்த்தால் ஆட்டோ ஸ்டிரைக். சரி வந்தது வந்தோம், பஸ்ஸிலாவது போய்விடலாம் என்று ஒரு மணி நேரம் நின்றதில் பஸ்ஸும் வரவில்லை.

ஒவ்வொரு பிரச்னையும் வர, வர கணவனுக்கு பி.பி. ஏறியது.

''சனியனே ரொம்ப முக்கியம். பக்கத்துலே இருக்கற கோவிலுக்குப் போகக் கூடாதா? இத்தனை தூரம் வந்துட்டு நட்ட நடுவிலே நின்னுகிட்டு இருக்கோம் தேவையா இது?'' சொல்லி வைத்தாற் போல் அங்கு ஓட்டலோ கடையோ எதுவுமே இல்லாத ஒரு அத்துவான இடம். போதாத குறைக்கு மழை வேறு பெய்ய ஆரம்பிக்க, ஒதுங்கக் கூட இடமில்லாமல் பஞ்சர் ஒட்டுபவன் கடையில் ஸ்கூட்டரை கேட்க, ''பஞ்சர் ஒட்டுபவன் வர வில்லை நேரமாகும்'' என்று அவர்கள் சொல்ல, அவள் கணவனின் கோபம் உச்ச கட்டத்திற்குப் போனது.

"உன்னைக் கல்யாணம் பண்ணிகிட்டதுனாலே தானே வெட்டிங்கும், ஆனிவர்சரியும் கொண்டாட வேண்டியிருக்கு."

அவன் சள்ளென்று எரிந்துவிழ, அவளும் பதிலுக்குக் கத்திவிட்டு அழ, ஒரு வழியாக ஸ்கூட்டரை மூன்று கிலோ மீட்டர் தள்ளியபடியே வீடு வந்து சேர்ந்தனர்.

பசி, மன உளைச்சல், தூக்கம் எல்லாம் சேர்ந்து கொண்டு, பாட்டி போட்ட மிச்சச் சாப்பாட்டை சாப்பிட்டு விட்டுப் படுத்தனர். அது தான் லலிதா முதலும் கடைசியுமாக வெளியே போன திருமண நாள். அதன் பிறகு இத்தனை வருடங்களில் அதைப் பற்றி நினைத்தது மில்லை. யோசித்ததும் இல்லை. கொஞ்ச நாட்களாக மோகினி செய்யும் ஆர்ப்பாட்டங்களும் அமர்க்களமும் அவள் மனதையும் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி விட்டது. இன்று மறுபடியும் பிடிவாதம் பிடித்து கணவனிடம் சொல்லி விட்டாள். 'இந்த முறை என்னாகுமோ?'

'ஏன் நான் இப்படி யோசிக்க வேண்டும். எல்லாம் நல்ல விதமாக ஆகும். என் புருஷனுக்கு ஒன்றும் தெரியாது. அவனுக்குச் சொல்லித் தர வேண்டியது தான்.' அடுத்த நாள் என்னென்ன செய்ய வேண்டும் என்ற யோசனையிலேயே உறங்கிப் போனாள். ஆனால் நாம் நினைப்பது எல்லாம் நடந்து விடுகிறதா என்ன? அதிகாலையில் நல்ல புடவையை உடுத்தி ஒப்பனைகள் செய்து கொண்டு, பாட்டி, மாமியாரை வணங்கி 'சீக்கிரம் வந்திடுங்க' என்று கணவனின் காதுகளில் ஓதி விட்டுச் சென்றவள், அன்று இரவு வரை வீடு திரும்பவில்லை.



# 17

அன்று காலையே சற்று நன்றாக அலங்காரம் செய்து கொண்டு கிளம்பியவள் பதினோரு மணிக்குள் வந்து விட வேண்டும் என்றுதான் போகிறாள். இதற்குள் காலையிலேயே கல்யாண நாள் காணும் அத்தைப் பாட்டி, அத்தை, சின்ன தாத்தா, சித்தப்பா, பெரியப்பா என்று கூட்டம் வர எல்லாரிடமும் பேசிவிட்டு அவர்களுக்கு ஸ்வீட் காரம் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு எல்லோரையும் வணங்கி எழுந்து விட்டுக் கிளம்பவே சற்று நேரமாகி விட்டது. கணவன் சற்று காலையிலேயே கிளம்பிவிட்டான்.

ஆனால் அங்கே போனதும் பாதி வேலைகள் முடிந்ததும் திடீரென்று தலைமை இடத்திலிருந்து முதலாளி வரப் போகிறார் என்றதும் பரபரப்பு பற்றிக் கொண்டது. வருவார் வருவார் என்று காத்திருந்தவர் மாலை மூன்று மணிக்குத் தான் வந்தார். இன்ஸ்பெக்ஷன் முடிந்து அவர்கள் கிளம்பிச் சென்று தான் கிளம்பவே எட்டு மணிக்கு மேல் ஆனது. வீட்டுக்குப் போய் சேரும்போதே மணி பத்தரை. முதலில் கொஞ்ச நேரம் தான் போகவில்லை என்ற கழி விரக்கம் இருந்தது. பிறகு எல்லாம் மறந்து போனது. வேலையின் மும்முரத்தில் எதுவும் ஞாபகம் இல்லை. கம்பெனியின் உரிமையாளர் மூன்று அல்லது ஆறு மாதத்திற்கு ஒரு தடவை வந்து விட்டுப் போவார். சில பயணங்கள் திட்டமிட்டபடி இருக்கும். சில

பயணங்களைப் பற்றிச் சொல்லவே மாட்டார். தி... பயணமாக இருக்கும். இன்றும் அப்படிப்பட்ட பயண... தான்.

அன்று லலிதா வீட்டிற்கு வரும்போதே மணி பத்தை... ஆகி விட்டது. ஒரு நிமிடம் துணுக்குற்றவள் புருஷ... என்ன சொல்வானோ என்று ஒரு நிமிடம் நினைக்கிறா... பிறகு அவர் வந்திருக்கவேமாட்டார். எப்போதும் போல... ஆறு மணிக்கு வந்திருப்பார். நினைத்துக் கொள்கிறா... உள்ளே போகும்போது, தங்கள் படுக்கை அறையில்... டி.வி. ஒலிப்பதைக் கேட்டவளுக்கு எரிச்சல் வந்தது... இந்த மனுஷனுக்காக நான் பயந்து வந்திருக்கேன் பாரு.

நினைத்தவள், ஏற்கனவே பூட்டப்பட்டிருந்த சமையல்... அறையை நோக்கி நடக்கிறாள். மாமியாரைக் காண... வில்லை. மாமனாரும் மாடியில் படுத்து உறங்கப் போய்... விட்டார் போல் உள்ளது. பாட்டி தாத்தாவைக் கூட... காணோமே. தாத்தாவின் அறையில் இரவு விளக்கு ஒளிர... ஒரு நிமிடம் மௌனமாக நடக்கிறாள். சமையலறையைத்... திறந்து சாப்பிட உட்காரு முன் பாட்டி ஓடி வருகிறார்.

''என்னம்மா லேட்டு'' என்று தட்டைப் போட்டு சாப்... பாட்டை பரிமாறுகிறாள். விதவிதமாக பாட்டி சமைத்திருந்... தார். ரசித்து சாப்பிட்டவளிடம் பேச ஆரம்பிக்கிறாள்... பாட்டி.

''ஆமா என்ன ஆச்சு உனக்கு?''

''என்ன பாட்டி?''

''பாவம் உன் புருஷன் காலைலேயே வரேன்னு... சொன்னியாம். உனக்காக காலைல பத்து மணியிலிருந்து... உட்கார்ந்து தேவுடு காத்துகிட்டு இருக்கான். சாதாரணமா...



நீங்க தான் எங்கேயும் போக மாட்டீங்களே. எதுக்கு அவனை வரச் சொன்னே? காத்திருக்கச் சொன்னே? பாவம்... எத்தனை நேரம் வாசல்லே உக்கார்ந்துகிட்டு நீ வருவே வருவேன்னு எதிர்பார்த்துகிட்டு இருந்தான் தெரியுமா? காலையிலே பதினோரு மணியிலேர்ந்து உனக்காக காத்திருந்து பாவம் அவன். அவனுக்கு மனசுலே கொள்ளை ஆசை இருக்கு. ஆனா காண்பிக்கத் தெரியலை பாவம். நீ வரலேன்னா ஒரு போன் பண்ணி சொல்லி இருக்கலாம்.''

சாப்பிட்டு முடித்தவள் பாட்டி சொன்னதைக் கேட்டு வெலவெலத்துப் போகிறாள். அடுத்த நிமிடம் தட்டைக் கழுவிவிட்டு இடத்தைச் சுத்தம் செய்துவிட்டு, தன் அறைக்கு ஓடுகிறாள். அங்கே தங்கள் அறையில் டி.வி.யில் மூழ்கி இருந்தவன் இவளைத் திரும்பிப் பார்த்தவன் ஒன்றும் சொல்லாமல் மறுபடியும் டி.வி.யில் மூழ்குகிறான்.

''சாப்பிட்டீங்களா?''

''இத்தனை நேரம் சாப்பிடாமயா இருப்பேன். சாப் பிட்டேனே.''

அதற்கு மேல் என்ன கூறுவது என்று தெரியாமல் விழிக்கிறாள். மெதுவாக அவன் அருகில் போய் அமர்ந்து,

''சாரி எனக்கு வர முடியலை.''

''இட் ஈஸ் ஓ.கே.''

''பாட்டி சொன்னாங்க நீங்க பதினோரு மணிக்கு வந்துட்டதா சொன்னாங்க. சாரி எனக்காகக் காத்திருந்ததா சொன்னாங்க.

''என்னால வரவே முடியலை.''

‘‘இட் ஈஸ் ஓ.கே. வேலைன்னா அப்படித்தான். சில நேரங்களில் அப்படித்தான் ஆகிடும். போகட்டும்.’’

‘‘இல்லைங்க எனக்கு வரக்கூடாதுன்னு இல்லேங்க. வரணும் வரணும்னு துடிச்சுகிட்டு இருந்தேன். அப்ப பார்த்து கம்பெனியோட ஓனர் திடீர் விசிட். திடீர்னு மெஸேஜ் வர இப்ப அப்பன்னு பார்த்து கடைசியிலே மூன்று மணிக்கு மேலே தான் வந்தாங்க. அவுங்க வரவரைக்கும் மனசு எதிலுமே இல்லை. உங்களையே நினைச்சுகிட்டு இருந்தேன். சாரி என்னாலே வர முடியலே. ரொம்ப சாரி.’’

‘‘சரி... சரி... விடு’’ அவன் சொல்ல சட்டென்று அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

‘‘ஏய்... என்ன இது...’’ அவன் கூற,

தன்னையும் மீறி அவன் மடியில் படுத்தவாறே அழுகிறாள்.

‘‘என்ன இது பைத்தியம் மாதிரி’’ என்று சொல்லியவாறே தலையைத் தடவுகிறான். சற்று சமாதானம் ஆகி திரும்பிப் படுத்து உறங்க ஆரம்பித்தபோது கூட அவள் கண்களினின்று கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது.

ஒரு முறை தான் அவனுக்காகக் காத்திருந்து அவன் கொஞ்ச நேரம் லேட்டாக வந்தபோது, ஒரு மூன்று நான்கு மணி நேரம் கழித்து வந்தான் என்று என்னவெல்லாம் சண்டை போட்டு அன்று முழு நாளையும் தான் நரகமாக்கி இருந்தோம். ஆனால் தன் கணவன் நாள் முழுவதும் காத்திருந்தும் ஒன்றும் சொல்லவில்லை. எத்தனை மென்மையாக தன்னைச் சமாதானப் படுத்துகிறான். எத்தனை உயர்ந்த மனது அவனுக்கு? எத்தனையோ



நாட்களுக்குப் பிறகு கணவன் மேல் ஆர்வமும் ஆசையும் எழ அவன் கைகளைப் பிடித்தவாறே உறங்கிப் போகிறாள்.

அடுத்த நாள் வழக்கம் போல் அலுவலகத்திற்கு அவர்கள் கிளம்பிப் போனார்கள். வழக்கம் போல் மோகினி நேரம் கழித்து வர லலிதா எரிச்சல் படுகிறாள். ‘இந்தப் பெண்ணைப் பற்றி மேனேஜரிடம் சொல்லித்தான் ஆக வேண்டும். எல்லாவற்றிற்கும் அளவு உண்டு. என்ன தான் அதிகமான பீஸ் தைக்கிறாள் என்றாலும் இப்படியா பிஹேவ் பண்ணுவது? இதைக் கொஞ்சம் கட்டுக்குள் கொண்டு வர வேண்டியதுதான். வாழ்க்கையை இன்பமாக வாழ வேண்டியது தேவைதான். ஆனால் இன்பம் ஒன்று மட்டும் வாழ்க்கை கிடையாது. எப்போது பார்த்தாலும் பிறந்த நாள், கல்யாண நாள் என்று கொண்டாடிக் கொண்டிருக்கிறாள். இப்போது தான் கல்யாணமான தம்பதிகளைப் போல்... முகத்தைப் பார்த்தால் முத்திப் போன முருங்கைக்காய் போலிருக்கிறது’ எரிச்சல் படுகிறாள் லலிதா.

வந்தவள் வேலை செய்யாமல் மற்ற பெண்களிடம் அரட்டை அடிக்க,

‘‘மோகினி வேலையைப் பாரு’’ அதட்டல் போட்டதில் தைக்க அமருகிறாள். மறுபடியும் எழுந்து போகிறாள். லலிதா ஒரு சுற்று மேற்பார்வை பார்த்து விட்டு வந்த போது மறுபடியும் மோகினியைக் காணவில்லை.

‘‘எங்கே போய் விட்டாள்?’’ வேலை செய்யும் மற்ற பெண்களைக் கேட்டபோது,

‘‘மேடம் அவுங்க வீட்டுக்காரர் வந்திருக்கார்னு வெளியே போயிருக்காள்.’’

"என்னது வெளியேவா. வாட்ச் மேன் இல்லே. எப்படி வெளியே விட்டாங்க."

"இல்லைங்க மேடம். வராண்டா ஜன்னல் வழியா பேசிகிட்டு இருக்காங்க."

லலிதா வராண்டாவிற்கு செல்கிறாள். மோகினியின் கணவன் சிரித்து, சிரித்து பேசியபடி நிற்க,

"மோகினி" கடுப்பாகக் கூப்பிடுகிறாள் லலிதா.

"ஓ.கே. பை டார்லிங்" என்றவாறு அடர்ந்த மெரூன் நிறத்தில் ஒரு ரோஜாவைக் கொடுத்துவிட்டு அவன் நகர,

"மோகினி என்ன இதெல்லாம்? நேத்துதான் வெட்டிங் ஆனிவர்ஸரி ஆச்சு இல்லே. இன்னும் என்ன? மேனேஜர் கிட்டே நான் பேசணுமா?"

"சாரி மேடம்" என்றவள் அவசரம் அவசரமாக பூவை தலையில் சூடியபடியே புறப்பட்டுப் போனாள்.

அன்று சாப்பிடும் நேரத்தில் லலிதா கூப்பிட்டே கண்டிக்கிறாள்.

"இத பாரு மோகினி. என்னதான் நீ பெஸ்ட்டா வேலை செய்தாலும் வேலை நேரத்திலே நீ இல்லேன்னா மேனேஜ்மென்ட் பார்த்துகிட்டே இருக்க மாட்டாங்க பத்திரம்."

"சாரி மேடம் அவங்களுக்கு ஆசை ரொம்ப அதிகம். இந்த மெரூன் கலர் ரோஸ் எனக்காகத் தேடித் தேடி வாங்கினாங்க. நான் வச்சிட்டு வந்திட்டேன். அதைத் தேடிக் கண்டு பிடிச்சுக் கொண்டு வந்து கொடுத்துட்டுப் போறாரு. இனிமே இப்படி நடந்துக்காம பார்த்துக்கறேன்.



தயவு செய்து மேலிடத்தில் எதுவும் சொல்லிடாதீங்க மேடம்."

லலிதாவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நல்ல பெண் மனதிற்குள் கூறிக் கொண்டாள். அன்று மாலை கிளம்ப முயற்சி செய்தபோது வாசலில் ஒரே சத்தம். என்னவென்று வந்து வெளியே பார்க்கிறாள் லலிதா.

ஒரு ஆள் சற்று பரட்டத் தலையோடு சரியாக பராமரிக்கப்படாத இரண்டு சிறுவர்களோடு வந்து நிற்கிறான். அவன் ஏதோ கத்த, வாட்ச்மேன் அவனை உள்ளே விடாமல் துரத்த,

"என்னப்பா என்ன விஷயம்?"

"அம்மா எம் பொண்டாட்டியைப் பார்க்கணுங்க. வீட்டை விட்டு பத்து நாளாச்சு. நானும் எல்லாம் சரியாகிடும் வருவா - வருவான்னு பாத்துகிட்டு இருக்கேன். இன்னும் வரலை."

"உம் பொண்டாட்டியா? யார் அவுங்க? இங்கயா வேலை செய்யறாங்க? பெயர் என்ன?"

மூச்சு விடாமல் கேட்க,

"சரளாங்க."

"அப்படி யாரும் இல்லையேப்பா அந்தப் பெயரிலே யாருமே இல்லைப்பா."

"இல்லைங்க, இங்கதான் வேலை செய்யறாங்க. பத்து நாளைக்கு முன்னால கூட நான் இங்கே வந்துட்டு போனேனே."

லலிதாவிற்கு லேசாகக் கோபம் கூட வந்தது.

"ஓ.கே. இருந்தா நீ தேடிப் பார்த்துக்க" சொல்லிவிட்டு நகர்ந்து போகிறாள்.

அவள் பின்னாலேயே ஓடிவந்த மோகினியை பார்த்து

"இதோ இவதான்" என்கிறான் கணவன்.

## 18

"இவளா? இவ சரளா இல்லைப்பா மோகினி. நீ தப்பா பேசறே?"

"இவ மோகினி இல்லைங்க சரளாதான். மோகினின்னு பெயரை மாத்தி வச்சுகிட்டா."

இவனைப் பார்த்ததுமே மோகினி முகம் மாறி அங்கிருந்து அவசரம் அவசரமாக கிளம்ப முயற்சி செய்ய,

"ஏய் எங்கடி போறே? நில்லு. பிள்ளைங்க எல்லாம் அம்மா அம்மான்னு கதறிகிட்டு இருக்கு. நம்ம ராஜாகுட்டி அழுதுகிட்டே இருக்காண்டி. வந்திடு. வந்திடும்மா, நான் இனிமே உன்னை ஒண்ணும் சொல்லமாட்டேன். தயவு செஞ்சு வந்திடு."

"ஏய் சீ.... கையை விடு" கையைப் பிடிக்க வந்தவனைத் தட்டிவிட,



"ஏம்பா இதென்ன வம்பு? வேணும்ன்னு வந்து ஒரு பொண்ணு கையைப் பிடிச்சு இழுக்குறீங்க?"

"அம்மா பிள்ளைகளை கூட்டிக்கிட்டு வந்திருக்கேன். ரோட்டிலேயே நிப்பாட்டி வச்சிருக்காங்க. அதுங்களை கூட்டிட்டு வரேன் நீங்களே பாருங்க."

அவன் கூறக் கூற மோகினி பெண் புலியானாள்.

"ஏய் கசுமாலம். நீ வேண்டாம்னுட்டு தானே, பிள்ளைகளையும் சேர்த்து தலை முழுகிட்டு வந்தேன். இப்ப எதுக்கு இங்கே வந்து பிரச்சனை பண்ணிகிட்டு இருக்கே?"

"சரளாம்மா. சரளாம்மா நான் உன்னைய கண்டிக்க மாட்டேன். உங்கிட்டே எதுவும் கேக்கமாட்டேன். நீ எப்ப வேணா வா. எப்ப வேணும்னா போ. வீட்டு வேலை, பிள்ளைகளை பார்த்துக்கறது எல்லாமே நானே செய்துக்கறேன். என்னை மன்னிச்சிடு. வீட்டுக்கு வா புள்ளே. இனிமேல் என்னாலே எந்த கஷ்டமும் இருக்காது" அவன் கெஞ்ச, கெஞ்ச...

"போய்யா" என்கிறாள். "எந்த உறவும் வேணாம்னு தானே தூக்கி போட்டுட்டு வந்தேன். உம் புள்ளைங்களை நீயே பார்த்துக்க."

"சரளா... அப்படி சொல்லாதேம்மா. நம்ம ஜீவா இல்லே, அவ வயசுக்கு வந்துட்டாம்மா. பக்கத்து வீட்டு சரசு அக்கா தான் எல்லா உதவியும் பண்ணிச்சு, இந்த நேரத்துலே பொண்ணுகூட நீ இருக்க வேண்டாமா?"

"பொண்ணா? புருஷனே வேண்டாம்னு தானே தூக்கிப் போட்டேன். இதுலே பொண்ணு எங்கிருந்து வந்தது?"

"அடிப்பாவி" கத்துகிறான்.

"அம்மா நீங்களாவது சொல்லுங்கம்மா. பதினைஞ்சு வயது, பத்து வயசுலே இரண்டு பொண்ணுங்க; அஞ்சு வயசுலே ஒரு பையன் இருக்கும்மா. இவளை விட பாதி வயசு இருக்கிற சின்ன பையனோடு போய் கூத்தடிச்சுகிட்டு இருக்கா. நீங்களாவது புத்தி சொல்லி அனுப்புங்கம்மா."

லலிதாவின் காலில் விழுந்து வணங்குகிறான் வந்தவன்.

"யோவ் போய்த் தொலை. யார்கிட்டே என்ன பேசறே? எப்ப வேண்டாம்னு நினைச்சேனோ அப்பவே உன் குழந்தைகளையும் உதறிட்டுதானே வந்தேன். இனிமே என்னை ஏன் தொல்லைப் படுத்தறே? இனிமே என் சோலிக்கே வராதே."

லலிதா அதிர்ந்து போகிறாள்.

'இத்தனை நாட்கள் இவளுக்கு பூ கொடுத்தவன் இவள் கணவன் இல்லையா? பெற்ற குழந்தைகளை விட்டு விட்டா இப்படி தறிகெட்டு ஓடியிருக்கிறாள். சே! என்ன கேவலம். இவள் வாழ்க்கை உயர்ந்தது என்று எத்தனை நாட்கள் வருத்தப்பட்டிருப்பேன்.' பதில் பேசாமல் பஸ் ஸ்டாண்டிற்கு வந்தபோதும் தலையில் எண்ணெய் கூட காணாமல் குழந்தைகள் பயந்து நின்றதையும் நினைக்க, நினைக்க மனதை என்னவோ செய்தது. 'பாவம் தன் கணவன் எத்தனை நல்லவன்' அன்று தான் வர லேட்டானதைப் பற்றி ஒரு வார்த்தை கடிந்து கொள்ளவில்லை. கூச்சல் போட்டு பேசவில்லை. தான் வர முடியவில்லை என்று வருத்தம் தெரிவித்ததும் 'போகட்டும் விடு' என்று பெருந்தன்மையாகச் சொன்னான். அவன் தன்னோடு



அதிகம் பேசாமலிருக்கலாம். அதிகமாக வெளியே அழைத்துச் செல்லாமல் இருக்கலாம். இருந்தும் தனக்கும், குழந்தைகளுக்காகத்தானே வாழ்ந்து கொண்டிருக்கிறான். தன் அப்பா போல் கிடையாது. தன் பிள்ளைகள் கல்விக்கு இதுவரையும் யாரிடமும் போய் கை ஏந்தியதில்லை.

இல்லாத ஒரு திருமண நாளைக் கொண்டாடத் துடிக்கும் மோகினியைப் பார்த்து 'கான மயில் ஆட கண்டிருந்த வான்கோழி கதையாக' புருஷனை தொந்தரவு செய்து... சே! தான் ஏன் இப்படி ஆகிவிட்டோம்?'

அன்று பஸ் ஏறி வீட்டிற்குப் போய் சேரும் வரை கணவன் ஞாபகமாகவே இருந்தது. வீட்டிற்கு போனதும் கண்கள் கணவனைத் தேடியது.

வழக்கம்போல ஏதோ ஆரம்பித்த மாமனார், மாமி யாரைக் கூட இலட்சியம் செய்யவில்லை.

உள்ளே போய் முகம் கழுவி டிபன் சாப்பிட்டுவிட்டு, மடமடவென்று கணவன் அருகில் வந்து அமருகிறாள். அவன் பேசவில்லை என்று நினைத்துக் கொண்டிருக் கிறோமே அவனுக்கு பிடித்ததை தான் எத்தனை நாட்கள் பேசி இருப்போம். அவனைப் பார்த்து புன்னகைக்கிறாள். அவன் ஆச்சரியமாய் அவளைப் பார்க்க,

"சொல்லுங்க எத்தனை செட் ஆயிருக்கு. யார் வின் பண்ணினாங்க?" அவள் கேள்விகளில் அவன் கண்கள் மலர்ந்து போய் உற்சாகத்தோடு டென்னிஸைப் பற்றி பேச ஆரம்பித்தான்.

லலிதாவிற்கு ரொம்ப, ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. தன் கணவனா இது? தொடர்ந்து தன்னிடம் பத்து நிமிடம் பேசாதவன், அரைமணி நேரமாக மூச்சுவிடாமல் பேசுகிறான்.

லலிதாவிற்கு நன்கு புரிந்தது. நமக்குத் தான் வாழ்க்கையை சரிவர வாழத் தெரியவில்லை. வாழ்க்கையை சற்று ஊன்றிப் பார்த்தால் வாழ்க்கையின் நெளிவு சுளிவுகள் புரிந்து விடும். அதன்பின் வாழ்வதும் சுலபம் தான். நான், எனது என்று நமது பார்வை குறுகிப் போவதை விட அடுத்தவரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூட யோசிக்கிறோம். அதனால்தான் வாழ்க்கை சிக்கலாகவும் சீரியஸாகவும் ஆகிவிடுகிறது. ஒருவரின் உணர்வுகளை மற்றவர் புரிந்து கொண்டு மதித்து வாழ்ந்தால் சச்சரவு என்பது ஏது?

அன்று படுக்கை அறைக்குப் போனபோது கூட உறக்கம் வராமல் ஏதோ பேச்சை ஆரம்பிக்க, தன் கல்லூரி நாட்களின் விளையாட்டைப் பற்றி தமாஷாக அவன் பேச, அன்று நேரம் போனதும் தெரியாமல் நிம்மதியாக உறங்கிப் போகிறாள். மனதில் புதிதாக வாழ்க்கையைத் தொடங்கும் பலம் வந்தது. நம் வாழ்க்கையை நாம் தான் வாழ வேண்டும். அடுத்தவரைப் பார்த்து அப்படி இல்லையே, இப்படி இல்லையே என்று, ஏங்கினால் நம் வாழ்க்கையும் தொலைந்து தான் போகும்.

அடுத்த நாளிலிருந்து மோகினி வேலைக்கு வரவே இல்லை. அவளையும், அவளின் கணவன் என்று நினைத்தவனையும் புகழ்ந்த வாய்கள் எல்லாம் தூற்றித் தீர்த்தன.

''பெத்த குழந்தையை விட்டுட்டு இப்படி கூட ஒரு பொம்பளை இருப்பாளா?'' எல்லோரும் அவளைக் குறையாகவே பேசினர்.

ஒரு பத்து நாட்கள் சென்றிருக்கும். மறுபடி வாசலில் ஒரே கூச்சல்.



''ஏய் சரளா வாடி வெளியே'' என்றவாறு கத்துகிறான் மோகினியின் கணவன். தலையில் கொண்டை போட்டு பூ வைத்து, பெரிய பொட்டு வைத்து வாயில் வெத்திலை பாக்கை மென்றவாறே முந்தனையை சரியாகக் கூட போடாமல் பார்க்கும்போதே ஒரு மாதிரிப் பெண் என்று தெரிந்தது. அவள் கழுத்தில் புதிய மஞ்சள் கயிறு பளபளத்தது.

''ஏய் வெளியே வாடி, பாரு உன் சக்களத்தியை இனிமே மன்னிச்சிடுங்கன்னு வீட்டுப் பக்கம் வந்தாகூட சேர்க்கமாட்டேன். வாடி வெளியே.''

அவன் கத்த, ''அப்பா... அப்பா'' என்று மூன்று பிள்ளைகளும் அவனைச் சுற்றிக் கொள்ள புது மனைவி முகத்தைச் சுளிக்க,

''சீ நாய்ங்களா உங்கம்மா கிட்டேயே போங்க. நீ வா செல்லம்'' என்றவாறே அவளைக் கட்டி அணைத்துக் கொண்டு செல்ல, குழந்தைகள் தயங்கியபடி அவனைப் பின்தொடர்ந்தது தெரிந்தது.

ஒருநிமிடம் அதிர்ந்து போகிறாள் லலிதா, ஆக பிள்ளைகளில் இப்படி கூடவா இருப்பார்கள்? பத்து நாட்களுக்கு முன் தான் பெற்ற குழந்தைகளுக்காக வக்காலத்து வாங்கியவன், இன்று குழந்தைகளை நடுத்தெருவில் விட்டு விட்டு இன்னொரு பெண்ணோடு போய் விட்டான். சே, என்ன உலகம் இது?

லலிதா அலுத்துக் கொண்டு அதிர்ந்தது போல் ஆர்த்தியும் அலுத்துக் கொள்கிறாள். எப்போதுமே தன் சுதந்திரத்துக்கு தடை இல்லாத பெற்றோர் இப்போது அதிகமாகவே கேள்வி கேட்கின்றனர். அப்பாவாவது ஒரு

வார்த்தை இரண்டு வார்த்தையோடு சரி. அம்மாதான் இப்போது அதிகமாகக் கேள்வி கேட்க ஆரம்பிக்கிறாள்.

"என் இப்ப எல்லாம் லேட்டா வர்றே?"

"ஆமா அந்தப் பையன் வீட்டிலே உன்னை ஒத்துப்பாங்களா? கல்யாணத்துக்கு முன்னால அவனோட எதுக்கு பழக்கம் வச்சுக்கணும். நாளைக்கு வேண்டாம்னு சொல்லிட்டா. இந்தக் காலத்துலே உங்களுக்கு சுதந்திரம் கொடுக்கிறதுக்கும் வேலைக்குப் போக வைப்பதற்கும் வேற காரணம் இருக்கு. யாருக்கும் அடிமையா இருக்கக் கூடாது. சுய கால்ல நிக்கணும்னு அதையெல்லாம் செய்யறோம். அதை மிஸ் யூஸ் பண்ணக் கூடாது."

"நான் ஒண்ணும் தப்பா எதுவும் செய்யலைம்மா."

"என்ன செய்யலை. பயித்தியக்காரி மாதிரி அபிஷேக், அபிஷேக்குன்னு அலையறே? அவன் கோவிச்சுகிட்டான்னு ஒரு வாரமா மூணாம் பேய் அடிச்ச மாதிரி இருந்தே. நீ சாதாரணமாகவே ஒரு வாரத்திற்கு மேல் ஆச்சு இதெல்லாம் தேவையா?"

என்ன சொல்வதென்று தெரியாமல் விழிக்கிறாள் ஆர்த்தி. தன்னை சுதாரித்துக் கொள்கிறாள்.

"என்னம்மா நீ... நீங்க கூடவா இப்படி? அதுவும் இந்த காலத்திலே."

"எந்தக் காலமா இருந்தா என்ன? பெண். பெண்தான்."

"என்னம்மா என்னென்னவோ பேசறீங்க?"

"என்னடி பேசறது? ஒருவாரம் உங்கூட பேசலைன்னவுடனே நீ சரியா சாப்பிடலை. தூங்கலே. இந்த அழகிலே ஓவரா பழகி ஏதானும் ஆச்சுன்னா நஷ்டப்படப் போறது



யாரு? மென்டலா இல்லே. பிசிகலாவும் நீதானே நஷ்டப்படுவே."

"அம்மா... என்ன பேசறீங்க? இட் ஈஸ் ஷாக்கிங். நீங்க இப்படி பேசுவீங்கன்னு எதிர்பார்க்கவே இல்லை. ஏம்மா நீங்க கூடவா இப்படி?"

"நானா? எல்லா அம்மாவும் இப்படித்தான் இருப்பாங்க. உனக்கு ஃபிரீடம் கொடுத்தது உனக்கு தன்னம்பிக்கை வரணும்ங்கறதுக்கும், உன் கால்ல நீ நிக்கறதுக்கும்தான்."

மறுபடியும் எரிச்சல்படுகிறாள் ஆர்த்தி. எத்தனையோ பேசியும் அம்மாதான் சொல்வதிலேயே குறியாக இருக்கிறாள். சே! என்ன உலகம் ஆர்த்தியும் சலித்துக் கொள்கிறாள்.

"அந்தப் பையனை பார்த்து நாங்க பிக்ஸ் பண்ற வரைக்கும் இனிமே அவனிடம் எந்த காண்டாக்டும் வச்சுக்காதே. புரிஞ்சுதா?"

ஆர்த்தி பெருமூச்சு விடுகிறாள். அன்று அபிஷேக்கிடமிருந்து செல்லில் அழைப்பு வர, அம்மா செல்லைப் பிடுங்கி அணைக்கிறாள். ஒருமுறை, இருமுறை அல்ல பலமுறை அவன் தொடர்பு கொள்ள முயற்சிக்க பல முறையும் செல்லை அணைக்கிறாள் அம்மா.

அன்று மாலை அபிஷேக் ஆர்த்தியைத் தேடிக் கொண்டு வீட்டுக்கு வர "அவ இல்லை" என்கிறாள் அம்மா.

"எங்கே போயிருக்கா ஆன்ட்டி."

"அவ கல்சுரல் புரோக்கிராம் பிராக்டிஸுக்கு போயிருக்கா. பாருப்பா இந்த மாதிரி அடிக்கடி வந்துட்டுப் போகாதே. அக்கம் பக்கம் எல்லாம் தப்பா பேசப் போறாங்க."

''என்ன ஆன்ட்டி... புதுசா?'' எப்போது வந்தாலும் ஒரு புன்சிரிப்போடு உள்ளே போகிறவள் இப்படிப் பேசியதைப் பார்த்து அதிசயப்படுகிறான்.

''ஆன்ட்டி உங்களுக்குத் தெரியாதது இல்லை. நானும் ஆர்த்தியும் ரொம்ப டீப்பா லவ் பண்றோம். எங்களை எதுக்கு...''

அவனை முடிக்க விடாமல் கத்துகிறாள் ஆர்த்தியின் அன்னை.

''போதும்பா. இந்த லவ்வை மூட்டை கட்டி வை. உங்கம்மா அப்பாவோட வந்து நிச்சயம் பண்ணி கல்யாணம் கட்டிகிட்டு அப்புறம் உன் இஷ்டம் போல் எப்ப வேணா பாரு. ஆனா நாட் நௌ...''

ஆர்த்தியின் தாயார் வெடிக்க அதிர்ந்து போகிறான் அபிஷேக்.

# 19

ஆர்த்தியின் தாயார் ஏன் இப்படி பேசுகிறார்கள்? இந்தக் காலத்தில் பெண்ணுக்கு எத்தனையோ சுதந்திரம் இருக்கிறது. பையன்களைவிட ஒரு படி மேலேயே போய் பெண் கடலை போடுகிறது. இது பெற்றோர்களுக்கு தெரியாதா என்ன? ஆர்த்தி எத்தனை தடவை எத்தனை மணி நேரங்கள் போனில் பேசி இருக்கிறாள். இத்தனை ஏன்? அவள் அம்மாவின் எதிரிலேயே மாடிக்கு



அழைத்துப் போய் தன்னோடு தனியாகப் பேசிக் கொண்டிருக்கிறாளே - இப்போது திடீரென்று என்னாகிவிட்டது. மனது வலித்தது.

இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு இழப்பு, வலி, வேதனை என்பதெல்லாம் ரொம்பத் தெரியாது. பிறக்கும் போதே ஒரு குழந்தை, இரண்டு குழந்தைகள்தான். பெற்றோர் இருவருமே வேலைக்குப் போவதால் குழந்தைகளுக்கு தேவைக்கு மேல் பணமும் வசதிகளும் செய்து தரப்படுகிறது. வேண்டும் என்று நினைக்கும் போதே குழந்தைகளுக்கு எல்லாம் கிடைத்து விடுகிறது. கொஞ்சம் பெரியவர்கள் ஆனதும் எல்லோருக்கும் டபிள்டிஜிட், ட்ரிபிள்டிஜிட் என்று சம்பளம் எக்கச்சக்கமாக வந்துவிட அதன்பிறகு இன்னும் ஏற்றம்தான். இப்படி வாழ்கிற வாழ்க்கையில் துக்கம், சோகம், வருத்தம் எல்லாம் என்ன இருக்க முடியும்? அதுவும் அபிஷேக் வாழ்ந்த வாழ்க்கை இன்னும் உயர்வானது.

அம்மா, அப்பா இருவருமே வேலைக்கு போகிறவர்கள்தான். அப்பா இடியே விழுந்தாலும் கேட்டுக் கொள்ள மாட்டார். பணம் எது வேண்டுமென்றாலும் அம்மா சட்டைப் பையை ரொப்பி விடுவாள். அப்பாவிடம் கேட்டால் அப்பாவும் தரும் ரகம்தான். வேலைக்கு அம்மா போனாலும் சகல வேலைகளையும் கவனித்துக் கொண்டு வீட்டை சொர்க்கமாக வைத்திருக்கும் கொள்ளுப்பாட்டி எப்போது போனாலும் அருமையான சாப்பாடு, அனுசரணையான உபசரிப்பு, எப்போதும் மனநிறைவாகப் பேசிக் கொண்டு சிரித்துக் கொண்டு இருப்பான் அபிஷேக். ஆளும் பார்ப்பதற்கு மிகமிக அழகாக இருப்பான். படிப்பிலும் படுசுட்டி. படிப்பு முடிக்கும்போதே பெரிய

வேலையும் கிடைத்துவிட வாழ்க்கை மிகமிகச் சுலபமாக ஆனது. அப்படிப்பட்டவனுக்கு முதல் அடி. ஆர்த்திதான் அவன் உலகம் என்று நினைத்திருந்தவனுக்கு ஆர்த்தியின் தாயார் பேசியது மனதை அதிகமாகவே வலித்தது.

அதற்கு மேல் இருப்புகொள்ளாமல் கல்சுரல் நடக்கும் இடத்திற்கே சென்று விட்டான். இன்னும் இரண்டு வாரங்களில் விழா. அதற்குள் ரிகர்சல், பிராக்டீஸ் என உயிரை எடுக்கிறார்கள் என்று ஆர்த்தி அலுத்துக் கொண்டதும் ஞாபகத்திற்கு வந்தது. ஆர்த்தி பரதக்கலையை கற்றுக் கொள்பவள். அங்கேதான் இந்த விழா, மௌனமாக அங்கே வண்டியை நிறுத்திவிட்டு வெறுமையாக காத்திருக்கிறான் அபிஷேக்.

ஏறக்குறைய ஒருமணி நேரம் கழித்து வருகிறாள் ஆர்த்தி. அபிஷேக்கைப் பார்த்ததும் முகம் பிரகாசம் ஆனாலும் மீண்டும் வாடிப் போகிறது.

''உங்க வீட்டுக்கு போயிருந்தேன். உங்கம்மா இந்த மாதிரி பேசுவாங்கன்னு நினைச்சுக் கூடப் பார்க்கலை.'' அவன் நடந்ததை சொல்ல, சொல்ல,

''எனக்கு கூட புரியலைப்பா. என்ன ஆச்சுன்னே தெரியலை. ஒரே கோபத்துலே இருக்காங்க. அம்மாவை அந்த மூட்லே நான் பார்த்தே இல்லை. இன்பேக்ட் நீயும் நானும் பழகறது எல்லாமே அம்மாவுக்கும் தெரியுமே. நீ முறைச்சுகிட்டு பேசாம இருந்தபோது,

''கவலைப்படாதே, நேரே அவன் வீட்டிலேயே பாருன்னு சொன்னதே என் அம்மாதானே. ஒண்ணுமே புரியலை. ரொம்ப வருத்தமா வேற இருக்கு. அதைவிட ஷாக்கிங்கா இருக்கு.''



''சரி வா நான் உன் வீட்டிலே டிராப் பண்ணிட்டு போறேன்.''

''நோ அபி. நான் பக்கத்து வீட்டு பிரண்டோட வந்திருக்கேன். அவ கூடயே போயிடறேன்.''

''ஏம்மா அப்படி சொல்றே? நான் யாருக்கும் தெரியாம உன்னை அங்க கொண்டு போய் சேர்த்துடறேன்.''

அவன் ஆறுதலாகச் சொல்லியும் அவள் கேட்கவில்லை.

''என்ன ஆர்த்தி நீ கூட மாறிட்டியா?''

''இல்லை அபிஷேக். யோசிச்சுப் பாரு அவுங்க என்ன தப்பா சொல்லிட்டாங்க. உங்க வீட்டிலேர்ந்து வந்து பொண்ணு கேட்டு பேசச் சொல்றாங்க. அது ஒண்ணும் தப்பான விஷயம் இல்லையே. ஒரேயடியா நம்ப கல்யாணம் வேண்டாம்னு அவுங்க சொல்லலையே.''

''என்ன ஆர்த்தி நீ இப்படி பேசறே?''

''இல்லைப்பா, நீ உங்கம்மா அப்பாவை கூப்பிட்டுகிட்டு வந்து எங்க பேரண்ட்ஸ்கிட்ட பேசு. எல்லாம் செட்டில் ஆச்சுன்னா பயமில்லாம பேசலாம்.''

''என்ன இப்படி பேசறே?''

''ஏன் நான் பேசினதிலே என்ன தப்பு?''

''தப்பு. ரைட்டுங்கறது கிடையாது. நான் எப்படி எங்க வீட்டிலே சொல்வேன்?''

''இதுலே என்ன இருக்கு? நீ ஏதானும் தப்பு வேலை பண்ணிட்டியா என்ன?'' ஆர்த்தி ஆச்சரியமாய் அவனைக் கேட்கிறாள்.

''நீ சுலபமா சொல்லிட்டே. உன்னை லவ் பண்ணேங்கறதையே அவுங்க ஜீரணிக்கலே.''

''அப்படின்னா நம்ப கல்யாணம் அவுங்க ஒத்துக் கலைன்னா அவ்வளவுதானா?''

''அப்படி எல்லாம் இல்லைம்மா. இப்பதான் காதுலே போட்டிருக்கேன். அவுங்க சரின்னு சொல்ல கொஞ்ச நாளாகும்'' அபிஷேக் லேசாக இழுக்க,

''என்ன அபிஷேக் என்ன பேசறே நீ? ஆர் யூ நாட் சீரியஸ்?'' ஆர்த்தி லேசாக திடுக்கிட்டவாறே கேட்கிறாள்.

''அப்படி இல்லே ஆர்த்தி. இட் வில் டேக் டைம். எல் லாம் ஒரே நாள்ல முடிஞ்சுடாது. ப்ளீஸ் டிரை டு அண்டர் ஸ்டேண்ட்.''

''சாரி அபிஷேக்... அம்மா சில்லியா பயப்படறாங் கன்னு நினைச்சேன். அது தப்புன்னு இப்பப் புரியுது. பழகும்போது இல்லாத பயம் இப்ப மட்டும் எப்படி?''

''ஸ்டுப்பிட்டா பேசாதே. எல்லாத்தையும் ஸ்லோவா தான் சரி பண்ண முடியும்.''

சொன்னவனையே சிறிது நேரம் பார்க்கிறாள்.

''ஓ.கே. எத்தனை நாள் ஆகுமோ, அத்தனை நாளும் காத்துகிட்டு இருக்கேன். அதுவரைக்கும் நாம மீட் பண்ண வேண்டாம்.''

அபிஷேக் அதிர்ந்து போகிறான். ''ஏய் ஆர்த்தி இத பாரு.'' அவன் சொல்வதைக் கவனியாதவள் போல் தன் தோழி யோடு கிளம்பிச் செல்கிறாள். அபிஷேக் ஏமாற்றத்தோடு வீடு வந்து சேருகிறான். ஏனோ உள்ளே போகப் பிடிக் காமல் வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு, ஒரு ஓரமாக தோட்டத்தில் போய் அமர்ந்து கொள்கிறான்.

மாடியில் தாத்தாவுக்கும் பாட்டிக்கும் சண்டை.



''நீ பெரிசா மினுக்கிகிட்டு வரணுமா?'' கத்துகிறார்.

''என்ன மினுக்கிகிட்டேன். தாலியில் இன்னும் ரெண்டு காசு கோத்துகிட்டு இருக்கேன் அது தப்பா?''

''தாலி மொத்தமும்தான் காசா கிடக்குதே இன்னும் என்ன வேணும்?'' அவர் கத்த, பாட்டி தாலியை கழுத் துக்கு முன்னால் நீட்டிப் பார்க்கிறாள். தாலி முழுவதும் குழல்களும், காசுகளும், பவழமும், கருகமணியும் பெரிய தாலியாக இரண்டு தாலிகளும் தடித்த வடம் போல் சங்கிலியும் அதுவே எப்படியும் ஒரு பதினைந்து பவு னுக்கு தேரும் என்று தோன்றியது. ''இப்படிப் போட்டு கிட்டு போனா ஏன் சங்கிலியை அறுக்க மாட்டான். புருஷன் மேலே மரியாதை இல்லாம என்ன பெரிய தாலி சென்டிமெண்ட்''

''யோவ் தாலியே உனக்காக போட்டுக்கறதுதான்'' - அடிக் குரலில் கத்த,

தாலியில் விதவிதமான தங்கத்தைக் கோர்த்துக் கொள்ள நினைக்கும் பாட்டி தாத்தாவின் எண்ணங்களை கோர்த்துக் கொள்ள நினைக்கவே இல்லை என்று அபி ஷேக்கிற்கு தோன்றியது. மறுபடியும் தாத்தா பாட்டியைப் பழித்துப் பேச பாட்டி பிலுபிலுவென்று பிடித்துக் கொண் டாள்.

''நீ எல்லாம் ஒரு புருஷன். ஒரு பொட்டுத் தங்கம் வாங்கிக் கொடுத்திருப்பியா?''

''அடிப்பாவி கழுத்து புல்லா நகையை மாட்டிகிட்டு ஒண்ணும் செய்து போடலைன்னு சொல்லறே?''

''ஏய்யா அது நீ வாங்கிப் போட்டதா? உங்க அம்மாக்காரி பிச்சையா போட்டது.''

"எங்க அம்மாக்காரி போட்டா என்ன அல்லது நான் போட்டா என்ன?"

இவர்கள் சண்டையைக் கேட்டவன் பெருமூச்சு விடுகிறான். இது என்ன தாம்பத்தியம்? இத்தனை வருடங்கள் வாழ்ந்தும் இரண்டு குழந்தைகளைப் பெற்றும் இன்னும் ஒருவருக்கொருவர் குறை சொல்லிக் கொண்டும் வெறுத்துக் கொண்டும் இதென்ன வாழ்க்கை? தாத்தாவும், பாட்டியும் ஒரு நாள் கூட சந்தோஷமாக சிரித்துப் பார்த்ததில்லை. எப்போதும் சண்டைதான். தன் அம்மாவும் அப்பாவும் சண்டை போடாவிட்டாலும் எப்போதும் ஒன்றாக இருந்து சிரித்து பேசி அவன் பார்த்ததே இல்லை. இருவருமே இரு தீவுகள் போல்தான் வாழ்வதாக அவன் எண்ணம். இப்படியே யோசித்துக் கொண்டிருந்த போது உள்ளே இருந்து கீச்சுக்குரல் கேட்க உள்ளே எட்டிப் பார்க்கிறான். அத்தைப் பாட்டி தன் கொள்ளுப் பாட்டியிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள்.

"எம்மா கல்யாண நாள்னு வந்தா வெறும் ஆயிரம் ரூபா தரே. அதுலே என்ன வாங்க முடியும்? எனக்கு மாசம் மாத்திரையே ஆயிரம் ரூவா ஆகுது தெரியுமா? இதுலே என்ன வாங்க முடியும்?"

"எம்மா வெட்டிங் ஆனிவர்ஸரிக்கு என்னால் முடிஞ்சதைத் தான் நான் தர முடியும் உனக்கு மட்டுமா? உங்க அண்ணன், தம்பி, தங்கை எல்லோருக்கும் தானே தரணும். எங்கிட்டே என்ன இருக்கோ அதை வச்சுதானே தரமுடியும்."

"ஆமா எது கேட்டாலும் ஏதாவது விளக்கம் பேசுங்க கொடுக்கறதை உபயோகப்படும்படி கொடுத்தா பரவாயில்லை."



"இத பாரு கொடுக்கறதை எப்படி உபயோகப்படுத்தணும்னு நீதான் யோசிக்கணும்."

"என்னம்மா யோசிக்கறது? அந்தாளால என்ன பிரயோசனம்? எனக்கு மேலே வியாதி, என்னமோ வயசானவங்களாச்சேன்னு உன்னை பார்க்க வறோம். அதுக்காக வாவது கூட போட்டுக் கொடுக்கக் கூடாதா?"

அத்தைப் பாட்டி எப்பொழுது வந்தாலும் ஆட்டோ டிரைவர் கேட்பதைப் போல் கூடக் கேட்பாள். அத்தைப் பாட்டியின் வீட்டுக்காரர் ஏதோ முணுமுணுத்தபடியே வருவார். எப்போதும் ஏதோ சீரியஸாக யோசித்தபடியே இருப்பார். திருமணம் என்றால் மகிழ்ச்சி இருக்காதோ. நினைத்தவன் மெதுவாக உள்ளே செல்கிறான். மாடியில் தன் அறைக்குச் செல்ல முயலும் போது அக்காவும் அக்காவின் கணவரும் ஏதோ உரத்த குரலில் பேசுவது கேட்டு ஒரு நிமிடம் நிற்கிறான்.

"இத பாரு குழந்தைக்கு பார்த்டே ஆயாச்சு இல்லே. இன்னும் இங்க உக்காந்துட்டு என்ன பண்ண போறே? அங்க வீட்டுக்கு வந்து சேரு."

"என்ன ரமேஷ் உளறரே. நான் அங்க வந்து என்ன பண்றது? என்னால உங்கம்மா கிட்டே எல்லாம் அட்ஜஸ்ட் பண்ண முடியாது. நொய், நொய்னு பிடுங்கி கிட்டே இருப்பாங்க. சாரி. நீ பெங்களூரு போய் நல்ல வீடு எல்லாம் பாரு அப்புறம் நான் வரேன்?"

"அது முடியவே முடியாது. என்னை டெம்பரவரியா தான் பெங்களூர் போட்டிருக்காங்க. வேற இடம் கட்டாயம் இன்னும் ஆறுமாசத்திலே டிரான்ஸ்பர் ஆகிடும். அது வரைக்கும் எங்க வீட்டிலே இரு."

"நோ... நோ, நான் வேலைக்கு வேற போறேன். எம் பொண்ணை என் கொள்ளுப் பாட்டி கவனிச்சிக்கிறாங்க. உங்க வீட்டுக்கு வந்தா யார் பார்த்துப்பாங்க."

"நீ எம்பா வேலைக்கு போகணும்" அவன் ஆரம்பிக்க,

"ஷிட். ஆரம்பிச்சிட்டியா?" அக்கா கத்திவிட்டு படா ரென்று கதவை சாத்த, தடதடவென்று அக்காவின் வீட்டுக்காரர் கோபமாகப் போவது தெரிந்தது.

திருமணம் என்பது தேவைதானா? அபிஷேக்கிற்கு இந்த கேள்வி மனதில் ஆணித்தரமாக எழுந்தது.

# 20

பொருளாதார தேவைக்காக பெண் என்பவள் வேலைக்குப் போக அது பெண்ணுக்கு எல்லையற்ற சுதந்திரத்தைக் கொடுக்க, அந்த சுதந்திரம் முக்கியமாகி மற்றவை எல்லாமே இரண்டாம்பட்சமாகிப் போனது. வீடு, குழந்தை, கணவன் எல்லாமே வேலைக்குப் பிறகு தான். ரேகா அக்கா இன்னும் கீச்சுக்குரலில் கத்துவது கேட்க, அக்காளின் கணவர் முகம் எல்லாம் கோபத்தோடு புசுபுசுவென்று வீங்கிப் போக, கோபத்தோடு இறங்கிப் போவது தெரிந்தது. அடுத்த நிமிடம் காதே செவி டாகும்படி பைக்கை உதைத்து அவர் கிளம்பிப் போக, அக்கா ஆத்திரத்தில் மாடியில் தன் அறையில் ஏதோ தூக்கிப் போட்டு உடைப்பது தெரிந்தது. அபிஷேக்



பெருமூச்சு விடுகிறான். திருமணம் என்பது நிச்சயம் சந்தோஷத்தைக் கொடுக்காது என்று தோன்றுகிறது. இரண்டு மனங்களின் சேர்க்கை என்பதெல்லாம் இப் போது கிடையாது. அது வெறும் இரண்டு உடல்களின் சேர்க்கை மட்டும் தான். நேற்று வரை அபி அபி என்று உருகியவள் இன்று என்ன பேச்சு பேசுகிறாள். எங்க அம்மா சொல்றதுலே என்ன தப்பு என்றல்லவா கேட் கிறாள். என்னைப் பார்த்தால் ஏமாற்றுபவன் போலவா தோன்றுகிறது. இதில் ஏதோ சூது இருக்கிறது. ஒழியட்டும்: அம்மாவிடம் தன் காதலை சொல்லியாகி விட்டது. இனிமேல் அவர்கள்தான் ஏதேனும் செய்ய வேண்டும். அதற்குள் அவசரப்பட்டால் என்ன செய்ய முடியும்? என்னதான் சே!... போகட்டும் என்று தோள்களை குலுக் கினாலும் மனம் மட்டும் மீண்டும் மீண்டும் ஆர்த்தியின் நினைவுகளில் ஆழ்ந்தது. அதற்கு மேல் தாள முடி யாமல் உள்ளே செல்கிறான்.

என்ன முடிவெடுக்கலாம். அப்பாவிடம் பேசலாமா? ம்... அவருக்கு என்னை யாரென்று தெரியுமோ என்னவோ. அவனும் சரி, அவனுடைய சகோதரிக்கும் சரி எல்லாமே அம்மாதான். இந்த அழகில் அப்பாவைப் பற்றி பேசு வானேன். அம்மா... அம்மாவிடம் தான் பேசியும் பிடி கொடுத்துப் பேசவில்லை. அம்மாவுக்கு ஆர்த்தியைப் பிடிக்கவில்லையா என்ன? இந்த எண்ணம் தோன்றியதும் நெஞ்சை கப்பென்று அடைத்தது. ஆர்த்தி...அவள் இல்லாமல் தான் இருக்க முடியுமா என்று கூடத் தோன்ற வில்லை. இத்தனையும் நினைத்தவாறே சாப்பிடும் மேசைக்கு வந்து, தன்னையும் அறியாமல் அமர்ந்து, முகவாயைச் சொறிந்து கொண்டு, தலையைக் தேய்த்துக் கொண்டு அமர்ந்திருக்கிறான்.

''என்னடா இன்னிக்கு சீக்கிரம்? என்ன சாப்பிடறே?''

கொள்ளுப் பாட்டி வண்டார்குழலி கேட்க சற்று மலங்க விழிக்கிறான்.

''ஏய் அபிஷேக் என்னடா? என்ன ஆச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்கே?''

''ஆங்...'' அதற்குமேல் வார்த்தைகளே வரவில்லை.

''டேய் அபிஷேக்... இங்க பாரு என்னாச்சு உனக்கு?''

பாட்டி உலுக்கியும் அவன் தன் நினைவுகளிலிருந்து மீளவில்லை.

அதற்குள் தாத்தா வந்து அருகில் அமர்கிறார்.

''என்னடா கண்ணு என்னாச்சு? ஆர்யூ ஆல்ரைட்?''

தாத்தா தலையைத் தடவிக் கொடுக்க, தன் சுய உணர்வு பெற்றவனாக

''என்ன தாத்தா?'' என்கிறான். இதற்குள் கொள்ளுப் பாட்டி காபியைக் கலந்து தர,

''தேங்க்யூ பாட்டி'' என்றவாறே காபியை வாங்கி குடித்தவனின் தலையைத் தடவுகிறாள் பாட்டி.

''என்னடா ஆச்சு கண்ணா? ஆர்த்தி உன்னை ரொம்ப கஷ்டப்படுத்தறாளா?'' கேட்டுவிட்டு பாட்டி சிரிக்க,

விழித்துக் கொள்கிறான் அபிஷேக் ''அதெல்லாம் ஒண்ணுமில்லை பாட்டி.''

பாட்டி சிரிக்கிறாள். ''என்ன விஷயம் சொல்லு அபி... ஏன் அத்தனை அப்ஸெட் ஆகிட்டே? என்னாச்சு? ஆர்த்தி ஞாபகமா? கல்யாணம் பண்ணிகிட்டாதான் பேசணும்னு கண்டிஷன் போட்டுட்டாளா?'' பாட்டி கேட்க,



லேசாக அதிர்ந்து போகிறான். ஆச்சரியப்படுகிறான் அபிஷேக்.

''என்ன பாட்டி? அப்படியே நேரிலே இருந்து பார்த்த மாதிரி பேசறீங்க?''

''எல்லாம் எக்ஸ்பீரியன்ஸ்தான்'' தாத்தா தன் பொக்கை வாய் திறந்து சிரிக்க,

''என்ன பாட்டி நீங்களும் லவ் எல்லாம் பண்ணி இருக்கீங்களா?''

''எங்களுக்கெல்லாம் லவ் பண்ற வயசுவறதுக்குள்ளே கல்யாணமே ஆயிடுச்சு'' பாட்டியும் சிரிக்கிறாள்.

''என்ன சொல்றீங்க பாட்டி?''

''எனக்கு கல்யாணம் ஆகும்போது அஞ்சு வயது. உங்க தாத்தாவுக்கு எட்டு வயது.''

பாட்டி பழைய நினைவுகளில் மூழ்கிப் போனாள்.

''எட்டு வயசு, அஞ்சு வயசா அந்த வயசுலே கல்யாணமா? மை காட்.'' அபிஷேக் ஆச்சரியப்பட,

''கல்யாண மேடையிலேயே உங்க பாட்டி ஒரே சண்டை. கல்யாணமே கட்ட மாட்டேன்னு ஒரே அமர்க்களம்'' தாத்தா சொல்லிவிட்டு சிரிக்க,

''என்னாச்சு பாட்டி?'' அபிஷேக் ஆவலாக கேட்கிறான்.

''கல்யாணத்துக்கு செய்த லட்டுவை உங்க பாட்டி அபேஸ் பண்ணிட்டா. நான் அதை அவளுக்கு தெரியாம சாப்பிட்டுட்டேன்.

அதுக்குதான் அத்தனை அமர்க்களமும், கீழே விழுந்து, பிரண்டு அழுகை. வேற லட்டு கொடுத்தாலும் வாங் கலை. அந்த லட்டுதான் வேணும்னு ஒரே அழுகை.'' சொல்லிவிட்டு தாத்தா பக, பகவென்று சிரிக்க,

''அப்படியே உங்க கதையும் சேர்த்து சொல்லுங்களேன் வேடிக்கையாக இருக்கும்'' சொல்லிவிட்டு பாட்டியும் சிரிக்கிறார்.

''என்னாச்சு தாத்தா. அதையும் சொல்லுங்களேன்.''

தாத்தாவும் பெரியதாக வாய்விட்டு சிரிக்கிறார்.

''அது பெரிய கதை. உங்க பாட்டிகிட்டே இருந்து லட்டுவை எடுத்து மறைச்சு வச்சதுமே கத்த ஆரம்பிச்சா. பயந்து போய் வாயிலே போட்டுகிட்டேன். இவ அழுத அழுகையிலே, பயந்து போய் மென்னு முழுங்க பார்த்தேன். அதுக்குள்ளே இவ கீழே பிரண்டு, கிரண்டு அழ, எனக்கு முதுகிலே நல்லா அடி விழுந்தது. அப்புறம் நான் அதைக் கீழே துப்ப, என் வாயிலிருந்து பாதி லட்டு கீழே விழ, அதுக்கப்புறம்தான் உங்க பாட்டி ஒரே சிரிச்சுகிட்டு கல்யாணத்துக்கு ஒத்துகிட்டா.''

அபிஷேக்கிற்கு வேடிக்கையாக இருந்தது. சிரிப்பும் வந்தது. அவன் பார்த்துக் கொள்ளுப் பாட்டியும், தாத்தாவும் தான் கொஞ்சம் கூட மனவேற்றுமை இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். புரியாத வயதில் திருமணம் செய்து கொண்டு இத்தனை வருடங்கள் கொஞ்சம் கூட மன வருத்தம் இல்லாமல், முகம் சுளிக்காமல், தன் உறவுகளுக்கு எல்லாம் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து கொண்டு, எல்லாவற்றையும் விட முக்கியமானது கொஞ்சம் கூட சண்டை, சச்சரவு இல்லாமல் வாழ்வது. எப்போதும், எதற்காகவும் ஒரு வார்த்தை கூட கடிந்து கொண்டு இருவரையும் பார்த்ததில்லை. எப்போதுமே வேடிக்கைப் பேச்சுகள்தான். பாட்டி பேச தாத்தா பேச அந்த இடமே கலகலத்துப் போகும். இது எப்படி சாத்தியமானது? யோசிக்...



''திருமணம் என்பது இதுதானோ. இத்தனை வருடங்கள் ஒன்றாக இருந்து ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு எப்பேற்பட்ட வாழ்க்கை இது?

இத்தனை நேரம் திருமணம் என்றால் சற்று பயந்து குழம்பிப் போன மனது மறுபடியும் தெளிவடைய ஆரம்பித்தது. பாட்டி செய்து வைத்த டிபனை முழுங்கியவாறே இத்தனையும் யோசிக்கிறான்.

''என்னாச்சுப்பா ஆர்த்தி கிட்டே ஏதாவது பிரச்சனையா?''

மறுபடியும் பாட்டி அருகில் அமர்ந்து கொண்டு தலையைத் தடவியவாறு கேட்க, லேசாக கண் கலங்குகிறான் அபிஷேக். தன் பொற்றோரிடம் கிடைக்காத தோழமை பாட்டியிடம் கிடைக்கிறது. அது மட்டுமில்லாமல் எத்தனை அழகாக தன் பிரச்சனைகளை புரிந்து கொண்டிருக்கிறாள்.

''என்னப்பா ஏன் பேச மாட்டேங்கறே? என்ன விஷயம் சொல்லு? சொன்னா உன் பிரச்சனையை சால்வ் பண்ண வழியைப் பார்க்கலாம். மனதிலேயே போட்டு வச்சிருந்தா என்ன பிரயோசனம் சொல்லு. எந்த கஷ்டத்திற்கும் தீர்வு கண்டு யோசிக்கணும். சொல்லு.''

கொள்ளுப்பாட்டியின் வார்த்தைகள் மனதை வருட மெதுவாக நடந்தவைகளை சொல்கிறான்.

''எப்படி பாட்டி கல்யாணம் பேசாம இனிமே எங்கூட பேசக் கூடாதுன்னு அவுங்க அம்மா சொல்லிட்டாங்க. நான் அத்தனை மோசமானவன்னு நினைச்சா என்னை எதுக்கு லவ் பண்ணணும். இத்தனை நாள் எதுவுமே கண்டுக்காம இப்ப என்ன பாட்டி ரெஸ்டிரிக்ஷன். அவுங்கம்மாதான் இப்படின்னா இவளுக்கு புத்தி எங்க போச்சு?''

''த பாருடா எப்பவுமே எந்த விஷயங்களையும் நம்ப நிலையிலே இருந்து மட்டும் பார்க்கக் கூடாது. அவுங்க நிலையிலும் இருந்து பார்க்கத் தெரிஞ்சுக்கணும்.''

''என்ன பாட்டி சொல்றீங்க?'' அவன் சற்று எரிச்சலாகக் கேட்க

''இத்தனை நாளா அந்தப் பொண்ணு உம் பின்னாடிதான் அலைஞ்சுகிட்டு இருக்கு. எத்தனை நாள் வரைக்கும் பின்னாடி வரமுடியும். எல்லாத்துக்கும் ஒரு முடிவு வேண்டாமா?''

''என்ன பாட்டி பேசறீங்க? இப்ப எங்க அம்மாகிட்டே போய் கல்யாணத்தைப் பத்தி எப்படி பேச முடியும்?''

''பேசறதா? என்ன உளர்றே? நீ என்ன படிக்கிற பையனா? இல்லை உங்க அக்கா யாருக்காவது கல்யாணம் ஆகாமா இருக்கா? இந்த காலத்துலே பொம்பளை பசங்களே எத்தனை தைரியமா இருக்கு. நீ ஏம்பா இப்படி? லவ் பண்ணும்போது இருக்கற தைரியம் அதை சொலறதுலே இல்லியா?''

''அப்படி எல்லாம் இல்லை பாட்டி, அம்மாகிட்டே மெதுவா விஷயத்தை ஓபன் பண்ணிட்டேன். அவுங்க ஒண்ணும் பிடி கொடுத்துப் பேசலை. அதுக்கு மேலே நான் என்ன பண்ண முடியும்?''

''சரிப்பா. உங் கம்பெனியிலே ஒரு மேட்டர் நடக்கணும். அது நடந்தே ஆகணும். உம் மேலதிகாரி காதுலே போட்டாச்சு. ஆனா அவர் ஒண்ணும் ஆக்ஷன் எடுத்த மாதிரி தெரியலே. அப்படியே விட்டுடுவியா? அந்தக் காரியம் நடக்கலேன்னா உனக்கு பாதிப்பு ஏற்படும்னா பேசாம இருப்பியா?''



பாட்டியின் கேள்வியில் சிறிது நேரம் தடுமாறுகிறான்.

''இல்லை பாட்டி அது கம்பெனி விஷயம். இது பேமலி.''

''வாழ்க்கையிலே எல்லாமே ஒண்ணுதான்டா. பேமிலியோ கம்பெனியோ முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்தா முடிவெடுத்துதான் ஆகணும்.''

அபிஷேக் மௌனமாக இருக்க, பாட்டியும் அவனைப் பார்த்தவாறே நிற்கிறாள்.

''எதுக்குடா கவலைப்படறே? நான் இருக்கேன். சுமையை இறக்கி வச்சுட்டே இல்லே. அதை நான் சரி பண்ணறேன்'' தாத்தா தோளை அழுத்தியபடி கூற, அபிஷேக்கின் கண்கள் நிறைந்தது. இரண்டு தலைமுறையை தாண்டியவர் தன் பிரச்சனைகளை புரிந்து கொண்டு இருக்கிறாரே!

''தாத்தா நீங்க கட்டாயம் ஹெல்ப் பண்ணுவீங்க? எனக்குத் தெரியும். ஆனா எப்படி? அம்மாவுக்கு இந்த சம்பந்தத்துலே இஷ்டமில்லாதது போல்தான் தோணுது.''

''அதைப்பத்தி நீ ஏண்டா கவலைப்படறே? உங்கம்மா அம்மாங்கற அதிகாரத்தை உங்கிட்டே காண்பிக்கறாங்க, நான் மாமனார், தாத்தாங்கற அதிகாரத்தை காண்பிச்சிட்டுப் போறேன்'' சொல்லிவிட்டு பொக்கை வாய் தெரிய சிரிக்க முகம் தெளிந்து புன்னகை புரிகிறான் அபிஷேக்.

தாத்தா தலையீட்டால் கட்டாயம் நல்லது நடக்கும். நம்பிக்கை வந்தது. 'நம்பிக்கைதான் வாழ்க்கை இல்லையா?'

# 21

அன்று அம்மா வந்த கொஞ்ச நேரத்தில் கீழே பெரியதாக பேச்சுக்குரல் 'அபிஷேக்... அபி...' அம்மா கத்த சற்று பெருமூச்சோடு இறங்கி வருகிறான்.

'எப்படியும் இந்த சூழ்நிலையை சந்தித்துதான் ஆக வேண்டும்' மெதுவாக இறங்கி வருகிறான். அம்மா முகம் சிவந்து கோபத்தின் உச்சியில் இருந்தாள்.

''என்னம்மா...''

''என்னடா? நான் கேக்க வேண்டிய கேள்வியை நீ கேக்கறியா? இதெல்லாம் என்ன?''

''ஐ அம் சாரிம்மா. ஏற்கனவே உங்க காதுலே விஷயத்தை போட்டுட்டேன்.''

''போட்டுட்டே இல்லை. இப்ப என்ன தாத்தாகிட்டே தூது விட்டிருக்கே.''

''அம்மா ப்ளீஸ். நான் வெளிப்படையாவே பேசறேன். நான் ஆர்த்தியை ரொம்ப லவ் பண்றேன் உங்களுக்குத் தெரியும் இல்லே. அவுங்க வீட்டுலே போர்ஸ் பண்றாங்க. வீட்டுலே பெரியவங்களை பார்த்து பேசச் சொல்றாங்க.''

''அதுனாலே'' இடுப்பிலே கைவைத்து பிள்ளையை முறைக்கிறாள்.

''எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலே. வருத்தமா இருந்தேன். தாத்தாவும் பாட்டியும் பார்த்துதான் சரி பண்றேன்னு சொன்னாங்க.''



''இப்ப எதுக்குமா கோபப்படறே? காலாகாலத்தில் நடக்கறது நடக்கணும். அவனுக்கும் இருபத்தாறு முடிஞ்சு போச்சு. இன்னும் கல்யாணத்தை பத்தி யாரும் யோசிக்காம இருப்பாங்களா? அதுவும் பிள்ளை சொன்னப்புறமும் நீ ஆக்ஷன் எடுக்காம இருக்கறது தப்பு'' தாத்தா சொல்ல, மீண்டும் முகம் மாறுகிறாள் அபிஷேக்கின் தாய்.

''தாத்தா கல்யாண விஷயத்திலே எடுத்தேன் கவுத்தேன்னு நடந்துக்கக் கூடாது. இவன் ஆசைப்பட்டா மட்டும் பெண் நம்ம வீட்டு மருமகளாயிடுமா? அதுக்கான தகுதி அவளுக்கு இருக்க வேண்டாமா?''

''என்னம்மா சொல்றே? ஆர்த்தியைத் தவிர தகுதி வாய்ந்த யாரும் கிடையாதும்மா. அந்தப் பொண்ணோட பழகி இருக்கியா? வேலைக்குப் போற பொண்ணு. படிச்சப் பொண்ணு எப்படி இருக்கா தெரியுமா?'' பாட்டி பேச, அபிஷேக்கின் தாயார் மௌனம் சாதிக்கிறாள்.

காதில் ஜிமிக்கி ஆட பாவாடை, சட்டை, தாவணியோட வந்த அந்த அழகியே கண் முன்னால் நிற்கிறது. அவள் மட்டும் அபிஷேக்கின் மனைவியானால் எத்தனை அற்புதமாக இருக்கும். நடக்குமா? இவன் ஒருமுறை அவளைப் பார்த்தால் போதும். கட்டாயம் இவன் காதல் எகிறிப் போய்விடும். அவளின் அட்ரஸ் தெரியவில்லை. அவள் எங்கே இருப்பாள் என்றும் தெரியவில்லை.

''என்னம்மா யோசிக்கிறே. அவ ரொம்ப நல்ல பொண்ணும்மா. அபிஷேக்குக்கு ஏத்த ஜோடி. நீ போய் பொண்ணுக் கேளு.''

''நானா?''

''ஆமாம்மா பிள்ளை வீட்டுக்காரங்கதான் போய் கேக்கணும். நம்ப ஜாதியிலே அதுதானே வழக்கம்.''

''எப்படி பாட்டி கேக்கறது? அவுங்களை யாரும் எனக்குத் தெரியாது. திடீர்னு போய் என் பையனுக்கு பெண்ணை கொடுன்னு கேக்க முடியுமா?''

''இதுலே என்ன இருக்கு? நீ கிளம்பறதுக்குள்ளே அபிஷேக்கிட்டே சொல்லி அனுப்பிடு அவன் பார்த்துப்பான்.''

''இத பாரும்மா அதது செய்ய வேண்டிய நேரத்தில் செய்யணும். தள்ளிப் போட்டுடாதே அப்புறம் நீதான் வருத்தப்படணும்.''

அதற்குமேல் தாத்தா, பாட்டியுடன் பேசாமல் விருட்டென்று எழுந்து போகிறாள் அபிஷேக்கின் தாயார். அபிஷேக் கவலையோடு தாயாரையே பார்க்கிறான். 'இந்த அம்மா புதிதுதான். எத்தனை சிரிக்கப் பேசுவாள். நல்ல தோழியாக இருப்பவள். இப்போது விரோதியைப் போல போவானேன். அவரவருக்கு அவரின் எண்ணங்கள். நாமே சில எண்ணங்களை வளர்த்துக் கொண்டு, மற்றவற்றை நிராகரித்து என்ன மனிதர்களோ சலித்துக் கொள்கிறான் அபிஷேக்.

''ஏய் என்னடா அதற்குள் சலிச்சுக்கறே? லவ் பண்றது அத்தனை ஈஸியா? அதை சக்ஸஸ்புல்லா முடிக்க சாமர்த்தியம் வேணும். புரிஞ்சுதா?''

''போங்க பாட்டி. எதுவும் நடக்கும்னு தெரியலே'' பெருமூச்சுவிட்டபடி அவன் எழுந்து போக, பாட்டியும் தாத்தாவும் கரிசனத்தோடு தன்னைப் பார்ப்பது தெரிந்தது. நெற்றியைச் சுருக்கிக் கொண்டு அவன் எழுந்து சென்றான்.

''டேய் அபிஷேக் இங்கே வா.''

''என்ன தாத்தா?''



''அம்மாகிட்டே போய் பேசு.''

''என்ன தாத்தா பேசறது?''

''ஆர்த்தியை கல்யாணம் பண்ணிக்கணும் இல்லே. அதைப் பத்தி பேசு.''

''அதெல்லாம் ஒண்ணும் நடக்காது தாத்தா. நீங்க பார்த்தீங்க இல்லே எப்படி பேசிட்டு போறாங்க.''

''எல்லாம் நடக்கும். நடக்காதுன்னா ஒண்ணுமே இல்லை. நீ தனியா பேசு. அம்மாகிட்டே போய் பேசு.''

''என்னத்தை தாத்தா பேசறது. நீங்கதான் என் பொஸிஷனை வச்சு நான் எல்லாத்தையும் சரி பண்றேன்னு சொன்னீங்க. உங்களாலேயே ஒண்ணும் பண்ண முடியலே.''

''எல்லாம் சரி பண்ணலாம். நீ முதல்லே உங்கம்மா கிட்டே போய் பேசு. ஆர்த்தியை உடனே கல்யாணம் பண்ணிக்கணும்னு சொல்லு. அவுங்க வீட்டுலே கட்டாயப் படுத்தறதை சொல்லு.''

''பார்க்கலாம் பாட்டி, அப்புறம் போய் பேசறேன்.''

''அப்புறம் இப்புறம் எல்லாம் வேண்டாம். முதல்லே கிளம்பு, போ. மாடிக்குப் போ. அம்மாகிட்டே பேசு.''

பாட்டியும், தாத்தாவும் சேர்ந்து வலுக்கட்டாயப்படுத்த லேசான பெருமூச்சுடன் மேலே போகிறான். ஒரு நிலைமைக்கு மேல் எதையும் வலுக்கட்டாயப்படுத்த முடியாது. தாத்தா, பாட்டியிடம் என்ன சொன்னாலும் புரிந்து கொள்ள மறுக்கிறார்களே. இவர்களுக்கே புரியவில்லை. அம்மாவிற்கு எப்படி புரிய வைப்பது? அம்மாவிற்கு தன் தேர்ந்தெடுப்பு பிடிக்கவில்லை என்பது நன்றாகவே புரிகிறது. ஆனால் பிடிக்காததற்கு என்ன காரணம் யோசிக்கிறான்.

ஆர்த்தி வேறு ஜாதியைச் சேர்ந்தவளல்ல. பார்ப்பதற்கும் மிகமிக நன்றாக இருக்கும் பெண். நல்ல வேலையிலும் இருக்கிறாள். எல்லாவற்றையும் விட படித்தவள், சம் பாதிப்பவள் என்ற திமிர் இல்லாதவள். உதவி என்று போய் விட்டால் சளைக்காமல் உதவி செய்பவள். வெளி வேலை களில் மட்டுமல்ல, வீட்டு வேலைகளிலும் தானே முன் வந்து வேலை செய்பவள். இந்தக் காலத்தில் எந்தப் படித்த பெண் முன் வந்து ஓடி வந்து வீட்டு வேலைகளில் பங்கு கொள்கிறது. அபிஷேக் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறான். பழகியும் இருக்கிறான். வெளியில் வேலைக்குப் போய் சம்பாதித்து விட்டாலே வீட்டில் ஒரு ஸ்பூனைக் கூடத் தொடாது. ஒருமுறை ஒரு நண்பி கூப்பிட்டாள் என்று அவள் வீட்டுக்குப் போய் ''என்னப்பா வீட்டை இப்படி வச்சிருக்கே?'' வாய்விட்டே கேட்டு விட்டான். துணியும், மணியும், புத்தகங்களும் இறைந்து கிடக்க பார்ப்பதற்கே அருவருப்பாக இருந்தது.

''போய்யா... நாள் மொத்தமும் வேலை செஞ்சிட்டு வரேன். இன்னிக்கு தான் ரெஸ்ட். இதெல்லாம் என் வேலை இல்லை. அம்மா...'' என்று அம்மாவை இறைந்து கூப்பிட அதிர்ந்து போகிறான்.

''என்ன பெண்மணி இவள்? என்ன ரேகா? பர்ஸனல் ஹைஜீன்ங்கறது முக்கியமில்லையா. சுத்தம் சோறு போடும்னு படிச்சதில்லையா?''

''எதுலே எழுதி இருக்காங்க? என்னடா இத்தனை மடிசஞ்சியா இருப்பேன்னு நினைக்கவே இல்லை. உனக்கு ஃபிரீதிங்கிங் கிடையாதா?'' ரேகா கேட்க,

''வீட்டை சுத்தமா வச்சிக்கன்னா அது பத்தாம்பசலித் தனமா? ரொம்ப சரி... நான் கிளம்பறேன்'' என்றவாறே



அதற்குமேல் அங்கே தங்காமல் கிளம்பி வந்துவிட் டான்.

ரேகா மட்டுமல்ல. இன்னும் எத்தனையோ நண்பிகள் அப்படித்தான். அவர்களில் ஆர்த்தி முழு விதிவிலக்கு. இவன் அவர்கள் வீட்டிற்கு எத்தனையோ முறை சென் றிருக்கிறான். அவன் வந்துவிட்டாலே டிபன் கொண்டு வந்து தந்து காபி கலந்து என்று எல்லாமே செய்திருக் கிறாள். வீட்டை வேறு பளபளவென்று வைத்திருப்பாள். தப்பித்தவறி ஒரு சிறு குப்பை இருந்தாலும் போதும் அதை எடுத்து குப்பை தொட்டியில் போட்டு விட்டு வரும் பெண். எந்த வேலையையும் மிக மிக நேர்த்தியாக செய்யும் பெண். அதைவிட என்றாவது தன் குடும் பத்தைப் பற்றி வெறுப்போடு பேசினால்,

''போ... அபி, பேமலின்னா அப்படித்தான் இருக்கும். உன் நிலையிலிருந்து பார்க்கிறே? அவங்க நிலையி லிருந்தும் பிரச்சனையை பார்க்க கத்துக்க'' என்று உப தேசம் செய்யும் பெண். வீட்டிற்கு வந்து எத்தனையோ வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்ததாக தாத்தா, பாட்டி புகழ்ந்ததாக ஞாபகம். இத்தனை இருந்தும் அம்மாவிற்கு மட்டும் ஏன் பிடிக்கவில்லை?

அம்மா ஏன் மறுக்கிறாள் என்று நினைக்கும் போது ஆத்திரம் வந்தது. ஆனால் அம்மா மேல் கோபம் வரவில்லை. அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அவனுக்கு வேண்டியதை எல்லாம் நினைத்தாலே அம்மா நிறைவேற்றி வைத்திருக்கிறாள். அப்பாவிடம் எதை யுமே கேட்டதில்லை. அப்பா என்ற சொல்லுக்கு ஒரு மனிதர் அத்தனைதான். புரோகிரஸ் ரிப்போர்ட்டில் கையெழுத்து போடுவதிலிருந்து பள்ளிக்கு அழைத்துச் செல்வது, காசு வேண்டுமென்றால் தருவது இப்படி

எல்லாமே அம்மாதான். சிறு வயதில் பிள்ளைகளின் ஆசையைப் பார்த்து வேலையை செய்வாள். தன் பிள்ளைகள் இந்த தின்பண்டத்தை விரும்புகிறது என்று நினைத்தாலே வாங்கி விடுவாள். குழந்தைகளின் உள்ளுணர்வை புரிந்து கொண்டு அதை திருப்தி படுத்துபவள். அப்படி இருக்கையில் தான் ஆசைப்பட்ட ஆர்த்தியையும் மட்டும் ஏன் தர மறுக்கிறாள்?

இப்படி ஆயிரம் நினைவுகளோடு அம்மாவின் அறையின் முன்பு போய் நிற்கிறான். மெதுவாக கதவைத் தட்டுகிறான். அப்பாவிடம் அம்மா ஏதோ பேசிக் கொண்டிருக்கிறாள் போலும். கையை கையை ஆட்டி ஏதோ பேசிக் கொண்டிருக்கிறாள். தன் பிரச்சனையைப் பற்றிதான் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்ததும் எரிச்சல் வந்தது.

அப்பாவிடம் அம்மா பேசுவதைப் பார்த்ததும் எரிச்சல் வந்தது. திரும்பிவிடலாம் என்று நினைத்தவன், மறுபடியும் ஆத்திரம் பெருக கதவைத் தட்டுகிறான்.

விறுவிறுவென்று கதவைத் திறந்த அம்மா எரிச்சலோடு பிள்ளையைப் பார்க்க,

''என்னடா கண்ணா வா'' அப்பாவின் ஆசையான வார்த்தைகளைக் கேட்டவன் மலைத்துப் போய் பார்க்கிறான்.

## 22

''வாடா அபிஷேக்'' அப்பா தன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது முதல் முறை. சற்று ஆச்சரியத்துடன் அவன் நிற்க,



''என்னடா வேணும்?'' அம்மா எரிச்சல்படுகிறாள். அம்மா எரிச்சல்படுவதும், இதுதான் முதல் முறை. எப்போது அறைக்கு வெளியே வந்து நின்றாலும்,

''வாடா கண்ணு'' என்று உள்ளே கூப்பிடுபவள் இன்று எரிச்சல்படுகிறாள்.

''என்னடா? கேக்கறேன் இல்லே.''

''உங்க கூட பேசணும்.''

''என்ன பேசப் போறே? என்ன பேசணும்?''

''அம்மா பிளீஸ். உங்களுக்கு என் பொஸிஷனை சொல்லணும். நீங்க ஆத்திரமா இருக்கீங்கன்னு புரியுது. ஆனா எதுக்காக? எல்லாத்தையுமே நான் செலக்ட் பண்ண உதவி செய்திருக்கீங்க. எங்க விருப்பத்திற்கு நீங்க இதுவரைக்கும் மறுப்பு சொன்னதே இல்லை. இப்ப என்ன?''

''அப்படியா? இத்தனை நாள் உங்க விருப்பத்தை நிறைவேத்தி வச்சேன் இல்லே. இப்ப என் இஷ்டப்படி நடக்கக் கூடாதா?''

''அம்மா தேவை இல்லாததுலே கூட என் இஷ்டத்தை நிறைவேத்தி வச்சீங்க? ஆனா இப்ப தேவையானதுக்கு மறுத்தா என்னம்மா அர்த்தம்?''

''எதுடா தேவை? சும்மா ஏதோ அட்ராக்ஷன்லே நீ பார்த்து வச்சது தான் ரொம்ப எக்ஸலண்டா தோணுது உனக்கு. செய்துகிட்டப்புறம் படப்போறே? இதுக்கு அவசரப்படாதே?'' அபிஷேக்கின் தாயார் சொல்ல,

''அம்மா நான் அவசரப்படலே. பெண்ணோட அம்மா தான் அவசரப்படறாங்க. பொண்ணு கேக்க வரச் சொல்றாங்க.''

''ரொம்ப நல்லா இருக்குடா. பையனை கைக்குள்ளே போட்டுகிட்டு இந்த வேலை எல்லாம் நடக்குதா? அதான் தாத்தா பாட்டிகிட்டே சிபாரிசுக்கு போயிட்டே'' அம்மாவின் குரல் குற்றம் சாட்டும் தொனியில் இருக்க,

''அம்மா பிளீஸ் புரிஞ்சுக்கோங்க. நான் ஆர்த்தியை ரொம்ப லவ் பண்றேன். அவ இல்லாத லைப்பை என்னால நினைச்சுக் கூட பார்க்க முடியாது. உங்ககிட்டே அன்னிக்கே சொல்லிட்டேன். சரி நீங்க ஏதோ சரி பண்ணுவீங்கன்னு நம்பிகிட்டு இருந்தேன். இது நடுவிலே அவுங்க வீட்டுலே பெரிய பிரச்சனை. மேரேஜ் பிக்ஸ் பண்ணாம இனிமே பார்க்கக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க. அவளும் பாவம் என்ன செய்வா? அதுதான் உங்ககிட்டே...'' அவன் சொல்லி முடிக்குமுன் சீறுகிறாள் தாயார்.

''ஓ... அம்மாவோட கஷ்டம் பிரச்சனை எதுவும் புரியாது. ஆனா கொஞ்ச நாள் லவ் பண்ணவளோட சகல பிரச்சனையும் புரியுது.''

அம்மாவின் விதண்டாவாதம் எரிச்சலைக் கிளப்பியது. ''உங்களுக்கு என்னம்மா பிரச்சனை? எதை நான் புரிஞ்சுக்கணும்'' அவன் ஆத்திரத்துடன் சீற,

''என்ன புரிஞ்சுகிட்டே? புரிஞ்சிருந்தா இப்படி லவ் பண்ணிகிட்டு வந்துருப்பியா?''

''அவளை லவ் பண்றதுக்கும் உங்க பிராப்ளத்திற்கும் என்னம்மா சம்பந்தம்?''

''சம்பந்தம் இருக்குடா. உங்க கொள்ளுத் தாத்தா பாட்டி பத்தி நான் பேசலே. உங்க தாத்தா பாட்டி பத்தி பேசறேன். ஏற்கனவே எப்படி நடத்தறாங்க? இந்த அழகுலே நீ லவ்



பண்றது தெரிஞ்சுதுன்னா எனக்கு தான் மானக்கேடு. வறுத்து வாயிலே போட்டுக்கிடுவாங்க.''

''அம்மா நீங்க ஒண்ணுமே செய்யலைன்னாலும் தாத்தா பாட்டி அப்படித்தான் இருப்பாங்க. உங்களை குறை சொல்லாம இருக்க மாட்டாங்க.''

''அப்ப... என் பேச்சைக் கேட்கப் போறதில்லை.''

''என்ன?''

''உன்னுது எல்லாம் லவ்னு என்னால எடுத்துக்க முடியலே. அது வெறும் அட்ராக்ஷன்தான். அதனால நான் சொல்றதை செய். உனக்கு ஏத்தவ அந்தப் பொண்ணு. நீ பார்த்தே ஆர்த்தி, பார்த்தி எல்லோரையும் விட்டுடுவே. அதுனால முதல்லே அவளுக்கு இன்டிரடியூஸ் பண்ணி விடறேன். பாரு உனக்கு அவளைப் பிடிக்கலைன்னா அப்புறம் நீ சொல்ற பெண்ணைப் பார்க்கலாமே.''

''ஏய் என்ன பேசறே நீ ஸ்டுபிட்'' என்கிறார் அப்பா.

''என்ன சொல்றீங்க?'' அம்மா கண்ணை விரித்துப் பார்க்கிறாள்.

''என்ன பயித்தியம் மாதிரி பேசறே? அவன் ஒரு பொண்ணை விரும்பறேன்னு சொல்றான். அதை ஒத்துக்காம ஏதேதோ பேசறே? என்னாச்சு உனக்கு?''

''இல்லைங்க அந்த பொண்ணு அவனுக்கு சூட்டாகாது.''

''இத பாரு சூட்டாகுமோ ஆகாதோ அவனுக்கு பிடிச்சிடுச்சுன்னா அவன் அட்ஜஸ்ட் பண்ணிக்கட்டும். அவனுக்கு யாரைப் பிடிக்குதோ அவதான் நம்ப வீட்டு மருமக. இதுலே நீ எதுவும் குட்ட குழப்பாதே.''

அபிஷேக் அப்பாவை நன்றியோடு பார்க்கிறான். அப்பாவிற்கு குடும்பத்தில் அக்கறை இல்லை என்று நினைத்தானே. லேசாக கண்கள் கலங்கி விட்டது.

''தேங்க்ஸ்பா'' என்கிறான்.

அவன் தலையைத் தடவிக் கொடுத்தவர் 'சியர் அப் மை பாய்' என்று தட்டிக் கொடுத்தவர்,

''கவலைப்படாதே நான் பார்த்துக்கறேன்'' என்றார்.

அதற்கு மேல் அங்கே நிற்காமல், சற்று சந்தோஷத்தோடு தன் அறைக்குப் போகிறான். தாத்தா, பாட்டியை மனம் நன்றியோடு நினைத்தது. செல்லில் ஆர்த்தியை தொடர்பு கொள்ள வேண்டும் போல் மனம் பரபரத்தது. செல்லை எடுத்துப் பார்த்து ஆர்த்தி கவனிக்கிறாளா பார்க்கிறான். ஆர்த்தியிடம் இருந்து எந்த பதிலும் இல்லை.

ஒருநிமிடம் தன் வெற்றியைக் கொண்டாட வேண்டும் என்று மனம் பரபரத்தது. அடுத்த நிமிடம் தன்னைத் தூக்கிப் போட்ட ஆர்த்தியை நினைத்து எரிச்சல் வந்தது. அவளைத் தொடர்பு கொள்ளலாமா? மனம் பரபரக்க தன்னை அடக்கிக் கொள்கிறான்.

இங்கே ஆர்த்தியின் நிலைமையும் ஏறக்குறைய அவன் நிலைமையில் தான் இருந்தது. 'திருமணத்தை நிச்சயம் செய் என்று சொன்னது தன் தவறா? சும்மா ஜாலிக்காகத்தான் தன்னிடம் பழகுகிறானா? ஆனால் அபிஷேக் அப்படிப்பட்டவன் இல்லையே. ஒருவேளை தான் கோபமாகச் சொன்னதால் கோபித்துக் கொண்டு விட்டானா?' என்ன முயன்றும் மனம் அவனையே தான் நினைத்தது. அவனைத் தொடர்பு கொள்ளலாமா மனம் தவியாய் தவித்தது. மறுகணம் மனதில் கோபம் மோத



பல்லைக் கடிக்கிறாள். இத்தனை நாள் லவ் பண்ணதெல்லாம் பொய்யா? சும்மா சுத்தலாம் என்று அவன் கணக்கு போட்டானா? 'மனம் அவனை என்னென்னவோ நினைத்தது, இருந்தும் உணர்வுகள் அவற்றை எதையுமே எடுத்துக் கொள்ளவில்லை' ஒதுக்கித் தள்ளியது.

'என் அபிஷேக்கால் தவறாக நினைக்கக் கூட முடியாது. அப்படி இருக்கும் போது தவறாக நடப்பானா? தான்தான் அவனை அதிகமாக காயப்படுத்தி விட்டோம். அம்மா சொன்னால் என்ன? அவனுடைய சூழ்நிலையைப் புரிந்து கொள்ள வேண்டாமா? அவன் வீடே அவனுக்கு பிரச்சனையானது. அது எனக்குத் தெரியாது. அந்த மாதிரி சூழ்நிலையில் இருப்பவன், இத்தனை ஜோவியலாக, சோஷியலாக இருப்பதே ஆச்சரியம். 'பாவம் அபி... அம்மா சொன்னால் சொல்லிவிட்டு போகட்டும். அவர்களுக்குத் தெரியாமல் அபிஷேக்கை சந்திக்க வேண்டியதுதான்.'

இதை நினைத்தவுடனே மனம் உல்லாசத்தில் மிதந்தது. கை பரபரத்தது. அவனைக் கூப்பிட்டு பேசலாமா? ம்... ம்... வேண்டாம் நாளைக்கு அவனை நேரில் பார்த்து அசத்துவோம். அதற்கு மேல் இருப்பும் கொள்ளவில்லை. தூக்கமும் வரவில்லை. பீரோவைத் திறந்து அடுத்த நாளைக்கு என்ன போட்டுக் கொள்ளலாம் என்று ஆராய்கிறாள்.

அபிஷேக்கிற்குப் பிடித்த அந்த அரக்கு நிற சுடிதார். அதில் மஞ்சளில் எம்பிராயிட்டரி செய்து முத்து வைத்து தைக்கப்பட்டது அவனுக்கு மிக மிக பிடித்தமானது. சட்டென்று அதை எடுத்து ரெடியாக வைத்துக் கொண்டாள். நேரத்தைப் பார்த்தவாறே எழுந்து அமர்ந்து

கொள்கிறாள். தலையணையை அணைத்தவாறே படுக்கிறாள். திரும்பி, திரும்பி படுத்து படுத்து மணியை பார்த்தவாறே அமர்ந்திருக்கிறாள்.

'ஐயோ சீக்கிரம் விடியாதா? நாளை திடீரென்று அலங்காரம் செய்து கொண்டு முன்னே போய் நின்றால் என்ன நடக்கும்? இந்த உடையை எப்போது போட்டுக் கொள்வோம்' மனம் பரபரக்க யோசிக்கிறாள். மறுபடியும் அந்த உடையை எடுத்து நெஞ்சில் சார்த்திக் கொண்டு கண்ணாடி முன் அழகு பார்க்கிறாள். இதை பார்த்தவுடன் அபிஷேக் வாயைக் குவித்து விசில் அடிப்பது போல் தோன்ற சந்தோஷப்படுகிறாள். உறக்கம் பிடிக்காமல் நின்று கொண்டே இருக்கிறாள். இப்படி, அப்படி அலைந்து எப்போது உறங்கினாளோ தெரியாது.

அங்கே அபிஷேக்கும் அலைச்சலில் ஈடுபடுகிறான். எஸ்எம்எஸ் அனுப்ப டைப் அடித்து அடித்து பிறகு அதை அடித்து விட்டுக் கொண்டே இருக்கிறான். 'அவள் பேச மாட்டாள். திமிர் அதிகம். பேசாமல் அம்மா சொல்லும் பெண்ணையே பார்க்கலாம்.' எரிச்சலில் அப்படி யோசிக்கிறான். எத்தனையோ போராட்டத்திற்குப் பிறகு உறங்க ஆரம்பிக்கிறான்.

அன்று காலை எழுந்து வரும்போதே அப்பா கூப்பிடுகிறார். இரவு நடந்தது எல்லாவற்றையும் மறந்தவனாக பல்லை விளக்கி விட்டு வரும்போதே அப்பாவின் அழைப்பு. அந்த வீட்டிலேயே இருவரும் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள். ஆனாலும் அப்பாவுடன் சகஜமாக ஒரு நாள் கூட பேசியதாக ஞாபகம் இல்லை. அவன் ஆச்சரியமாக அப்பாவைப் பார்க்க,



''வா காபி எடுத்துக்க.'' டைனிங் டேபிளில் அமர்ந்து காபி குடித்தவர், அவனுக்கும் தருகிறார். மெதுவாக அவர் அருகே அமர்ந்தவன், ''குட்மார்னிங் டாட்'' சொல்லி விட்டு காபி அருந்துகிறான்.

''என்னடா இராத்திரி தூங்கலையா. டோன்ட் வொரி. எல்லாம் சரி பண்ணிடலாம். எங்காதுலே போட்டுட்டே இல்லே நான் பார்த்துக்கறேன்'' என்றவாறு தோளைத் தட்டுகிறார்.

அபிஷேக்கிற்கு விடியற்காலையில் ஐஸ்கிரீம் சாப்பிட்ட சந்தோஷம். ''என்ன பையா குதிக்கலாம் போல இருக்கா?'' பிள்ளையிடம் கண்ணை சிமிட்டியவர்,

''போ... போய் ஆர்த்தியைப் போய் பாரு. என்ஜாய் மை சன்'' முதுகை தட்டி சிரிக்கிறார்.

அப்பா சொன்னதும் உற்சாகம் தலைக்கேற பர்முடாஸ் அணிந்து கொண்டு ஜாகிங் கிளம்புகிறான்.

'பரவாயில்லை தாத்தாவோட சொல் நன்றாகத்தான் வேலை செய்கிறது.' பலமடங்கு உற்சாகத்தோடு ஓடுகிறான்.

இங்கே ஆர்த்தியும் காலையில் எழுந்து குளித்துவிட்டு அவனுக்கு பிடித்த உடையை அணிந்து கிளம்புகிறாள்.

''என்ன இன்னிக்கு காலையிலே கிளம்பிட்டே? என்ன விஷயம்?'' அம்மா சந்தேகமாகக் கேட்க, பதில் பேசாது கிளம்புகிறாள்.

''என்னடி கேட்டுகிட்டே இருக்கேன் என்னாச்சு?''

''என்னம்மா நீ, எனக்கு டேன்ஸ் பிராக்டிஸ் இருக்கு. இன்னிக்கு காலையிலே ரிகர்சல் பண்ணிட்டு நான்

ஓடணும்.. ஏற்கனவே சொல்லலையா நான்'' சற்று எரிச்சலோடு பெண் கேட்க, அம்மா மௌனமானாள்.

திருட்டுத்தனமாக சில காரியங்கள் செய்யும் போது மனதில் இன்பம் மோதத்தான் மோதுகிறது. சிறுவயதில் திருட்டுத்தனமாக மாங்காய் அடிப்பது, யாருக்கும் தெரியாமல் காதலனை சந்திப்பது இது எல்லாம் அந்தந்த வயதில் இன்பத்தைக் கொடுக்கக் கூடிய சமாச்சாரம்தான்.

ஆர்த்தியும் ஒரு துள்ளலோடு புறப்பட்ட போது அவள் எதிர்வீட்டு இளைஞன் கார்த்திக் ஓடிவருகிறான்.

''ஹாய் ஆர்த்தி. என் வண்டி காலிப்பா. தயவு செய்து ஹெல்ப் பண்ணு.'' தான் போகும் இடத்தைச் சொல்லி அங்கே விடும்படி சொல்ல, ''ஓ.கே. சீக்கிரம் வா உன்னை டிராப் பண்ணிட்டு நான் போறேன்.'' அவனை ஏற்றிக் கொண்டு பறக்கிறாள். 'இவனை இறக்கி விட்டு விட்டு அபிஷேக்கைப் பார்க்க வேண்டுமே.' தலைதெறிக்க ஓட்டியதில் ஒரு ஓரமாக ஜாகிங் செய்து கொண்டிருந்த அபிஷேக் கண்ணில் படவே இல்லை.

''யப்பா ஜான்ஸி ராணி. கொஞ்சம் மெதுவாப் போம்மா.'' பயந்தவாறே, அவளின் தோளைப் பிடித்தவாறு கார்த்திக் கத்த, பகபகவென்று சிரித்தபடி ஓட்டும் ஆர்த்தியை வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி நின்கிறான் அபிஷேக்.

## 23

ஒரு நிமிடம் திக்கென்றது. 'என்ன இது ஆர்த்தி, ஆர்த்திதான். தணலில் விழுந்த புழுவாக துடித்துக்



கொண்டிருக்கிறோம். எவனோ ஒரு தடியனை ஏற்றிக் கொண்டு, புதிய ஆடை அந்த சுடிதார் அவனுக்கு மிக பிடித்தமான ஒன்று அதை போட்டுக் கொண்டு ஜொலிக்கிறாள். போதாகுறைக்கு அவன் என்ன ஜோக் சொன்னானோ. என்னமா சிரிக்கிறாள். அவனுக்கு பெண் நண்பர்கள் போல், அவளுக்கும் ஆண் நண்பர்கள் உண்டு. அதை என்றுமே அவன் தப்பாக நினைத்ததில்லை. ஆனால் தன்னிடம் பேசாத போது, இவள் இத்தனை சந்தோஷமாக இருப்பாள் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

மனதை நெருட எரிச்சல் உற்றான். தன் மேல் ஆசையில்லாத அவளிடம் போய் என்ன லவ் வேண்டிக் கிடக்கிறது. நினைக்க, நினைக்க ஆத்திரம் வர ஜாகிங்கை பாதியிலே விட்டுவிட்டு திரும்பி வருகிறான். அந்த சுடிதாரில் ஆர்த்தி தக, தகவென்று மின்னியது மனதைப் படுத்தியது. அவளை நினைக்கக் கூடாது என்று தள்ளி, தள்ளி வைத்தும் ஆர்த்தி அவன் மனதில் சந்தோஷமாக நடமாடுகிறாள். அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்காமல், திரும்பி வீட்டிற்கே ஓடி வருகிறான்.

வீட்டிற்கு வந்தும் மன படபடப்பு அடங்கவில்லை. முகம் வியர்த்து வழிந்தது.

''என்னடா ஜாகிங்லேர்ந்து சீக்கிரம் வந்துட்டே?'' கொள்ளுப்பாட்டி கேட்க, சிரிக்க முடியாமல் சிரிக்கிறான்.

''என்னடா முகமே சரியில்லை. என்னாச்சு? நேத்து அம்மா ஏதானும் திட்டினாங்களா?''

''அதுக்கா முகத்தை தூக்கிவச்சுகிட்டு இருக்கே? எந்த விஷயத்தையும் நம்ப இஷ்டப்படி செய்யும் போது

தடங்கல் அதிகமாக வரத் தான் வரும். அதெல்லாம் தைரியமா பேஸ் பண்ணனும். லவ் பண்ண தெரிஞ்சவன் இதையெல்லாம் பார்த்து பயப்படலாமா?'' கொள்ளுத் தாத்தா அட்வைஸ் செய்ய,

''ஓ.கே. தாத்தா'' என்றவன், மெதுவாக நகர்ந்து போகிறான். தன் அறைக்கு சென்றவன், அறையினுள் அவன் கட்டிலில் அம்மா அமர்ந்திருப்பதைப் பார்த்து மலைத்துப் போகிறான்.

''அம்மா எதற்காக இங்கே அமர்ந்திருக்கிறாள்'' ஒருநிமிடம் மனம் தூக்கிப்போட்டலும் அடுத்த நிமிடம் ''சொல்லுங்கம்மா'' என்று அருகில் அமர்ந்து கொள்கிறான்.

''உங்கிட்டே பேசணும்டா.''

''பேசுங்களேன் அம்மா''. அவன் சொல்ல, அம்மா எழுந்து போய் கதவை சார்த்திவிட்டு வந்தாள்.

அம்மா என்ன பேசப்போகிறாள் என்று தெரிந்தே இருந்தது. இன்று ஆர்த்தியைப் பார்க்காமல் இருந்திருந் தால் அம்மா பேச்சை கேட்டே இருந்திருக்க மாட்டேன். பேச்சே வேப்பங்காயாக இருந்திருக்கும். இப்போது அப்படி அல்ல. ஆர்த்தியின் மேல் ஏற்பட்ட கோபத்தி னால் அம்மாவின் வார்த்தைகளுக்கு செவி சாய்க்கத் தொடங்கினான்.

''இத பாருப்பா அம்மா இப்படி பேசறேன்னு எம் மேலே கோபிக்காதே. நான் சொன்னாலும் உனக்குப் புரியுமான்னு தெரியலை. உங்கப்பாவுக்கும் எனக்கும் இராத்திரி ஒரே சண்டை. நீ பார்த்த பொண்ணை எதையும் விசாரிக்காம கல்யாணம் செய்து கொடுக்கணும்ங்கறார். தப்பா நினைக்காதேப்பா. எனக்கு அதிலே உடன்



பாடில்லை. அம்மா இப்படி சொல்றான்னு கோபிக்காதே. புரிஞ்சுக்க.''

அவன் மௌனமாக இருக்க,

''இத பாருடா. காதல் கீதல்னு அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வராதே. இந்தக் காலத்துலே முக்கால்வாசி காதல் கல்யாணத்தோட முடிஞ்சு போவுது. கல்யாணத் துக்கு அப்புறம் சாதாரண மனிதாபிமானம் கூட குறைஞ்சு போறது. கல்யாணத்துக்கு அப்புறம் சாதாரண குறைகள் கூட கண்ணுக்கு பூதாகரமாகத் தெரியும். ஏற்கனவே முடிஞ்சு போன காதல் முறிஞ்சும் போகும்.''

அபிஷேக் தன் அன்னையையே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறான்.

''இத பாருடா புரிஞ்சுக்க. அம்மா உனக்கு நல்லது மட்டும் தான் செய்வேன். உனக்குன்னு ஒரு பொண்ணை பார்த்து வச்சிருக்கேன். அந்தப் பொண்ணு மட்டும் உன் லைப்லே வந்தாள்னா நான் மட்டுமல்ல, நம்ம பேமலி மட்டுமல்ல, முக்கியமா நீ ரொம்ப சந்தோஷமா இருப்பே. அப்பேற்பட்ட பொண்ணு அவ.'' அபிஷேக் பதில் பேசா மல் அம்மாவையே பார்க்கிறான்.

''என்னடா பார்க்கிறே? என்னை தப்பா நினைக்காதே. மனசு ஒத்துப் போறதுதான் லவ். இந்த அம்மா என்ன இந்த விளக்கமெல்லாம் பேசறா? ஆனா கல்யாணத்துக்கு மட்டும் ஒத்துக்க மாட்டேங்கறாங்களேன்னு நினைப்பு உனக்கு ஒடுது இல்லே. இப்பவும் சொல்றேன்டா. அந்த ஆர்த்தியா, கீர்த்தியா அவளை பண்ணிகிட்டா நீ நிம்மதியா வாழ முடியாது. இப்ப என்னவோ என்ஜாய் பண்ணா தான் தெரியும். அப்புறம் கஷ்டப்படும்போதுதான்

புரியும். பெரியவங்க எப்பவும் பலதையும் யோசிச்சுதான் முடிவு பண்ணுவாங்க. நான் உனக்குத் தேர்ந்தெடுத் திருக்கற பொண்ணு, தி பெஸ்ட். இதோட அவளை நாலு தடவை பார்த்திருக்கேன். நாலு தடவையும் ரொம்ப டீசண்டாதான் டிரஸ் பண்ணிட்டு வந்தா. அதுமட்டுமல்ல எம் பர்ஸை ஒருத்தன் திருடின போது எல்லோரும் பார்த்துக்கிட்டு இருந்தபோது டூ விலர்லே அவனை துரத்திப் பிடித்து பேக்கைத் திருப்பி வாங்கி கொடுத்தா. எப்பவும் சிரிச்ச முகம். சாப்ட் ஸ்போக்கன். காலேஜ்லே படிக்கிறாளோ, இல்லை வேலைல இருக்காளோ தெரி யாது. பட் இந்த காலத்துலே இப்படிப்பட்ட பொண்ணை தேடறது ரொம்ப கஷ்டம்.''

அபிஷேக் எந்த பதிலையும் கூறவில்லை. எதையும் கூறும் மனநிலையில் அவன் இல்லை. அவன் மனது ஆர்த்தியின் துரோகத்தை நினைத்து கனன்று கொண் டிருந்தது. 'அவளை நினைத்து நான் உருகிக் கொண்டு இருக்கிறேன். ஆனா அவள்? அம்மா சொல்வது போல் திருமணம் முடிந்ததும் இப்படி எல்லாம் ஆனால்?' அவ னுக்கும் இந்த காலப் பெண்களைப் பற்றி நிறையவே தெரியும். படித்து வேலைக்குப் போகிறோம் என்பதால் சாதாரணமாகவே தலைக்கனம் பிடித்து அலையும் பெண்கள். அந்த காலத்துப் பெண்களுக்கு இருக்கும் பொறுமை, உழைப்பு, அன்பு, இரக்கம் எதுவுமே இப் போது இருக்கும் பெண்களுக்கு இருப்பதாகவே தெரிய வில்லை. ஆர்த்தி சற்று வித்தியாசமானவள் என்று நினைத் தான். அதுவும் இப்போது தவறு என்று புரிந்து விட்டது.

''என்னடா நான் பேசிகிட்டே போறேன் எதுக்கும் பதிலில்லே. இவளுக்கு என்ன தெரியும்னு நினைக்



கறியா?'' அம்மாவின் குரலில் லேசான வருத்தமும், அழுகையும் இருந்தது.

''அப்படி எல்லாம் இல்லேம்மா. உங்க இஷ்டப்படி செய்யுங்க'' அவன் சொல்ல, சொல்ல அம்மா பூரிக் கிறாள்.

''எம்பிள்ளைன்னா பிள்ளைதான்'' பிள்ளையின் கன்னத்தை நெட்டி முறிக்கிறாள்.

''கண்ணா பொண்ணைப் பாரு - உனக்கு பிடிக் கலைன்னா கண்டிப்பா வேண்டாம். கவலைப்படாதே. அதுக்காக சும்மாவே பொண்ணு வேண்டாம்னு சொல்லக் கூடாது. அவளைப் பார்த்தாலே உம் மனதுக்கு பிடிச்சிடும். கூடிய சீக்கிரம் நான் அரேன்ஜ் பண்றேன். ஓ.கே.'' என்றவள் பையனின் தலையை பாசமாகக் கோதிவிட்டு வெளியே போகிறாள். கட்டிலில் அமர்ந்து கன்னத்தில் கை வைத்தபடி அமர்ந்திருக்கிறான். 'இத்தனை நாட்கள் என்னைப் பார்க்கவில்லை. அந்த வருத்தம் அவளிடம் கொஞ்சம் கூட இல்லையா என்ன? எப்படி சந்தோஷமாக சிரித்தபடி செல்கிறாள். ஒருவேளை என்னை மறந்து விட்டாளா? அவள் தாயார் சொல்படி வேறு யாரையேனும் திருமணம் செய்து கொள்ளப் போகிறாளா என்ன?' அதற்குமேல் உட்காரக் கூடப் பிடிக்கவில்லை. தவித்த படி நேரத்தைக் கடத்தியவன் பின் அலுவலகம் செல்ல புறப்படுகிறான்.

அலுவலகம் செல்லும் வரை இருந்த மனக்குழப்பம், கோபம், கவலை எல்லாம் மறந்து போனது. அபிஷேக் அப்படியே வேலையில் ஆழ்ந்து போகிறான். அன்று மதியம் சாப்பிடக் கூடப் போகாமல் வேலை மும்முரத்தில்

இருக்க, அவனைப் பார்க்க வேண்டும் என்று தவியாய்த் தவித்துக் கொண்டு இருந்தாள் ஆர்த்தி.

அவனுக்குப் பிடித்த சுடிதாரைப் போட்டுக் கொண்டு இப்படியும் அப்படியும் அலைந்து கொண்டு அவன் வருவானா என்று எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவன் அலுவலகத்திற்கு வரவில்லையா என்ன? தவித்துப் போனாள். எத்தனை நேரம் தெருவிலே அலைவது. சாப்பாட்டு நேரம் முடியுமுன் அபிஷேக்கின் அலுவலகத் திற்குள் நுழைகிறாள்.

'இந்த டிரஸ்ஸில் என்னைப் பார்க்க வேண்டும் அசந்து போய்விடுவான். தன்னைப் பார்த்து குதிக்கப் போகிறான்.' லேசாக சிரித்தபடி அபிஷேக்கின் அறைக்குள் வருகிறாள். அங்கே அபிஷேக் இல்லை. 'ஏன் அபிஷேக் இல்லை? ஒருவேளை அலுவலகத்திற்கே வரவில்லையா? தன்னைப் பார்க்காதே என்று சொன்னதால் மனது ஒடிந்து போய் விட்டானா?'

நினைத்தவுடன் மனது தவித்தது. ''பாவம் ஆர்த்தி ஆர்த்தி'' என்று உயிரை விட்டவன், ஏனோ அம்மா பேச்சைக் கேட்டுக் கொண்டு அவனை விரட்டி அடித்தது ரொம்ப தவறு. தனக்கு புத்தியே கிடையாது. அம்மா சொன்னால் என்ன? எதையும் பெரிதுபடுத்தாமல் இருந் திருக்கலாம். அலட்சியமாய் அவனைக் காயப்படுத்தி விட்டோம். அது தவறுதான்.' மனதை லேசாக ஆசு வாசப்படுத்திக் கொண்டு மறுபடியும் தேடுகிறாள். ம்... எங்கேயும் அவனைக் காணவில்லை.

''என்ன ஆர்த்தி இங்கே? நாலுநாளா ஆளைக் காணோம்.''



''என்ன அபிஷேக்கோட சண்டையா என்ன?'' அபி ஷேக்கின் அலுவலக நண்பன் ரகுபதி கேட்க,

''சீ...சீ... அதெல்லாம் இல்லை ஊருக்கு போயிட்டேன் அதான்'' என்றவள்,

''ஆமா அபிஷேக் இன்னிக்கு ஆபீஸ் வரலையா?'' கேட்க,

''வரலியா. அங்க இருக்கற மாலதி ரூம்லே ஒரே லூட்டி நீ போய் பாரு. இந்த மாதிரி நாலு நாள் அஞ்சுநாள் அவனை காக்க வைக்காதே, வேலி தாண்டிடப் போவுது.'' ரகுபதி சொல்லியபடியே சிரித்துக் கொண்டே கிளம்ப, அதிர்ந்து போகிறாள்.

என்னுடன் பேசவில்லை என்ற வருத்தம் எல்லாம் அவனுக்கு கிடையாதா என்ன? யார் அந்த மாலதி. யாரோ புதிதாக எம்.பி.ஏ. படித்த பெண் வந்து சேர்ந்திருக்கிறாள் என்று சொன்னானே அவளா? அவளைப் பற்றி பேசும்போது நிறையத் தடவை பேசியிருக்கிறான்.

''என்னப்பா சக்கரா? இவள் கூட கேலி செய்திருக் கிறாளே, தன்னைக் காதலிப்பவன், தான் பேசவில்லை என்றால் வருத்தப்பட மாட்டானா? தான் எப்படி எல்லாம் துடித்துக் கொண்டிருந்தோம். அவனுக்கு இது எதுவுமே கிடையாதா?''

லேசாக ஆத்திரம் வர அந்த அறைக்கும் போகிறாள். அங்கே வேறே ஒரு ஆணும், பெண்ணும் சிரித்துக் கொண்டிருக்க, மெதுவாக வெளியே வருகிறாள். என்னைப் போல் அவனுக்குள் தவிப்பு இருக்குமா, இருக்கவில்லை போல் தோன்றுகிறது. வீணாக அவனிடம் போய் தன் மனதைப் பறி கொடுத்து, அம்மா சொன்னதுபோல் அவன்

உருவத்தில் மயங்கி தான்தான் தவறு செய்து விட்டோம். பிறகு தன் அலுவலகத்திற்கு வந்து விட்டாள். காலையில் இருந்த சந்தோஷம் எங்கே? இப்போ இருக்கும் வேதனை எங்கே? மனதை யாரோ பிசைவது போல் இருக்க, தலை வலித்தது. வயிற்றைக் குடைந்தது. இனிமே இங்கே இருக்க முடியாது தோன்ற ஒருமணி நேரம் முன்பாகவே பர்மிஷன் போட்டு விட்டு வீட்டிற்கு கிளம்புகிறாள்.

அவள் வாயிலை அடையும்போது அபிஷேக்கின் கொள்ளுத் தாத்தாவும், பாட்டியும் ஆட்டோவில் வந்து இறங்க, லேசான அதிர்ச்சியோடு அவர்களையே பார்க்கிறாள் ஆர்த்தி.

## 24

இவர்கள் எதற்காக வந்திருக்கின்றனர்? இன்று காலை வந்திருந்தால் ஆனந்தத்தில் குதித்திருப்பாள். ஆனால் இப்போது மனம் விண்டு போய் இருக்கும் இந்த நிலையில் இந்த உறவு தேவையா?

இதற்குள் ஆட்டோவில் இருந்து இறங்கியவர்கள் ஆர்த்தியைப் பார்த்துவிட,

''ஹை ஆர்த்தி,'' குதிக்காத குறையாக அருகில் வந்தனர். கொள்ளுப்பாட்டி மாம்பழ நிறத்தில் சிகப்பு கலரில் பார்டர் போட்ட பட்டுப்புடவை அணிந்து சற்று வசீகரமாக இருந்தாள். தாத்தா நீல நிறத்தில் முழு நீளக்கை



ஷர்ட் அணிந்து, கை அகல ஜரிகை போட்ட வேஷ்டி அணிந்திருந்தார். பார்க்க மிக மிக கம்பீரமாக இருந்தார்.

காலையில் வந்திருந்தால் ஆர்த்தி, குதித்திருப்பாள். இப்போதே அபிஷேக்கின் மேல் இருந்த கோபம் அவளை தயங்கி நிற்க வைத்தது. எப்படி சொல்வது? இருந்தாலும் லேசாக புன்னகைக்கிறாள்.

''வாங்க பாட்டி'' வாய் ஆசையாகக் கூப்பிட்டாலும் முகம் வேதனையில் இருந்தது.

''எதுக்கு முகமெல்லாம் வாடியிருக்கு. பிரச்சனைன்னா வீட்டுக்கு வந்து சொல்லியிருக்கக் கூடாதா? நாங்க சரி பண்ணியிருப்போம் இல்லே. அவன்கிட்டே போயா பேசறது? பாவம் அவன் மனதே உடைஞ்சு போயிட்டான்,''

மனம் ஒரு நிமிடம் துணுக்குற்றது. இவர்கள் சொல்வதைப் பார்த்தால் அவன் தன் மேல் உயிராக இருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் நேரில் அவனுடைய நண்பன் வேறு ஏதோ அல்லவா சொன்னான். சோகமாக இருந்தால் கட்டாயம் சொல்லமாட்டார்களா? எப்படி? ஒரு நிமிடம் யோசித்தவள், 'இவர்களுக்கு கட்டாயம் தெரிந்திருக்காது. வீட்டிலேயே இருப்பவர்கள், பேரனின் லீலைகள் எப்படித் தெரியும்?' எதையும் வெளிக் காண்பித்துக் கொள்ளாமல்,

''வாங்க தாத்தா, வாங்க பாட்டி'' என்கிறாள்.

பாட்டி ஆர்த்தியின் கன்னத்தை மெதுவாக தடவிக் கொடுக்கிறாள்..

''கவலைப்படாதேம்மா. உம் மேரேஜ்ஜை நடத்தி வைக்க வேண்டியது என் பொறுப்பு.''

தாத்தாவும் புன்னகையுடன் கூறுகிறார்.

''எல்லாம் சக்ஸஸ்புல்லாக முடியும். முடிச்சப்புறம் கூட நீ எதையும் அபிஷேக் கிட்டே சொல்லக் கூடாது. அவனை கொஞ்சம் கலாய்க்கலாம்'' என்று சிரிக்கிறார்.

''அம்மா, அப்பா எல்லாம் இருக்கார்களாம்மா.''

''அப்பா ஊரிலே இல்லே ஆபீஸ் வேலையா டெல்லி போயிருக்கிறார். அம்மா இருக்காங்க.''

பாட்டி சற்று தயங்கவும் ''இதுலே என்ன இருக்கு. பார்த்து பேசிட்டு வருவோம்'' என்று தாத்தா உள்ளே வர,

''வாங்க தாத்தா'' என்று துக்கத்தை மறைத்தவாறே உள்ளே நுழைகிறாள்.

''என்ன ஆர்த்தி இன்னிக்கி சீக்கிரம்'' கேட்டவாறே அம்மா கதவைத் திறக்கிறாள்.

ஆர்த்தி பேசுமுன் பின்னால் இருப்பவர்களைப் பார்க்கிறாள்.

''யாரும்மா இது?''

''உள்ளே வாங்க'' இருவரையும் உள்ளே கூப்பிட்டவாறே,

''சொல்றேம்மா நீங்க உள்ளே வாங்க'' என்றவாறே உள்ளே அழைக்கிறாள். அவர்கள் இருவரையும் ஹாலில் அமரச் செய்கிறாள். அம்மா பதில் பேசாமல் பெண்ணையே பார்க்கிறாள்.

''ஒருநிமிஷம் இருங்க. இதோ வந்திடறேன்'' என்றவாறு அம்மாவை அழைத்துக் கொண்டு உள்ளே செல்கிறாள்.



''என்னடி இது? யார் இவங்க? எதுக்கு வந்திருக்காங்க.''

''அம்மா கொஞ்சம் மெதுவா பேசு. நீதானே அபிஷேக் வீட்டிலே இருந்து பொண்ணு கேட்டு வரச் சொன்னே.''

''அதுக்காக.''

''அதான் அவுங்க வீட்டிலே இருந்து வந்திருக்காங்க.''

''என்னடி இது அபிஷேக்கோட அம்மா அப்பா எங்கே?''

''இது அபிஷேக்கோட கொள்ளுத் தாத்தா, பாட்டி வீட்டுலே ரொம்ப வயசான பெரியவங்க அவுங்க. அவுங்க வீட்டுலே எல்லாமே அவங்கதான். அதான் பொண்ணு கேட்டு வந்திருக்காங்க.''

''உனக்கு பயித்தியமா? பொண்ணு பார்க்க வரதுன்னா முன்னாலே சொல்ல வேண்டாமா?''

''போம்மா. நீதானே அபிஷேக்கை பொண்ணு கேட்டு வரச் சொன்னீங்க?''

''அதுக்கு முன்பின் சொல்லாம, கொள்ளுப் பாட்டி, தாத்தாவா வருவாங்க. எனக்கு எதுவுமே சரிப்படலை.''

''என்னம்மா இப்படி சொல்லறீங்க? அன்னிக்கு நீங்க தானே பொண் கேட்டு வந்தாத்தான் என் கல்யாணம்னு ஸ்டிரிக்டா சொன்னீங்க. அதுவரைக்கும் அபிஷேக்கை பார்க்கக் கூட கூடாதுன்னு சொல்லலையா?''

''சொன்னேன். ஆனா எதுக்கும் முறைன்னு ஒண்ணு இல்லையா? முதல்லே அவுங்க வீட்டுலேர்ந்து எனக்கு போன் பண்ணி 'இது மாதிரி வரோம்னு சொல்லியிருக்கணும்.' நமக்கு கன்வீனியன்டான்னு கேட்டிருக்கணும் இல்லே. இரண்டாவது பையனோட அப்பா, அம்மா

வராம கொள்ளுத் தாத்தா, பாட்டி ஏன் வரணும்? இது அசட்டுத்தனமா இல்லே.''

''அப்படி இல்லேம்மா. அவுங்க வீட்டுலே பெரியவங்களுக்கு ரொம்ப மரியாதை உண்டு.''

''இதபாருடி யாராவது காதுலே பூ சுத்திக்கிட்டு வந்தா அவுங்க கிட்டே போய் சொல்லு. இந்த காலத்துலே மாமியார், மாமனாரை கூட வச்சுக்கவே யோசிக்கும் போது தாத்தா, பாட்டியை யார் மதிப்பாங்க. அதுவும் முக்கியமான கல்யாண விஷயத்திலே இவுங்க வந்திருக்காங்களாம்.''

''அம்மா பிளீஸ் இப்ப எதுவும் பேசாதீங்க. வந்தவங்க கிட்டே நல்லவிதமா பேசி அனுப்புங்க. அப்புறம் பார்க்கலாம்.''

''என்ன பேசணும்? நிச்சயம் எப்ப பண்ணனும்னு கேக்கணுமா?''

''அம்மா என்ன ஆச்சுமா? அவுங்க ரொம்ப நல்லவங்க. நல்லவிதமா பேசி அப்பா ஊருக்கு போயிருக்காங்கன்னு சொல்லி அப்புறமா பேசலாம்னு சொல்லி அனுப்புங்க.''

''ஆமா. எனக்கு நீ அந்தப் பையனோட பேசறது, பழகுறதே பிடிக்கலை.''

''முதல்லே எல்லாம் புடிச்சிருந்தது இல்லே.''

''அப்ப நீ லவ் பண்றேன்னு யாருக்குத் தெரியும்? ஏதோ பிரண்ட்ஸ்னு நினைச்சேன்.''

''அம்மா நீங்களே சொல்லலியா பெண் கேட்டு வந்தா கல்யாணம் செய்துக்கன்னு சொல்லலையா?''

''ஆமாம் சொன்னேன். ஏன்னா அந்தப் பையன் மேலே எனக்கு நல்ல அபிப்ராயமே கிடையாது. உன்னை யூஸ்



பண்ணிக்கப் பார்க்கறான். ரொம்ப நல்லா இருக்கே. நல்லா சம்பாதிக்கறேன்னு உன் பின்னாலே அலையறான். அதுக்குதான் இந்தக் கண்டிஷன் போட்டேன். அந்தப் பையன் வரலை. யாரும் வரமாட்டாங்கன்னு நினைச்சேன். ஆனா யாரோ கொள்ளுத் தாத்தா, பாட்டியாம் வந்தாச்சு.''

''அம்மா எதுவேணா இருக்கட்டும். வந்தவங்க ரொம்ப நல்லவங்க. நல்லா பேசுவாங்க. தயவுசெய்து சிரிச்சு பேசி அவங்களை அனுப்புங்க.''

''சரி சரி புலம்பாதே. பேசி அனுப்புவோம். அவங்க திரும்பி வரக்கூடாது.''

''வர மாட்டாங்கம்மா'' ஆர்த்தி சற்று எரிச்சலோடு பேச,

''வாங்க வாங்க'' என்றபடியே அவர்களை வரவேற்கப் போகிறாள்.

''என்ன விஷயம்?'' சிறிது நேரம் சிரிக்க சிரிக்கப் பேசியவள் ''இருங்க காபி எடுத்துட்டு வரேன்'' என்று உள்ளே போகிறாள். ஆர்த்தியும் அங்கேயே அமர்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்டபடி லேசாக மலர்ந்து சிரித்தவள், பின் மெதுவாக உள்ளே சென்று கொஞ்சம் இனிப்புகள், காரங்களை வைத்து கொண்டு வந்தாள்.

''தாத்தா, பாட்டி சாப்பிடுங்க'' என்று அவள் தர, ஆர்த்தியின் தாயார் காபியைக் கலந்து எடுத்து வருகிறாள். முதலில் குடும்பத்தைப் பற்றி அவர்களின் பிள்ளைகளைப் பற்றி பேசியவள், மெதுவாக ஆர்த்தியைப் பற்றியும் பேசுகிறாள். தாத்தாவும், பாட்டியும் அவள் பேசுவதை ஒரு புன்சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''ஒண்ணும் வேண்டாம்மா ஒரு வாய் தண்ணி கொடு போதும்.''

''ஐயோ நீங்க என்ன தாத்தா? சாப்பிட்டுதான் போகணும்.''

தாத்தாவும் பாட்டியும் சிறிது எடுத்து வாயில் போட்டுக் கொண்டு பேச ஆரம்பித்தனர்.

''இன்னும் எதைப் பேசணுமோ அதை பேசவே ஆரம்பிக்கலையேம்மா.''

''சொல்லுங்க தாத்தா'' ஆர்த்தி சிரத்தையாய் கேட்பவள் போல் நிற்க,

''நீங்க சரின்னா அடுத்த முகூர்த்தத்திலேயே என் பேரனுக்கும் உங்க பெண்ணுக்கும் கல்யாணத்தை ஜாம் ஜாம்னு செய்து முடிச்சிடலாம். தன் பேரனைப் பற்றி உயர்வாக எல்லாவற்றையும் சொல்லி முடிக்கிறார். பாட்டி தன் குடும்பத்தைப் பற்றி பேரனின் தாய், தந்தை பற்றி தங்கள் வீட்டு வழக்கங்களைப் பற்றியும் விலாவாரியாகக் கூறுகிறாள்.

''நீங்க எதுக்குமே கவலைப்பட வேண்டாம். ஆர்த்தியை எங்க பொண்ணு மாதிரி பார்த்துப்போம். ரெண்டாவது அபிஷேக்கைப் பத்தியும் உங்களுக்குத் தெரியும் இல்லையா.''

பாட்டி சகஜமாக எல்லாவற்றையும் பற்றி சொல்கிறாா். ஒரு பெண் வீட்டிற்கு தெரியவேண்டிய எல்லாவற்றையும் சொல்கிறாள். பிள்ளையின் ஜாதகத்தைத் தந்து விட்டு, பெண் ஜாதகத்தை வாங்கிக் கொள்கிறாள்.

''பெண் ஜாதகமே இன்னும் குறிச்சு வச்சுக்கலே. இரண்டு காபி இருக்கு. உங்களுக்கு ஒண்ணு தரேன்''. என்றவாறே மூலையில் மஞ்சள் தடவிய ஜாதகத்தை கொண்டு வந்து



தட்டில் நிறைய பழங்களை அடுக்கியவாறே ஒரு சுடிதார் செட்டையும் அதன் மேல் வைக்கிறாள் பாட்டி.

''என்னம்மா பண்றீங்க. இப்ப எதுவும் தர வேண்டாம். ஜாதகம் பொருந்தி இருக்கான்னு பார்க்கணும். இரண்டாவது அவுங்க அப்பா ஊர்லே இல்லே. அவர் வரணும். வந்தப்புறம் பேசிக்கலாம். அதுனால எதுவும் தர வேண்டாம். சாதாரணமா பிரண்ட்ஸ் விசிட் மாதிரி இருக்கட்டுமே!

''அந்த மாதிரி எல்லாம் பேசாதேம்மா. ஆர்த்தி என் வீட்டுக்கு மருமகளா வராளோ இல்லையோ ஆனா அவ எங்க வீட்டு பொண்ணு மாதிரி. ரொம்ப ஆசையாக அவளுக்குன்னு வாங்கிட்டு வந்தோம். அதனால எங்க பரிசா உள்ளே எடுத்து வைம்மா.''

ஆர்த்திக்கு பிடித்த பச்சை திராட்சை, ஆப்பிள், பலாப் பழம், கொய்யா, ரஸமலாய், பாஸந்தி பாக்கெட்டுகள், ஆர்த்திக்கு பிடித்த ஜாதிப்பூ ஐந்து முழம். அழகான சுடிதார் செட்.

ஆர்த்தியின் தாயார் மலைத்துப் போகிறாள். வெறும் பெண் பார்க்கவே இத்தனை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்களே ஒருவேளை நிஜமாகவே நல்ல இடமாக இருக்குமோ? லேசாக மனம் அபிஷேக்கை மாப்பிள்ளையாக ஆக்கிக் கொள்ளலாமா என்று நினைக்க ஆரம்பிக்க,

'அபி இது உன் வேலையா? நீ பாட்டுக்கு ஊர் சுத்துவே, ஆனா என்னை கவர் பண்ண, பாட்டி தாத்தா கிட்டே சொல்லி அனுப்புவே. சாமானை வாங்கி என் வாயை அடக்கறியா? உனக்கும் எனக்கும் இந்த ஜன்மத்துலே கல்யாணம் இல்லே' நினைக்கிறாள் ஆர்த்தி.

# 25

முதலில் பேசியதை விட அம்மா இன்னும் சற்று குழைந்து பேசுகிறாள்.

''அவர் வரட்டும் லெட்டர் போடச் சொல்றேன்.'' முதலில் சொன்னவள் நகத்தைக் கடித்துக் கொள்கிறாள்.

''தப்பா நினைக்காதீங்க. அவர் வந்துரட்டும். அப்புறம் நாங்களே உங்க வீட்டிற்கு வரோம்.''

''சரிம்மா'' தாத்தா எழுந்து கொண்டபோது,

''அவர் எப்பமா வருவார்?'' பாட்டி தான் சற்று ஆசை யாகக் கேட்கிறாள்.

''நெக்ஸ்ட் மந்த் கடைசியிலேதான் வருவார். அவர் வந்தப்புறம் ஒரு நல்ல நாள் பார்த்து நானும், அவரும் கட்டாயம் வந்திடறோம்மா. நீங்க ஜோஸியர் கிட்டே ஜாதகத்தை காண்பிச்சிட்டீங்களா?''

''எங்க ஜோஸியர் ரொம்ப பொருத்தமா இருக்குன் னாரு. அதுதான் உடனே எடுத்துட்டு வந்தோம். நீங்களும் உங்க ஜோஸியர் கிட்டே காண்பிச்சிட்டு எங்களுக்கு போன் பண்ணுங்க.''

பாட்டி சொல்லிவிட்டு ''வரேம்மா'' ஆர்த்தியிடம் விடை பெற்று சென்று விட, ஆர்த்தி யோசித்தவாறே நிற்கிறாள்.

''உண்மையிலேயே தனக்கு அபிஷேக்கோடு திரு மணம் நடக்குமா என்ன? மலருக்கு, மலருக்குத் தாவும்



வண்டு என்பது போல அல்லவா அவன் நடந்து கொள் கிறான். இப்பேர்ப்பட்டவனை எப்படித் திருமணம் புரிந்து கொள்வது? அம்மா அவர்கள் கொண்டு வந்திருந்த சாமான்களை ஆராய்கிறாள். எத்தனை விதமான பழங்கள். அழகான பிரிண்டட் சில்க் புடவை, அதிக விலையுள்ள பட்டு சூடிதார் செட் என்று. ஒரு இருபது முழத்திற்கு ஜாதிப்பூ. வெத்திலை பாக்கு. ஒரு சின்ன அழகான நகைப் பெட்டியில் ஒத்தை முத்துக்கள் சரமாக கோர்த்திருக்க அடியில் பச்சைக்கலர் டாலர் போட்டு அழகான நெக்லஸ் என்று. அம்மா அதிர்ச்சி மட்டுமல்ல ஆனந்தமும் அடை கிறாள்.

''ஏய் ஆர்த்தி இவங்க ரொம்ப பணக்காரங்க போல இருக்கே. நிஜமாவா?''

''போதும்மா. இப்ப இதைப்பத்தி ஒண்ணும் பேசாதே. அப்பா வரட்டும்.''

''என்னடி ஒருமாதிரி பேசறே. நீசானே அபிஷேக், அபிஷேக்குன்னு துடிச்சுட்டு இருந்தே. முறையா பெண் கேட்டு பிக்ஸ் பண்ணும்போது ஏன் முரண்டு பிடிக்கறே? இந்தக் காலத்து பெண்களை புரிஞ்சுக்கவே முடியாது.''

அம்மா மறுபடியும் பேச இடம் கொடுக்காமல் திரும்பிப் போகிறாள். இன்று காலை இருந்த எண்ணம் என்ன? இப் போது எல்லாமே வடிந்து போய்விட்டது.

அடுத்த நாள் அலுவலகத்திற்கு செல்லும் போது கண்களை இப்படி, அப்படி ஓட்டிப் பார்க்கிறாள். அபி ஷேக்கை எங்கும் காணவில்லை லேசான சந்தேகத்துடன் தான் அலுவலகத்திற்குள் நுழைகிறாள். சாதாரணமாக சற்று முன்பே வந்துட்டு, இப்படியும் அப்படியும் அலைந்து கொண்டிருப்பான் அபிஷேக். அவன் உள்ளே போகவே

எப்படியும் பத்தரை ஆகிவிடும். எவனை நினைத்துக் கூடப் பார்க்கக் கூடாது என்று நினைத்தாளோ அவனையே நினைத்தவாறு உள்ளே போகிறாள்.

முதல் நாள் அபிஷேக்கும் ஒரே டென்ஷனோடுதான் இருந்தான். தான் உருகி, உருகி நினைத்தவள் வேறு எவனோடவோ சிரித்துக் கொண்டு மகிழ்ந்து கொண்டு இருக்கிறாள். எத்தனை பெரிய துரோகம். வீட்டிற்கு மாலை வந்தும் மனதை அடக்க முடியாமல் தவித்து நின்றான். கொள்ளுத் தாத்தா, கொள்ளுப் பாட்டியை காணவில்லை. எங்கே போய்விட்டார்கள். சாதாரணமாக தாத்தாவும், பாட்டியும் தான் ஊர் சுற்றும் ரகம். அம்மா, அப்பா எப்போதுமே வேலையில் இருந்து லேட்டாகத்தான் வரும் ரகம். அதனால் வீட்டில் எப்போதுமே நிலையாக இருப்பவர்கள் கொள்ளு தாத்தாவும், பாட்டியும் தான். இன்று எங்கே போனார்கள் தேடுகிறான்.

எத்தனையோ முறை ''என்ன தாத்தா, இன்னிக்கு கந்தசஷ்டி கோவிலுக்குப் போய் முருகனுக்கு ஒரு அட்டெண்டென்ஸ் கொடுத்துட்டு வரலியா?''

''பக்தி மனசுலே இருக்கணும்டா. நானும் உங்க பாட்டியும் இன்னிக்கு புல்லா விரதம் இருப்போம். காலையிலே எழுந்து ஒரு ஒரு மணிநேரம் என் ஐயனைப் பத்தி நினைச்சு, அவர் பாட்டை கேட்டு அதுபோதும்'' என்பார். அப்படிப்பட்டவர்கள் எங்கே போனார்கள்? அம்மா வந்ததுமே கேட்கிறான்.

''தெரியணுமா கண்ணா. இன்னிக்கு எங்கோ வெளியே போறேன்னு பாட்டி சொன்னாங்க. அவ்வளவுதான் தெரியும்.''



''ஆச்சரியமா இருக்கே? அப்படி எங்கேம்மா போனாங்க?''

''தெரியலைடா.''

அன்று அம்மா தந்த காபியைக் குடித்துவிட்டு பாட்டி எங்கே போயிருப்பாள். யோசித்தவாறே அமர்ந்திருந்தான். அம்மா வந்ததிலிருந்து ஏனோ பரபரப்பாய் இருந்தாள். யாருக்கோ போன் நெம்பரை டயல் செய்தவாறு இருந்தாள். அம்மாவுடைய டென்ஷன் வேடிக்கையாக இருக்க, அம்மாவையே கவனிக்கிறான். யாருக்கோ போன் செய்கிறார். 'த்சு... சே' என்று அலுத்துக் கொள்கிறாள்.

''என்னாச்சும்மா?''

''எத்தனை முறை போன் செய்யறது? ரிங் போயிட்டு இருக்கு எடுக்கலை.''

''யாருக்கும்மா. யாருக்கு ரிங் பண்றீங்க?''

''ஸ்... இருடா சொல்றேன்'' என்றவள் பின் பேசத் தொடங்குகிறாள்.

''இது... கல்யாணி தானே...''

''ம்... நீங்க யாரு?''

''நான்தாம்மா. என்னை யாருன்னு தெரியலையா?''

''யாரு...?''

''எம் பேக்கை கூட வாங்கிக் கொடுத்தியேம்மா.''

''ம்... ஆ... நீங்களா? சொல்லுங்க ஆன்ட்டி. எப்படி இருக்கீங்க?''

''ரொம்ப நல்லா இருக்கேன்மா உன்னை பார்க்கணும்.''

''என்னையா எதுக்கு?''

''இல்லே வீட்டுலே ஒரு பங்ஷன். அதுக்கு நீ வரணும்...''

''உங்க வீட்டு பங்ஷனுக்கா? நான் எதுக்கு மேடம்...''

''என்னம்மா இப்படி பேசறே. அன்னிக்கு என் பையை வாங்கி கொடுத்ததை மறந்துட முடியுமா?''

''என்ன ஆன்ட்டி நீங்க? ஏதோ சின்ன ஒரு உதவி. அதைப் போயா திருப்பி திருப்பி சொல்வீங்க?''

''அதெல்லாம் இல்லேம்மா. என் வீட்டு விசேஷத்துக்கு என் வெல்விஷரை கூப்பிடக் கூடாதா?''

''ஐயோ ஆன்ட்டி நீங்க கூப்பிடலாம். ஆனா எங்க வீட்டுலே ரொம்ப ஸ்டிரிக்ட். அம்மா அலோ பண்ணாம நான் எங்கேயும் போறதில்லை சாரி ஆன்ட்டி.''

அபிஷேக்கின் தாயார் சற்று மௌனம் சாதித்தாள். இந்த காலத்தில் இப்படியும் பெண்கள் என்னமாக வளர்த்திருக்கிறார்கள். மனம் அந்தப் பெண்ணை வாழ்த்த,

''ஓ.கே. உன்னை நாளைக்கு ஈஸ்வரன் கோவில்லே பார்க்கலாமா? இதையும் முடியாதுன்னு சொல்லிடாதே. உன்னை கட்டாயம் பார்க்கணும். முக்கியமான விஷயம் பேசணும்.''

சிறிது தாமதத்திற்கு பின், ''ஓ.கே. ஆன்ட்டி நான் வரேன். பை ஆன்ட்டி'' என்று போனை வைக்கிறாள்.

''டேய் அபிஷேக்... கடைசியிலே ஒருவழியா கண்டு பிடிச்சிட்டேன்டா. அவ பேரை வச்சுகிட்டு மொபைல் நெம்பரை கண்டுபிடிக்கறதுக்குள்ளே உயிர் போயிடுச்சு. டாடா மொபைல் பார்த்த மாதிரி ஞாபகம். அதை வச்சுகிட்டு இத்தனை நாளா நெம்பரை கண்டுபிடிக்க அலைஞ்சு



கடைசியிலே இன்னிக்குதான் நெம்பரே கிடைச்சுது. இன்னிக்கு மார்னிங்லேந்து டிரை பண்றேன். இப்பதான் கிடைச்சுது.''

''யார் அந்த பொண்ணு எதுக்கு நீ அந்தப் பொண்ணுக்கு போன் பண்ணனும்.''

''என்னடா புரியாம பேசறே? நான் சொன்னேனே அந்தப் பொண்ணுதாண்டா. நீ மட்டும் அவளைப் பார்த்தியான்னா வேறு யாரையும் பண்ணிக்க மாட்டே.''

சாதாரணமாக இருந்தால் அம்மாவை கேலி செய்து உண்டு இல்லை என்று ஆக்கிவிடுவான். ஆனால் இன்று இருக்கும் மன நிலையில் அம்மாவை எதுவும் சொல்லும் மனநிலையில் இல்லை. காதலி செய்த துரோகத்தை நினைந்து மனம் எரிந்து கொண்டிருந்தது. சே! கடைசியில் இந்த காலப் பெண்களைப் பற்றி கதை கதையாக சொல்வார்களே. அப்படித்தான் தன் காதலியும் ஆகிவிட்டாள். சாதாரணமாக அம்மா இந்த வார்த்தையைச் சொன்னால் எதிர்த்து இருப்பான். இப்போது எதிர்க்கத் தோன்றவில்லை. ஒரு கழுதையைக் காண்பித்தாலும் பார்த்து விட்டு வரலாம். மனம் நினைத்தது.

''என்னடா சொல்றே? நாளைக்கு ஒன்பது மணிக்கு வறியா? பார்த்துவிட்டு வந்திடலாம்.''

ஒருநிமிடம் அம்மாவை வெறிக்கிறான். 'இதென்ன பிடிவாதம் மனதிற்குள் நிறைந்தவள் ஒருத்தி, என்னதான் ரம்பையாக இருந்தாலும் மற்றவளை மனம் ஏற்றுக் கொள்ளுமா என்ன?' பெருமூச்சு விடுகிறான். 'ஓ.கே. இந்த விளையாட்டையும் விளையாடிப் பார்க்கலாம்.'

''ஓ.கே. நான் வரேன்'' வாடிப் போன அவன் முகத்தை பார்த்த அவன் தாய் சுதாரிக்கிறாள்.

''இதபாருடா உனக்கு இஷ்டமில்லேன்னா இதுலே கட்டாயம் இறங்க மாட்டேன். நீ சும்மாப் பாரு'' என்றாள்.

அபிஷேக் தலை அசைக்கிறான். அபிஷேக்கின் தாயார் சந்தோஷத்தில் குதிக்கிறாள். சந்தோஷம், துக்கம் எதுவும் இல்லாமல் திரும்பிப் போகிறான் அபிஷேக். வெளியே போனவன் இலக்கில்லாமல் சுற்றுகிறான்.

சரியாக ஒன்பது மணிக்கு வீட்டிற்கு வந்தபோது கொள்ளுத் தாத்தாவும், பாட்டியும் வந்திருப்பது தெரிந்தது. அவர்கள் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அம்மா எப்போதோ மாடிக்கு போய்விட்டாள். அப்பா எட்டடித்தாலே தன் அறைக்குச் சென்று விடுவார். எப்போது லேட்டாகப் போனாலும் கொள்ளுப் பாட்டிதான் சாப்பாடு போடுவாள். தன் சொந்தத் தாத்தாவும், பாட்டியும் வேஸ்ட்தான். மற்ற வேலைக்கெல்லாம் வரவில்லை என்றாலும் திட்டுவதற்கு இருவருமே முன்னால் நிற்பார்கள். ஆனால் தன் கொள்ளுத் தாத்தா பாட்டி அப்படி அல்ல.

கொள்ளுப் பாட்டியின் அறையில் விளக்கு எரிவதைப் பார்த்து ஓடுகிறான் அபிஷேக்.

''பாட்டி?''

''என்னடா?''

''எங்கே போயிட்டீங்க?''

''ரொம்ப முக்கியமான இடத்துக்கு'' தாத்தா கண்களை சிமிட்டியவாறே பேசுகிறார்.

''என்ன இடம் அது? ஆச்சரியமா இருக்கே? நீங்க சாதாரணமா எதுக்குமே போனதில்லை. கல்யாணம்,



ஏதாவது பங்ஷன்னு கூப்பிட்டாலும் போனதில்லே. இப்ப என்ன அப்படி முக்கியமான இடம் வந்திருக்கு.''

''உம் பேரன் பார்த்தியா நிலை கொள்ளாமலே தவிக்கிறான்'' தாத்தா சிரிக்க,

''போதும் அவனை கலாய்க்கலேன்னா உங்களுக்குத் தூக்கம் வராது'' பாட்டியும் லேசாக கடிந்து கொள்கிறாள். தாத்தா பெரியதாக சிரிக்கிறார்.

''முதல்லே சாப்பிடவா. அப்புறம் எல்லாம் விளக்கமா சொல்லலாம்.''

பாட்டி சாப்பாடு போட அவசரம் அவசரமா சாப்பிடுகிறான். காலையிலிருந்து பசித்துப் போன வயிறு ஆவலாக விழுங்க, சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு பாட்டியின் கைகளைப் பிடித்துக் கொள்கிறான்.

''பாட்டி சஸ்பென்ஸ் போதும். என்ன விஷயம் சொல்லுங்க?''

''ஆர்த்தியைப் பார்த்து பொண்ணு கேட்டுட்டு வரோம்.''

பாட்டி சொல்ல, சொல்ல பார்ட்டியையே அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்னடா ஷாக் ஆயிட்டே. ஒண்ணும் பயப்படாதே. அவுங்க அம்மாவும் ஒத்துக்கிட்டாங்க. அவுங்க அப்பா ஊருக்கு போயிருக்கார், வந்ததும் பேசி முடிச்சுடறேன்னு சொன்னாங்க. நானும் உங்க தாத்தாவும் முறைப்படி பார்த்து பிக்ஸ் பண்ணியாச்சு. நல்லபடியா பேசிட்டு வந்துட்டோம். கவலைப்படாதே.''

அபிஷேக் உண்மையிலேயே ஆச்சரியத்தின் உச்சியில் இருந்தான். காலைதான் அலங்காரம் செய்து கொண்டு,

வேறொருவன் பின்னால் சிரித்தபடி அமர்ந்து சென்றவள், தன்னைத் திருமணம் செய்ய எப்படி ஒப்புக் கொண்டாள்.

''பாட்டி நீங்க போயிருந்தபோது ஆர்த்தி இருந்தாளா?''

''எங்களை ரிஸீவ் பண்ணதே அவள்தான்'' தாத்தா சொல்ல,

''என்னடா திடீர்னு இப்படி ஒரு சந்தேகம். முதல்லே அவுங்க அம்மா எங்ககூட பேசவே ஒத்துக்கலை. பாவம் ஆர்த்தி. அவளாலதான் அவுங்க அம்மா சிரிச்சு பேசினாங்க. கடைசியிலே ஒத்துகிட்டாங்க. பாவம்டா அந்தப் பொண்ணு. அவளைப் பத்தி நீ ஏன் தப்பாவே நினைக்கறே? என்ன ஆச்சு உனக்கு?''

அபிஷேக் யோசிக்கிறான். 'இதென்ன டிரிக்குன்னு தெரியலையே. ஒருபக்கம் தன்னை தவிர்க்கிறாள். இன்னொருபுறம் பாட்டியிடம் ஆமோதித்திருக்கிறாள். இது என்ன டிராமா ஆடுகிறாள்.' யோசித்தபடியே படுக்கப் போகிறான்.

அடுத்தநாள் காலை தாயாருடன் அபிஷேக் கோவிலுக்குச் செல்கிறான்.

அபிஷேக்கின் தாயார் தான் சொன்ன பெண்ணைத் தேடி, தேடி கண்டுபிடிக்கிறாள். அந்தப் பெண்ணை எங்குமே காணவில்லை. கோயிலின் உள்ளேயும், வெளியேயும் தேட,

''ஏம்மா இது தேவையா? அந்தப் பொண்ணு வரவே இல்லேன்னு நினைக்கிறேன். அந்தப் பொண்ணு வார்த்தையை நிஜம்னு நம்பிகிட்டு வந்த, நீங்க முட்டாளா? இல்லை நானா தெரியலை. வாங்க போகலாம்.''



சற்று எரிச்சலோடு அவன் சொல்லிவிட்டு தாயாரோடு வெளியே செல்ல முயற்சித்தபோது அம்மாவின் கனவுக் கன்னி சிரித்தபடி எதிரே வந்து நிற்க, வைத்த கண் வாங்காமலே பார்த்தபடி நிற்கிறான் அபிஷேக்.

## 26

''வாம்மா... வா... கல்யாணி... என்னடா நீ வரலையேன்னு பயந்துட்டேன்.'' அபிஷேக்கின் தாயார் உரிமையோடு பெண்ணின் விரல்களைப் பிடித்துக் கொண்டு பேச,

''இல்லை ஆன்ட்டி. இன்னிக்கு அம்மா காலையிலே ஏதோ வேலை வச்சிட்டாங்க. அதை முடிச்சிட்டு வரேன். ரொம்ப லேட் பண்ணிட்டேனா ஆன்ட்டி.''

''லேட்டானா என்னம்மா, நல்லபடியா வந்து சேர்ந்தியே?''

அபிஷேக் ஒன்றும் பேசாமல், அந்தப் பெண்ணையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''இவன் என் பையன் அபிஷேக். சாப்ட்வேர் இன்ஜினியர். எம்டெக் படிச்சவன். எனக்கு ஒரே பையன், ஒரு பொண்ணுதான்.''

''ஓ'' என்று புன்னகைத்தவள் ''ஹலோ'' என்கிறாள்.

அபிஷேக் இன்னும் தன் பார்வையை அவளிடமிருந்து திருப்பவில்லை. சிரிக்கக் கூட தோன்றாமல் அப்படியே நின்று கொண்டிருந்தான்.

''டேய் என்னடா இது 'ஒரு ஹலோ' சொல்லு,'' அம்மா சொல்ல,

''ஹலோ'' என்கிறான்.

''என்னடா இது?'' எரிச்சல் அடைகிறாள் அம்மா.

''ஓ.கே.ம்மா எதுக்கு என்னை பார்க்கணும்னு சொன் னீங்க?''

''அது அப்புறம் சொல்றேன். முதல்லே உங்க வீட்டு அட்ரஸ் சொல்லு.''

கல்யாணி சொல்ல அபிஷேக்கின் தாயார் குறித்துக் கொண்டாள்.

''ஆமா நீ என்னம்மா பண்றே? காலேஜ் படிக்கிறியா?'' கேட்கிறாள்.

''இல்லே ஆன்ட்டி'' சொல்லும் போதே அவள் காது களில் போட்டிருந்த குட்டித் தங்கத்தோட்டான் கீழ் உள்ள ஜிமிக்கி ஆடியது. ஒரு நீலநிறத்தில் பட்டுப் பாவாடை யும், அதே நிறத்தில் ரவிக்கையும், அரக்கு கலரில் தாவணியும், ரெட்டைப் பின்னலும் ஒரு பின்னலில் தொங்கும் பூவுமாக வனதேவதை போன்று இருந்தாள்.

அபிஷேக்கின் தாயார் அவளின் அழகை அணு, அணு வாக ரசித்துக் கொண்டிருந்தாள். அபிஷேக்கின் பார்வை அவ்வப்போது அப்பெண்ணின் மேல் பட்டாலும், பார்வையை முழுவதுமாக தவிர்த்துக் கொண்டிருந்தான்.

''ஓ.கே. ஆன்ட்டி நான் கிளம்பணும்.''



''நில்லும்மா எந்த காலேஜ்லே படிக்கிறே? அதை சொல்லிட்டு போயேன்.''

''இல்லை ஆன்ட்டி நான் காலேஜ்லே படிக்கலே. நானும் சாப்ட்வேர்லேதான் வேலை பண்றேன்.''

''அப்படியா?'' ஆச்சர்யப்படுகிறாள் அபிஷேக்கின் தாயார்.

இன்னும் ஏதோ பேசுமுன் ''நான் கிளம்பணும் ஆன்ட்டி மணி ஆச்சு'' அவள் ஸ்கூட்டரை ஓட்டியவாறு கிளம்பி விட,

''ஐயோ போயிட்டாளே. அவ வீட்டிலே எத்தனை பசங்க, ஒண்ணுமே கேக்கலையே, கேக்குமுன் போயிட் டாளே.''

''அம்மா போதும் வறீங்களா?''

''என்னடா?''

''பின்னே என்ன? ஏதோ இம்பார்டன்ட் மேட்டருன்னு அந்த பெண்ணை வர சொல்லிட்டு, வீட்டு அட்ரஸ் என்ன, எங்கே படிக்கறேன்னு இதையா கேட்பாங்க. அசிங்கப்படுத்தறீங்க அம்மா.''

''என்னடா அசிங்கம். நம்ப வீட்டுக்கு அவதான் மரு மகளா வரணும்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன். பார்க்க ணும்னு நினைச்சது தப்பா?''

''அம்மா நீங்க நினைச்சா போதுமா? அவுங்களும் நினைக்க வேண்டாமா? நீங்க நடந்துக்கறதே எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கலை.''

''நீ மட்டும் என்ன ஒழுங்காவா நடந்தே? இன்டிரடியூஸ் பண்ணினா ஹாய் கூடவா சொல்லமாட்டே. உம்மணா மூஞ்சி மாதிரி அந்த பொண்ணை பார்க்கறே?''

''இனிமே எதுவும் பேசமுடியாது. நான் பேசினா நீங்க புரிஞ்சிக்க மாட்டீங்க. அதுனாலே பேசி பிரயோசனமில்லை கிளம்புங்க.''

பிள்ளை சொல்ல கிளம்பியவள் வீட்டிற்கு சென்றதும் பிள்ளையை தடுத்து நிறுத்துகிறாள்.

''என்னம்மா வேணும். எனக்கு ஆபீசுக்கு டைம் ஆயிடுச்சு.''

''ஒருநிமிஷம் இரு எனக்கு பதில் சொல்லிட்டுப் போ. பொண்ணு எப்படி இருக்கா? அழகா இருக்காளா?''

''அழகாத்தான் இருக்கா.''

''அப்பா. பயந்துட்டேன். எங்கேயாவது நீ வேண்டாம்னு சொல்லிடுவியோன்னு அழகு இல்லேன்னு ஒதுக்கி வச்சிடுவியோன்னு பயம்.''

''அம்மா அழகா இருந்தா எனக்கு பிடிக்கணும்னு அவசியம் இல்லே.''

''அழகு மட்டுமல்ல. ரொம்ப நல்ல பொண்ணாவும் இருக்கு. டிரஸ் எத்தனை டீஸன்ட்டா பண்ணிகிட்டு இருக்குது பாரு. இந்தக் கால பொண்ணுங்க டிரஸ் எப்படி போடுவாங்க தெரியுமில்லே... பொண்ணு டீஸன்ட் மட்டுமில்லே ரொம்ப நல்லா வளர்த்திருக்காங்க.''

அதற்கு மேல் அம்மாவுடன் பேசப் பிரியப்படாதவன் போல் அலுவலகத்திற்கு கிளம்புகிறான்.

''என்னடா என் கேள்விக்கு பதில் சொல்லிட்டுப் போ.''

''அம்மா நான் இப்ப ஆபீஸ் போகணும். அப்புறம் பார்க்கலாம் ஆளை விடு.''

விறுவிறுவென்று அவன் கிளம்பிப் போக, அம்மா சந்தோஷமாக சிரிக்கிறாள். வீட்டில் தாத்தா, பாட்டியுடன் சந்தோஷமாய் பேசுகிறாள்.



''எங்க காலைலே அம்மாவும், பிள்ளையும் போயிட்டு வறீங்க?'' பாட்டி கேட்க, அம்மா பூவாக மலர்கிறாள்.

''நானே உங்ககிட்டே பேசணும்னு நினைச்சேன் பாட்டி. எனக்கு பிடிச்ச பெண்ணை வரவழிச்சு அபிஷேக்கிற்கு காண்பிச்சாச்சு.''

பாட்டி ஒன்றும் புரியாமல் விழிக்கிறாள்.

''அவனுக்கும் பிடிச்சிருக்கு. ஒரு நல்ல நாள் பார்த்து அவுங்க வீட்டுக்கு போய் பொண்ணு கேட்க வேண்டியதுதான்.'' அவள் சொல்ல, சொல்ல பாட்டி அதிர்ந்து போகிறாள்.

'இதென்ன கூத்து. அவனுக்கு விருப்பமான பெண்ணை தானும், தன் கணவரும் பேசி முடித்து விட்டு வந்திருக்கிறோமே, நிதானமாய் அவர்களிடம் சொல்லலாம் என்றால் இதென்ன புதுக்கதை.'

''என்ன பாட்டி நல்ல விஷயம் சொல்றேன். ஷாக் அடிச்சமாதிரி நிக்கறீங்க.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லேமா. அவனும் ஒரு பெண்ணை மனசில் நினைச்சுகிட்டு இருக்கான் இல்லே.''

''இந்தப் பெண்ணை பார்த்துட்டான் இல்லே. இனிமே மாட்டேன்னு சொல்ல மாட்டான் பாருங்க'' அபிஷேக்கின் தாயார் சிரித்தபடி சொல்லிவிட்டு தன் கம்பெனிக்கு செல்லப் புறப்படுகிறாள்.

அவர்கள் சென்றபின் பாட்டி தாத்தாவிடம் போய் விஷயத்தை சொல்ல, தாத்தாவும் யோசிக்கிறார்.

''நாம பாட்டுக்கு அங்கே பேசிட்டு வந்துட்டோம். இப்ப என்னவோ மருமக வேற இடத்தை பார்த்துகிட்டு இருக்கா என்ன செய்யறதுன்னு தெரியலை.''

''என்ன உள்றே? பையனுக்கு எந்த இடம் பிடிக்குதோ அதைத்தான் கட்டணும். அதுக்கு உன் மருமக இல்லே யார் குறுக்கே நின்னாலும் நடக்காது.''

''அதுதாங்க கவலையா இருக்கு. வீட்டிலே குழப்பம் வருமோன்னு பயமா இருக்கு.''

''என்ன உள்றே? என்ன குழப்பம் வரும்?''

''இல்லைங்க மருமகளுக்கு நம்ப மேலே இருக்கற நல்ல அபிப்பிராயம் போயிடும். அது மட்டுமல்ல அந்த மருமக வந்தாலும் அவ கூட ஒழுங்கா இருக்கணும் இல்லே.''

''என்னம்மா நீகூட இப்படி இருக்கே? பின்னாடி நடக்கறதை நினைச்சு யாராவது வருத்தப்படுவாங்களா? எது நடந்தாலும் நடக்கட்டும். நடக்கும்போது பேஃஸ் பண்ணுவோம்'' பாட்டியும் ஆமோதிக்கிறாள். இருந்தும் பாட்டியும் பேரனும் முகம் வாடி நின்றார்கள்.

அதற்குமேல் அங்கு நிற்காமல் கிளம்பிச் செல்கிறான் அபிஷேக். அவன் முகம் சிந்தனை வயப்பட்டு இருந்தது. இங்கே பாட்டியும், தாத்தாவும் கூட லேசாக கவலைப்பட்டவர்களாய் நின்றிருந்தனர்.

அபிஷேக்கின் தாயார் மிகவும் சந்தோஷத்தில் இருந்தாள். முதலில் இந்த விலாசத்தில் போய் அவர்களைப் போய் பார்க்க வேண்டும். பெண் வீடு கூட எப்படி என்று தெரிந்து கொள்ள வேண்டும். அதன்பிறகு தான் கணவனை அழைத்துச் செல்ல வேண்டும்.

அன்று கம்பெனிக்கு போய் அரை நாள் லீவு போட்டு விட்டு கல்யாணியின் வீட்டிற்கு கிளம்புகிறாள். பிள்ளையின் ஜாதகத்தை எடுத்துக் கொண்டு பூ, பழம் எல்லாம்



வாங்கியவாறே வருகிறாள். பெண்ணுக்கு வீட்டிலிருந்தே எடுத்து வைத்திருந்த ஒரு ஜாக்கெட்டையும் கூடவே எடுத்து வைக்கிறாள். தான் வீட்டிற்கு வந்து பெண்ணைக் கேட்டோம் என்றாலே கல்யாணிக்கு ஆச்சரியமாக இருக்கும். பையனுக்கு அந்தப் பெண்ணைப் பிடித்து விட்டது போல்தான் தோன்றுகிறது. தன்னிடம் சொல்லக் கூச்சப்பட்டு நிற்கிறான் என்றும் புரிந்தது. பெண்ணின் அழகில் பிள்ளை மயங்கித்தான் போய்விட்டான். பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது. இல்லையென்றால் வேண்டாவே வேண்டாம் என்று மறுத்திருக்க மாட்டானா?

பெண்ணின் வீட்டை அடைந்து அழைப்பு மணியை அழுத்துகிறாள். தனி வீடு இல்லை. பிளாட்டுதான். இருந்தாலும் சற்று பெரியதாக நன்றாகவே இருந்தது. வாசலை ஒட்டின பால்கனியில் நிறைய செடிகள் வைக்கப்பட்டு அழகாகவே இருந்தது. சின்ன குரோட்டன்ஸுகளும், ரோஜாக்களும் மணி பிளான்ட்டும் மிக மிக அழகாக இருந்தது.

சற்று சந்தோஷத்தோடு அபியின் தாயார் விசையை அமுக்க, ஒரு நாற்பது வயதான மாது உள்ளே இருந்து வருகிறாள். கதவைத் திறந்தவள் ''யார் நீங்க?'' கேள்வி கேட்கிறாள்.

முகத்தில் புன்னகையோடு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தான் கல்யாணியை பார்த்ததிலிருந்து நடந்ததை சொல்கிறாள்.

''ரொம்ப ரொம்ப நல்ல பொண்ணும்மா. எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கம்மா. என் பையனுக்கும் ரொம்ப பிடிச்சுப் போச்சு. இந்தாங்க. இதை வாங்கிக்கங்க. இது

பையனோட ஜாதகம். பழத்தின் மேல் மஞ்சள் தடவி வைத்து பையனின் ஜாதகத்தையும் தர,

'இதென்னடா கூத்து? தன் பெண் அத்தனை அரிதானப் பொருளாகி விட்டாளா என்ன? அவள் காதலித்த வீட்டிலிருந்து பிரிண்டட் சில்க், நெக்லஸ் என்று எக்கச்சக்கமாக வந்தது. பாந்தமாக பெரியவர்கள் வந்தார்கள். இந்த பெண்மணி என்ன ஒத்தையா வந்து ஏதோ பிளவுஸ் பிட்டை எடுத்து வந்து சம்பந்தம் பேசுகிறாள்.' ஆர்த்தியின் தாயாருக்கு எரிச்சலாக வந்தது.

''இத பாருங்கம்மா என் பெண்ணுக்கு முக்கால்வாசி நிச்சயம் ஆன மாதிரிதான். இன்னும் பிள்ளையோட அப்பாவும், அம்மாவும், எங்க வீட்டவரும் தான் பார்க்கணும். பார்த்தவுடனே பிக்ஸ் பண்ணிடுவோம். எனிவே வீட்டுக்கு வந்துட்டீங்க. ஒண்ணும் சொல்லக்கூடாது. அதனால பேசாம இருக்கேன். ரெண்டாவது எங்க வீட்டுப் பொண்ணு கல்யாணத்துக்கு இருக்கான்னு உங்களுக்கு யார் சொன்னாங்க?'' என்று கேட்க அபியின் தாயார் அதிர்ந்து போகிறாள்.

'இதென்ன இந்தப் பெண்மணி இப்படி பேசுகிறாள். தான் கல்யாணம் பேசவந்த போது பெண் இல்லாமல் பேசி இருக்கக் கூடாது. தவறு செய்து விட்டோம்.'

''சாரிம்மா கல்யாணி இருப்பான்னு நினைச்சேன்.''

''யாரு கல்யாணி. அப்படி யாரும் இல்லையேம்மா.''

''ஓ அட்ரஸ் மாறி வந்துட்டேனா? அதான் என்னடான்னு நெனைச்சேன்'' என் கல்யாணியா இருந்திருந்தா இத்தனை நேரம் அவுங்க வீட்டிலே வெத்தலை, பாக்கு வெச்சு வரவேற்று இருக்கமாட்டாங்களா? சாரி'' என்றவள்



மறுபடியும் தட்டில் தான் கொண்டு வந்த சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டு தடதடவென்று திரும்பிப் போகிறாள்.

மறுபடியும் விலாசத்தை பார்க்கிறாள். சரியான விலாசம்தான். 'இந்த விலாசத்தைத்தானே அந்தப் பெண் எழுதிக் கொடுத்தது. இப்போது இங்கே யாருமே அதுபோல் இல்லை என்று சொல்கிறார்களே. ஒன்றும் புரியவில்லையே.' மனதை உழப்ப பதில் சொல்லாமல் திரும்பிப் போகிறாள். 'அந்தப் பெண்ணின் நெம்பர் என்னிடம் உள்ளது. மறுபடியும் தொடர்பு கொண்டு முயற்சி பண்ணுவோம்.'

வெளியே வந்தவள் முதலில் செல்லில் அவள் நெம்பரை அழுத்த ரிங்டோன் போய்க் கொண்டிருக்க பொறுமை இல்லாமல் மறுபடியும் மறுபடியும் அழுத்தி தவிக்கிறாள் அபிஷேக்கின் தாயார்.

# 27

எத்தனை முறை அழுத்துவது? எத்தனை முறை முயற்சி செய்வது. செல்லை எங்காவது வைத்துவிட்டு போய்விட்டாளா? இத்தனை பெல் அடிக்கிறது. ஏன் இந்தப் பெண் செல்லை எடுக்கவில்லை. ஒருவேளை எங்காவது போய்க் கொண்டிருக்கிறாளா? வண்டியில் போகும்போது பேச வேண்டாம் என்று நினைக்கிறாளா?

யோசித்து யோசித்து மறுபடி பொறுமை இல்லாமல் தவித்து பின் செல்லை அணைத்துவிட்டு வேலைக்கு

கிளம்புகிறாள். முட்டாள்தனம் செய்துவிட்டேன். குறைந்த பட்சம் அந்த பெண்ணுக்காவது சொல்லி இருக்கலாம் ஏதோ காரணமில்லாமல் கணவன் மேல் கோபம் வந்தது. நிறைய பெண்களுக்கு வடிகாலே கணவன்மார்கள்தான். எந்த ஒரு செயலுக்கும் அவனைத்தான் காரணம் காட்டி பேசுவார்கள்.

சமையலில் அளவு தெரியாமல் செய்து விட்டால் ‘அவருக்குப் பிடிக்கும்னு செஞ்சுவச்சேன்’ கூசாமல் போடுவார்கள். வீட்டில் வாயைக் கூட திறக்கப் பயப்படும் கணவனை விசுவாமித்திரன் அளவிற்கு உயரத் தூக்கி வைப்பார்கள். தனக்கு ஒரு இடத்திற்கு போகப்பிடிக்க வில்லை என்றால், எங்க வீட்டிலே அலோ பண்ண மாட்டாங்க நான் வந்துட்டா அவர் ஏதானும் சொல்லுவார். அதான் வர முடியாது என்பார்கள். தனக்கு பிடிக்காத வேண்டாத செயல்களை செய்யாமல் இருப்பதற்கு கணவனைக் கேடயமாகத்தான் பயன்படுத்துவார்கள். அதற்கு மட்டுமா? திட்டுவதற்கும், ஆத்திரப்படுவ தற்கும், கோபத்திற்கும் கணவன் தான் வடிகால்.

அதுபோல் இன்று தான் அவமானப்பட்டதற்கும் கணவன்தான் காரணம் என்று எண்ணி எண்ணி மனம் வருத்தப்பட்டது. சனியன் இந்த ஆள் ஒழுங்கா இருந்தால் நான் ஏன் போய் அவமானப்படணும்? ஒரு நல்ல பெண்ணை பிள்ளைக்கு பார்த்திருக்கேன்னு சொன்ன வுடனே, ஓடிவந்து அந்தப் பெண்ணை பிக்ஸ் பண்ணி யிருக்க வேண்டாம். கணவன் மேல் ஆத்திரம் ஆத்திர மாக வந்தது. மனம் குமைந்தது. புருஷன் என்பவன் ஒரு பெண்ணுக்குத் துணைவனாக இருக்க வேண்டாமா? எதையும் காதில் போட்டுக் கொள்வதில்லை. வீட்டில்



உட்கார்ந்து கொண்டு டிவியையே பார்த்துக் கொண் டிருக்கும் புருஷனை என்னவென்று சொல்வது? மறு படியும் தான் ஏமாந்த கோபம் எல்லாம் கணவன் மேல்விழ இன்னும் கணவன் மேல் அதிகமாக ஆத்திரப்பட்டாள்.

ஆத்திரத்துடன் கோபத்துடனும் வேலைகளைச் செய் கிறாள். அன்று மதியம் சாப்பிட்டபின் வெளியே போன போது வழக்கமாக அவர்கள் அலுவலகத்திற்கு எதிரில் செருப்பு தைப்பவன் அமர்ந்து கொண்டு எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறான். யாரை பார்க்கிறான்? ஓ... மதியம் சாப்பாடு கொண்டு வரும் பொண்டாட்டியையா காணலன்னு அவளை எதிர்பார்த்து காத்திருக்கிறான். இப்படியும் புருஷன்மார்கள் இருக்கிறார்கள். செருப்பைத் தைத்தால் என்ன? பெண்டாட்டி மேல் ஆசையாய் இருப்பதே பெரிய விஷயம்.

இப்படி அப்படி நடந்தாலும் கண்கள் செருப்பு தைப்ப வனைப் பார்த்துக் கொண்டிருந்தது. ஒரு பதினைந்து நிமிடம் சென்றிருக்கும் பெண்டாட்டி ஓட்டமும், நடையு மாக வந்து கொண்டிருந்தாள். சற்று மாநிறமாக, வெத் திலை பாக்கு வாயோடு வருகிறாள். உதடுகள் சிவந்து போய், பெரிய குங்குமப் பொட்டு, தலையில் பூ வைத்துக் கொண்டு சிரித்தபடி வருகிறாள். ‘‘லேட்டாயிடுச்சியா’’ அவள் சொல்ல,

‘‘பரவாயில்லை புள்ளை வாவா’’ என்றபடி தரையைத் துடைத்து விடுகிறான். கோணியை உதறிப் போடுகிறான்.

‘‘உக்காரு புள்ளை. இன்னா கொண்டு வந்திருக்கே?’’

‘‘அட போயா இன்னிக்கு தண்ணி வரலே. வெளிலே தண்ணி கொண்டு வந்து கொட்டினாங்க. க்யூவிலே நின்னு பிடிக்கவே இம்மா நேரமாச்சு. ஐயோ நீ காத்

திருக்கப் போறயேன்னு ஓடி வந்தேன். நீ ஓட்டல்லே போய் ஏதானும் வாங்கி சாப்பிடுய்யா?''

''ஆமா நீ ஏதானும் சாப்பிட்டியா?''

''இல்லையா காலைலேந்து வெத்திலை பாக்கு போட்டு முழுங்கிவிட்டு இருக்கேன். ராவிக்கு ஒருவழியா சாப்பிட்டுக்கறேன்.''

''என்ன புள்ளை இது? சும்மா கிட.'' என்றவன் அவசரம் அவசரமாக பக்கத்திலுள்ள கையேந்தி பவனுக்குப் போய் இரண்டு பொட்டலங்களை வாங்கி வருகிறான். சாம்பார் சாதம் - இரண்டு பொட்டலங்களை இருவரும் எடுத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பிக்கின்றனர். பிறகு பேச்சு பார்க்க, பார்க்க கணவன் மேல் இன்னும் ஆத்திரமும் கோபமும் வந்தது அபிஷேக்கின் தாய்க்கு. 'எத்தனை நல்லவன் இவன்' செருப்பு தைப்பவனா இருந்தாலும் எத்தனை பெரிய மனசு.

மனம் முழுவதும் இந்த சிந்தனையோடு வேலை செய்கிறாள். அன்று தான் பார்த்த பெண்ணை எப்படி சம்பந்தப்படுத்துவது யோசித்துக் கொண்டே வெளியே வந்த போது, செருப்பு தைப்பவனை தலை கலைந்து, பரட்டைத் தலையோடு இடுப்பில் குழந்தையோடும், கையில் நண்டும் சுண்டுமாக இரு பிள்ளைகளை அழைத்தவாறே பிடித்து இழுத்து ஓவென்று கத்திக் கொண்டிருக்கிறாள். இதற்குள் கூட்டம் கூடிட அபிஷேக்கின் தாயாரும் எட்டிப் பார்க்கிறாள்.

''ஏய்யா ரெண்டு மாசமாச்சு வூட்டாண்டை வந்து. மூணு பிள்ளைகளை வச்சுகிட்டு தவிச்சுகிட்டு இருக்கேன். புதுசா தொடுப்பு கேக்குதா உனக்கு?'' அவள் கத்தி



கூச்சல் போட பதிலுக்கு அவனும் கத்த, அவள் கூட வந்தவர்கள், தமையன்களோ, தம்பியோ அவர்களும் சண்டை போட்டு அவனை அடிஅடி என்று அடிக்க மனம் விண்டு போனது. சே! இவனும் நல்லவன் இல்லையா? இதற்குத் தன் கணவன் நூறு மடங்கு உகந்தவன் மனம் அடித்துச் சொன்னது. இன்று வீட்டிற்கு போய் அவனிடம் பேச வேண்டும். அவன் சரி என்றால் அவனையும் அழைத்துக் கொண்டு அந்தப் பெண்ணையே பார்த்து பேச வேண்டும்.

அபிஷேக்கின் தாயார் குறைந்த வயதினளோ அல்லது அனுபவம் அற்றவளோ அல்ல. இருப்பினும் தான், தன் நினைவுகள் என்று வாழ்பவர்களுக்கு தன் எண்ணம் தான் சரி என்று தோன்றும். விளைவுகளையோ, சூழ்நிலை களையோ அவர்கள் நினைத்துப் பார்ப்பது கூட இல்லை. வழியில் இரண்டு மூன்று முறை பார்த்த அந்தப் பெண் ணின் சம்மதத்தைக் கேட்கவில்லை. இதைப்பற்றி யாரோடும் கலந்து ஆலோசிக்கவில்லை. தானே ஏதோ நினைத்துக் கொண்டு, அதை சரி என்று நினைத்து அதை நிறைவேற்றத் துடிக்கும் வேகம்.

அந்த வேகத்தோடு வேக, வேகமாக நடந்து செல்கிறாள். அந்தப் பெண்ணைப் பார்க்கவேண்டும். புருஷனை அழைத்துக் கொண்டு அந்தப் பெண் இருக்கும் போது போக வேண்டும். உடனே கணவனை செல்லில் தொடர்பு கொள்கிறாள். பலமுறை தொடர்பு கொண்டும் கணவனை தொடர்பு கொள்ளவே முடியவில்லை. 'சே என்ன மனுஷன், செல்லை எதற்கு எடுத்து செல்கிறான். கூப்பிட்டால் பதில் சொல்ல மாட்டானா? நல்ல அசமஞ்சத்தை திருமணம் செய்து கொண்டிருக்கிறோம். சே!

மறுபடியும், மறுபடியும். தொடர்பு கொள்ள, செல் அணைக்கப்பட்டு விட்டது.

எரிச்சலோடு உதடுகளைக் கடித்தபடி செல்கிறாள். ''ஹாய் ஆன்ட்டி'' யாரோ கூப்பிட திரும்பிப் பார்க்கிறாள். கல்யாணிதான்.

''கல்யாணி'' லலிதா ஆச்சரியத்தோடு அவளைப் பார்க்கிறாள்.

''என்னம்மா உன்னைத்தான் பார்க்கணும்னு நினைச்சேன். நீயே எதிர்லே வந்திருக்கே. உனக்கு நூறு வயசு.''

கல்யாணி சிரித்து விடுகிறாள்.

''என்ன ஆன்ட்டி. எதுக்கு எனக்கு நூறு வயசு. அத்தனை வயசு இருந்து நான் என்ன பண்ணப் போறேன்.''

''சரிதான். நல்லவங்க எல்லாம் நிறைய வருஷம் உயிரோடு இருக்கணும்.''

சிரிக்கிறாள்.

''அப்புறம்மா. முக்கியமான விஷயம். நான் எங்க வீட்டுக்காரரை அழைச்சுகிட்டு உங்க வீட்டுக்கு வரப் போறேன்.''

''என்னம்மா விஷயம்?'' ஆச்சரியப்பட்டவளாய் கேட்கிறாள் கல்யாணி.

''உன்னை என் பையனுக்கு கேக்கதான். உன்னை என் மருமகள் ஆக்கிக்கணும்னு ஆசைம்மா, அதான்.''

நொடிப் பொழுதில் கல்யாணியின் முகம் மாறியது.

''மேடம் என்ன இது? இப்படி பேசறீங்க? ஏதோ பிரண்டிலியா பேசினா தப்பா நினைச்சிட்டீங்களா?''



அவள் கேட்க அபிஷேக்கின் தாயாரின் முகமும் மாறியது.

''என்னம்மா பேசறே நீ?''

''பின்னே என்னங்க. உங்க பையனைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னேனா? ஏதோ ஒருநாள் பையனைக் கோயிலுக்கு கூப்பிட்டுகிட்டு வந்தீங்க. இப்ப என்னடான்னா சம்பந்தம் பேசணும்னு சொல்லறீங்க? என்ன நினைச்சுகிட்டு இருக்கீங்க?''

''என்னம்மா இப்படி எல்லாம் பேசறே? உன்னை நல்ல பொண்ணுன்னு நினைச்சுகிட்டு இருந்தேனே.''

''சரிதான். நீங்க எங்க வீட்டுக்கு வந்து பொண்ணு கேட்டா என் வீட்டிலே என் பேர் ரிப்பேர் ஆகிடாதா. ஏம் மேடம் இப்படி எல்லாம் நடந்துக்கறீங்க. பெரியவங்க. பார்க்கறதுக்கு நல்லவங்களா இருக்கீங்களேன்னு பழகினா, இப்படி எல்லாமா நடந்துக்கறது. பை... மேடம் நாம இனிமே சந்திக்கவே வேணாம்'' சொல்லிவிட்டு ஸ்கூட்டியை ஓட்டிக் கொண்டு மறைந்தாள்.

லலிதாவிற்கு அதிர்ச்சிதான். 'இந்தப் பெண்ணை நல்லவள் என்று நினைத்தேனே. எப்படி எல்லாம் பேசினாள். எந்தப் பெண்ணை மிகவும் உயர்ந்தவள் என்று நினைத்தாளோ அவளை தூக்கி தொப்பென்று கீழே போட்டாள் லலிதா. சே! மட்டமான பெண். எல்லாம் தன் மடத்தனம். பேசாமல் தன் பையன் ஒத்துக் கொண்ட பெண்ணுக்கே அவனை மணமுடித்திருக்க வேண்டும். தவறு செய்துவிட்டேன். தன் தாத்தாவும் பாட்டியும் எத்தனை சொன்னார்கள். தான் தான் அவர்கள் பேச்சை கேட்கவில்லை. எப்படி முன்யோசனை இல்லாமல்

எல்லாவற்றையும் செய்கிறேன்.' தன்னையே கடிந்தவாறே வீட்டை நோக்கி செல்கிறாள்.

வீட்டை அடையும்போதே மாமனாரும், மாமியாரும் எங்கோ வெளியில் போக பளிச் சென்று உடை உடுத்தியபடி காட்சி அளித்தார்கள். 'கொடுத்து வைத்த வர்கள்' சண்டையோ சச்சரவோ, அது பாட்டுக்கு அது. எந்தவித கவலையுமில்லாமல் அவரவர்கள் வேலையைப் பார்ப்பவர்கள். இப்போதும் எங்கோ கிளம்புகிறார்கள். இன்னும் சற்று உள்ளே சென்றவுடன் புருஷனும் நல்ல உடை உடுத்தி டிரிம்மாக வெளியே வர ஆச்சரியப் படுகிறாள். எல்லோரும் சேர்ந்து கொண்டு எங்கே செல்கிறார்கள்?

''பாட்டி,'' குரல் கொடுக்க முயற்சிப்பதற்குள் தாத்தாவும், பாட்டியும் புதிய உடை மாற்றி எதிரே வந்தார்கள்.

''நல்ல வேளை வந்தியா. சீக்கிரம் கிளம்பு அபிஷேக்கிற்கு பொண்ணு பார்க்க போகணும். சீக்கிரம் டிபனை சாப்பிட்டு டிரஸ் மாத்திட்டு கிளம்பு. ''சொல்ல, சந்தோஷம், அதிர்ச்சி எல்லாம் ஒருசேர தாக்க அப்படியே நிற்கிறாள் லலிதா.

## 28

ஒருநிமிடம் தான் பார்த்த பெண்ணை நிச்சயம் செய்யவில்லை என்ற கோபம். இருந்தும் தான் நினைத்துக் கொண்டிருந்த பெண் தன் முகத்தில் சேற்றை வாரி



இறைத்ததை நினைத்து இறுகிப் போகிறாள். இருந்தும் பெண் யாரென்று தான் கேட்கவில்லையே என்று தோன்ற ''பாட்டி என்ன திடீர்னு பெண் பார்க்க போகணும்னு சொல்லறீங்க?''

''உங்கிட்டே முதல்லே சொல்லியாச்சேம்மே. இன்னிக்கு போகப்போறேன்னு சொல்லலே. மத்தபடி பொண்ணு யாருன்னு உனக்கே தெரியுமே. நம்ப ஆர்த்திதான். நானும் உங்க தாத்தாவும் போய் பேசிவிட்டு வந்துட்டோம். இன்னிக்கு வரதா சொல்லிட்டோம். நீயும் சரின்னு சொல்லுவேன்னு எதிர்பார்த்துண்டுதான் ஏற்பாட்டை செய்துட்டோம். உங்க மாமியார், மாமனார் கூட ரெடி, நீ மட்டும் கிளம்ப வேண்டியதுதான்.''

லலிதாவிற்கு ஒரு நிமிடம் எரிச்சல் வந்தது. ஆர்த்தியைத் தவிர வேறு பெண் என்றால் மனதில் கொஞ்சம் வந்திருக்கும். ஜீன்ஸ் பேண்டும், டீ ஷர்ட்டும் அணிந்து ஏனோ அந்த பெண்ணைப் பார்க்கவே பிடிக்கவில்லை. ஏனோ இந்த நவநாகரீகப் பெண்களை அவள் ஒத்துக் கொள்வதில்லை. 'சரி போகட்டும். முதலில் நிச்சயம் ஆகட்டும் பிறகு பேசிக் கொள்வோம்.'

அவசரம் அவசரமாக டிபனை சாப்பிட்டுவிட்டு பச்சை நிறத்தில் சிகப்பு பார்டர் போட்ட பிரிண்டட் சில்க் அணிந்து கழுத்தில் முத்துச்சரம் அணிந்து காதில் முத்துத் தோடு, கைகளில் முத்து வளையல் என்று சற்று பிரமாதமாக டிரஸ் செய்து கொண்டு வெளியே வர மாமியார் கண்ணை உயர்த்தி மருமகளையே பார்க்கிறாள்.

''பிள்ளைக்கு தானே பெண்ணை பார்க்கப் போறாங்க. அலங்காரத்தைப் பார்த்தீங்களா?'' மாமனாரிடம், மருமகளைப் பற்றி பேச, லலிதா பேசிய மாமியாரைப்

பார்க்கிறாள். என்னை தடவி வாரிக் கொண்டை போட்டு மஞ்சள் நிறப் பட்டுப்புடவை, சாண் அகல சரிகைப் போட்ட வெல்வெட் பார்டர் உள்ள புடவையை அணிந்து கொண்டு, அதே நிறத்தில் ரவிக்கையும் அணிந்து கையில் கொண்டையைச் சுற்றி ஜாதிப் பூவை சூடிக் கொண்டு நெற்றியில் சற்று பெரிய பொட்டை வைத்துக் கொண்டு காதில், கழுத்தில் கைகளில் தங்க நெக்லஸ், வளையல், மோதிரங்களைப் போட்டுக் கொண்டு எதிரில் நிற்கிறாள். 'இந்த வயதில் இந்த அலங்காரம் செய்து கொள்ளும்போது தான் செய்து கொள்ளக்கூடாதா? நல்ல கூத்துதான்.' முகத்தில் மாமியாருக்கு பவுடர் வேறு சற்று தூக்கலாகத் தெரிந்தது.

மருமகள் பார்த்த பார்வையை எப்படி எடுத்துக் கொண்டாளோ என்னவோ, ''என்ன பார்க்கறே?'' நேரடியாகவே கேட்க ஆரம்பிக்க, லலிதா பதில் பேசாமல் கிளம்புகிறாள்.

''என்னடி கேட்டுகிட்டே இருக்கேன் திமிரா?'' மாமியார் ஆரம்பித்தாள். லலிதா பின்னும் மௌனமாக இருக்க,

''ஏம்மா காது கேக்குதில்லே'' மாமனார் நக்கலாக கேட்கிறார்.

''போச்சுடா'' இங்கிருந்து எப்படி தப்புவது லலிதா வழியைத் தேடுகிறாள்.

''நீங்க சில நேரங்கள்ளே நெஞ்சு அழுத்தமா இருப்பீங்களே. அதே மாதிரிதான் இதுவும்'' மாமியார் சொல்லி முடிக்கவில்லை. அங்கே மாமியாருக்கும், மாமனாருக்கும் இடையில் இன்னொரு குருஷேத்திரம் ஆரம்பித்தது. மெல்லிய பெருமூச்சோடு சற்று நிம்மதியாக வெளியே வருகிறாள் லலிதா. கணவன், மனைவிக்குள் எப்போதுமே தகராறுதான். அவர்களுக்குள் சண்டை வந்து விட்டால். அடுத்தவர்கள் இரண்டாம் பட்சம்தான்.



இதற்குள் கறுப்பு இன்னோவா காரை அபிஷேக் ஓட்டி வந்து தயாராக நிறுத்த பாட்டி, தாத்தா, லலிதாவின் கணவன் ஏற, மாடியில் பாட்டிக்கும், தாத்தாவிற்கும் இன்னும் சண்டை ஓய்ந்தபாடில்லை. கொள்ளுப் பாட்டியே ஒருவழியாக இறங்கி சற்று சத்தம்போட்டு அவர்களை அழைத்து வர அவர்கள் எல்லோரும் ஒருவழியாகக் கிளம்பினர்.

''பாட்டி பெண் பார்க்க போக எதுவுமே வாங்கலையே.''

''எல்லாம் நான் ரெடி பண்ணி வச்சிருக்கேன்'' கிசுகிசுக்கிறாள் பாட்டி. மறுக்கிறாள் லலிதா. 'இந்த பாட்டிக்கு தெரியாததே ஒன்றுமில்லையா? அருமையாக சமைப்பதிலிருந்து, சுத்தமாக வீட்டை வைத்துக் கொள்வதிலிருந்து, எந்த ஒரு வேலையையும் நிமிஷமாகச் செய்வதிலிருந்து எந்தச் சண்டைக்கும் முடிவு சொல்வதிலிருந்து தீர்த்து வைப்பது வரை அது மட்டுமா யாரேனும் உதவி என்று வந்துவிட்டால் போதும் அவர்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்து கொண்டு மகன்கள், மகள், பேரன், பேத்திகள், கொள்ளுப்பேரன், கொள்ளுப்பேத்தி என்று யார் வந்து உதவி என்று நின்றாலும் தானாக முன்வந்து உதவி செய்து என்ன மனுஷி இவள். இவள் கடவுளின் அவதாரமா? கண்டிக்கும் இடத்தில் கண்டித்து, கொஞ்சும் இடத்தில் கொஞ்சி, இதெல்லாம் எப்படி முடிகிறது. பிள்ளை காதலிக்கிறேன் என்று சொன்னதும் அதை எதிர்க்கத் தானே தனக்குத் தோன்றியது. அதே பாட்டிக்கு வேறு மாதிரி அல்லவா தோன்றியிருக்கிறது. கொள்ளுப் பேர

னுக்கு பிடித்தவர்களைப் போய் பார்த்து பேசி... கொள்ளுப் பாட்டி மனதில் விஸ்வரூபம் எடுக்க, மகிழ்ந்து போகிறாள். ஆச்சரியப்பட்டு போகிறாள் லலிதா.

மறுபடியும் தன் மாமியாரை ஏதோ பேச வாயெடுக்க, சட்டென்று பதில் சொல்கிறார் வண்டார்குழலி பாட்டி.

''போதும்மா. பொண்ணு பார்த்து நிச்சயம் செய்கிற வரைக்கும் பேசாமல் இரு.''

ஒரே வார்த்தைதான் மருமகள் வாயை மூடிக் கொண்டாள். பாட்டியையே அதிசயித்து பார்த்துக் கொண்டிருந்தாள் லலிதா.

''என்னம்மா?'' கணவரின் ஒரே வார்த்தையில் பாட்டியும் மௌனியானாள்.

இங்கே அபிஷேக்கிற்கு ஒன்றும் புரியவில்லை. 'எங்கே போகிறோம். ஏதோ பெண் பார்க்க போகிறோம். என்று பாட்டி சொன்னார்கள். கிளம்பியாகி விட்டது. யார் என்ன என்று கேட்டுக் கொள்ளவில்லை. இப்போது யாரையுமே திருமணம் செய்து கொள்ளப் பிடிக்கவில்லை. தான் உயிருக்கு உயிராக காதலித்த ஆர்த்தியே இப்படி எல்லாம் நடந்து கொண்ட போது வேறு எந்தப் பெண்ணை நம்புவது எல்லாமே போலித்தனமாக இருக்கின்றது. அவரவர்களுக்கு அவரவர்கள் வாழ்க்கை, அவர்களின் ஆதாயம். இதில் மற்றவர்களுக்கு எங்கே இடமுள்ளது. ஆர்த்தியாக இருந்தால் அம்மா கட்டாயம் வரமாட்டாள்.' மனதில் இத்தனையும் நினைத்துக் கொண்டு ஒட்டுகிறான்.

ஆர்த்தியின் வீட்டிற்கு வந்து வண்டியை நிறுத்தும் போது ஒரு நிமிடம் அதிர்ந்து போகிறான். 'என்ன இது?



தன்னைக் கேட்க கூட இல்லை. இவர்களாகவே நிச்சயம் செய்து விட்டார்களே. தன்னால் ஆர்த்தியுடன் வாழ முடியுமா என்ன? நம்பிக்கை துரோகம் செய்தவர்களோடு வாழவே முடியாது. சரி இருக்கட்டும். அங்கே போய் திருமணத்தில் விருப்பம் இல்லை என்று சொல்லிவிடலாம்.' முடிவு செய்து கொள்கிறான்.

கொள்ளுப் பாட்டி தாத்தா, தன்னுடைய பாட்டி, தாத்தா அம்மா, அப்பா பட்டாளத்துடன் உள்ளே நுழைகிறான் அபிஷேக். பாட்டி டிரைவரிடம் ஏதோ சொல்ல பை, பையாக டிரைவர் இறக்க ஆரம்பிக்கிறான்.

ஆர்த்தியின் தாயார் கொள்ளுப்பாட்டி, தாத்தாவை பார்த்து 'வாங்க... வாங்க' என்று வரவேற்கிறாள். அவளின் பார்வை லலிதாவின் மேல் படிந்ததும் அப்படியே நின்று விட்டது. 'இவள் எங்கே இங்கே வந்தாள். அதான் பெண்ணைத் தர முடியாது என்று சொல்லி விட்டேனே. இருந்தும் மரியாதையைக் கருதி 'வாங்க' என்று கூப்பிடுகிறாள்.

'சிடுசிடுவென்று வரும் இந்த கிழங்கள் யார்?' எல்லா கேள்விகளையும் மனதிற்குள் புதைத்தவாறே அவர்களை வரவேற்கிறாள்.

இங்கே ஆர்த்திக்கும் எரிச்சலான எரிச்சல். 'ஏன் இந்த அம்மா இப்படி நடந்து கொள்கிறாள். அபிஷேக்கோடு தன் திருமணம் நடைபெறுமா என்பதே சந்தேகம். தான் அவனுக்காக உருகும் போது அவன் எத்தனை சந்தோஷமாக இருக்கிறான். காதலித்தவளை கொஞ்சம் கூட நினைக்காதவனை எதற்கு நினைக்க வேண்டும். அம்மா சொன்னது சரிதான். வெறும் சுத்துவதற்காகத்தான்

தன்னிடம் பழகி இருக்கிறான். அவன் உறவே வேண்டாம்.' எரிச்சலும், ஆத்திரமும் கூட பல்லைக் கடித்தபடி இருக்கிறாள். 'பார்க்கலாம் அவன் என்ன சொல்வான் என்று பார்க்கலாம்.'

அபிஷேக்கும் ஆர்த்தியும் எரிச்சல் பட தாத்தா, பாட்டி ஆர்த்தியின் பெற்றோர்களோடு பேசுகிறார்கள். கூடை கூடையாக பழங்களையும் பூவையும் ஒரு பட்டுப்புடவை ரவிக்கை எல்லாவற்றையும் டிரைவர் தூக்கி வர ஆர்த்தியின் தாயார் அகமகிழ்ந்து போகிறாள். வந்தவர்களை விழுந்து விழுந்து கவனிக்கிறாள்.

அபிஷேக்கின் தாயாருக்கும் முகத்தில் ஈயாடவில்லை. 'இந்தப் பெண் கல்யாணி என்றுதானே பேர் சொன்னது. இவள் பெயர்தான் ஆர்த்தியா? ஒருநிமிடம் தான் விரும்பிய பெண்ணே அமைந்துவிட்டதைப் பற்றி மகிழ்ந்தாலும், அடுத்த நிமிடம் எரிச்சல் வந்தது. என்ன அழகாக பொய் சொல்லி நடித்துவிட்டது. அதுமட்டுமில்லாமல் தன்னிடம் எப்படி எல்லாம் பேசினாள். இவள் தன் மருமகளாக வருவதா? தேவையே இல்லை. வேண்டவே வேண்டாம். முதலில் இவர்கள் பேசட்டும் பின் நாம் பேசுவோம்.' அபிஷேக்கின் தந்தையும் ஆர்த்தியின் தந்தையும் ஷேர் மார்க்கெட் பற்றி சென்செக்ஸ் பற்றி சுவாரசியமாக பேச ஆரம்பித்தார்கள்.

தாத்தாவும் பாட்டியும் மெதுவாக எழுந்து வீட்டை ஆராய ஆரம்பிக்க,

''எங்களுக்கு பரிபூரண சம்மதம். நிச்சயத்துக்கு எப்ப நாள் குறிக்கிறது. கல்யாணத்துக்கு எப்ப நாள் குறிக்கலாம். அவங்க நேத்து ஜோஸியர் வீட்டுக்கு போயிட்டு வந்தாங்க. இந்த மாச கடைசி நல்ல நாள்னு சொன்னாங்க.



அப்ப நிச்சயம் வச்சுக்கலாம். அடுத்த மாதக் கடைசியிலே முகூர்த்தம் வச்சுக்கலாம் என்ன சொல்றீங்க.'' கணவர் ஜோசியரைப் பார்த்து விட்டு வந்ததையும் அந்த குறிப்புகளையும் எடுத்துக் காட்டுகிறாள் ஆர்த்தியின் தாயார். அபிஷேக்கின் தாயார் முகத்தை சற்று கடுமையாக வைத்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறாள். இரண்டும் ஒரே பெண் என்று நினைத்தால் தான் வந்திருக்கவே மாட்டோம். 'சே!' என்று திருப்பித் திருப்பி தன்னை வைதவாறு அமர்ந்திருக்கிறாள்.

அபிஷேக் மெதுவாக எழுந்து நழுவி வெளியே வர, அவனுடன் அவன் தாயாரும் நடக்கிறாள். அபிஷேக் ஆர்த்தியின் மீது இருந்த கோபத்தில் தாயாரைக் கவனிக்கவில்லை.

''என்னடா அபிஷேக் ரொம்ப டல்லா இருக்கே?''

''த்சு...''

''நீ லவ் பண்ற பொண்ணுதானே.''

''இப்ப இல்லைம்மா.''

''என்னது?'' அதிர்ச்சியுற்றவாறே அங்கேயே பார்க்கிறாள்.

''ஆமாம்மா. எங்க லவ் போயாச்சு. நீ சொன்னது ரைட்தான். அந்தப் பொண்ணு அத்தனை நல்ல பொண்ணு இல்லை. நான்தான் முட்டாள்.''

''இப்பவாவது புரிஞ்சிகிட்டியே. எதுக்குமே அனுபவம் வேணுமடா. இந்த காலத்து லவ் நீர்க்குமிழி தாண்டா. நிமிஷ நேரத்திலே தோன்றி நிமிஷ நேரத்துலே மறைஞ்சிடும்.''

''சரி சரி இப்ப ஒண்ணும் பேசிக்காதே. பிரச்சனை பெரிசாயிடும். அப்புறம் பார்த்துக்கலாம்.''

இதற்குள் பெரியவர்கள் பேசி நிச்சயத்திற்கு நாள் குறித்து எல்லாவற்றையும் செய்துவிட்டு அனைவரும் வெளியேற ஆர்த்தி கல்லாய் சமைந்திருந்தாள்.

'யாரிடம் போய் தன் நிலைமையை சொல்வது?' அவர்கள் எல்லோரும் சென்ற பிறகு நேராக தாயிடம் வருகிறாள்.

''என்ன ஆர்த்தி கண்ணா ஆர் யூ ஹேப்பி'' தந்தை கூற,

தாய் பேசுகிறாள்.

''ஹேப்பியா நமக்கு எதிர்லே நல்ல பிள்ளை மாதிரி மூஞ்சியை வச்சுகிட்டு இருக்கா, உள்ளுக்குள்ளே குதிக்க மாட்டாளா?''

''எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்.''

''என்னடி விளையாடறியா? நீ சொல்லிதானே இந்த இடத்தையே ஏற்பாடு செய்தேன். முதல்லே உங்கப்பா மாட்டேன்னு சொன்னாரு. அவரையும் போர்ஸ் பண்ணி சம்மதிக்க வச்சேன்.''

''அப்ப பொஸிஷன் வேற. இப்ப வேற.''

''அப்ப என்ன இப்ப என்ன?''

''அப்ப பிடிச்சிருந்தது. இப்ப பிடிக்கலை.''

''இதென்னடீ கண்ணாமூச்சி விளையாட்டா. இந்த வேலையெல்லாம் வேணாம். இந்த மாத கடைசியிலே நிச்சயம். அவுங்க எத்தனை பெரிய பணக்காரங்களாக இருக்காங்க. பையனுக்கு என்ன கேடு. ராஜா மாதிரி இருக்கான். நல்லா படிச்சிருக்கான். நீ ஏதானும் பேசி உயிரை எடுக்காதே.''



ஆர்த்தி மௌனமானாள். இவர்களிடம் பேசிப் பிரயோசனமில்லை. எங்கே பேசணுமோ அங்கே பேசலாம். முடிவு செய்து கொண்டாள்.

## 29

அழைப்பு மணியை அழுத்தி காத்திருந்தாள் ஆர்த்தி. கதவைத் திறந்து கொண்டு தாத்தா ''வாம்மா பேரன் வைஃப் வா, வா'' ஆசையாகக் கூற,

''நேத்துதானே பேசி முடிச்சோம். அதுக்குள்ளே வீட்டுக்கு வருவானேன்'' அபிஷேக்கின் தாத்தா கூற,

''தாத்தா உங்ககிட்டேயும், பாட்டிகிட்டேயும் பேசணும்'' கொள்ளுத் தாத்தாவிடம் கூற,

''வாம்மா'' உள்ளே அழைத்துச் செல்கிறார்.

''என்னடா இத்தனை சீக்கிரம் வந்துட்டே. பேரன் வெளியே போயிட்டான். ஏதோ காலையிலேயே வேலை இருக்குன்னு சொன்னான். இனிமே ஆபீஸ் முடிஞ்சுதான் வருவான்'' பாட்டி சிரித்துக் கொண்டே கூற,

''இல்லை பாட்டி நான் உங்களை பார்க்கத்தான் வந்தேன்.''

''என்னம்மா விஷயம்?''

''உங்ககூட கொஞ்சம் தனியா பேசணும்'' ஆர்த்தி சற்று கிசுகிசுத்த குரலில் கூற,

''வாம்மா'' என்றவள் அவளை அழைத்தவாறே செல்கிறாள். தாத்தாவும் உடன் வர ஆர்த்திக்கு வியர்த்து கொட்டியது.

''என்னாச்சும்மா? ஏன் இப்படி வேர்த்துக் கொட்டுது. என்ன பிரச்சனை. மறுபடியும் உங்களுக்குள் ஏதேனும் பிரச்சனையா?'' பாட்டி சற்று ஆதங்கத்துடன் கேட்க,

''பிரச்சனை இல்லை பாட்டி, பிரிஞ்சிட்டோம்'' ஆர்த்தி சொல்ல, சொல்ல பாட்டி அவளையே நம்ப முடியாமல் பார்க்கிறாள்.

''என்னம்மா சொல்றே. பிரிஞ்சிட்டீங்களா? அபிஷேக் இதைப் பத்தி ஒண்ணுமே பேசலையே.''

''நானும் எங்க வீட்டிலே பேசலே பாட்டி. எனக்கு இந்த கல்யாணத்துலே இஷ்டமே இல்லை பாட்டி.''

''ஏம்மா ஏன்?'' கொள்ளுத் தாத்தாவும் அதிர்ச்சி அடைந்தவராய் கேட்க,

''எங்க பையன் மேலே என்ன தப்பும்மா?''

''யார் மேலேயும் தப்பில்லே பாட்டி. சாதாரண அட்ராக்ஷனை லவ்னு நினைச்சது தப்பு.''

''யாருக்கு? உனக்கா சாதாரண அட்ராக்ஷனா? அவன் மேல் ஆசையில்லையா?''

''எனக்கா? இல்லே பாட்டி. அன்றையிலிருந்து இன்று வரை அவரை உண்மையாதான் காதலிச்சேன். ஆனா அவருதான் அந்த மாதிரி இல்லேன்னு தெரிஞ்சுது.''

''என்ன சொல்றே?''

''உண்மையைத்தான் சொல்லறேன். அவரைப் பார்க்கணும்னு பலமுறை தொடர்பு கொண்டும் பிரயோசனமில்லை. அவருக்கு பிடிச்ச டிரஸ்ஸை போட்டுகிட்டு அவரைத் தேடி ஓடி வந்தேன். ஆனா அவர் மீதி பேரோட என்ஜாயிபிளா இருந்தார். என்னைப் பத்தி கவலைப்படவே இல்லை. கொஞ்சநாள் லவ் பண்ணவளை பாக்க முடியலே. பேச முடியலேன்னா துக்கம் இருக்காதா? இவருக்கு அது எதுவுமே கிடையாது. நான் துடிச்ச துடிப்பு இவர்கிட்டே இல்லை. லவ் இல்லாதவனை கல்யாணம் பண்ணிகிட்டு என்ன பண்றது? இது வெறும் அட்ராக்ஷன்னு நான் கூட நினைச்சுப் பார்க்கலே. அதுதான் போதும். இனிமே எதுவும் வேண்டாம். தயவு செய்து இந்த கல்யாணம் நடக்க வேண்டாம்.''



''ஏம்மா இதை நீ அப்பவே சொல்லி இருக்கலாமே. நிச்சயம்னு பேசிட்டு வந்து இப்ப சொன்னா என்னம்மா அர்த்தம்?'' கொள்ளுத் தாத்தா சற்று காட்டமாகவே சொல்லுகிறார்.

''ஏம்மா, இப்படி? படிச்சப் பொண்ணு, யோசிக்கமாட்டியா? லவ் இல்லாமயா உன் பின்னாடி சுத்திட்டு இருந்தான். லவ் இல்லேன்னா உன் வீட்டிற்கே வந்திருக்கமாட்டானே.''

''இல்லேம்மா அதெல்லாம் லவ் பண்ணும்போது. இப்ப இல்லேம்மா.''

''நீ பண்றதெல்லாம் தப்பு. எப்பவுமே எதுக்கும் அவசரப்படாதே. எதுவும் சரியா வராது. உனக்கு மேலே உன் மேலே உயிருக்குயிரா இருக்கான் அவன்.''

''உயிருக்குயிராக இருக்கறவங்களா என்னைப் பார்க்க கூட இல்லை. பிரிஞ்சா பீலிங் இருக்காதா? அவர்க்கு அது இருக்கற மாதிரியே தெரியலையே ஏன்? அவரைப் பார்க்க

முடியலையேன்னு நான் துடிச்சுக்கிட்டு இருக்கேன். ஆனா அவர்?''

சொல்லும் போதே கண்கள் நிறைந்து வழிந்தது.

''ஆர்த்தி இங்கே வா'' ஆசையாகக் கூப்பிட்டு தலையைத் தடவுகிறாள்.

''என்ன பாட்டி?''

''என்னம்மா இது? பயித்தியமா நீ? அவனா உன் மேலே ஆசை இல்லாதவன். உங்க வீட்டுலேர்ந்து வந்து பேசச் சொல்லு. இல்லை வீட்டுக்கு வராதேன்னு சொன்னது யாரு. எப்படி துடிச்சான் தெரியுமா?''

''அது அது எங்கம்மா சொன்னது?''

''அம்மா சொன்னா என்னம்மா? அவனை பார்க்கக்கூட நீ விருப்பப்படலைன்னவுடனே உனக்கு அவன்மேலே அன்பு இல்லைன்னு ஆயிடுமா. அவன் உனக்கு அவன் மேலே அன்பே இல்லைன்னு சொன்னா நீ ஏத்துப்பியா? எல்லோருடைய வாழ்க்கையும் அப்படித்தாம்மா. எதை யும் புரிஞ்சுக்கணும். அவசரப்பட்டு எடுக்கற எந்த முடி வும் சரியாகாது. இரண்டு பேரும் ஆசைப்பட்டீங்க. உங்களை சேர்த்து வைக்கணும்னு நினைச்சோம். சேர்த்து வச்சாச்சு. இப்ப போய் முடியாது மாட்டேன்னா வேலைக்கு ஆகாது.''

''அப்படி இல்லே பாட்டி.''

''இல்லேம்மா நான் சொல்றதைக் கேளு. இப்படி இருக்குமோ அப்படி இருக்குமோன்னு சொல்றதைவிட எப்படி இருக்கணும்ங்கறதை நீ முடிவு பண்ணு எல்லாம் சரியாயிடும்.''



வண்டார்குழலி பாட்டி சொல்லச் சொல்ல மந்திரத்தால் கட்டுண்டவள் போல் கேட்டாள்

''ஆனா பாட்டி'' ஆரம்பிக்கிறாள்.

''இந்த ஆனா ஆவன்னா வேண்டாம். அவனைக் கல்யாணம் பண்ணிகிட்டு, அவனைப் புரிஞ்சுகிட்டு வாழ டிரை பண்ணு. எல்லாம் சரியாயிடும். உன்னை வேண டாம்னா கல்யாணத்துக்கு ஒத்துக்கவே மாட்டான். அதை புரிஞ்சுக்க.''

ஆர்த்தி குழப்பத்தில் ஆழ்கிறாள். பாட்டி சொன்னது நிஜம். ஆனாலும் தான் இல்லாத இழப்பு அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை போல் தோன்றியதே. குழப் பத்தோடு யோசிக்கிறாள். ஒன்றுமே தோன்றவில்லை.

''சின்ன சின்ன பிரச்சனைகளை தோண்டி, தோண்டி பார்த்தா எல்லாமே பூதாகரமாகத் தோன்றிடும். முதல்லே ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கணும். இன்னிக்கு இருக்கற அவசர உலகத்துலே வெறும் லவ்விலே எல்லாம் புரிஞ் சுக்க முடியாதும்மா. கூட வாழணும். அவன் மேலே உண்மையான ஆசையும், அன்பும் இருந்தா விட்டுக் கொடுத்து வாழத் தூண்டும். விட்டுக் கொடுத்தல்ங்கறது தோல்வி இல்லே. அது ஒரு பெரிய வெற்றின்னு புரியும். இரண்டு பேரும் ஒருத்தர் மேலே ஒருத்தர் அத்தனை ஆசையா இருந்தீங்க. நீ பார்க்க வேணாம்னு சொன னேன்னு அவனும், அவன் உன்னை திரும்பிப் பார்க்க லேன்னு நீயும் கோவிச்சுகிட்டு இருக்கிறது பைத்தியக் காரத்தனமா தெரியலையா? மருமகளே, போ எல்லா சந்தேகத்தையும் தூக்கி தூரப் போடு. வாழ்க்கை என்பது ஒருமுறை அது வாழறதுக்கும், ஜெயிக்கறதுக்கும்தான்.

தோல்விங்கறது எதுவுமே கிடையாது. எது தப்பா போனாலும் அதுக்கு கட்டாயம் நாமதான் காரணம். அதை சரி பண்ண பார்க்கணும். ஒரு தடவை கணக்கை தப்பா போட்டா, மறுபடியும் நாம சரியா போட முயற்சிக்கறதில்லையா. இல்லை சரியாத்தான் போட்டதில்லையா? வாழ்க்கையும் அப்படித்தாம்மா. துணிந்து நில். எதையும் தைரியமா பேஸ் பண்ணு. ஆரோக்கியத்தைத் தவிர எதை இழந்தாலும் மறுபடியும் மீட்டுக்கலாம்னு நம்ம மகாத்மா காந்தியே சொல்லி இருக்கிறார். அதுனால அனாவசியமா குழம்பாம கல்யாணப் பொண்ணா சந்தோஷமா இருக்க டிரை பண்ணு'' ஆர்த்தி ஒன்றும் பேசாமல் மௌனமாக தலை ஆட்ட, ஆர்த்தியின் கன்னத்தை தட்டிவிட்டு பாட்டி உள்ளே செல்கிறாள்.

ஆர்த்தி கிளம்ப யத்தனிக்க, ''ஆர்த்தி நில்லு போயிடாதே பாயசம் கொண்டுட்டு வரேன் சாப்பிட்டு விட்டு கிளம்பு.''

ஆர்த்தி மௌனமாக அமர்கிறாள். இதுவரை இருந்த குழப்பங்கள் போனது போல் மனம் லேசானது. இதுதவிர அபிஷேக்கின் மேல் இருந்த கோபம் மறைய, சிறியதாய் இருந்த அபிஷேக் பெரியதாகித் தோன்ற, மனம் மறுபடியும் குதூகலிக்க அபி, அபி என்று மனம் மட்டுமல்ல வாயும் முணுமுணுத்தது. அவனைப் பார்க்க வேண்டும் மனம் பரபரத்தது.

வண்டார்குழலி பாட்டி மனம் திறந்து சிரிக்கிறாள். ''போச்சு போ - இருந்தா தரையிலே இல்லேன்னா ஆகாசத்திலேயா'' கேட்டுவிட்டு சிரிக்க, ஆர்த்தியும் சந்தோஷமாகச் சிரிக்கிறாள்.

இங்கே பேரன் மனைவியாகப் போகிறவளிடம் பேசி, சிரித்துச் சந்தோஷமாக அளவளாகிக் கொண்டிருக்கும்



போது அபிஷேக் அலுவலகத்தில் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தான். ஏனோ திருமண நிச்சயதார்த்தம் அவனை சந்தோஷப்படுத்தவே இல்லை. தன்னை ஒரு வார்த்தை கூட கேட்காமல் நிச்சயம் செய்து விட்டு வந்துவிட்டார்களே. ஏனோ ஆதங்கம் அதிகமாக இருந்தது. தனக்கு இப்போது கட்டாயம் திருமணம் வேண்டாம். திருமண வாழ்க்கையைப் பிறகு பார்த்துக் கொள்வோம். மனம் மறுபடியும், மறுபடியும் அதையே யோசித்தது. என்ன செய்வது கொள்ளுப் பாட்டி, தாத்தாவிடம் பேசினால் எப்படியாவது சமாதானம் பேசி திருமணத்தை முடித்து விடுவார்கள்.

இப்போதைக்குத் திருமணத்தை நிறுத்த வேண்டும் என்றால் ஒரே ஒரு வழி. அம்மாவிடம் பேச வேண்டியது தான். அப்பாவிடமும் பேச முடியாது.

''போடா எல்லாத்தையும் பிராக்டிகலா பேஸ் பண்ணணும்'' என்பார். அம்மாவிற்கு ஆரம்பத்திலிருந்தே ஆர்த்தியைப் பிடிக்காது. அதனால் அம்மா பேசினால் அவன் நினைத்தது நடக்கும். பலமணி நேரம் யோசித்துவிட்டு அம்மாவிற்கு போன் செய்கிறான். செல்லில் பலமுறை தொடர்பு கொண்டு அம்மா போனை எடுக்கவில்லை. என்னாயிற்று? அப்புறம் தான் புரிந்தது. அம்மா வேலை நேரத்தில் இடியே விழுந்தாலும் பேச மாட்டாள். செல்லை அணைத்து விடுவாள். ஒருமுறை தன் பாட்டிக்கு ஹார்ட் அட்டேக் வந்த போது, அம்மா எக்ஸ்போர்ட் ஆர்டர் அனுப்பும் பணியில் இருந்ததால் இரவு எட்டு மணிக்கு தான் வீட்டுக்கே வந்தாள். அம்மாவை போனில் மட்டுமல்ல நேரிலும் தொடர்பு கொள்ள முடியவில்லை.

உற்றார், உறவினர் எல்லோரும் வந்தபின் கடைசியாகத் தான் அம்மாவே வந்து எல்லோர் கேலிக்கும்

இரையானாள். அன்றே பார்க்க முடியாத அம்மாவை இப்போது எப்படிப் பார்ப்பது? அபிஷேக்கிற்கு அதற்கு மேல் அலுவலகத்தில் இருப்பு கொள்ளவில்லை.

அரைநாள் விடுப்பு எழுதிக் கொடுத்துவிட்டு வெளியே வந்த போது அவசரம் அவசரமாக ஆட்டோவிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள் லலிதா.

''ஏண்டா செல்லிலே யார்கிட்டே பேசிகிட்டே இருந்தே? உன்னைக் காண்டாக்ட் பண்ண முடியலே.''

''அட என்னம்மா நீங்க? நான் உங்களுக்கு டிரை பண்ணி பண்ணி அலுத்துப் போயிட்டேன்.''

''அப்படியா?''

''ஆமா நீங்க என்ன விஷயமா வந்திருக்கீங்க?''

''என்னது இருக்கட்டும். இப்ப நீ எதுக்கு என்னைக் காண்டாக்ட் பண்ணிகிட்டு இருந்தே? என்ன விஷயம்?''

''வாங்க அந்த ஓட்டலுக்கு போய் உக்கார்ந்து பேசுவோம்.''

அம்மாவை அழைத்துக் கொண்டு தான் வழக்கமாகப் போகும் ஓட்டலுக்குச் சென்றான். அவன் வழக்கமாக அமரும் இருக்கையில் அமர்ந்து அம்மாவை எதிரே உட்கார வைத்தான்.

''சொல்லுடா? என்ன விஷயம்?''

''என்னவா? என்னம்மா என்னைக் கேக்காமலே நிச்சயம் பண்ணிட்டிங்க? நான் மண்டையை உடைச்சுகிட்டு இருக்கேன்.''

''ஆமா இப்ப வந்து என்னைக் கேளு. உங்க பாட்டி, தாத்தாகிட்டே உன்னை யார் பேசச் சொன்னா? லவ்,



கிவ்னு யார் உன்னை உளறச் சொன்னாங்க. இப்ப என்ன பண்ண முடியும்?''

''சரி அதெல்லாம் விடுங்கம்மா. எனக்கு கல்யாணம் வேண்டாம். நீங்களே போன் பண்ணி பொண்ணு வீட்டுலே சொல்லிடுங்க.''

''நான் மட்டும் எப்படிடா சொல்ல முடியும். உங்க தாத்தா, பாட்டியைக் கன்சல்ட் பண்ணனும். அவுங்களை கேக்காம ஒண்ணும் சொல்ல முடியாது.''

''அப்ப வீட்டுக்கு போய் அவுங்களோடு பேசுவோம் வாங்க.''

''போகலாம்'' என்றவள்,

''ஆமாம்மா நீங்க என்னை எதுக்காக தேடி வந்தீங்க?''

''தேடி வரதா உன்னை உதைக்கணும். கல்யாணியும், ஆர்த்தியும் ஒண்ணுன்னு நீ என்கிட்டே ஏன் சொல்லலே?''

''எனக்கு எப்படிம்மா தெரியும்?''

''பொய் சொல்லாதே. அன்னிக்கு கோவில்லே பார்க்கலே.''

''சாரிம்மா. நீங்க நினைச்சது நடக்காதுன்னு நினைச்சேன். அவளும், நானும் லவ் பண்ணதையே மறந்துட்டோம். ஆனா இப்படி திடீர்னு எல்லாம் முடியும் நினைக்கலே.''

''சரி சரி வா. நானும் அதுக்காகத்தான் வந்தேன். உங்க கொள்ளுத் தாத்தா பாட்டிகிட்டே சொல்லி விஷயத்தை முடிக்க பார்ப்போம்.''

வீட்டை அடைந்து காலிங் பெல்லை அழுத்த, சிரித்தபடி வந்து கதவைத் திறந்த ஆர்த்தியைப் பார்த்து,

''வெளியே போ'' என்று கத்துகிறாள் அபிஷேக்கின் தாயார்.

# 30

ஆர்த்தி அதிர்ச்சி அடைந்தவளாய் அபிஷேக்கின் தாயாரையே பார்க்க,

''என்ன பார்க்கறே? உன்னை மருமகளா அடையணும்னு ஆசைப்பட்டு, ஓடி வந்தேனே. அதுக்கு எத்தனை அழகா முகத்திலே கரியைப் பூசிட்டே. நீதான் ஆர்த்தின்னு சொல்லாம வேறொரு பெயரைச் சொல்லி என்னை ஏமாத்தியது போதும். வாழ்க்கைங்கறது கொஞ்சமாவது நேர்மையின் அடிப்படையிலேதான் ஆரம்பிக்கணும். அப்பதான் விளங்கும். ஆரம்பத்திலேயே பொய்யினா போகப்போக எப்படி இருக்கும்?''

படபடவென்று பொறிகிறாள் அபிஷேக்கின் தாயார்.

ஆர்த்தி உண்மையிலேயே இதை எதிர்பார்க்கவில்லை. நிச்சயம் செய்யும்போது மௌனமாக இருந்த அபிஷேக்கின் தாயார் இப்போது வெளுத்து வாங்குவது உண்மையிலேயே ஆச்சரியப்பட வைத்தது.

அபிஷேக்கை முகம் ஏறிட்டுப் பார்த்து. ஆயிரம் இருந்தாலும் மனைவி ஆகப் போகிறவள். தனக்காக அவன் வக்காலத்து வாங்குவான் என்றபடி அவன் முகத்தையே பார்க்கிறாள். அபிஷேக் எதையும் கவனியாதவன் போல் முகத்தை திருப்பிக் கொள்ள, கண்களில் கண்ணீர் வந்தது.



''உண்மையிலேயே அபிஷேக்கிற்கு விருப்பம் இல்லை. நன்றாகவே தெரிகிறது. தன்மேல் தானே தன் திருமணத்தை நிறுத்திவிடுங்கள்'' என்று பாட்டியிடம் அவள் கேட்டாள். ஆனால் தன் மனதை மாற்றிவிட்டு இப்போது தான் சொன்னது அல்லவா நடக்கிறது.

இதற்குள் வண்டார்குழலி பாட்டி அங்கு வந்து விடுகிறார்.

''என்னம்மா ஆச்சு?''

கண்களில் கண்ணீரோடு ஆர்த்தியைப் பார்த்தவருக்கு தூக்கிவாரிப் போடுகிறது.

''என்னம்மா ஆச்சு?'' கேட்பதற்குள்,

''நான் வரேன் பாட்டி'' கண்களில் பெருகுகின்ற கண்ணீரைக் கூடத் துடைக்காமல் சொல்லிவிட்டு நகர,

''இரு... இரு... இத்தனை நேரம் அவனுக்காகக் காத்திருந்து விட்டு இப்ப எங்கே கிளம்பறே?''

அபிஷேக்கின் தாயார் எரிச்சலோடு ஆர்த்தியையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

''வா... லலிதா... என்ன இன்னிக்கு சீக்கிரம்? ஆபீஸ் போகலையா? கூடவே அபியும்.''

''என்னடா உனக்கும் ஆபீஸ் இல்லையா என்ன?''

''பாட்டி உங்ககிட்டே முக்கியமான விஷயம் பேசணும்.'' அபிஷேக் மெதுவாக ஆரம்பிக்க ''சொல்லுடா.''

''வந்து.....'' அவன் தயக்கத்தைக் கண்டவர்,

''என்னடா தயங்கறே? வந்து, போயின்னு என்ன விஷயத்தை உடைச்சு சொல்ல மாட்டியா?'' லலிதா கண்டிக்கும் குரலில் பேச,

''என்னாச்சும்மா?'' கேட்கிறார் வண்டார்குழலி.

''இத பாருங்க பாட்டி. கல்யாணத்தை நிப்பாட்டிடுங்க. இந்த கல்யாணம் நடக்கக் கூடாது.''

''என்னம்மா இப்படி சொல்லறே? நீயும் தானே நிச்சயத்திற்கு இருந்தே?''

''நிச்சயதார்த்தம் பண்ணலாம்னு முடிவு பண்ணோம். அவ்வளவுதானே. நீங்களே அவுங்க வீட்டிலே பேசிடுங்க. எனக்கும் இஷ்டமில்லே. என் பையனுக்கும் இஷ்ட மில்லே.''

அபிஷேக்கின் தாயார் லலிதா பேசப் பேச, அழுகை வந்தது ஆர்த்திக்கு. இதைத்தானே அவளும் சொன்னாள். இந்த பாட்டி நம் மனதை சமாதானப்படுத்தினாளே. இப்போது கொள்ளுப்பேரனே திருமணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டானாம். அதற்குமேல் அங்கே நிற்கக்கூடாது என்று நினைத்து கிளம்ப முயற்சிக்க, பாட்டி கையை பிடித்து இழுத்து நிறுத்துகிறாள்.

''கொஞ்சம் இரு அவசரப்படாதே.''

''இல்லை பாட்டி நான் கிளம்பறேன்.''

''நில்லும்மா'' என்றவாறே அந்தப் பெண்ணைத் தடுத்து விட்டு ''என்னாச்சு லலிதா உனக்கு? சின்னஞ் சிறுசுக தான் தப்பா புரிஞ்சுகிட்டு அசட்டுத்தனமா நடந் துக்கறாங்கன்னா நீகூடவா?''

''பாட்டி இது சின்னப்பசங்க எடுத்த முடிவு இல்லே. இந்த பெண்ணை கல்யாணின்னு நினைச்சுகிட்டு இவ தான் என் வீட்டிக்கு வரணும்னு துடிச்ச நாள் உண்டு. ஆனா இவ என்னையே ஏமாத்திட்டா. எதுக்கு எங்கிட்டே வேற பெயர் சொல்லி டிராமா ஆடணும். ஆரம்பமே





பொய்யா இருந்தா அப்புறம் என்ன பாட்டி. வாழ்க்கைங் கறது கொஞ்சமாவது சத்தியத்திலே ஆரம்பிக்க வேண் டாமா?''

''நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதேம்மா. ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை பண்ணுன்னு சொல்வாங்க. இதுக்கு என்ன அர்த்தம்? எத்தனை பொய் சொன்னாலும் அது ஒரு நல்ல காரியத் திற்காக இருக்கணுங்கறது கூறப்படாத விதி.''

''அதுக்காக?''

''ஏற்கனவே உனக்கு அவமேலே நல்ல அபிப்ராயம் இல்லேன்னு தெரியும். இதுவே ஒரிஜினல் பெயரை வேற சொன்னா என்னாகும்? அதுக்காக வேற பெயரை சொல்லி இருக்கலாம். இதையெல்லாம் பெரிசுபடுத்துவாங்களா?''

''இல்லே பாட்டி நீங்க என்ன சொன்னாலும் நான் ஒப்புக்க மாட்டேன். நம்ப குடும்பம் எத்தனை நல்ல குடும்பம். இந்த மாதிரி எல்லாம் நம்ப குடும்பத்துலே வந்து சேரக் கூடாது.''

வண்டார்குழலி பாட்டி லலிதாவையே ஒருகணம் இமைக்காமல் நோக்குகிறாள். பிறகு மெதுவாக ஆனால் அழுத்தமாக பேசுகிறாள்.

''உளறாதேம்மா. உம் பொண்ணு வேற ஜாதிக்காரனை காதலிச்சவுடனே அந்த கல்யாணம் நடக்கறவரை நாம ஜாதியையே மாத்தி பேசலே. இத்தனை ஏன்? உன் நாத்தனார் வீட்டுலே தான் பெரிய பணக்காரன் சொல்லி உன் நாத்தனார் பையன் அந்த பெண்ணை ஏமாத்தி கட்டிக்கலை. இத்தனை ஏன்? உன் மாமியார் அதான் என் மருமக வாயே திறக்கமாட்டான்னு சொல்லி என் பிள்ளை தலைல கட்டி வைக்கலையா? இன்னிக்கு எந்த

வார்த்தைகளையும் காது கொண்டு கேட்க முடியாத அளவிற்கு இருக்கு. சின்ன சின்ன விஷயங்களுக்காக உயிருக்குயிரா நேசிச்சவங்களை பிரிச்சுடாதே.''

''யாரு. இவங்க ரெண்டு பேரும் உயிருக்கு உயிரா காதலிச்சாங்களா. அப்படீன்னு நாமதான் தப்பா நினைச்சுகிட்டு இருக்கோம்.''

''என்னம்மா உளர்றே. அவங்க லவ் பண்றது உனக்குத் தெரியாதா?''

''அது இப்ப இல்லே பாட்டி முன்னே எப்பயோ?''

''என்னம்மா ஏதேதோ பேசறே?''

''நிஜம் பாட்டி உங்க பேரனை நீங்களே கேளுங்க.''

''என்னடா இதெல்லாம்.'' பாட்டி சொல்வதற்குள் ஆர்த்திக்கு கண்களில் கண்ணீர் வந்தது.

''ஸாரி பாட்டி அம்மா சொல்றது நிஜம். எனக்கும் அவளுக்கும் இனிமே எந்த காலத்திற்கும் ஒத்துக்காது...''

''ஏண்டா?''

''ஸ்... அதை அவளையே கேளுங்க.''

''என்னடா இப்படி சொல்லறே?''

''அதுக்குதான் பாட்டி நான் முதல்லயே சொன்னேன். இந்த கல்யாணமே வேண்டாம்னு சொன்னேன். ஆனா நீங்கதான் இவர் உயிரா இருக்கார்னு சொன்னீங்க.''

''ஏன் பாட்டி அவளுக்கு இஷ்டமில்லேன்னா நீங்க ஏன் போர்ஸ் பண்றீங்க. தேவையா இதெல்லாம்?''

''என்னம்மா பேசறே? உங்கம்மா வரவேண்டாம்னு சொன்னவுடனே எத்தனை நாள் அழுதிருப்பான்? அவன் ஒழுங்கா ஒருவேளை சாப்பிட்டானா தெரியுமா? லேசான



தாடியும் சோகமான மூஞ்சியும் அவனை மறுபடியும் பழையபடி பார்க்க மாட்டோமான்னு ஆனப்புறம்தான் நாங்க உன் வீட்டுக்கு வந்து அவனுக்கு பொண்ணு கேட்டோம். இத்துனூண்டு சின்ன குழந்தையிலிருந்து அவனை நெஞ்சிலும் தோளிலும் சுமந்து வளர்த்தவ. அந்தக் குழந்தை வருத்தப்பட்டா எங்க மனசு கஷ்டப்படாதா சொல்லு. அவன் நிலைமையை நேரிலே நீ பார்த்திருக்கணும்.''

''நான்கூட அப்படித்தான் தவிச்சுப் போயிட்டேன். எத்தனை நாள் தூங்கலே சாப்பிடலே அது உங்களுக்கு எப்படிங்க தெரியும். நீங்க எங்க வீட்டுக்கு வந்தவுடனேயே எத்தனை சந்தோஷத்தோட அங்கே போனேன். ஆனா நடந்தது என்ன? இவர் என்னைப்பத்திய ஞாபகம் கொஞ்சம் கூட இல்லாம என்ஜாய் பண்ணிகிட்டு இருந்தார்.''

''நானா இல்லை நீயா? பொய் சொல்றே? பாட்டி நீங்க சொன்னவுடன் அவளைப் பார்க்கணும்னு தவிச்சுகிட்டு இருந்தேன். எவன் கூடவோ அவ சுத்திகிட்டு இருக்கா, எவனையோ ஸ்கூட்டர்லே ஏத்தி திரிஞ்சுகிட்டு இருக்கா. புது டிரஸ் என்ன, கொண்டாட்டம் கும்மாளம்னு என்ஜாய் பண்ணிகிட்டு இருக்கா. எனக்கு எப்படி இருக்கும். அப்பவே மனசு ஒடிஞ்சு போச்சு.''

''அடப்பாவி. கூசாம பொய் சொல்லறே? உன்னைப் பார்க்கத்தான் அவசரம் அவசரயா டிரஸ் பண்ணிகிட்டு ஓடி வந்தேன். என் பக்கத்து வீட்டு பையன் அவசரமா போகணும்னான். ரொம்ப அர்ஜண்ட்ங்கறதுனால கூப்பிட்டுகிட்டு போனேன். ஆக்சுவலா இவனைப் பார்க்கத்தான் ஓடினேன். அதுக்கு என்ன பேர் பார்த்தீங்களா! தவிச்சு, தவிச்சு உருகி உருகி மனசு உடைஞ்சு போனது எனக்குத்தான் தெரியும்'' சொல்லிவிட்டு ஆர்த்தி அழுகிறாள்.

''போதும் இந்த டிராமா இனிமே எதுவுமே வேண்டாம். நீ கிளம்பு. மனசு உடைஞ்சு போச்சு இல்லே வேற யாரை யாவது வச்சு ஒட்ட வச்சுக்க'' லலிதா எரிச்சலோடு கூற,

ஆர்த்தி மெதுவாக எழுகிறாள். அபிஷேக்கின் கலங்கிய முகத்தை பார்த்தவள் கலங்கிப் போகிறாள். அவள் அழுதது அவனை கலங்க வைத்திருக்கிறது. அவனைப் பார்த்ததும் மனம் நெகிழ்ந்து விட பாட்டி சொன்னது போல் தான் ஒரு முட்டாள். எதையும் சரியாக புரிந்து கொள்ளாத அசடு. தன் மேல் ஆசை இருக்கவேதான் தான் அழுதது அவனை இளக்கியிருக்கிறது. கண்கள் கலங்கிப் போய் நிற்கிறான்.

சட்டென்று அபியின் நெஞ்சில் விழுந்து அவனைக் கட்டிக் கொள்கிறாள்.

''சாரி அபி. என்னை மன்னிச்சிடுங்க. நான் ஒரு முட்டாள். உங்களை புரிஞ்சுக்காதவ. எல்லாத்தையும் தப்பா நினைச்சுகிட்டு அவசரப்பட்டுட்டேன். சாரி...''

''இல்லே... ஆர்த்தி நீ எனக்காக உருகினேன்னு தெரியாம நான் தான் தப்பு பண்ணிட்டேன். நீ அந்தப் பையனை பின்னால வச்சுகிட்டு போனதை தப்பா புரிஞ்சு கிட்டேன் சாரி. சாரி'' அவனும் உருக,

வண்டார்குழலி பாட்டி சிரிக்கிறாள். ''டேய் பாட்டி, தாத்தா எல்லாம் இங்கதான் இருக்கோம். உங்க ரொமான்ஸை கொஞ்சம் மூட்டை கட்டி வையுங்க.''

ஆர்த்தியும், அபிஷேக்கும் சிரித்தபடி விலக எரித்து விடும் பார்வையில் பிள்ளையைப் பார்க்கிறாள் லலிதா. வண்டார்குழலி இதை கவனிக்கத் தவறவில்லை.

''அபி... போ... அவளை கொண்டு போய் அவ வீட்டுலே விட்டுட்டு வா. இங்கேயும் அங்கேயும் திரிஞ்சு



கிட்டு இருக்காதே. கல்யாணமும் சீக்கிரமே வச்சுடறோம். அப்புறம் உன் இஷ்டப்படி நடந்துக்கலாம்'' பேரனை கேலி செய்து சிரிக்க

அபி எல்லோரையும் மறந்து ஆர்த்தியின் கையைப் பிடித்தவாறு சிரித்தவாறே வெளியே போக லலிதா ஆத்திரத்துடன் நிற்கிறாள்.

''பாட்டி என்ன, இப்படி பண்ணிட்டீங்க? கல்யாணத்தை நிறுத்தச் சொன்னா சேர்த்து வச்சிட்டீங்க.''

''என்னம்மா சின்னப் பிள்ளைத்தனமா பேசறே? சின்னஞ்சிறுசுங்க ஏதோ தப்பா புரிஞ்சுகிட்டாங்க. அதை சரி பண்ணுவோமா இல்லை சண்டை போட்டு பிரிப் பாங்களா? பேசாம இரு. ஆர்த்தி மாதிரி ஒரு பொண்ணே கிடைக்காது. அதுக்கு அவன் ரொம்ப கொடுத்து வச் சிருக்கணும்'' பாட்டி சொல்ல சொல்ல பல்லைக் கடிக் கிறாள். 'எதையும் பேச முடியாது, இதைத் தன் கணவனிடம் தான் சொல்ல வேண்டும். அவன் மூலமாகத்தான் சரி பண்ண வேண்டும்.'

மறுமொழி எதுவும் பேசாமல் விருட்டென்று உள்ளே போகிறாள். இருப்பு கொள்ளவில்லை.

''என்ன இன்னிக்கு வேலை வெட்டிக்குப் போக லையா'' மேலே போகும்போதே மாமியார் பிடித்துக் கொள் கிறாள். சாதாரணமாக பதில் பேசாமல் கண்கள் கலங்கிப் போய் நிற்கும் மருமகள் இன்று ஒரு வெறித்த பார்வையை மாமியாரின் மேல் வீசுகிறாள்.

''ஆமா இன்னிக்கு ஆஃப். உங்களுக்கு என்ன?'' வெடுக்கென்று கேட்டு விட்டு நகர, மாமியார் மௌனமாக அதிர்ச்சியோடு நிற்பது புரிந்தது.

தன் அறைக்குப் போய் இப்படியும் அப்படியும் கையை உதறிக் கொண்டவள் பின் செல்லில் கணவனை தொடர்பு கொள்ள முயற்சிக்கிறாள். பலமுறை முயன்றும் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் எரிச்சல் அடைகிறாள்.

'சே! என்ன மனுஷன். போனை எதுக்கு இப்படி அணைச்சு வச்சிருக்கிறார்' எரிச்சலோடு செல்லை எறிகிறாள். 'இந்தக் கல்யாணத்தை எப்படி நிறுத்துவது? எப்படியாவது நிறுத்தியே ஆகவேண்டும்' முடிவு செய்து கொள்கிறாள்.

## 31

இங்கே ஆர்த்தியும், அபிஷேக்கும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். எத்தனை நேரமோ?

''ஸார் என்ன சாப்பிடறீங்க? எத்தனை தடவை கேக்க றேன்? என்ன சார் வேணும்?''

அபிஷேக் நினைவு வந்தவனாக எதையோ ஆர்டர் செய்ய, ஆர்த்தி அந்த மெனுகார்டை வாங்கி இன்னும் நேரம் ஆகும் வண்ணம் மெனுவை ஆர்டர் செய்துவிட்டு பின்னும் அபிஷேக்கையே பார்த்துக் கொண்டிருக்க அபிஷேக்கும் அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறான். பேச்சு இல்லை கண்கள் மட்டும் ஓராயிரம் வார்த்தை களைப் பேசியது. கைகளை லேசாக பற்றியபடியே இருவரும் கண்களாலேயே பேசத் தொடங்கினர்.

''ஏய் எப்படி எல்லாம் என்னை அலைக்கழிச்சிட்டே?'' அவன் லேசாக கடிந்தபோது,



''அங்க மட்டும் என்ன வாழுதாம்? என்னை அழ வச்சுட்டீங்களே? என்னை விட்டுட்டு போறீங்கன்னு நினைச்சவுடனே எப்படி அழுதேன் தெரியுமா? அபி இந்தப் பிரிவுலே ஒண்ணு மட்டும் புரிஞ்சுது. நீங்க இல்லாத வாழ்க்கை இருக்கவே முடியாதுன்னு புரிஞ்சுது. எதுவா இருந்தாலும் நாம பேசித் தீர்த்துப்போம். தயவு செய்து எங்கிட்டே பேசாம இனிமே இருக்காதீங்க. என்னை விட்டுட்டு போற எண்ணம் எதுவுமே வேண்டாம். நீங்க இல்லேன்னா நானும் இல்லை.''

உணர்ச்சி வசப்பட்டு அவள் சொல்கையில் கண்களில் நீர் துளிக்க,

''ஏய் என்ன என்னென்னவோ பேசறே? நீ இல்லாம நான்னு நினைக்கக்கூட முடியாது. நீ என்னை ஏமாத்திட் டதா நினைச்சு கல்யாணம் வேணாம்னு சொன்னது என்னவோ நிஜம். ஆனா என் மனசு உன்னைதான் நினைச்சுகிட்டு இருந்தது. ஏதானும் ஒரு சேன்ஜு வராதா? நீ மனசு மாறமாட்டியா? எஸ்ஸுன்னு சொல்ல மாட்டி யான்னு ஒரு ஏக்கம். நமக்கு நிச்சயமான உடனே முதல்லே வேண்டாம்னு நான் சொல்லலே. ஆனா தொங்கிப் போன உன் முகத்தை பார்த்தவுடனே 'சரி உனக்குப் பிடிக் கலைன்னு நினைச்சுகிட்டு தான் கல்யாணத்தை நிறுத்தச் சொன்னேன். ஆனா நீ இல்லேன்னா வேற கல்யாணமும் எனக்கு கிடையாது.''

மறுபடியும் ஆர்த்தி அபியை ஆசையும் அன்பும் ததும்பும் கண்களோடு பார்க்கிறாள்.

''ஸாரிடா நான் உன்னைப் புரிஞ்சுக்கணும்.''

''நீதான் ட்யூப்லைட்டுன்னு எனக்குத் தெரியுமே.''

''நீதான் ட்யூப்லைட்டுன்னு எனக்குத் தெரியுமே.''

''டேய் உன் வேலையை நீ காண்பிச்சிட்டியே.''

சட்டென்று தண்ணீரை அவன் மேல் கொட்ட, அங்கே சிரிப்பும் மகிழ்வும் தாண்டவமாடியது.

இருவரும் ஏதேதோ கதைகளைப் பேசிச் சிரித்தபடி ஒருவருக்கு மேல் ஒருவர் ஏற்பட்ட அன்பினைத் தெரியப்படுத்தியவாறே சிரித்தபடி ஆனந்தத்தில் ஆழ்ந்தனர். பரமானந்தம்தான். சுற்றம், சூழல் எதுவும் தெரியாமல் தங்களுக்குள்ளே மகிழ்ந்து போன ஆனந்தம்.

இங்கே அபிஷேக்கின் தாயார் ஒருவழியாக கணவனின் கம்பெனிக்கே போய் அவனைப் பிடித்து இழுத்து வந்து சாடு சாடு என்று சாடிக் கொண்டிருந்தாள். ''இதுக்காகவா இத்தனை தூரம் வந்தே?'' பொறுமை இழந்து கேட்டேவிட்டான் அபியின் தகப்பன். ''நீங்க எப்ப ஒரு பொறுப்பான அப்பாவா இருந்தீங்க? என்னைப் பத்தி என்னிக்காவது கவலைப்பட்டிருக்கீங்களா? பொண்டாட்டிங்கறவ சம்பாதிக்கற மெஷின், வீட்டு வேலை செய்யற மெஷின்.''

''உன்னை நான் சம்பாதிக்கச் சொன்னேனா? வீட்டுக்குத் தேவையானதை நான் செஞ்சதில்லையா? சம்பாதிச்சு கொடுக்கலையா? ஒவ்வொரு ஆம்பிளை மாதிரி பொண்டாட்டி துட்டுலே சாப்பிடறவனா நான். ஏன் என் பெரியம்மா பையனைத் தெரியாதா? எதுக்கும் உதவாதவன். வளவளன்னு பேசுவான். பெரிய மேதாவி மாதிரி பிஹேவ் பண்ணுவான். அவன் பொண்டாட்டி டீச்சர் வேலை செய்து அந்தக் குடும்பத்தையே காப்பாத்தினா. இரண்டு குழந்தைங்களை படிக்க வச்சு பெரிய ஆளா வரதுக்குள்ளே உண்டு இல்லேன்னு ஆகி இப்ப இந்த அம்பது வயதுலே எண்பது வயசு கிழவியா இருக்கா. நீ அப்படியா இருக்கே? உன்னை அப்படியா வச்சுட்டு இருக்கேன். சமையல் வேலை எல்லாம் பாட்டி செய்துடறாங்க. உன்னை



எப்பவாவது எங்கம்மாவுக்கு செய். தங்கைக்கு செய்யின்னு சொல்லி இருக்கேனா? ராணி மாதிரி வெச்சிருக்கேன்.''

''ஆமா ராணி மாதிரி தான் வச்சிருக்கீங்க. ஷாஜகானுக்கு எத்தனையோ பொண்டாட்டியாம். ஒரு பொண்டாட்டியைப் பார்க்கவே எத்தனையோ வருஷமாகுமாம். அப்படித்தான் என்னையும் வச்சிருக்கீங்க? வேலை விட்டு வந்தா சதா டி.வி. பார்க்க வேண்டியது. எப்பவாவது இவளும் ஒரு மனுஷின்னு மதிச்சிருக்கீங்களா? இரண்டு வார்த்தை பேசி இருக்கீங்களா? எப்பவுமே தனிச்சு உக்காந்துக்கிட்டு வானத்தை வெறிக்கப் பார்த்துகிட்டு இருக்கேன். அந்த வேலைக்கு மட்டும் நான் போகலைன்னா செத்துருப்பேன். ஜடத்தோட வாழ்ந்துட்டேன்.''

''நான்தான் ஜடம்னு தெரியும் இல்லே. இப்ப என் கிட்டே பேசி என்ன பிரயோசனம்?''

''இத பாருங்க என் ஆத்திரத்தை கிளப்பி விடாதீங்க?''

''நான் கிளப்பி விடறேனா இல்லை நீயா?''

''போதும். இந்த மாதிரி பேசிகிட்டு இருந்தா எதுவும் நடக்காது. இப்ப அபி கல்யாணத்தை நிறுத்தணும். முதல்லே அதற்கு வழியைப் பாருங்க.''

''இந்த பொண்ணைத்தான் கட்டணும்னு ஒத்தைகால்ல நின்னே. இப்ப முடியாதுங்கறே? உன் பேச்சுக்கெல்லாம் ஆட முடியாது. மனுஷன்னா ஸ்திர புத்தி வேணும்.''

''சரி எனக்கு ஸ்திர புத்தி இல்லேன்னு வச்சுக்கங்க. இந்த கல்யாணம் நடக்கக் கூடாது. நான் சொல்றபடி கேளுங்க. இந்த கல்யாணம் நடக்கக் கூடாது.''

"பேசாம வாயை மூடு. நீ சொல்றது நடக்காது. நிச்சயத் துக்கு நாள் குறிச்சாச்சு. இப்ப வேணாம்னா பொண்ணு வீட்டுக்காரங்களுக்கு பதில் சொல்லியாகணும். போலீஸ் கோர்ட்டு போயிட்டா பிராப்பரா பதில் சொல்லாம வெளியே வர முடியாது."

"அவுங்க போறதுக்கு முன்னாடி நம்ப போலீஸுக்கு போயிட்டா?"

"ஏதானும் உளறாதே. லேடீஸுக்குதான் பர்ஸ்ட் பிர பரன்ஸ்?"

"நானும் லேடிதாங்க."

"உளராதே. பெண் வீட்டுக்காரங்களுக்குதான் முதல் மரியாதையே. அவுங்க கம்ப்ளைண்ட் கொடுத்தா எதுவும் கேக்கறதில்லே."

"அதெல்லாம் சட்டம் போட்டபோது இப்ப அப்படி கிடையாது விசாரிக்கறாங்கன்னு சொல்றாங்க."

பொண்டாட்டி சொல்ல, சொல்ல சுள்ளென்று விழு கிறான்.

"என்னாச்சு உனக்கு? பையனுக்கு அந்தப் பெண்ணை ரொம்பப் பிடிச்சுருக்கு அவனுக்கு மட்டுமல்ல எங்க எல் லோருக்கும் தான். பிடிச்சா வந்து அட்சதை போடு. இல்லேன்னா கல்யாணத்துக்கு வராதே."

லலிதா கண்களில் கண்ணீரோடு பார்க்கிறாள். இவன் எல்லாம் என்ன புருஷன். ஒவ்வொருத்தர் பொண்டாட்டி என் என்றால் எண்ணையாக நிற்கிறார்கள். இவன் மனித னிலும் சேர்த்தியில்லை. நிறைய பெண்கள் அப்படித் தான். தாங்கள் ஒன்றை பிடியாய் பிடித்துக் கொள்வது அதை நிறைவேறியே ஆக வேண்டும் என்று பிடிவாதம்



பிடிப்பது. அதற்கு கணவன் என்பவன் பக்க பலமாக இருக்க வேண்டும் என்று மனக்கோட்டை கட்டுவது. ஒரு பக்கத்து நியாயத்தை மட்டும் ஏந்திக் கொண்டு வாழ்வது. கணவன் என்பவனும் மனிதன்தானே. அவனுடைய ஆசாபாசங்களுக்கு அங்கே இடமில்லை.

அதற்குமேல் அங்கு நிற்காமல் விருட்டென்று கிளம்பிச் செல்கிறாள். கணவன் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந் தான். அவளைத் தடுக்கவும் முயலவில்லை. லலிதா ஆத்திரம் கோபம் சேர்ந்திட உடனே கிளம்பிப் போகிறாள். கணவனைக் கோபித்துக் கொண்டு வந்துவிட்டாளே தவிர ஒன்றும் சாப்பிடவில்லை. பசி வயிற்றைக் கிள்ள அருகில் இருந்த ஹோட்டலுக்குச் செல்கிறாள்.

சாப்பிட்டு விட்டு பில்லுக்கு பணத்தைக் கொடுத்து விட்டு நிமிர்ந்த போதுதான் அபியும் ஆர்த்தியும் ஒருவர் கைகளை ஒருவர் இணைத்துக் கொண்டு, கண்ணோடு கண் பார்த்து கொண்டு இருப்பதைப் பார்க்கிறாள். அவன் தட்டிலிருந்து அவளுக்கு ஊட்டி விட, அவள் அவனுக்கு ஊட்டி விட்டுக் கொண்டிருந்தாள்.

லலிதாவிற்கு ஆத்திரம் எரிச்சல் பற்றிக் கொள்ள, கோபம் கொழுந்து விட்டு எரிய

"அபி எழுந்திரு சாப்பிட்டது போதும் போகலாம் வா."

"அம்மா" என்கிறான்.

"என்னடா அம்மா எழுந்திரு. இவளைக் கல்யாணம் கட்ட மாட்டேன்னு சொன்னியே. இப்ப என்ன? இவ நமக்கு தேவையே இல்லை."

"அப்படி சொல்லாதீங்கம்மா. ஆர்த்தி இல்லாத லைப்பே எனக்கு இல்லை. நான் அவளை தப்பா புரிஞ்சுகிட்டேன்.

அம்மா பிளீஸ் உங்க பிடிவாதத்துலே என் லைப்பை ஸ்பாயில் பண்ணிடாதீங்க.''

சட்டென்று லலிதா கண் கலங்குகிறாள்.

''சே நீ எல்லாம் ஒரு பிள்ளை. பிள்ளை, பிள்ளைன்னு உனக்காக எத்தனை செய்திருப்பேன். அதுக்கு நீ காட்டற நன்றிக்கடனா இது?''

''என்னம்மா என்னென்னவோ பேசறீங்க. அம்மா இது ஓட்டல். எல்லாம் பார்க்கறாங்க? வாங்க வீட்டுக்குப் போய் பேசிக்கலாம்.''

''பார்க்கட்டும். எல்லோரும் பார்க்கட்டும்'' லலிதா உணர்ச்சி வசப்பட்டு கத்த அங்கே இருந்த சில பேர் அவர்களை வேடிக்கை பார்க்க, அபிக்கும் கோபம் வந்தது.

''ஆர்த்தி வா'' என்றவாறே அவளை இழுத்தபடி கிளம்புகிறான்.

ஆர்த்தி அபியின் கைகளை விலக்குகிறாள்.

''அத்தை பிளீஸ் என்னை புரிஞ்சுக்கங்க. எம்மேலே ஏன் இத்தனை கோபம்.''

''பேசாதே, கல்யாணின்னு உம் பேரை மாத்தி சொல்லி என்னை ஏமாத்தி உம் பின்னாடி அலைய வச்சு கடைசி யிலே பொண்ணு கேட்டு வரும்போது கல்யாணம் கட்ட மாட்டேன்னு சொல்லலே.''

''அம்மா பிளீஸ். புரிஞ்சுக்கங்க. பர்ஸ்ட் நீங்க அபியோட அம்மான்னே எனக்குத் தெரியாது. அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைச்சுகிட்டு இருக்கும்போது அவரோட அம்மாவை யாராவது அவமானப்படுத்துவாங் களா? எனக்கு அபியோட நிச்சயம்னு முடிவாகும் போது நீங்க ஒரு பையனைப் பத்தி சொன்னா எப்படி ஒத்துக்க



முடியும்? மன்னிச்சிடுங்க. மத்தபடி உங்க மேலே எனக்கு ரொம்ப மரியாதை உண்டு. அம்மா நான் யாருன்னு தெரியறதுக்கு முன்னாடி எம்மேலே பாசமாத்தானே அம்மா இருந்தீங்க! இப்பவும் அப்படியே இருந்துடுங் கம்மா. உங்க நிலைமையிலே யார் இருந்தாலும் கட்டாயம் கோவிச்சுக்கிடுவாங்க. எனக்கு புரியுது. ரொம்ப சாரிம்மா. இதுவரை நடந்த எல்லாத்துக்கும் என்னை மன்னிச் சிடுங்க. எங்களை சேர்த்து வையுங்க.'' சட்டென்று அந்த ஓட்டலிலேயே பல பேர் முன்னிலையில் அபியின் தாயாரின் கால்களைப் பிடித்துக் கொள்ள,

''ஏய் ஏய் எழுந்திரு என்ன இது?'' என்றவள், ''எல் லோரும் பார்க்கறாங்க எழுந்திரு.''

''இருக்கட்டும், நீங்க என்னை மன்னிக்கணும்'' கேட்ட வளின் கண்களும் குளமாக, அதற்கு மேல் லலிதா பிடி வாதம் நிற்கவில்லை.



## 32

ஆர்த்தி காலையிலிருந்து பம்பரமாக சுழன்று கொண்டு இருக்கிறாள். அபிக்கும் அவளுக்கும் நிச்சயம் மட்டும் நடந்து விட்டது. திருமணநாள் தான் தள்ளிப் போய்விட்டது. இன்று அபியின் வீட்டில் மணநாள் விழா. அந்த வீட்டில் இருக்கும் அனைவருக்கும் அன்று மணநாள். ஆர்த்தி முதல் நாளே அபியின் வீட்டிற்கு வந்தாகிவிட்டது. இரவே கண்விழித்து பெரிய கோலமாக

போட்டு அழகு படுத்தி கலர் பொடிகளைத் தூவி கிட்ட தட்ட இரண்டு மணி நேரமாக போராடி அழகுபடுத்திக் கொண்டிருக்கிறாள்.

''ஆர்த்தி அந்த புள்ளியை விட்டுட்டே. இது மயில் மாதிரியே இல்லை. லேசா காக்கா ஜாடையா இருக்கு.'' அபி அவளின் அருகே அமர்ந்து அவளை கலாய்த்துக் கொண்டிருந்தான்.

''பாட்டி... பாட்டி இவனைப் பாருங்க. ஒழுங்கா கோலம் கூட போட விட மாட்டேங்கிறான்.''

கத்தி கூச்சல் போட்டுக் கொண்டே கோலத்தைப் போட்டு முடிக்கிறாள் ஆர்த்தி.

''பாட்டி உங்க பேரனை கொஞ்ச நேரம் வெளியே அனுப்புங்க. வேலையை கெடுக்கறாரு.''

''கிழிச்சே. தோரணம் கட்டுற லட்சணம் பாரு.''

''ஏண்டா அவளை எப்ப பாரு சீண்டிகிட்டு இருக்கே, நீதான் கட்டறது.''

''சரிதான் காலைலேர்ந்து மார்க்கெட்டுக்கும் வீட்டுக்கும் அல்லாடிகிட்டு இருக்கேன். இன்னும் எத்தனை வேலை செய்யறது?''

''பாட்டி எத்தனை அழகா பொய் சொல்றான் பாருங்க. கேக் ஆர்டர் பண்ணப் போனான். அப்புறம் இந்த சேர்ல உக்காந்துகிட்டு குறை சொல்லிகிட்டு அதிகாரம் பண்ணிகிட்டு இருக்கான்.''

இருவரும் சண்டை போட்டவாறே வேலைகளை கவனிக்கின்றனர்.



''ஆர்த்தி அவன்கூட பேசிகிட்டு இருந்தியானா வேலை ஆகாது'' வண்டார்குழலி கூப்பிட ''இதோ பாட்டி'' என்ற வாறே பின்னே ஓடுகிறாள் ஆர்த்தி.

ஆர்த்தியின் மாமியாரோ, மாமியாருக்கு மாமியாரோ எதுவும் நடவாதது போலத் தன் வேலைகளில் ஈடுபட் டனர்.

வீடு முழுவதும் தோரணம் கட்டி அலங்காரம் செய்து ஆர்த்தியுடன் அபிஷேக்கும் சேர்ந்து எல்லா வேலை களிலும் ஈடுபட்டுக் கொண்டு, சிரித்துக் கொண்டு பேசிக் கொண்டும் செய்து கொண்டும் இருந்தனர்.

காலையில் வண்டார்குழலியின் முதல் மகன் முகத்தை கடுகடுப்பாக்கிக் கொண்டு வருகிறார். பின்னாலேயே அவரின் மனைவி பட்டுப்புடவை உடுத்தி கொண்டை போட்டுக் கொண்டு தலை நிறைய மல்லிகையைச் சூட்டிக் கொண்டே முகத்தை சுருக்கிக் கொண்டு வரு கிறாள். அவரோ பேண்ட் ஸர்ட் என்று அமர்க்களமாக வந்து நிற்கிறார்.

இருவரும் வந்து அப்பா அம்மாவை வணங்க, முதல் நாள் செய்து வைத்த பால்கோவாவை இருவர் வாயிலும் போட்டவாறே இருவர் கையிலும் தனித்தனியாக ஆயிரம் ரூபாயைத் தருகிறார். பிள்ளை ரூபாயைப் பார்க்காமலேயே பாக்கெட்டில் சுருட்டி சொருகிக் கொள்ள மருமகள் மட்டும் முகத்தை சுளிக்கிறாள்.

'எத்தனைதான் விலைவாசி உயர்ந்தாலும் மாமியாருக்கு மட்டும் கஞ்சத்தனம் போகாது.' நினைத்துக் கொண்ட வளாய் ''நாங்க வரோம் அத்தை'' எங்கே போகிறோம் என்று சொல்லாமலேயே இருவரும் கிளம்பினர்.

அடுத்து வண்டார்குழலி பாட்டியின் இரண்டாவது மகன் வர அவரின் மனைவி உடல்நலம் சரியில்லையோ என்னவோ முனகிக் கொண்டே வந்தாள். அவர் ஒரு சாதாரண வேஷ்டியிலும், அவரின் மனைவி ஒரு சாதாரண புடவையிலும் இருந்தாள். தலையில் பெயருக்கு கொஞ்சம் பூவை கிள்ளி வைத்துக் கொண்டு இருந்தாள். பால்கோவாவை தந்தவுடன்,

''நான் ஸ்வீட்டே சாப்பிடறதில்லே தெரியாதாம்மா உனக்கு'' அவர் இனிப்பை வாங்கிக் கொள்ள மறுத்தார். மருமகள் கொஞ்சமாக பால்கோவாவை வாயில் போட்டபடியே,

''நாங்க வரோம் அத்தை.'' கிளம்ப அவர்களுக்கும் ஆளுக்கு ஆயிரம் ரூபாய் தர, அவரவர்கள் ரூபாயை சடக்கென்று வாங்கிக் கொண்டு கிளம்ப,

''என்னடா இது? கல்யாண நாள், கொஞ்சம் நன்றாக டிரஸ் பண்ணிக் கொண்டு வந்திருக்கக் கூடாது. கோவிலுக்காவது போயிட்டு வரக்கூடாது.''

''ஆஸ்பத்திரிக்கு போறதுக்கே நேரம் சரியா இருக்கு. இதுலே வேற எங்கே போறது?'' அடுத்த நிமிடம் இருவரும் சிட்டாக பறந்துவிட அவர்களுக்கு என்று எடுத்து வைத்திருந்த சாப்பாட்டு பார்ஸலை எடுத்து தர, வாங்கியபடி அவசரம் அவசரமாக நகர்ந்தனர்.

அடுத்து இவர்களின் அத்தை பாட்டி வண்டார்குழலியின் ஒரே மகள், ஆயிரம் ரூபாயை வாங்கியவள் புலம்பித் தீர்த்துவிட்டாள்.

''எப்பவுமே இந்த ஆயிரம் ரூபாய்க்கு மேலே தாண்டாதே. நான் உனக்கு ஒரே பொண்ணுதானே. எனக்கு கூடத் தரக் கூடாதா?''



எந்த காலத்திலோ வாங்கிய புடவையைக் கட்டிக் கொண்டு, கழுத்தில் இமிடேஷன் நகைகளை அணிந்து கொண்டு எரிச்சலோடு அம்மாவைப் பார்த்துக் கத்துகிறாள். மாப்பிள்ளையோ ஜரிகை வேஷ்டி பட்டு அங்கவஸ்திரம் என்று அமர்க்களமாக வருகிறார். அவர்களும் கால்களில் விழுந்து வணங்கி ஆயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு, பார்ஸலையும் வாங்கிக் கொண்டு கிளம்பிச் செல்கின்றனர்.

''அம்மா பார்சலை சீக்கிரம் கொடு. சினிமா ஆரம்பிச்சிடும்.''

அதன் பிறகு அபிஷேக்கின் தாயாரும் தந்தையும் வந்து நமஸ்கரித்து ரூபாயை வாங்கிக் கொண்டு செல்கிறார்கள்.

''என்னடா கோவிலுக்கு போயிட்டு அப்புறம் ஆபீஸ் போங்கடா'' வண்டார்குழலி சொல்ல,

''சாரி பாட்டி நான் எட்டு மணிக்கு ஆபீஸ்லே இருந்தாகணும். கிளம்பறேன்'' என்ன ரூபாய் தருகிறார்கள் என்று கூடப் பார்க்காமல் பாக்கெட்டில் போட்டபடி கிளம்புகிறார் அபிஷேக்கின் தந்தை.

''நான் வரேன் பாட்டி. எனக்கும் ஆபீஸுக்கு சீக்கிரம் போகணும்'' அவள் வேறு திசையில் நடைபோடுகிறாள்.

பிறகு அபிஷேக்கின் சித்தப்பா, அத்தை எல்லோரும் வந்து வணங்கி ரூபாயையும், பார்ஸலையும் பெற்றுக் கொண்டு நகர்ந்தனர். சித்தப்பா கோவிலுக்கும், அத்தை பொருட்காட்சிக்கும் புறப்பட்டு போனார்கள்.

அபிஷேக்கின் சகோதரியும் அவள் கணவனும் வணங்கி ரூபாயை வாங்கிக் கொண்டு சினிமாவிற்கு

பறக்க, வண்டார்குழலி அவர்களின் குழந்தையை வாங்கி தன்னுடன் அணைத்துக் கொள்கிறாள்.

''ஆமாம் பாட்டி. எல்லோருக்குமே இன்னிக்குத்தான் வெட்டிங் ஆனிவர்ஸரின்னு சொன்னீங்க. இதுக்கெல்லாம் மூலகாரணமான உங்களுக்கு எப்ப கல்யாண நாள்?'' அபிஷேக் கேட்க,

''எங்களுக்கும் இன்னிக்குதாண்டா'' சிரிக்கிறாள் பாட்டி.

''அப்ப அடுத்த வருஷம் நாங்களும் இதே நாள்தானே கல்யாணம் செய்துக்கணும்'' அபிஷேக் கேட்க,

''எல்லோருக்கும் பிரசன்டேஷன் கொடுத்த எங்க பாட்டி, தாத்தாவுக்கு நாங்க இருவரும் சேர்ந்து தரும் திரு மணப் பரிசை வாங்கிக் கொண்டு எங்களை ஆசீர்வதிக் கணும்'' என்றனர் அபிஷேக்கும் ஆர்த்தியும்.

அதற்கு வண்டார்குழலி சந்தோஷத்துடன் ஏற்க ஒத்துக் கொண்டார்.

பின்னர் இருவரும் திருமணப் பரிசாக இருவருக்கும் உடை மற்றும் பத்தாயிரத்து ஒன்று ரொக்கம் ஆகியவற்றை கொள்ளுப் பாட்டி, தாத்தா கையில் கொடுத்து அவர்கள் காலில் விழுந்து வணங்கினர்.

வண்டார்குழலி - தாத்தா பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு ஆசீர்வதித்தனர்.

பிறகு அபிஷேக்கும் ஆர்த்தியும் அடுத்த ஆண்டு திருமணத்திற்கு இப்போதே அடித்தளம் அமைக்க கிளம்பி விட்டனர்.